T.2150

ஸ்ரீ:

திவ்யப் பிரபந்தம்

முதலாயிரம்

பதிப்பாசிரியர் :

எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்.

வெளியிடுவோர் :

எஸ். ராஜம்

நெ. 5, தம்பு செட்டித் தெரு,

சென்னை - 1

முதற் பதிப்பு - 1955

உரிமை பதிவு செய்யப் பெற்றது.

விலை ரூபாய் ஒன்று

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

ஸ்ரீ:

திவ்யப் பிரபந்தம்

பதிப்புரை

திவ்யப் பிரபந்தம் தென்னாட்டில் நமது வைஷ்ணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த பக்தி நூல். இதன் கவிதைச் சுவையும் அழகும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறத்தக்கன. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாக இது கொள்ளுதற்குரிய பெருந்தகுதி வாய்ந்தது. பக்திப் பாடல் என்ற நூல் வகையில் இதனைப் போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிக மிகச் சிலவற்றைத்தான் கருதுதல் கூடும். இங்ஙனமிருந்தும், நமது தமிழ்ப் பொதுமக்களில் பலர் இதனைக் கல்லாதிருப்பது பெருங் குறையாகும். வைஷ்ணவர்கள் மட்டுமேயன்றித் தமிழ்ப் பொதுமக்களும் இந்நூலைக் கற்றுணர்ந்து பயன் பெறுதல் வேண்டும். இதுவே இப் பதிப்பின் தலைமையான நோக்கம்.

இவ் இலக்கியச் செல்வம் தமிழ்மக்களிடையும், தெலுங்கர் கன்னடர் மலையாளர் முதலியோரிடையும் பரவவேண்டும் என்று வைஷ்ணவப் பெரியார்கள் பக்தி-சிரத்தையுடன் பெரிதும் முயற்சி எடுத்திருக்கின்றனர். இம் முயற்சி இரண்டு நெறியில் சென்றது. ஒன்று மூலபாடம் பற்றியது; மற்றொன்று பொருளுணர்ச்சியைப் பற்றியது. மூலமும் உரையும், வைஷ்ணவ சமயம் பரவப்பரவ, கன்னடம் முதலிய தேசங்களிலும் அங்கங்கேயுள்ள தாய்மொழிகளில் எழுதப் பெற்றுப் பரவி வந்தன. கன்னட மொழியில் நாலாயிரமும் ஏட்டுச் சுவடிகளில் இன்றும் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இங்ஙனமே தெலுங்கிலும் இவைகள் உள்ளன. மலையாளத்தில் திருவாய்மொழி மூலம்மட்டும் வட்டெழுத்தில் உள்ளது. இதன் சுவடி ஒன்றை நானும் பல அன்பர்களும் நேரில் பார்த்ததுண்டு.

பொருளுணர்ச்சியைப் பற்றிய முயற்சிகளில் ஸ்வாபதேசம், அந்யாபதேசம் இரண்டும் குறிக்கத் தக்கன. முந்தியதில் உட்கிடையான பொருளும் பிந்தியதில் வெளிப்படையான பொருளும் விளக்கப் பட்டன. ஆனால், உட்கிடைப் பொருளே வெளிப்படைப் பொருளைக் காட்டிலும் சிறந்ததாக நமது வைஷ்ணவப் பெருமக்கள் கொண்டனர்.

இவ் வியாக்கியானங்களை அவற்றின் ஆசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் எழுதினர். வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் கிரந்த லிபியிலும், தமிழ்ப் பகுதியைத் தமிழ் லிபியிலும் அமைத்தனர். ஆனால், கன்னட தேசம் தெலுங்கு தேசம் முதலியவற்றில் அங்கங்கு வழங்கிய மொழிகளில் மூலபாடத்தையும் வியாக்கியானங்களையும் எழுதி வந்தனர்.

தற்காலத்துக் கொள்கைப்படி ஸ்வாபதேசத்தைக் காட்டிலும் அந்நியாபதேசமே சிறந்ததாகும். உண்மைக் கவிதை இவ் வெளிப்படைப் பொருளில்தான் உள்ளது என்பர் தற்காலத்து அறிஞர். இதனைமட்டும் தெளிவாக விளக்கும் வியாக்கியானங்கள் மிகச் சிலவே. வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட இவ் வியாக்கியானங்கள் பொதுமக்களுக்கு உதவவில்லை. இவ்வாறன்றி, தமிழ் மக்கள் அனைவருக்கும் உதவும்படியாக வியாக்கியானங்களை எளிமைப் படுத்தி எழுதத் தொடங்கியவர் வை. மு. சடகோப இராமாநுஜாசாரியர் முதலியோர். இங்ஙனம் பலதிறப்பட்ட பெருமுயற்சிகள் செய்யப்பட்டபோதிலும், வைஷ்ணவ சமயத்தின் மூலாதாரமான இப் பக்திப் பாடல்கள் நமது நாட்டில் நன்கு பரவின எனக் கூறமுடியவில்லை.

வெளிப்படைப் பொருளைத் தெரிந்து கொள்வதற்கும், பலரும் அதன் சுவையை முற்ற அனுபவிப்பதற்கும், பாசுரங்களைப் பாடுதல் வேண்டும். நமது நாட்டில் ஸ்தோத்திரச் செய்யுட்கள் எல்லாம் பாடப்பட்டே வந்தன. திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் அந்த நெறியைத்தான் பின்பற்றின. 'பாரத கீதைகளின் வேதோபநிஷத்வம்போலே இதுவும் வ்யாக்யை; ஆனாலும் வேதரஹஸ்யமாம். உதாத்தாதி பதக்ரம ஜடாவாக்ய பஞ்சாதி பாதவ்ருத்த ப்ரச்ந காண்டாஷ்ட காத்யாயாம்ச பர்வாத்யலங்காரங்கள் போலே, எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, நிரைநிரை, ஓசை, தளையினம், யாப்பு, பாத்துறை, பண்ணிசை, தாளம், பத்து நூறாயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு' (பக். 11) எனவரும் ஆசார்ய ஹ்ருதயப் பகுதியால் இது விளங்கும். அந்நெறி நமது நாட்டில் பல இடங்களிலும் தூர்ந்து மறைந்துவிட்டது. பொதுமக்களில் வைஷ்ணவத்தில் பற்றுள்ளவர்களும் பிறரும் பாசுரங்களைக் கற்று வந்தனரென்று கூறலாமேயன்றி இசையோடு பாடிவந்தனரல்லர். ஆனால், பாடுதல் இன்றியமையாதது.

'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'

என்பது அப்பர் திருவாக்கு.

'குருகூர் நம்பி, பாவின் இன்னிசை பாடித் திரிவனே'

என்பது மதுரகவியாழ்வார் பாசுரப் பகுதி.

'பண்ணார் பாடல் இன்கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடி
தென்னா என்னும் என்அம்மான் திருமாலிருஞ்சோலையானே'

என்பது நம்மாழ்வாரது திருவாக்கு. இவை நாயன்மார், ஆழ்வார்கள் இசையோடு பாடினார்கள் என்பதைப் புலப்படுத்தும். இசையின் இயல்பு, முறை முதலியன மறைந்துவிட்டமையினாலே இந்த நெறியும் தமிழ் மக்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. எனவே, வேறொரு புதிய நெறியை வகுத்தல் இன்றியமையாததாயிற்று.

இப் புதிய நெறியிலும் நமது வைஷ்ணவப் பெரியார்கள் நமக்கு உதவ முயன்றுள்ளார்கள். தமிழ்நாட்டில் ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், ஆழ்வார்திருநகரி முதலிய பல திவ்ய தேசங்களிலும் அங்கங்கேயுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோஷ்டியாய்க் கூடிப் பிரபந்தங்களைச் சேவிக்கும் வழக்கம் இன்றும் நடைபெறுகிறது. பெருமாள் எழுந்தருளும் போதும், பிற விசேஷ காலங்களிலும் கோயில்களிலும் திருமாளிகைகளிலும் இங்ஙனம் பிரபந்த சேவை நிகழ்வதாகும். இதனால் பிரபந்தப் பாசுரங்கள் பல பிரதேசங்களிலும் பாக்க ஓதப்பெற நேர்ந்தன. நாளடைவில் ஒவ்வொரு வகையாக நிறுத்துமிடங்கள் அறுதியிடப் பட்டன. எந்தச் சேவிப்பு முறையைப் பின்பற்றுதல் வேண்டுமெனக் கண்டு கொள்ளுதலில் இடர்ப்பாடு உண்டு. இவை பொருள்செல் நெறியை உணர்த்தின என்று கருதவும் இடமில்லை. உதாரணமாக, ஸ்ரீ சே. கிருஷ்ணமாச்சாரியர் பதிப்பிலும், அரசாணிபாலை கந்தாடை ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியர் பதிப்பிலும்,

மந்திபாய் வடவேங்கட மாமலை* வானவர்கள்
சந்திசெய்ய நின்றான் அரங்கத்துஅரவின் அணையான்
அந்திபோல்நிறத்து ஆடையும் அதன்மேல் அயனைப் படைத்தது ஓர்எழில்*
உந்தி மேலதுஅன்றோ அடியேன் உள்ளத்து இன்னுயிரே. (928)

என்னும் பாசுரத்தில் சேவிப்பு நிறுத்தல்-குறியீடுகளைக் கவனித்து மேற்கூறியதன் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். இதுவரை வெளிவந்துள்ள பதிப்புக்களில் காணப்படும் நிறுத்தல்-குறியீடுகளும் மிகச் சிறிதளவே பயன் தருவன. அன்றியும் சேவிப்புமுறை நாளடைவில் அருகிவிடும் என்றே தோன்றுகிறது. ஆகவே, அது பற்றிய அடையாளங்களும் நீடித்த பயனளிப்பன அல்ல.

தற்காலத்து வழங்கும் பதிப்புக்களில் சிறந்த இரண்டினை மேலே குறிப்பிட்டேன். முதன்முதலில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை அச்சியற்றியவர் சென்னை ஸ்ரீ ஆழ்வார் ஸபா பிரசங்கியும் பரசமய கோளரியுமாகிய ஸ்ரீமான் முடிச்சூர் அப்பாவு முதலியார் அவர்கள். இப்பதிப்பு குரோதன வருஷத்தில் (1865) தோன்றியது. இப்பதிப்பிலேதான் முதன்முதலாக இராக-தாளங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. நூல் முகப்பில் 'ஷை முதலியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டும் ஸ்தாபிக்கப்பட்டுமிருந்த இராக-தாளங்கள்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இராக-தாளங்களை முதன்முதல் அமைத்தவர் அப்பாவு முதலியார் அவர்களே. பின்வந்த பதிப்புக்களில் பெரும்பாலன இதனை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டனவே. சேவிப்பு நிறுத்தல்-குறியீடுகள் இப்பதிப்பில் இல்லை என்பது கவனித்தற்குரியது. இந்நிறுத்தல் முறை பிற்காலத்து அமைக்கப்பட்டதுபோலும்.

இவற்றையெல்லாம் நோக்குவதானால், இவ் இலக்கியச் செல்வத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் பாடிக் கவிதைச் சுவையில் ஈடுபட வேண்டுமானால், இன்னும் நூதன முறைகளை அனுசரித்து, ஒரு புதிய பதிப்பு வெளிவருதல் வேண்டுமென்று தோன்றியது. இக்கருத்தின் விளைவே இப் பதிப்பாகும்.

இதற்குமுன் அச்சியற்றி வந்துள்ள முறைகளை இங்கே கவனித்தல் அவசியமாகும். ஒரு காலத்தில் அடிவரையறை தெரியக்கூடாதவண்ணமே செய்யுட்களை ஏட்டில் எழுதி வந்தனர். பிற்பாடு அடிவரையறை காட்டப்பட்டது. அச்சில் அடிவரையறையைக் காமா, உடுக்குறி முதலிய குறியீடுகளால் காட்டி வந்தனர். இவ்வளவில்தான் திவ்யப் பிரபந்தப் பதிப்புக்கள் வெகுகாலம் அச்சியற்றப்பெற்று வந்தன. செய்யுட்களை வாசிப்பதில் இம்முறை பெரிதும் பயன்படாமையினாலே, பின்னர் சீர் பிரித்து அச்சிடத் தொடங்கினர். 1934-ல் ஸ்ரீ V. K. ராமாநுஜதாஸன் அவர்கள் முதன் முதலில் திருவாய்மொழியைச் சீர்பிரித்து வெளியிட்டனர். 1952-ல் வெளிவந்த ஸ்ரீ B. இரத்தின நாயகர் ஸன்ஸ் அவர்கள் பதிப்பில் நாலாயிரம் முழுவதும் இங்ஙனமே சீர்பிரிக்கப்பட்டுள்ளது. இம்முறையில் பெரும் பயன் உண்டாயிற்று. செய்யுட்களின் இயல்பு நன்கு புலனாயிற்று. அன்றியும் பிரிப்பதில் செய்யுள் இலக்கணத்தை முக்கியமாகக் கவனித்து வந்தமையினாலே அச்செய்யுட்களில் பிழையிருக்குமாயின் அவை எளிதில் புலப்படுதற்கும் இடம் ஏற்பட்டது. உதாரணமாக,

செருவாளும் புள்ளாளன் மண்ணாளன் செருச்செய்யும்
நாந்தக மென்னும்
ஒருவாளன் மறையாள னோடாத படையாளன்
விழுக்கை யாளன்
இரவாளன் பகலாள னென்னையாள னேழுலகப்
பெரும்புர வாளன்
திருவாள னினிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற
திருவ ரங்கமே. (420)

இப்பாசுரத்திலே அச்சின் வேறுபாட்டினால் காட்டியவைகள் செய்யுளோசை பிறழ்ந்துள்ளன. ஆகவே, இவற்றில் பிழையுள்ளன என்பது எளிதிற் புலனும். பிரதிகளில் 'செருச் செய்ய நாந்தகமென்' என்றும், 'செருச்செய்யும் நாந்தக மென்' என்றும், 'செருச் செயும் நாந்தமென்' என்றும், 'ஒழுக்க வாளன்' என்றும், 'எழுவிகற்பப்பெரும் போராளன்' என்றும் 'எனையாளன், ஏழுலகப் பெரும்போராளன்' என்றும், 'எழுவிகற்பப் பெரும் புலவாளன்' என்றும் பாடங்கள் உள்ளன. இவற்றுள் மூன்றுவதாயுள்ள பாடம் செய்யுளின் அமைவிற்குப் பொருத்தமாதல் காணலாம். முதல் முதலில் சீர் பிரித்தவர்கள் இச் சீர்களைக் கவனித்திருப்பார்களானால், பிழைபட்ட பாடங்கள் அச்சிற் புகுந்திருக்க மாட்டா என்பது திண்ணம். மேலே காட்டிய பாசுரத்தில் 'ஒழுக்கவாளன்' 'எழுவிகற்பப் பெரும் போராளன்' என்பவற்றிற்குப் பாட அமைதியும் பொருளும் ஆராயத்தக்கன.

மேலும், சீர்களைப் பிரித்தல் இசை யின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது. ஏனெனில் இவ்வின்பம் சீர்களையே முக்கிய நிலைக்களமாகக் கொண்டது. அதனோடு ஆழ்வார்கள் பாடிய காலத்து வழங்கிய இசை பற்றியும் அவ் இன்பம் சிறந்து விளங்கும். ஆழ்வார்களோடு ஏறத்தாழச் சமகாலத்தினராகிய நாயன்மார்களின் திருப்பாடல்கள் இவ் இசை யின்பத்தை உணர்வதற்கும், செய்யுளின்பத்தை உணர்வதற்கும் மிகவும் பயன்படுவனவாகும். சிறிது காலத்திற்கு முன்பிருந்த அறிஞர்களும் இதை யுணர்ந்து இசை பற்றிய குறிப்புக்கள் தந்துள்ளார்கள். உதாரணமாக, 'பிறந்த வாறும்' என்ற பாசுரத்தின் முகப்பில் 'பண் - காந்தாரம்' என்பதனோடு, 'தாளம் - ஏமொத்து, மோகன ராகம், ஆதி தாளம்' என்ற குறிப்பும் உள்ளது. இதனை 1865-ல் வெளிவந்த ஸ்ரீ அப்பாவு முதலியார் பதிப்பில் காணலாம். ஆனால், இவைகளெல்லாம் சேவிப்பவர்களுக்கும் சந்தை சொல்பவர்

களுக்கும், பொது மக்களுக்கும் விளக்கமற்ற குறிப்புக்களே யாகும். கற்போர்களெல்லாரும் சங்கீத வித்வான்களாக இருக்க முடியுமா ?

சீர் பற்றிப் பிரிப்பதும் இசை பற்றிப் பிரிப்பதும் பொருளுணர்ச்சிக்கு உதவுவன அல்ல. தமிழறிவு மிக்கார்க்கும் இசை-அறிவு உடையார்க்கும் அன்றி ஏனையோர்க்கு இவை பயன்படமாட்டா.

பொருளுணர்ச்சிக்குச் சீர் பிரிப்பதைக் காட்டினும், சந்தி பிரிப்பது அவசியம். தமிழ் இலக்கணத்தைக் கற்பவர்கள் இக்காலத்தில் அரியர். சந்தி சேர்ந்துள்ள தொடர்களை இவர்கள் பிரிக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். இம் முயற்சியும் பலராலும் ஒரு நியம மின்றிப் பலபடியாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. எனவே, இது வேண்டும் பயனை அளிக்கவில்லை. இருபாலார்க்கும் எளிதில் பொருள் உணரக் கூடியபடி செய்யுளை அமைத்தால்தான் தற்காலத்தவர்க்குப் பயன் படுவதாகும். இந்நோக்கம் செய்யுளில் வரும் பதங்களில் பெரும் பாலனவற்றைப் பிரித்தால் அன்றி முற்றுப்பெறாது. இந் நெறியே ஏனையவற்றைக் காட்டினும் சிறந்தது. அடி பிரித்தல், சீர்பிரித்தல், சீருள்ளே சந்திபிரித்தல், பதங்களைப் பிரித்தல் என வரும் பரிமணமைக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம். எனினும், இசையும் ஓரோ இடங்களில் கவனிக்கும்படியாயிற்று. உதாரணமாக, 'அமல னாதிபிரான்' என்ற பாசுரத்தில் இதன் அவசியத்தைக் கண்டுகொள்ள லாம். இங்ஙனமே சீர்களையும் ஒருவாறு தழுவிப் பதங்களைப் பிரித்திருக்கிறது. பொருளுணர்ச்சிக்கு வேண்டும் காமா முதலிய பல வகை நிறுத்தல் - குறியீடுகளும் இடப்பட்டுள்ளன.

இனி, பதங்களைப் பிரித்தல் முதலியன பற்றி இப்பதிப்பில் கையாண்ட நெறிகளில் மிக முக்கியமானவற்றைக் கவனித்தல் வேண்டும். பதங்களைப் பிரிப்பதில் சந்தி முக்கியமான அம்சம். அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 'இல்' என்பது பல பொருளில் வரும். வீடு, இன்மை, உருபு என்பனவாக வருதலை முக்கியமாகக் கூறலாம். உருபாக வருவதன்பின் வல்லினம் வருமாயின் அது, சந்தி பெற்றே வரும். 'திண்ணைக் கலத்திற்றிரை' என்பது திவ்யப் பிரபந்தம் (163). 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்' என்பது குறள் (46). இன்மைப் பொருளில் வருமிடத்துச் சந்தி சேர்தல் இல்லை. 'வழுவில் கொடையான்' (திவ்யப். 47), 'ஏதமில் தண்ணுமை' (திவ்ய. 924) 'கோளில் பொறியில்' (குறள் 9) என்பவற்றைக் காண்க. உறழ்ந்து வருதலுங்கூட இவற்றில் கிடையாது;

இயல்பாகவே நிற்கும். இவ் ஈரிடத்தும் வரும் பிரயோகத்தை வேறு பிரித்தறிதல் அவசியமாகும். அன்றியும் உருபேற்ற நிலையில் திரிந்து வரும் எழுத்துக்கள் கடின சந்திகளின் பயனும். இவற்றை நீக்குதலும் வேண்டும். இவ்வகைக் கடின சந்திகளில் வருமொழியின் வடிவமும் விளங்கமாட்டாது. உதாரணமாக, 'திண்ணக் கலத்திற் றிரை' என்பதில் 'றிரை' என்பதன் உண்மை வடிவம் புலப்படுதல் அரிது. ஆகவே, வருஞ் சொல்லின் ரூபம் தெளிவுபட இருத்தல் நல்லது. சந்தியையும் ஒருவாறு காட்டினுல்தான் பொருளும் தெளிவு படும். இதனுல் 'கலத்திற் திரை' என்று கொடுப்பதே தகுதி எனக் கொள்ளத்தக்கது. இன்னும் 'பையிற்றுயின்ற' என்ற திருப்பாவைப் பாசுரப் பகுதியில் 'துயின்ற' என்பதனைத் தெளிவுபடுத்திச் சந்தியையும் ஒருவாறு சுட்டி 'பையிற் துயின்ற' என்று அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை யெல்லாம் கருதியே சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தமது பதிப்புக்களில் இம்முறையைக் கையாண்டனர். இது போன்ற கடின சந்திகளிலன்றிப் பிறஇடங்களில் எல்லாம் சந்திகள் தெளிவாகவே பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

குற்றுகர முற்றுகரச் சந்திகளைப் பிரித்து, உகரங்களை நகவளைவுக் குறிகளுக்குள் அமைத்துத் தற்காலத்தார் பலர் பாடல்களை அச்சிட்டு வருகின்றனர். இதனுல் குற்றுகரம் முற்றுகரம் என்ற இலக்கணம் தெரியலாம். மற்றும் வருமொழி இன்னதெனத் தெரிதற்கு இடமுண்டு. செய்யுளோசையை உணர்தற்கும் இது பயன்படுவதாகலாம். ஆனுல், செய்யுளோசையில் நோக்கமின்றிப் பதங்களைப் பிரித்து அச்சிடும் தற்கால நெறியில் இவை சிறிதும் பயன்பட மாட்டா. எனவே, உகரங்களைத் தனிப்படக் காட்டும் நெறி கையாளப்படவில்லை.

சந்தி பிரிக்கும்போது சில இடங்களில் செய்யுளிலக்கணமும் ஓசையின்பமும் செவ்வனே அமையாமை காணப்பட்டது. 1865-ம் வருஷம் முதலாக வெளிவந்த அச்சுப் பிரதிகள் பலவும் ஒப்பு நோக்கப்பட்டன. எனினும், உண்மைப் பாடங்களைக் கண்டு கொள்ளுதற்குப் பல தேசத்துப் பிரதி ரூபங்களையும் ஒப்பிடுதல் அவசியமாயிற்று. வானமாமலை மடம், திருக்குறுங்குடி மடம், ஸ்ரீ பெரும்பூதூர், மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலிய இடங்களினின்று ஸ்ரீ காரப்பங்காடு வேங்கடாசாரியர், ஸ்ரீ N. K. பக்ஷிராஜன் உட்படப் பல அன்பர்கள் பல பிரதிகள் பெற்று உதவினர். சென்னை அரசாங்க நூல் நிலையப் பிரதிகளும், சென்னை அடையாறு நூல் நிலையப் பிரதிகளும் அவற்றின் தலைவர்கள்

தந்து உதவினர். மைசூர் ஸர்வகலாசாலையிலிருந்து கன்னடப் பிரதி ஒன்றைச் சரித்திரப் போசிரியர் ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் பெற்று உதவினர். இவற்றுள் வானமாமலை மடத்துப் பிரதிகளும் ஸ்ரீ உ. வே. வித்வான் ஸ்ரீபெரும்பூதூர் ஆசூரி ராமாநுஜாசார்யர் கொடுத்துதவிய பிரதிகளும் மிகவும் பயன்பட்டன. இவற்றையெல்லாம் ஒப்பிடும்போது சில திருத்தமான பாடங்களும் பல பாடபேதங்களும் கிடைத்தன.

பாட ரூப பேதங்கள்பற்றி ஒரு சில கூறுதல் தகும். பாடபேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல்லை. உதாரணமாக, 'கோளரி மாதவன்' (556) என்பதற்கு 'கோளரி வாமனன்' என்று வருவது போல்வன பாடபேதங்கள். 'துரியோதனன்', 'திரியோதனன்' (175), 'முழுசாதே', 'முழுவாதே' (734) என்று வருவன போல்வன ரூபபேதங்கள். ஒரு சொல்லையே இரண்டு விதமாக வாசித்து உண்மைப் பாடம் இதுவென்று கொள்ளுதலில் மயக்கமடைதலும் உண்டு. 'பரமபுருடா', 'பரம் புருடா' (463) என்று பிரதிகளில் காணப்படுகிறது. சில வடசொற்கள் தமிழில் வல்லின 'றகரம்' முதலிய பெற்று வருதலும் முற்கால வழக்கமாயிருந்தது. 'மார்க்கம்-மாறகம்'(902), 'மூர்த்தி, மூற்தி' (473) முதலியன உதாரணங்களாம். இவைகளே யன்றிப் பிழையெனக் கொள்ளும் பல சொற்களும் தரப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலும் வைஷ்ணவ கோஷ்டிகளில் உச்சரித்து வந்த முறையை வெளிப்படுத்துகின்றன. அப்பொழுது பிழையென்ற கருத்தேயின்றிச் சொற்கள் உச்சாரண பேதத்தால் எவ்வாறு மாறி வருகின்றன என்பதே நமக்குமுன் புலப்படுகின்றன. பிழை யென்று முன்பு கொண்டன இப்பொழுது உயிர்த் தத்துவத்தோடு விளங்குகின்றன. இம்முறையைத் தற்காலத்து மொழி நூலில் ஶிக்ஷாசாஸ்திர ஆராய்ச்சியாளர் (Phoneticians) பெரிதும் போற்றுகின்றனர். ஒரு காலத்தில் வழங்கிய உண்மை ரூபம் இன்னது என்பதை ஒருவாறு புலப்படுத்துகின்றன. முதலாயிரம் தோன்றிய காலத்தில் எவ்வாறு வேறுபட்டு வந்தன ? சாதாரண மக்கள் எவ்வாறு உச்சரித்து வந்தனர் ? என்பவை இவைகளால் வெளிப்படுகின்றன. 'வயிறும்', 'வயறும்' (509), 'தொடர்', 'துடர்' (85), 'செவிடு', 'செகிடு' (481), 'தொலை', 'துலை' (598), 'வெண்ணெய்', 'வெண்ணை' (151) : இவ் ஒலி பேதங்கள் தமிழோடியையுள்ள தென்னாட்டு மொழிகளில் வடிவு வேறுபாடு

பெற்று இன்றைக்குச் சரியான சொல் என்று கொள்ளப்பட்டுள்ளமையும் இங்கே அறியத்தக்கது. உதாரணமாக, தமிழில் திருத்தமான வடிவம் என்று கொள்ளும் 'சிறுக்கன்' (59) என்பது மலையாளத்தில் 'செறுக்கன்' என்றே வழங்கிவருகிறது. இங்ஙனமே, 'கொங்கை' என்பதனை 'கொங்க' என்று வழங்குவர். இவை போல்வனவற்றைப் பாடரூப பேத அனுபந்தத்தில் காணலாம். ஒலி வடிவினின்றே வரிவடிவம் தோன்றியது என்பதைக் கருதும்பொழுது இது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். கால அடைவில் ஒலி வேறுபடுதலும் அவற்றிற்குத்தக வரிவடிவுகள் மாறுதலும் மிகச் சாதாரணமான உண்மைகளாகும். இவ்வகையிலே இப் 'பிழைகளும்' பயன்படும் என்பது உறுதி. இவைகளேயன்றி ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழைகளும் பலதிறத்தனவாம். அன்றியும் பாட பரிசோதனையிலும் மூலச்சுவடிகளின் பரிசோதனையிலும் இப் 'பிழைகளை' ஆராய்ந்து வகைப்படுத்துதல் விஞ்ஞான சாஸ்திர நோக்குப்படி இன்றியமையாததாகும்.

தற்காலத்தில் தமிழ்ப் பேராசிரியர்களுள் மிகச் சிறந்தவராகிய இராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்கள் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை நுணுகிக் கற்றுத் தமது நுண்ணறிவாலும் பெரும் புலமையாலும் இன்னின்ன பாடங்கள் கொள்ளத்தக்கன வாகலாம் என்று செந்தமிழில் வெளியிட்டுள்ளார்கள். அவைகள் பிரதிகளில் காணாமையினாலே நான் பாடமாகக் கொள்ளவில்லை. ஆனால், அவற்றை ஆராய்ச்சி செய்வது அவசியம் பற்றியும் பிரதிகளில் காணுதல் கூடும் என்ற நம்பிக்கை பற்றியும் பிற் சேர்வாகக் கொடுத்திருக்கிறேன்.

கொள்ளத்தக்க பாடங்களாக ஒருசிலவற்றைத் தந்துள்ளேன். அவைகளும் நோக்கிக்கொள்ளத்தக்கன.

முதலில் நான்கு தொகுதிகளாகத் திவ்யப் பிரபந்தத்தை வெளியிடுதல் வேண்டும் என்றும், நான்காவது தொகுதியில் திவ்யப் பிரபந்தத்தில் வரும் புராண இதிகாசக் கதைகள், இதன் இலக்கியப் பெருமை, ஆழ்வார்கள் வாழ்ந்த வரிசைக்கிரமம், காலம் முதலியன பற்றிய ஆராய்ச்சி, சொல்-தொடர் அகராதி, அரும்பத அகராதி, பண்பற்றிய ஒப்புமைப் பகுதிகள் முதலியவற்றை அமைக்கலாம் என்றும் கருதினேன். ஆனால், நான்கு தொகுதிகள் மூலபாடத்திற்கே தேவையாய் உள்ளன. ஆதலால், ஐந்தாவது தொகுதியில்தான் இவற்றைக் கொடுக்க இயலும். அவ்வாறே செய்ய எண்ணியுள்ளேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், 'குமரிமலர்' மூலமாக இவ்வகைப் பதிப்பொன்று வெளியிட முயன்றேன். நான் அயலூர் செல்ல நேரிட்டமையால் அம் முயற்சி நின்றுபோயிற்று. மீண்டும் இதனைத் தொடங்குவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் எனது பேரன்பர் ஸ்ரீ எஸ். ராஜம் அவர்களாவர்.

இப்பணியில் அச்சுத்தாள்கள் முதலியவற்றைக் கூர்ந்து நோக்கித் திருத்தங்களை உதவியவர்கள் சிறந்த தமிழறிஞரும் வடமொழி அறிஞருமாகிய ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் அவர்களும், சிறந்த இலக்கிய இலக்கண வித்வானுகிய ஸ்ரீ வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களும், சிறந்த மொழிபெயர்ப்பாசிரியரும் விஞ்ஞானப் பேராசிரியருமாகிய அட்வொகேட் ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் அவர்களும் ஆவர். இவர்களுக்கும் ஏட்டுப் பிரதிகள் முற்பதிப்புக்கள் முதலியவற்றை உதவிய அன்பர்களுக்கும் எனது நன்றி.

காரப்பங்காடு ஸ்ரீ வேங்கடாச்சாரியர் அவர்கள் வேண்டும்போது தக்க ஆலோசனைகள் கூறி, ஊக்கமளித்து வந்தார்கள். பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியர் அவர்களும் எனது வேண்டுகோள்படி ஒருமுறை வந்து இப்பதிப்பு விஷயமாகக் கலந்து, தமக்குத் தோன்றிய சீர்திருத்தங்களைக் கூறினர்கள். இப்பெரியார்களுக்கும் எனது நன்றி உரித்தாகிறது. இவ்வாறும் கடிதமூலமாகவும் பிறவாறும் எனது முயற்சியை ஊக்கி வந்த அன்பர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

இங்ஙனமாக, எத்தனையோ வகைகளில் முயற்சிசெய்து இப் பதிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இதிலுள்ள பாடங்கள் அறுதியாய் முடிவுகட்டப்பட்டன என்று நான் கூறத் துணிய மாட்டேன். இன்னும் வைஷ்ணவப் பெரியார்களும் பிற ஆராய்ச்சியாளர்களும் தக்க பாடங்களை ஆதாரத்துடன் தருவரேல், அவற்றைச் சீர்தூக்கி மேற்கொள்ளுதலிலும் எனது நன்றியைத் தெரிவித்தலிலும் காலந்தாழ்க்கமாட்டேன்.

எனது பதிப்பு முயற்சிகள் யாவும் இனிது நிறைவேறுதற்கு இறைவன் அருள்புரிக.

கம்பன் நிலயம்
சென்னை - 20
25—12—'55

எஸ். வையாபுரிப் பிள்ளை

உள்ளுறை

பெரியாழ்வார்

பக்கம்

1. திருப்பல்லாண்டு ... 1

2. பெரியாழ்வார் திருமொழி

1, 1. கண்ணன் திருவவதாரம் ... 4
2. கண்ணனது திருமேனியழகு ... 5
3. தாலப் பருவம் ... 8
4. அம்புலிப் பருவம் ... 10
5. செங்கீரைப் பருவம் ... 12
6. சப்பாணிப் பருவம் ... 15
7. தளர்நடைப் பருவம் ... 17
8. அச்சோப் பருவம் ... 19
9. புறம் புல்கல் ... 21

2, 1. கண்ணன் அப்பூச்சி காட்டுதல் ... 23
2. தாய்ப்பால் உண்ண அழைத்தல் ... 24
3. காது குத்தல் ... 27
4. நீராட்டம் ... 30
5. குழல்வாரக் காக்கையை வா எனல் ... 33
6. கோல் கொண்டு வா எனல் ... 34
7. பூச் சூட்டல் ... 36
8. காப்பிடல் ... 39
9. பாலக் கிரீடை ... 41
10. ஆயர்மங்கையர் முறையீடு ... 44

3, 1. அம்மம் தர மறுத்தல் ... 45
2. கண்ணனைக் கன்றின்பின் போக்கிய அன்னை இரங்குதல் ... 48
3. கண்ணன் மீண்டுவருங் கோலம் கண்டு அன்னை மகிழ்தல் ... 49
4. கண்ணன் மீண்டுவருங் கோலம் கண்டு கன்னியர் காமுறல் ... 52
5. கோவர்த்தன கிரியைக் குடைகொண்டமை ... 54
6. கண்ணன் குழல் ஊதல் ... 57

பக்கம்

7. நற்றாய் இரங்கல் ... 60
8. தலைவன்பின் சென்ற மகளைக்குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல் ... 63
9. உந்தி பறத்தல் ... 65
10. அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளம் ... 67

4, 1. திருமாலைக் கண்ட சுவடு உரைத்தல் ... 68
2. திருமாலிருஞ்சோலை ... 69
3. ,, -2 ... 71
4. திருக்கோட்டியூர் ... 72
5. பத்தராய் இறப்பார் பெறும் பேறு ... 75
6. திருமாலின் நாமம் இடுதல் ... 78
7. கண்டம் என்னும் திருப்பதி ... 79
8. திருவரங்கம் ... 82
9. ,, -2 ... 84
10. எமபயம் நீக்கென அரங்கத்தரவணையானை வேண்டுதல் ... 87

5, 1. தன் தகவின்மையை அறிவித்தல் ... 90
2. பண்டன்று பட்டினம் காப்பே ... 92
3. திருமாலிருஞ்சோலைப் பெருமானைப் போக விடேன் எனல் ... 95
4. அடிமைப்பட்டுத் தாம் பெற்ற நன்மைகளை நினைத்துக் களித்தல் ... 97

ஆண்டாள்

3. திருப்பாவை ... 101

4. நாச்சியார் திருமொழி

1. தைத்திங்களில் காமனை வழிபடல் ... 109
2. சிற்றில் சிதையேல் எனல் ... 111
3. துகிலைப் பணித்தருள் எனல் ... 114
4. கூடல் இழைத்தல் ... 116
5. குயிற் பத்து ... 118
6. திருமணக் கனவை உரைத்தல் ... 120
7. வலம்புரிக்குக் கிடைத்த பேறு ... 122
8. மேகவிடு தூது ... 123
9. திருமாலிருஞ்சோலைப் பிரானை வழிபடல் ... 125

பக்கம்

10. காதல்-நோய் செய்த பரிசு ... 126
11. திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல் ... 127
12. கண்ணன் இருக்கும் இடத்துக் கொண்டுசெல்க எனல் ... 129
13. கண்ணன் உகந்த பொருள்கொண்டு காதல்-நோய் தணியின் எனல் ... 131
14. விருந்தாவனத்துக் கண்ணனைக் கண்டமை ... 134

குலசேகரர்

5. பெருமாள் திருமொழி
1. அரங்கப்பெருமானை என்று கண்டு மகிழ்வேன் எனல் ... 136
2. அரங்கநாதனது அடியார்க்கு அடியேன் ... 139
3. அழகிய மணவாளன்பால் பித்தன் எனல் ... 141
4. திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதியது எனல் ... 142
5. வித்துவக்கோட்டு அம்மானையே வேண்டி நிற்றல் ... 144
6. கன்னியர் ஊடிக் கண்ணனை எள்குதல் ... 145
7. தேவகியின் புலம்பல் ... 148
8. தாலாட்டு ... 151
9. தசரதன் புலம்பல் ... 152
10. தில்லைச் சித்திரகூடம்: இராம சரிதம் ... 155

திருமழிசைப் பிரான்

6. திருச்சந்த விருத்தம் ... 159

தொண்டரடிப் பொடிகள்

7. திருமாலை ... 175
8. திருப்பள்ளி எழுச்சி ... 181

திருப்பாணழ்வார்

9. அமலனாதிபிரான் ... 184

மதுரகவிகள்

10. கண்ணி நுண் சிறுத்தாம்பு ... 186
11. பாட ரூப பேதங்கள் முதலியன ... 188
12. முதற் குறிப்பு அகராதி ... 224

ஸ்ரீ:

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு

காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு,
பல கோடி நூறாயிரம்,
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னொடும் பிரிவு இன்றி
ஆயிரம் பல்லாண்டு ;
வடிவாய் நின் வல மார்வினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு ;
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு ;
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச-
சனியமும் பல்லாண்டே. 1

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல், வந்து
மண்ணும் மணமும் கொண்மின் ;
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினிற் புகுதலொட்டோம் ;
ஏழாட்காலும் பழிப்பு இலோம் நாங்கள் ;
இராக்கதர் வாழ் இலங்கை
பாழாள் ஆகப் படை பொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 2

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
எங்கள் குழாம் புகுந்து
கூடு மனம் உடையீர்கள்! வரம்பு ஒழி
வந்து ஒல்லைக் கூடுமினோ ;
நாடும் நகரமும் நன்கு அறிய நமோ
நாராயணாய என்று
பாடு மனம் உடைப் பத்தருள்ளீர் ! வந்து
பல்லாண்டு கூறுமினே. 3

அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி,
    அசுரர் இராக்கதரை
இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த
    இருடிகேசன் தனக்கு,
தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்து அடிதொழுது
    ஆயிர நாமம் சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்-
    லாயிரத்தாண்டு என்மினே. 4

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்
    ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்; திரு-
    வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுரு ஆகி
    அரியை அழித்தவனைப்
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்-
    தாண்டு என்று பாடுதுமே. 5

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி
    திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று
    குடிகுடி ஆட்செய்கின்றோம்;
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்
    தோளும் பொழி குருதி
பாயச் சுழற்றிய ஆழி வல்லானுக்குப்
    பல்லாண்டு கூறுதுமே. 6

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும்
    அத்தாணிச் சேவகமும்
கை அடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு
    காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து, என்னை
    வெள்ளுயிர் ஆக்கவல்ல
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப்
    பல்லாண்டு கூறுவனே. 7

உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை
உடுத்து, கலத்தது உண்டு,
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன
சூடும் இத் தொண்டர்களோம் ;
விடுத்த திசைக் கருமம் திருத்தித் திரு-
வோணத் திருவிழவில்
படுத்த பைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 8

எந்நாள் எம்பெருமான் உன் தனக்கு அடி-
யோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே, அடியோங்கள் அடிக்குடில்
வீடுபெற்று உய்ந்தது காண் ;
செந்நாள் தோற்றித் திரு மதுரையிற்
சிலை குனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே ! உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே. 9

அல்வழக்கு ஒன்றும் இல்லா அணி கோட்டியர்-
கோன் அபிமான துங்கன்
செல்வனைப் போல, திருமாலே! நானும்
உனக்குப் பழ அடியேன் ;
நல் வகையால் நமோ நாராயணா என்று
நாமம் பல பரவி,
பல் வகையாலும் பவித்திரனே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே. 10

பல்லாண்டு என்று பவித்திரனைப் பர-
மேட்டியைச் சார்ங்கம் என்னும்
வில் ஆண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டு-
சித்தன் விரும்பிய சொல்
நல் ஆண்டு என்று நவின்று உரைப்பார் நமோ
நாராயணாய என்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து
ஏத்துவர் பல்லாண்டே. 11

பெரியாழ்வார் திருமொழி

1, 1

கண்ணன் திருவவதாரம்

வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்க்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்,
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்து அளறு ஆயிற்றே. 1

ஓடுவார், விழுவார், உகந்து ஆலிப்பார்,
நாடுவார், நம்பிரான் எங்குத்தான் என்பார் ;
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே. 2

பேணிச் சீர் உடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம் புகுவார், புக்குப் போதுவார் ;
ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை காண், திரு-
வோணத்தான் உலகு ஆளும் என்பார்களே. 3

உறியை முற்றத்து உருட்டி நின்று ஆடுவார்,
நறுநெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார்,
செறி மென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்
அறிவு அழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே. 4

கொண்ட தாள்உறி கோலக் கொடுமழுத்
தண்டினர், பறியோலைச் சயனத்தர்,
விண்ட முல்லையரும்பு அன்ன பல்லினர்,
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினர். 5

கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர்
பைய ஆட்டிப் பசுஞ் சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கு அங்காந்திட,
வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே. 6

வாயுள் வையகம் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திரன் அல்லன், அருந்தெய்வம் ;
பாய சீர் உடைப் பண்பு உடைப் பாலகன்
மாயன் : என்று மகிழ்ந்தனர் மாதரே. 7

பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்,
எத் திசையும் சயமரம் கோடித்து,
மத்த மா மலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே. 8

கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கு இலாமையால் நான் மெலிந்தேன், நங்காய்! 9

செந்நெல் ஆர் வயல் சூழ் திருக்கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை
மின்னு நூல் விட்டுசித்தன் விரித்த இப்
பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை பாவமே. 10

பெரியாழ்வார் திருமொழி

1, 2

கண்ணனது திருமேனியழகு

சீதக் கடலுள் அமுது அன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்து உண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே,
பவள வாயீர்! வந்து காணீரே! 1

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல், எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டு இருந்தவா காணீரே,
ஒண்ணுதலீர்! வந்து காணீரே! 2

பணைத்தோள் இள ஆய்ச்சி பால் பாய்ந்த கொங்கை
அணைத்து ஆர உண்டு கிடந்த இப் பிள்ளை
இணைக்காலில் வெள்ளித் தளை நின்று இலங்கும்
கணைக்கால் இருந்தவா காணீரே,
காரிகையீர்! வந்து காணீரே! 3

உழந்தாள் நறுநெய் ஒரோர் தடா உண்ண,
இழந்தாள் எரிவினால் ஈர்த்து, எழில் மத்தின்
பழந் தாம்பால் ஓச்ச, பயத்தால் தவழ்ந்தான்
முழந்தாள் இருந்தவா காணீரே,
முகிழ்முலையீர்! வந்து காணீரே! 4

பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்து உண்டிட்டு
உறங்குவான் போலே கிடந்த இப் பிள்ளை
மறம் கொள் இரணியன் மார்வை முன் கீண்டான்
குறங்குகளை வந்து காணீரே,
குவிமுலையீர்! வந்து காணீரே! 5

மத்தக் களிற்று வசுதேவர் தம்முடைச்
சித்தம் பிரியாத தேவகிதன் வயிற்றில்
அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன்
முத்தம் இருந்தவா காணீரே,
முகிழ்நகையீர்! வந்து காணீரே! 6

இருங்கை மதகளிறு ஈர்க்கின்றவனைப்
பருங்கிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்தன்
நெருங்கு பவளமும் நேர்நாணும் முத்தும்
மருங்கும் இருந்தவா காணீரே,
வாணுதலீர்! வந்து காணீரே! 7

வந்த மதலைக் குழாத்தை வலிசெய்து
தந்தக் களிறு போல் தானே விளையாடும்
நந்தன் மதலைக்கு நன்றும் அழகிய
உந்தி இருந்தவா காணீரே,
ஒளியிழையீர்! வந்து காணீரே! 8

அதிருங் கடல்நிற வண்ணனை ஆய்ச்சி
மதுர முலை ஊட்டி வஞ்சித்து வைத்துப்
பதறப் படாமே பழந் தாம்பால் ஆர்த்த
உதரம் இருந்தவா காணீரே,
ஒளிவளையீர்! வந்து காணீரே! 9

பெரு மா உரலிற் பிணிப்புண்டு இருந்து அங்கு
இரு மா மருதம் இறுத்த இப் பிள்ளை
குரு மா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்வு இருந்தவா காணீரே,
சேயிழையீர்! வந்து காணீரே! 10

நாள்கள் ஓர் நாலைந்து திங்கள் அளவிலே,
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள் கொள் வளைஎயிற்று ஆருயிர் வவ்வினான்
தோள்கள் இருந்தவா காணீரே,
சுரிகுழலீர்! வந்து காணீரே! 11

மைத் தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங்கள் வந்து காணீரே,
கனங்குழையீர்! வந்து காணீரே! 12

வண்டு அமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்
கொண்டு வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு
அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய
கண்டம் இருந்தவா காணீரே,
காரிகையீர்! வந்து காணீரே! 13

எம் தொண்டை வாய்ச் சிங்கம் வா என்று எடுத்துக்கொண்டு
அந் தொண்டை வாய் அமுது ஆதரித்து ஆய்ச்சியர்
தம் தொண்டை வாயால் தருக்கிப் பருகும் இச்
செந் தொண்டை வாய் வந்து காணீரே,
சேயிழையீர்! வந்து காணீரே! 14

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து நீராட்டும் இந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா காணீரே,
மொய்குழலீர்! வந்து காணீரே! 15

விண் கொள் அமரர்கள் வேதனை தீர முன்
மண் கொள் வசுதேவர்தம் மகனாய் வந்து
திண் கொள் அசுரரைத் தேய வளர்கின்றான்
கண்கள் இருந்தவா காணீரே,
கனவளையீர்! வந்து காணீரே! 16

பருவம் நிரம்பாமே பாரெல்லாம் உய்யத்
திருவின் வடிவு ஒக்கும் தேவகி பெற்ற
உருவு கரிய ஒளி மணிவண்ணன்
புருவம் இருந்தவா காணீரே,
பூண்முலையீர்! வந்து காணீரே! 17

மண்ணும் மலையும் கடலும் உலகு ஏழும்
உண்ணுந் திறத்து மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு
வண்ணம் எழில்கொள் மகரக்குழை இவை
திண்ணம் இருந்தவா காணீரே,
சேயிழையீர்! வந்து காணீரே! 18

முற்றிலும் தூதையும் முன்கைமேல் பூவையும்
சிற்றில் இழைத்துத் திரிதருவோர்களைப்
பற்றிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்தன்
நெற்றி இருந்தவா காணீரே,
நேரிழையீர்! வந்து காணீரே! 19

அழகிய பைம்பொன்னின் கோல் அங்கைக் கொண்டு
கழல்கள் சதங்கை கலந்து எங்கும் ஆர்ப்ப
மழ கன்றினங்கள் மறித்துத் திரிவான்
குழல்கள் இருந்தவா காணீரே,
குவிமுலையீர்! வந்து காணீரே! 20

சுருப்பார் குழலி யசோதை முன் சொன்ன
திருப் பாதகேசத்தைத் தென்புதுவைப் பட்டன்
விருப்பால் உரைத்த இருபதோடு ஒன்றும்
உரைப்பார் போய் வைகுந்தத்து ஒன்றியிருப்பரே. 21

பெரியாழ்வார் திருமொழி

1, 3

தாலப் பருவம்

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்;
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே! தாலேலோ! 1

உடையார் கனமணியோடு ஒண் மாதுளம்பூ
இடை விரவிக் கோத்த எழிற் தெழ்கினோடும்
விடை ஏறு காபாலி ஈசன் விடுதந்தான்;
உடையாய்! அழேல் அழேல் தாலேலோ!
உலகம் அளந்தானே! தாலேலோ! 2

என்தம்பிரானார் எழிற் திருமார்வற்குச்
சந்தம் அழகிய தாமரைத் தாளற்கு,
இந்திரன்தானும் எழில் உடைக் கிண்கிணி
தந்து உவனாய் நின்றான்; தாலேலோ!
தாமரைக் கண்ணனே! தாலேலோ! 3

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்,
செங்கண் கருமுகிலே! தாலேலோ!
தேவகி சிங்கமே! தாலேலோ! 4

எழில் ஆர் திருமார்வுக்கு ஏற்கும் இவை என்று
அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு
வழு இல் கொடையான் வயிச்சிரவணன்
தொழுது உவனாய் நின்றான்; தாலேலோ!
தூமணி வண்ணனே! தாலேலோ! 5

ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மா தக்க என்று வருணன் விடுதந்தான்,
சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ!
சுந்தரத் தோளனே! தாலேலோ! 6

கான் ஆர் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வான் ஆர் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேன் ஆர் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்,
கோனே! அழேல் அழேல், தாலேலோ!
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ! 7

கச்சொடு பொற்சுரிகை காம்பு கனகவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள் நிரைப் பொற்பூ
அச்சுதனுக்கு என்று அவனியாள் போத்தந்தாள்,
நச்சுமுலை உண்டாய்! தாலேலோ!
நாராயணா! அழேல், தாலேலோ! 8

மெய் திமிரும் நானப் பொடியொடு மஞ்சளும்
செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்துரமும்
வெய்ய கலைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்,
ஐயா! அழேல் அழேல், தாலேலோ!
அரங்கத்து அணையானே! தாலேலோ! 9

வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலை உண்ட
அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய
செஞ்சொல் மறையவர் சேர் புதுவைப் பட்டன் சொல்
எஞ்சாமை வல்லவர்க்கு இல்லை இடர்தானே. 10

பெரியாழ்வார் திருமொழி

1, 4

அம்புலிப் பருவம்

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத்
தவழ்ந்து போய்ப்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி
அளைகின்றான் ;
என்மகன் கோவிந்தன் கூத்தினை இள
மா மதீ!
நின்முகம் கண்ணுள ஆகில், நீ இங்கே
நோக்கிப் போ. 1

என் சிறுக்குட்டன் எனக்கு ஓர் இன்னமுது
எம்பிரான்
தன் சிறுக்கைகளால் காட்டிக் காட்டி
அழைக்கின்றான் ;
அஞ்சன வண்ணனோடு ஆடல் ஆட
உறுதியேல்,
மஞ்சில் மறையாதே, மா மதீ! மகிழ்ந்து
ஓடி வா. 2

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி
பரந்து எங்கும்
எத்தனை செய்யிலும் என்மகன் முகம்
நேரொவ்வாய் ;
வித்தகன் வேங்கட வாணன் உன்னை
விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே, அம்புலீ! கடிது
ஓடி வா. 3

சக்கரக் கையன் தடங்கண்ணால் மலர
விழித்து
ஒக்கலைமேல் இருந்து உன்னையே சுட்டிக்
காட்டும், காண் ;
தக்கது அறிதியேல், சந்திரா! சலம்
செய்யாதே ;
மக்கட் பெறாத மலடன் அல்லையேல்,
வா, கண்டாய். 4

அழகிய வாயில் அமுத ஊறல்
தெளிவுற
மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக்
கூகின்றான் ;
குழகன் சிரீதரன் கூவக் கூவ நீ
போதியேல்,
புழையில ஆகாதே நின்செவி, புகர்
மா மதீ! 5

தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும்
தடக்கையன்
கண் துயில்கொள்ளக் கருதிக் கொட்டாவி
கொள்கின்றான் ;
உண்ட முலைப்பால் அறா கண்டாய் உறங்-
காவிடில்,
விண்தனில் மன்னிய மா மதீ! விரைந்து
ஓடி வா. 6

பாலகன் என்று பரிபவம் செய்யேல்,
பண்டு ஓர் நாள்
ஆலின் இலை வளர்ந்த சிறுக்கன்
அவன் இவன் ;
மேல் எழப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும்
வெகுளுமேல்,
மாலை மதியாதே, மா மதீ! மகிழ்ந்து
ஓடி வா. 7

சிறியன் என்று என் இளஞ் சிங்கத்தை இக-
ழேல் கண்டாய்,
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச்
சென்று கேள் ;
சிறுமைப் பிழை கொள்ளில் நீயும் உன் தேவைக்கு
உரியை காண் ;
நிறைமதீ! நெடுமால் விரைந்து உன்னைக்
கூகின்றான். 8

தாழியில் வெண்ணெய் தடங்கை ஆர
விழுங்கிய
பேழை வயிற்று எம்பிரான் கண்டாய், உன்னைக்
கூகின்றான் ;
ஆழிகொண்டு உன்னை எறியும், ஐயுறவு
இல்லை காண்,
வாழ உறுதியேல், மா மதீ! மகிழ்ந்து
ஓடி வா. 9

மைத்தடங் கண்ணி யசோதை தன்மகனுக்கு இவை
ஒத்தன சொல்லி உரைத்த மாற்றம் ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன் விரித்த தமிழ் இவை
எத்தனையும் சொல்ல வல்லவர்க்கு இடர் இல்லையே. 10

பெரியாழ்வார் திருமொழி

1, 5

செங்கீரைப் பருவம்

உய்ய உலகு படைத்து உண்ட மணிவயிறா!
ஊழிதொறு ஊழி பல ஆலின் இலையதன்மேல்
பைய உயோகு-துயில் கொண்ட பரம்பரனே!
பங்கய நீள்நயனத்து அஞ்சன மேனியனே!
செய்யவள் நின் அகலம் சேமம் எனக் கருதி,
செல்வு பொலி மகரக் காது திகழ்ந்து இலக,
ஐய! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 1

கோளரியின் உருவங் கொண்டு அவுணன் உடலம்
குருதி குழம்பி எழ, கூர்உகிரால் குடைவாய்
மீள அவன்மகனை மெய்ம்மை கொளக் கருதி :
மேலை அமரர்பதி மிக்கு வெகுண்டு வரக்
காள நன் மேகமவை கல்லொடு கால் பொழியக்
கருதி வரை குடையாக் காலிகள் காப்பவனே!
ஆள! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 2

நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே!
நாவியுள் நற்கமல நான்முகனுக்கு ஒருகால்
தம்மனை ஆனவனே! தரணி தலமுழுதும்
தாரகையின் உலகும் தடவி அதன் புறமும்
விம்ம வளர்ந்தவனே! வேழமும் ஏழ் விடையும்
விரவிய வேலைதனுள் வென்று வருமவனே!
அம்ம! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 3

வானவர்தாம் மகிழ, வன் சகடம் உருள,
வஞ்ச முலைப்பேயின் நஞ்சம்அது உண்டவனே!
கானக வல் விளவின் காய் உதிரக் கருதிக்
கன்றுஅது கொண்டு எறியும் கருநிற என்கன்றே!
தேனுகனும் முரனும் திண்திறல் வெந்நரகன்
என்பவர் தாம் மடியச் செரு அதிரச் செல்லும்
ஆனை! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 4

மத்து அளவுந் தயிரும் வார்குழல் நன்மடவார்
வைத்தன நெய் களவால் வாரி விழுங்கி ஒருங்கு
ஒத்த இணைமருதம் உன்னிய வந்தவரை
ஊரு கரத்தினொடும் உந்திய வெந்திறலோய்!
முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன்முன்
முன்ன முகத்து அணிஆர் மொய்குழல்கள் அலைய,
அத்த! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 5

காய மலர்நிறவா! கருமுகில் போல் உருவா!
கானக மா மடுவிற் காளியன் உச்சியிலே
தூய நடம் பயிலும் சுந்தர! என்சிறுவா!
துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே!
ஆயம் அறிந்து பொருவான் எதிர்வந்த மல்லை
அந்தரம் இன்றி அழித்து ஆடிய தாளிணையாய்!
ஆய! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 6

துப்பு உடை ஆயர்கள்தம் சொல் வழுவாது ஒருகால்
தூய கருங்குழல் நற் றோகைமயில் அனைய
நப்பினைதன் திறமா நல் விடை ஏழ் அவிய
நல்ல திறல் உடைய நாதனும் ஆனவனே!
தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத்
தனி ஒரு தேர் கடவித் தாயொடு கூட்டிய என்
அப்ப! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே. 7

உன்னையும் ஒக்கலையிற் கொண்டு தம் இல் மருவி
உன்னொடு தங்கள் கருத்து ஆயின செய்து வரும்
கன்னியரும் மகிழ, கண்டவர் கண்குளிர,
கற்றவர் தெற்றிவர, பெற்ற எனக்கு அருளி
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதில் சூழ்
சோலைமலைக்கு அரசே! கண்ணபுரத்து அமுதே!
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை,
ஏழ் உலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே. 8

பாலொடு நெய் தயிர் ஒண் சாந்தொடு சண்பகமும்
பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறி வர,
கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்
கோமள வெள்ளிமுளை போல் சில பல் இலக,
நீல நிறத்து அழகார் ஐம்படையின் நடுவே
நின் கனிவாய் அமுதம் இற்று முறிந்து விழ,
ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை,
ஏழ் உலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே. 9

செங்கமலக் கழலிற் சிற்றிதழ் போல் விரலிற்
சேர் திகழ் ஆழிகளும் கிண்கிணியும், அரையிற்
தங்கிய பொன்வடமும் தாள நன் மாதுளையின்
பூவொடு பொன்மணியும், மோதிரமும் கிறியும்
மங்கல ஐம்படையும் தோள்வளையும் குழையும்
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்து இலக,
எங்கள் குடிக்கு அரசே! ஆடுக செங்கீரை,
ஏழ் உலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே. 10

அன்னமும் மீன் உருவும் ஆளரியும் குறளும்
ஆமையும் ஆனவனே ! ஆயர்கள் நாயகனே !
என் அவலம் களைவாய் ! ஆடுக செங்கீரை
ஏழ் உலகும் உடையாய்! ஆடுக, ஆடுக என்று
அன்னநடை மடவாள் அசோதை உகந்த பரிசு
ஆன புகழ்ப் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ்
இன்னிசை மாலைகள் இப் பத்தும் வல்லார் உலகில்
எண்திசையும் புகழ் மிக்கு இன்பம்அது எய்துவரே. 11

பெரியாழ்வார் திருமொழி

1, 6

சப்பாணிப் பருவம்

மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப, மருங்கின் மேல்
ஆணிப் பொன்னால் செய்த ஆய்பொன் உடை மணி
பேணி, பவளவாய் முத்து இலங்க, பண்டு
காணி கொண்ட கைகளால் சப்பாணி,
கருங்குழற் குட்டனே! சப்பாணி. 1

பொன்-அரைநாணொடு மாணிக்கக் கிண்கிணி
தன்அரை ஆட, தனிச் சுட்டி தாழ்ந்து ஆட,
என்அரை மேல்நின்று இழிந்து உங்கள் ஆயர்தம்
மன் அரைமேல் கொட்டாய் சப்பாணி,
மாயவனே! கொட்டாய் சப்பாணி. 2

பல் மணி முத்து இன்பவளம் பதித்தன்ன
என் மணிவண்ணன் இலங்கு பொற் தோட்டின் மேல்
நின் மணிவாய் முத்து இலங்க, நின் அம்மைதன்
அம்மணி மேல் கொட்டாய் சப்பாணி,
ஆழியங் கையனே! சப்பாணி. 3

தூ நிலாமுற்றத்தே போந்து விளையாட
வான் நிலா அம்புலீ! சந்திரா! வா என்று
நீ நிலா, நிற் புகழாநின்ற ஆயர்தம்
கோ நிலாவ, கொட்டாய் சப்பாணி,
குடந்தைக் கிடந்தானே! சப்பாணி. 4

புட்டியிற் சேறும் புழுதியும் கொண்டுவந்து
அட்டி அமுக்கி அகம் புக்கு, அறியாமே,
சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும் உண்
பட்டிக் கன்றே! கொட்டாய் சப்பாணி,
பற்பநாபா! கொட்டாய் சப்பாணி. 5

தாரித்து நூற்றுவர் தந்தை சொற் கொள்ளாது
போர் உய்த்து வந்து புகுந்தவர் மண் ஆளப்
பாரித்த மன்னர் படப் பஞ்சவர்க்கு அன்று
தேர் உய்த்த கைகளால் சப்பாணி,
தேவகி சிங்கமே! சப்பாணி. 6

பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை
இரந்திட்ட கைம்மேல் எறிதிரை மோதக்
கரந்திட்டு நின்ற கடலைக் கலங்கச்
சரந் தொட்ட கைகளால் சப்பாணி,
சார்ங்க விற் கையனே! சப்பாணி. 7

குரக்கு இனத்தாலே குரைகடல்தன்னை
நெருக்கி அணை கட்டி, நீள்நீர் இலங்கை
அரக்கர் அவிய அடு கணையாலே
நெருக்கிய கைகளால் சப்பாணி,
நேமியங் கையனே! சப்பாணி. 8

அளந்து இட்ட தூணை அவன் தட்ட, ஆங்கே
வளர்ந்திட்டு வாள் உகிர்ச் சிங்க உருவாய்
உளந் தொட்டு, இரணியன் ஒண்மார்வு அகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி,
பேய் முலை உண்டானே! சப்பாணி. 9

அடைந்திட்டு அமரர்கள் ஆழ்கடல்தன்னை
மிடைந்திட்டு, மந்தரம் மத்தாக நாட்டி,
வடம் சுற்றி, வாசுகி வன்கயிறு ஆகக்
கடைந்திட்ட கைகளால் சப்பாணி,
கார்முகில் வண்ணனே! சப்பாணி. 10

ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோவினை
நாட் கமழ் பூம்பொழில் வில்லிபுத்தூர்ப் பட்டன்
வேட்கையால் சொன்ன சப்பாணி ஈரைந்தும்
வேட்கையினால் சொல்லுவார் வினை போமே. 11

பெரியாழ்வார் திருமொழி

1, 7

தளர்நடைப் பருவம்

தொடர் சங்கிலிகை சலார்-பிலார் என்னத்
    தூங்கு பொன்மணி ஒலிப்பப்
படு மும்மதப் புனல் சோர வாரணம்
    பைய நின்று ஊர்வது போல்,
உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப
    உடை மணி பறை கறங்க
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி
    தளர்நடை நடவானோ! 1

செக்கரிடை நுனிக்கொம்பிற் தோன்றும்
    சிறுபிறை முளைப் போல
நக்க செந் துவர்வாய்த் திண்ணை மீதே
    நளிர் வெண்பல் முளை இலக,
அக்குவடம் உடுத்து ஆமைத்தாலி
    பூண்ட அனந்தசயனன்
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்
    தளர்நடை நடவானோ! 2

மின்னுக் கொடியும் ஓர் வெண் திங்களும்
    சூழ் பரிவேடமுமாய்ப்
பின்னற் துலங்கும் அரசிலையும்
    பீதகச் சிற்றாடையொடும்,
மின்னிற் பொலிந்த ஓர் கார்முகில் போலக்
    கழுத்தினிற் காறையொடும்,
தன்னிற் பொலிந்த இருடிகேசன்
    தளர்நடை நடவானோ! 3

கன்னற் குடம் திறந்தால் ஒத்து ஊறிக்
    கணகண சிரித்து உவந்து
முன் வந்து நின்று முத்தம் தரும் என்
    முகில்வண்ணன் திருமார்வன்
தன்னைப் பெற்றேற்குத் தன்வாய் அமுதம்
    தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான் ;
தன் எற்று மாற்றலர் தலைகள் மீதே
    தளர்நடை நடவானோ! 4

முன் நல் ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்
மொடுமொடு விரைந்து ஓடப்
பின்னைத் தொடர்ந்தது ஓர் கருமலைக் குட்டன்
பெயர்ந்து அடியிடுவது போல்,
பன்னி உலகம் பரவி ஓவாப் புகழ்ப்
பலதேவன் என்னும்
தன் நம்பி ஓடப் பின் கூடச் செல்வான்
தளர்நடை நடவானோ! 5

ஒரு காலிற் சங்கு ஒரு காலிற் சக்கரம்
உள்ளடி பொறித்து அமைந்த
இரு காலுங் கொண்டு, அங்கு அங்கு எழுதினாற்போல்,
இலச்சினை பட நடந்து,
பெருகாநின்ற இன்ப-வெள்ளத்தின்மேல்
பின்னையும் பெய்து பெய்து,
தரு கார்க் கடல்வண்ணன் காமர் தாதை
தளர்நடை நடவானோ! 6

படர் பங்கைய மலர்வாய் நெகிழப்
பனி படு சிறுதுளி போல்
இடங் கொண்ட செவ்வாய் ஊறி ஊறி
இற்று இற்று வீழநின்று,
கடுஞ் சேக் கழுத்தின் மணிக்குரல் போல்
உடை மணி கணகணென,
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி
தளர்நடை நடவானோ! 7

பக்கம் கருஞ் சிறுப்பாறை மீதே
அருவிகள் பகர்ந்தனைய
அக்குவடம் இழிந்து ஏறித் தாழ,
அணி அல்குல் புடை பெயர,
மக்கள் உலகினிற் பெய்து அறியா
மணிக் குழவி உருவின்
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்
தளர்நடை நடவானோ! 8

வெண் புழுதி மேற் பெய்துகொண்டு அளைந்தது ஓர்
வேழத்தின் கருங்கன்று போல்
தெண் புழுதியாடி, திரிவிக்கிரமன்
சிறு புகர்பட வியர்த்து
ஒண் போது அலர்கமலச் சிறுக்கால் உறைத்து
ஒன்றும் நோவாமே
தண் போது கொண்ட தவிசின் மீதே
தளர்நடை நடவானோ! 9

திரை நீர்ச் சந்திர மண்டலம் போலச்
செங்கண்மால் கேசவன் தன்
திரு நீர் முகத்துத் துலங்கு சுட்டி
திகழ்ந்து எங்கும் புடைபெயர,
பெரு நீர்த் திரை எழு கங்கையிலும்
பெரியதோர் தீர்த்த பலம்
தரு நீர்ச் சிறுச்சண்ணம் துள்ளம் சோரத்
தளர்நடை நடவானோ! 10

ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய
அஞ்சனவண்ணன் தன்னைத்
தாயர் மகிழ ஒன்னார் தளரத்
தளர்நடை நடந்ததனை
வேயர் புகழ் விட்டுசித்தன் சீரால்
விரித்தன உரைக்கவல்லார்
மாயன் மணிவண்ணன் தாள் பணியும்
மக்களைப் பெறுவர்களே. 11

பெரியாழ்வார் திருமொழி

1, 8

அச்சோப் பருவம்

பொன் இயல் கிண்கிணி சுட்டி புறங் கட்டித்
தன் இயல் ஓசை சலன்-சலன் என்றிட
மின் இயல் மேகம் விரைந்து எதிர் வந்தாற்போல்
என் இடைக்கு ஒட்டரா, அச்சோ! அச்சோ!
எம்பெருமான் வாராய், அச்சோ! அச்சோ! 1

செங்கமலப் பூவிற் தேன் உண்ணும் வண்டே போல்,
பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப,
சங்கு வில் வாள் தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைகளாலே வந்து அச்சோ! அச்சோ!
ஆரத் தழுவாய் வந்து, அச்சோ! அச்சோ! 2

பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து,
நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நற் பொய்கை புக்கு,
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டு அருள்செய்த
அஞ்சனவண்ணனே! அச்சோ! அச்சோ!
ஆயர் பெருமானே! அச்சோ! அச்சோ! 3

நாறிய சாந்தம் நமக்கு இறை நல்கு என்னத்
தேறி அவளும் திருவுடம்பிற் பூச,
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க அன்று
ஏற உருவினாய்! அச்சோ! அச்சோ!
எம்பெருமான்! வாராய், அச்சோ! அச்சோ! 4

கழல் மன்னர் சூழக் கதிர் போல் விளங்கி
எழலுற்று மீண்டே இருந்து உன்னை நோக்கும்
சுழலை பெரிது உடைத் துச்சோதனனை
அழல விழித்தானே! அச்சோ! அச்சோ!
ஆழி அங் கையனே! அச்சோ! அச்சோ! 5

போர் ஒக்கப் பண்ணி இப் பூமிப்பொறை தீர்ப்பான்
தேர் ஒக்க ஊர்ந்தாய் செழுந்தார் விசயற்காய்;
கார் ஒக்கு மேனிக் கரும் பெருங் கண்ணனே!
ஆரத் தழுவாய் வந்து, அச்சோ! அச்சோ!
ஆயர்கள் போரேறே! அச்சோ! அச்சோ! 6

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியிற்
தக்கது இது அன்று என்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய
சக்கரக் கையனே! அச்சோ! அச்சோ!
சங்கம் இடத்தானே! அச்சோ! அச்சோ! 7

என் இது மாயம்? என் அப்பன் அறிந்திலன்;
முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் என்ன,
மன்னு நமுசியை வானிற் சுழற்றிய
மின்னு முடியனே! அச்சோ! அச்சோ!
வேங்கடவாணனே! அச்சோ! அச்சோ! 8

கண்ட கடலும் மலையும் உலகு ஏழும்
முண்டத்துக்கு ஆற்றா, முகில்வண்ணா! ஓ! என்று
இண்டைச் சடைமுடி ஈசன் இரக்கொள்ள,
மண்டை நிறைத்தானே! அச்சோ! அச்சோ!
மார்வில் மறுவனே! அச்சோ! அச்சோ! 9

துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகை மூட
மன்னிய நான்மறை முற்றும் மறைந்திடப்
பின் இவ் உலகினில் பேரிருள் நீங்க அன்று
அன்னமது ஆனானே! அச்சோ! அச்சோ!
அருமறை தந்தானே! அச்சோ! அச்சோ! 10

நச்சுவார் முன் நிற்கும் நாராயணன் தன்னை
அச்சோ வருக என்று ஆய்ச்சி உரைத்தன
மச்சு அணி மாடப் புதுவைக்கோன் பட்டன் சொல்
நிச்சலும் பாடுவார் நீள் விசும்பு ஆள்வரே. 11

பெரியாழ்வார் திருமொழி

1, 9

புறம் புல்கல்

வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க-
மொட்டு நுனையில் முளைக்கின்ற முத்தே போல்
சொட்டுச் சொட்டு என்னத் துளிக்கத் துளிக்க என்
குட்டன் வந்து என்னைப் புறம்புல்குவான்,
கோவிந்தன் என்னைப் புறம்புல்குவான். 1

கிண்கிணி கட்டிக் கிறி கட்டிக் கையினிற்
கங்கணம் இட்டுக் கழுத்திற் தொடர் கட்டித்
தன் கணத்தாலே சதிரா நடந்து வந்து
என் கண்ணன் என்னைப் புறம்புல்குவான்,
எம்பிரான் என்னைப் புறம்புல்குவான். 2

கத்தக் கதித்துக் கிடந்த பெருஞ்செல்வம்
ஒத்துப் பொருந்திக்கொண்டு உண்ணாது மண் ஆள்வான்
கொத்துத் தலைவன் குடிகெடத் தோன்றிய
அத்தன் வந்து என்னைப் புறம்புல்குவான்,
ஆயர்கள் ஏறு என் புறம்புல்குவான். 3

நாந்தகம் ஏந்திய நம்பி! சரண் என்று
தாழ்ந்த தனஞ்சயற்கு ஆகி, தரணியில்
வேந்தர்கள் உட்க விசயன் மணித் திண்தேர்
ஊர்ந்தவன் என்னைப் புறம்புல்குவான்,
உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான். 4

வெண்கலப் பத்திரம் கட்டி விளையாடிக்
கண் பல பெய்த கருந்தழைக் காவின் கீழ்ப்
பண் பல பாடிப் பல்லாண்டு இசைப்ப, பண்டு
மண் பல கொண்டான் புறம்புல்குவான்,
வாமனன் என்னைப் புறம்புல்குவான். 5

சத்திரம் ஏந்தித் தனி ஒரு மாணியாய்
உத்தர வேதியில் நின்ற ஒருவனைக்
கத்திரியர் காணக் காணி முற்றும் கொண்ட
பத்திராகாரன் புறம்புல்குவான்,
பார் அளந்தான் என் புறம்புல்குவான். 6

பொத்த உரலைக் கவிழ்த்து, அதன்மேல் ஏறி,
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய
அத்தன் வந்து என்னைப் புறம்புல்குவான்,
ஆழியான் என்னைப் புறம்புல்குவான். 7

மூத்தவை காண முது மணற்குன்று ஏறிக்
கூத்து உவந்து ஆடிக் குழலால் இசை பாடி,
வாய்த்த மறையோர் வணங்க இமையவர்
ஏத்த வந்து, என்னைப் புறம்புல்குவான்,
எம்பிரான் என்னைப் புறம்புல்குவான். 8

கற்பகக் காவு கருதிய காதலிக்கு
இப்பொழுது ஈவன் என்று இந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத் திகழ் முற்றத்துள்
உய்த்தவன் என்னைப் புறம்புல்குவான்,
உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான். 9

ஆய்ச்சி அன்று ஆழிப் பிரான் புறம்புல்கிய
வேய்த் தடந்தோளி சொல் விட்டுசித்தன் மகிழ்ந்து
ஈத்த தமிழ் இவை ஈரைந்தும் வல்லவர்
வாய்த்த நன்மக்களைப் பெற்று மகிழ்வரே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 1

கண்ணன் அப்பூச்சி காட்டுதல்

மெச்சு ஊது சங்கம் இடத்தான் நல் வேய் ஊதி
பொய்ச் சூதிற் தோற்ற பொறை உடை மன்னர்க்காய்,
பத்து ஊர் பெறாது அன்று பாரதம் கைசெய்த
அத் தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 1

மலை புரை தோள் மன்னவரும் மாரதரும் மற்றும்
பலர் குலைய நூற்றுவரும் பட்டழிய, பார்த்தன்
சிலை வளையத் திண்தேர்மேல் முன்நின்ற செங்கண்
அலவலை வந்து அப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 2

காயும் நீர் புக்குக் கடம்பு ஏறி, காளியன்
தீய பணத்திற் சிலம்பு ஆர்க்கப் பாய்ந்து ஆடி,
வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற
ஆயன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 3

இருட்டிற் பிறந்து போய், ஏழை வல் ஆயர்
மருட்டைத் தவிர்ப்பித்து, வன் கஞ்சன் மாளப்
புரட்டி, அந்நாள் எங்கள் பூம்பட்டுக் கொண்ட
அரட்டன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 4

சேப் பூண்ட சாடு சிதறித் திருடி, நெய்க்கு
ஆப்பூண்டு, நந்தன் மனைவி கடை தாம்பால்
சோப்பூண்டு, துள்ளித் துடிக்கத் துடிக்க அன்று
ஆப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 5

செப்பு இள மென்முலைத் தேவகி நங்கைக்குச்
சொப்படத் தோன்றி, தொறுப்பாடியோம் வைத்த
துப்பமும் பாலும் தயிரும் விழுங்கிய
அப்பன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான். 6

தத்துக் கொண்டாள் கொலோ? தானே பெற்ருள் கொலோ?
சித்தம் அனையாள் அசோதை இளஞ் சிங்கம்
கொத்து ஆர் கருங்குழற் கோபால கோளரி
அத்தன் வந்து அப்பூச்சி காட்டுகின்ருன்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்ருன். 7

கொங்கை வன் கூனிசொற் கொண்டு, குவலயத்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி, வன்கான் அடை
அங் கண்ணன் அப்பூச்சி காட்டுகின்ருன்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்ருன். 8

பதக முதலைவாய்ப் பட்ட களிறு
கதறிக் கைகூப்பி என் கண்ணு! கண்ணு! என்ன
உதவப் புள் ஊர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த
அதகன் வந்து அப்பூச்சி காட்டுகின்ருன்;
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்ருன். 9

வல்லாள் இலங்கை மலங்கச் சரந் துரந்த
வில்லாளனை விட்டுசித்தன் விரித்த
சொல் ஆர்ந்த அப்பூச்சிப் பாடல் இவை பத்தும்
வல்லார் போய் வைகுந்தம் மன்னி இருப்பரே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 2

தாய்ப்பால் உண்ண அழைத்தல்

அரவு அணையாய்! ஆயர் ஏறே!
அம்மம் உண்ணத் துயிலெழாயே!
இரவும் உண்ணாது உறங்கி நீ போய்,
இன்றும் உச்சி கொண்டதாலோ;
வரவுங் காணேன்; வயிறு அசைந்தாய்;
வன முலைகள் சோர்ந்து பாயத்
திரு உடைய வாய்மடுத்துத்
திளைத்து உதைத்துப் பருகிடாயே. 1

வைத்த நெய்யும் காய்ந்த பாலும்
வடி தயிரும் நறு வெண்ணெயும்
இத்தனையும் பெற்றறியேன்
எம்பிரான் நீ பிறந்த பின்னை;
எத்தனையும் செய்யப் பெற்றாய்;
ஏதும் செய்யேன், கதம் படாதே;
முத்து அனைய முறுவல் செய்து
மூக்கு உறிஞ்சி முலை உணாயே. 2

தந்தம் மக்கள் அழுது சென்றால்
தாய்மார் ஆவார் தரிக்ககில்லார்;
வந்து நின்மேற் பூசல் செய்ய
வாழ வல்ல வாசுதேவா!
உந்தையார் உன்திறத்தர் அல்லர்;
உன்னை நான் ஒன்று உரப்பமாட்டேன்;
நந்தகோபன் அணி சிறுவா!
நான் சுரந்த முலை உணாயே. 3

கஞ்சன்தன்னால் புணர்க்கப்பட்ட
கள்ளச் சகடு கலக்கு அழிய,
பஞ்சி அன்ன மெல்லடியால்
பாய்ந்த போது நொந்திடும் என்று
அஞ்சினேன் காண்; அமரர் கோவே!
ஆயர் கூட்டத்து அளவன்றாலோ!
கஞ்சனை உன் வஞ்சனையால்
வலைப்படுத்தாய்! முலை உணாயே. 4

தீய புந்திக் கஞ்சன் உன்மேல்
சினம் உடையன் சோர்வு பார்த்து
மாயந்தன்னால் வலைப்படுக்கில்,
வாழகில்லேன், வாசுதேவா!
தாயர் வாய்ச்சொல் கருமம் கண்டாய்,
சாற்றிச் சொன்னேன், போகவேண்டா;
ஆயர் பாடிக்கு அணிவிளக்கே!
அமர்ந்து வந்து என் முலை உணாயே. 5

மின் அனைய நுண் இடையார்
விரி குழல்மேல் நுழைந்த வண்டு
இன் இசைக்கும் வில்லிபுத்தூர்
இனிது அமர்ந்தாய்! உன்னைக் கண்டார்
என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப் பெற்ற வயிறு உடையாள்
என்னும் வார்த்தை எய்துவித்த
இருடிகேசா! முலை உணாயே. 6

பெண்டிர் வாழ்வார் நின் ஒப்பாரைப்
பெறுதும் என்னும் ஆசையாலே
கண்டவர்கள் போக்கு ஒழிந்தார் ;
கண்ணிணையால் கலக்க நோக்கி
வண்டு உலாம் பூங்குழலினார் உன்
வாயமுதம் உண்ண வேண்டிக்
கொண்டு போவான் வந்து நின்றார் ;
கோவிந்தா! நீ முலை உணாயே. 7

இரு மலை போல் எதிர்ந்த மல்லர்
இருவர் அங்கம் எரிசெய்தாய்! உன்
திரு மலிந்து திகழு மார்வு
தேக்க வந்து என்அல்குல் ஏறி
ஒரு முலையை வாய்மடுத்து
ஒரு முலையை நெருடிக்கொண்டு
இரு முலையும் முறை முறையாய்
ஏங்கி ஏங்கி இருந்து உணாயே. 8

அங் கமலப் போதகத்தில்
அணி கொள் முத்தம் சிந்தினாற்போல்
செங் கமல முகம் வியர்ப்ப,
தீமை செய்து இம் முற்றத்தூடே
அங்கம் எல்லாம் புழுதியாக
அளைய வேண்டா; அம்ம! விம்ம
அங்கு அமரர்க்கு அமுது அளித்த
அமரர் கோவே! முலை உணாயே. 9

ஓட ஓடக் கிண்கிணிகள்
ஒலிக்கும் ஓசைப் பாணியாலே
பாடிப் பாடி வருகின்றாயைப்
பற்பநாபன் என்று இருந்தேன்;
ஆடி ஆடி அசைந்து அசைந்திட்டு
அதனுக்கு ஏற்ற கூத்தை ஆடி
ஓடி ஓடிப் போய்விடாதே,
உத்தமா! நீ முலை உணாயே. 10

வார் அணிந்த கொங்கை ஆய்ச்சி
மாதவா! உண் என்ற மாற்றம்
நீர் அணிந்த குவளை வாசம்
நிகழ நாறும் வில்லிபுத்தூர்ப்
பார் அணிந்த தொல் புகழான்
பட்டர்பிரான் பாடல் வல்லார்
சீர் அணிந்த செங்கண்மால் மேல்
சென்ற சிந்தை பெறுவர் தாமே. 11

பெரியாழ்வார் திருமொழி

2, 3

காது குத்தல்

போய்ப்பாடு உடைய நின் தந்தையும் தாழ்த்தான்,
பொரு திறற் கஞ்சன் கடியன்,
காப்பாரும் இல்லை, கடல்வண்ணா! உன்னை;
தனியே போய் எங்கும் திரிதி;
பேய்ப்பால் முலை உண்ட பித்தனே! கேசவ-
நம்பீ! உன்னைக் காது குத்த
ஆய்ப் பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்:
அடைக்காய் திருத்தி நான் வைத்தேன். 1

வண்ணப் பவளம் மருங்கினிற் சாத்தி
மலர்ப்பாதக் கிண்கிணி ஆர்ப்ப,
நண்ணித் தொழும் அவர் சிந்தை பிரியாத
நாராயணா! இங்கே வாராய்;
எண்ணற்கு அரிய பிரானே! திரியை
எரியாமே காதுக்கு இடுவன்;
கண்ணுக்கு நன்றும் அழகும் உடைய
கனகக் கடிப்பும் இவையாம். 2

வையம் எல்லாம் பெறும் வார்கடல் வாழும்
மகரக்குழை கொண்டுவைத்தேன் ;
வெய்யவே காதில் திரியை இடுவன், நீ
வேண்டிய தெல்லாம் தருவன் ;
உய்ய இவ் ஆயர் குலத்தினில் தோன்றிய
ஒண்சுடர் ஆயர்கொழுந்தே!
மையன்மை செய்து இள ஆய்ச்சியர் உள்ளத்து,
மாதவனே! இங்கே வாராய். 3

வணம் நன்று உடைய வயிரக் கடிப்பு இட்டு
வார்காது தாழப் பெருக்கிக்
குணம் நன்று உடையர் இக் கோபால பிள்ளைகள் ;
கோவிந்தா! நீ சொல்லுக் கொள்ளாய் ;
இணை நன்று அழகிய இக் கடிப்பு இட்டால்
இனிய பலாப்பழம் தந்து
சுணம் நன்று அணி முலை உண்ணத் தருவன் நான் ;
சோத்தம், பிரான்! இங்கே வாராய். 4

சோத்தம், பிரான்! என்று இரந்தாலும் கொள்ளாய் ;
சுரிகுழலாரொடு நீ போய்க்
கோத்துக் குரவை பிணைந்து இங்கு வந்தால்,
குணங்கொண்டு இடுவனோ? நம்பீ!
பேர்த்தும் பெரியன அப்பம் தருவன்,
பிரானே! திரியிட ஒட்டில் ;
வேய்த் தடந்தோளார் விரும்பும் கருங்குழல்
விட்டுவே! நீ இங்கே வாராய். 5

விண்ணெல்லாம் கேட்க அழுதிட்டாய், உன்வாயில்
விரும்பி அதனை நான் நோக்கி
மண்ணெல்லாம் கண்டு என் மனத்துள்ளே அஞ்சி
மதுசூதனே என்று இருந்தேன் ;
புண் ஏதும் இல்லை, உன் காது மறியும் ;
பொறுத்து இறைப் போது இரு, நம்பீ!
கண்ணா! என் கார்முகிலே! கடல்வண்ணா!
காவலனே! முலை உணாயே. 6

முலை ஏதும் வேண்டேன் என்று ஓடி நின்காதிற்
கடிப்பைப் பறித்து எறிந்திட்டு
மலையை எடுத்து மகிழ்ந்து கல்-மாரி
காத்துப் பசுநிரை மேய்த்தாய் ;
சிலை ஒன்று இறுத்தாய் ; திரிவிக்கிரமா!
திரு ஆயர்பாடிப் பிரானே!
தலை நிலாப் போதே உன்காதைப் பெருக்காதே
விட்டிட்டேன், குற்றமே அன்றே ? 7

என் குற்றமே என்று சொல்லவும் வேண்டா காண்,
என்னை நான் மண் உண்டேனாக
அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும்
அனைவர்க்கும் காட்டிற்றிலையே ?
வன் புற்று அரவின் பகைக் கொடி வாமன
நம்பீ! உன்காதுகள் தூரும் ;
துன்புற்றன எல்லாம் தீர்ப்பாய், பிரானே!
திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே. 8

மெய் என்று சொல்லுவார் சொல்லைக் கருதித்
தொடுப்புண்டாய் வெண்ணெயை என்று
கையைப் பிடித்துக் கரை உரலோடு என்னைக்
காணவே கட்டிற்றிலையே ?
செய்தன சொல்லிச் சிரித்து அங்கு இருக்கில்,
சிரீதரா! உன்காது தூரும் ;
கையிற் திரியை இடுகிடாய், இந்நின்ற
காரிகையார் சிரியாமே. 9

காரிகையார்க்கும் உனக்கும் இழுக்கு உற்று என்
காதுகள் வீங்கி எரியில் ?
தாரியா தாகில் தலை நொந்திடும் என்று
விட்டிட்டேன், குற்றமே அன்றே ?
சேரியிற் பிள்ளைகள் எல்லாரும் காது
பெருக்கித் திரியவும் காண்டி ;
ஏர் விடை செற்று இளங்கன்று எறிந்திட்ட
இருடீகேசா! என் தன் கண்ணே! 10

கண்ணைக் குளிரக் கலந்து எங்கும் நோக்கிக்
கடிகமழ் பூங்குழலார்கள்
எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும்
பெருமானே! எங்கள் அமுதே!
உண்ணக் கனிகள் தருவன், கடிப்பு ஒன்றும்
நோவாமே காதுக்கு இடுவன் ;
பண்ணைக் கிழியச் சகடம் உதைத்திட்ட
பற்பநாபா! இங்கே வாராய். 11

வா என்று சொல்லி என்கையைப் பிடித்து
வலியவே காதிற் கடிப்பை
நோவத் திரிக்கில், உனக்கு இங்கு இழுக்குற்று என் ?
காதுகள் நொந்திடும், கில்லேன் ;
நாவற் பழம் கொண்டுவைத்தேன், இவை காணாய் ;
நம்பீ! முன் வஞ்ச மகளைச்
சாவப் பால் உண்டு சகடு இறப் பாய்ந்திட்ட
தாமோதரா! இங்கே வாராய். 12

வார் காது தாழப் பெருக்கி அமைத்து
மகரக்குழை இட வேண்டிச்
சீரால் அசோதை திருமாலைச் சொன்ன சொல்
சிந்தையுள் நின்று திகழப்
பார் ஆர் தொல் புகழான் புதுவை மன்னன்
பன்னிரு நாமத்தால் சொன்ன
ஆராத அந்தாதிப் பன்னிரண்டும் வல்லார்
அச்சுதனுக்கு அடியாரே. 13

பெரியாழ்வார் திருமொழி

2, 4

நீராட்டம்

வெண்ணெய் அளைந்த குணுங்கும்
விளையாடு புழுதியும் கொண்டு
திண்ணென இவ் இரா உன்னைத்
தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன் ;
எண்ணெய் புளிப்பழம் கொண்டு இங்கு
எத்தனை போதும் இருந்தேன் ;
நண்ணல் அரிய பிரானே!
நாரணா! நீராட வாராய். 1

கன்றுகள் ஓடச் செவியிற்
கட்டெறும்பு பிடித்து இட்டால்,
தென்றிக் கெடும் ஆகில் வெண்ணெய்
திரட்டி விழுங்குமா காண்பன் ;
நின்ற மராமரம் சாய்த்தாய் !
நீ பிறந்த திருவோணம்
இன்று நீ நீராட வேண்டும்,
எம்பிரான்! ஓடாதே வாராய். 2

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என்நெஞ்சம்,
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி
அழைக்கவும் நான் முலை தந்தேன் ;
காய்ச்சின நீரொடு நெல்லி
கடாரத்திற் பூரித்து வைத்தேன் ;
வாய்த்த புகழ் மணிவண்ணா !
மஞ்சனம் ஆட நீ வாராய். 3

கஞ்சன் புணர்ப்பினில் வந்த
கடிய சகடம் உதைத்து
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச
வாய் முலை வைத்த பிரானே !
மஞ்சளும் செங்கழுநீரின்
வாசிகையும் நறுஞ்சாந்தும்
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் ;
அழகனே! நீராட வாராய். 4

அப்பம் கலந்த சிற்றுண்டி
அக்காரம் பாலிற் கலந்து
சொப்பட நான் சுட்டு வைத்தேன்,
தின்னல் உறுதியேல்; நம்பி !
செப்பு இள மென்முலையார்கள்
சிறுபுறம் பேசிச் சிரிப்பர் ;
சொப்பட நீராட வேண்டும்,
சோத்தம், பிரான்! இங்கே வாராய். 5

எண்ணெய்க் குடத்தை உருட்டி
இளம்பிள்ளை கிள்ளி எழுப்பிக்
கண்ணைப் புரட்டி விழித்துக்
கழகண்டு செய்யும் பிரானே!
உண்ணக் கனிகள் தருவன்;
ஒலிகடல் ஓதநீர் போலே
வண்ணம் அழகிய நம்பீ!
மஞ்சனம் ஆட நீ வாராய். 6

கறந்த நற்பாலும் தயிரும்
கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய்
பிறந்ததுவே முதலாகப்
பெற்றறியேன், எம்பிரானே!
சிறந்த நற்றாய் அலர் தூற்றும்
என்பதனால் பிறர் முன்னே
மறந்தும் உரையாட மாட்டேன்!
மஞ்சனம் ஆட நீ வாராய். 7

கன்றினை வால் ஓலை கட்டி,
கனிகள் உதிர எறிந்து,
பின் தொடர்ந்து ஓடி ஓர் பாம்பைப்
பிடித்துக்கொண்டு ஆட்டினாய் போலும்;
நின்திறத்தேன் அல்லேன், நம்பீ!
நீ பிறந்த திரு நன்னாள்,
நன்று நீ நீராட வேண்டும்;
நாரணா! ஓடாதே வாராய். 8

பூணித் தொழுவினிற் புக்குப்
புழுதி அளைந்த பொன்-மேனி
காணப் பெரிதும் உகப்பன்,
ஆகிலும் கண்டார் பழிப்பர்;
நாண் இத்தனையும் இலாதாய்!
நப்பின்னை காணிற் சிரிக்கும்;
மாணிக்கமே! என் மணியே!
மஞ்சனம் ஆட நீ வாராய். 9

கார் மலி மேனி நிறத்துக் கண்ணபிரானை உகந்து
வார் மலி கொங்கை யசோதை மஞ்சனம் ஆட்டிய ஆற்றைப்
பார் மலி தொல் புதுவைக் கோன் பட்டர்பிரான் சொன்ன பாடல்
சீர் மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதும் இலரே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 5

குழல்வாரக் காக்கையை வா எனல்

பின்னை மணாளனை, பேரிற் கிடந்தானை,
முன்னை அமரர் முதற் தனி வித்தினை,
என்னையும் எங்கள் குடி முழுது ஆட்கொண்ட
மன்னனை, வந்து குழல்வாராய், அக்காக்காய்!
மாதவன்தன் குழல்வாராய், அக்காக்காய்! 1

பேயின் முலை உண்ட பிள்ளை இவன், முன்னம்
மாயச் சகடும் மருதும் இறுத்தவன்,
காயாமலர் வண்ணன் : கண்ணன் கருங்குழல்
தூய்து ஆக வந்து குழல்வாராய், அக்காக்காய்!
தூமணி வண்ணன் குழல்வாராய், அக்காக்காய்! 2

திண்ணக் கலத்திற் திரை உறிமேல் வைத்த
வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிடும்
அண்ணல் : அமரர் பெருமானை, ஆயர்தம்
கண்ணனை வந்து குழல்வாராய், அக்காக்காய்!
கார்முகில் வண்ணன் குழல்வாராய், அக்காக்காய்! 3

பள்ளத்தில் மேயும் பறவை உருக் கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான் கண்டு,
புள் இது என்று பொதுக்கோ வாய் கீண்டிட்ட
பிள்ளையை வந்து குழல்வாராய், அக்காக்காய்!
பேய் முலை உண்டான் குழல்வாராய், அக்காக்காய்! 4

கற்றினம் மேய்த்துக் கனிக்கு ஒரு கன்றினைப்
பற்றி எறிந்த பரமன் திருமுடி,
உற்றன பேசி நீ ஓடித் திரியாதே,
அற்றைக்கும் வந்து குழல்வாராய், அக்காக்காய்!
ஆழியான்தன் குழல்வாராய், அக்காக்காய்! 5

கிழக்கிற் குடி மன்னர் கேடு இலாதாரை
அழிப்பான் நினைந்திட்டு அவ் ஆழிஅதனால்
விழிக்கும் அளவிலே வேர்அறுத்தானைக்
குழற்கு அணி ஆகக் குழல்வாராய், அக்காக்காய்!
கோவிந்தன்தன் குழல்வாராய், அக்காக்காய்! 6

பிண்டத் திரளையும் பேய்க்கு இட்ட நீர்ச் சோறும்
உண்டற்கு வேண்டி நீ ஓடித் திரியாதே,
அண்டத்து அமரர் பெருமான் அழகு அமர்
வண்டு ஒத்து இருண்ட குழல்வாராய், அக்காக்காய்!
மாயவன்தன் குழல்வாராய், அக்காக்காய்! 7

உந்தி எழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன்தன்னைப் படைத்தவன்
கொந்தக் குழலைக் குறந்து புளி அட்டித்
தந்தத்தின் சீப்பால் குழல்வாராய், அக்காக்காய்!
தாமோதரன்தன் குழல்வாராய், அக்காக்காய்! 8

மன்னன்தன் தேவிமார் கண்டு மகிழ்வு எய்த
முன் இவ் உலகினை முற்றும் அளந்தவன்
பொன்னின் முடியினைப் பூ-அணைமேல் வைத்துப்
பின்னே இருந்து குழல்வாராய், அக்காக்காய்!
பேர்ஆயிரத்தான் குழல்வாராய், அக்காக்காய்! 9

கண்டார் பழியாமே அக்காக்காய் கார்வண்ணன்
வண்டு ஆர் குழல்வார வா என்ற ஆய்ச்சி சொல்
விண் தோய் மதில் வில்லிபுத்தூர்க் கோன் பட்டன் சொல்
கொண்டாடிப் பாடக் குறுகா வினை தாமே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 6

கோல் கொண்டுவா எனல்

வேலிக் கோல் வெட்டி விளையாடு வில் ஏற்றி,
தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு
பீலித் தழையைப் பிணைத்துப் பிறகிட்டு,
காலிப் பின் போவாற்கு ஓர் கோல் கொண்டு வா,
கடல்-நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா. 1

கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடும் என்மகன்
சங்கம் பிடிக்கும் தடக்கைக்குத் தக்க நல்
அங்கம் உடையது ஓர் கோல் கொண்டு வா,
அரக்கு வழித்தது ஓர் கோல் கொண்டு வா. 2

கறுத்திட்டு எதிர்நின்ற கஞ்சனைக் கொன்றான்,
பொறுத்திட்டு எதிர்வந்த புள்ளின் வாய் கீண்டான் :
நெறித்த குழல்களை நீங்க முன் ஓடிச்
சிறுக்கன்று மேய்ப்பாற்கு ஓர் கோல் கொண்டு வா,
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா. 3

ஒன்றே உரைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான்
துன்று முடியான் துரியோதனன் பக்கல்,
சென்று அங்குப் பாரதம் கையெறிந்தானுக்குக்
கன்றுகள் மேய்ப்பது ஓர் கோல் கொண்டு வா,
கடல்-நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா. 4

சீர் ஒன்று தூதாய்த் திரியோதனன் பக்கல்
ஊர் ஒன்று வேண்டிப் பெறாத உரோடத்தால்,
பார் ஒன்றிப் பாரதம் கைசெய்து பார்த்தற்குத்
தேர் ஒன்றை ஊர்ந்தாற்கு ஓர் கோல் கொண்டு வா,
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா. 5

ஆலத்து இலையான், அரவின் அணை மேலான்,
நீலக் கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான் :
பாலப் பிராயத்தே பார்த்தற்கு அருள்செய்த
கோலப் பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா,
குடந்தைக் கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டு வா. 6

பொற்றிகழ் சித்திரகூடப் பொருப்பினில்
உற்ற வடிவில் ஒரு கண்ணும் கொண்ட அக்
கற்றைக் குழலன் கடியன் விரைந்து உன்னை
மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா,
மணிவண்ண நம்பிக்கு ஓர் கோல் கொண்டு வா. 7

மின்னிடைச் சீதை பொருட்டா, இலங்கையர்
மன்னன் மணிமுடி பத்தும் உடன் வீழத்
தன் நிகர் ஒன்று இல்லாச் சிலை கால் வளைத்து இட்ட
மின்னு முடியற்கு ஓர் கோல் கொண்டு வா,
வேலை அடைத்தாற்கு ஓர் கோல் கொண்டு வா. 8

தென் இலங்கை மன்னன் சிரம் தோள் துணிசெய்து
மின் இலங்கும் பூண் விபீடண நம்பிக்கு
என் இலங்கும் நாமத்து அளவும் அரசு என்ற
மின் அலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா,
வேங்கட வாணற்கு ஓர் கோல் கொண்டு வா. 9

அக்காக்காய் நம்பிக்குக் கோல் கொண்டு வா என்று
மிக்காள் உரைத்த சொல் வில்லிபுத்தூர்ப் பட்டன்
ஒக்க உரைத்த தமிழ் பத்தும் வல்லவர்
மக்களைப் பெற்று மகிழ்வர் இவ் வையத்தே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 7

பூச் சூட்டல்

ஆனிரை மேய்க்க நீ போதி,
அருமருந்து ஆவது அறியாய்
கானகம் எல்லாம் திரிந்து உன்
கரிய திருமேனி வாட :
பானையிற் பாலைப் பருகிப்
பற்றுதார் எல்லாம் சிரிப்ப,
தேனில் இனிய பிரானே!
செண்பகப் பூச் சூட்ட வாராய். 1

கரு உடை மேகங்கள் கண்டால்
உன்னைக் கண்டால் ஒக்கும் ; கண்கள்
உரு உடையாய்! உலகு ஏழும்
உண்டாக வந்து பிறந்தாய்!
திரு உடையாள் மணவாளா!
திருவரங்கத்தே கிடந்தாய்!
மருவி மணம் கமழ்கின்ற
மல்லிகைப் பூச் சூட்ட வாராய். 2

மச்சொடு மாளிகை ஏறி
மாதர்கள்தம் இடம் புக்கு,
கச்சொடு பட்டைக் கிழித்து,
காம்பு துகில் அவை கீறி,
நிச்சலும் தீமைகள் செய்வாய்!
நீள் திருவேங்கடத்து எந்தாய்!
பச்சைத் தமனகத்தோடு
பாதிரிப் பூச் சூட்ட வாராய். 3

தெருவின்கண் நின்று இள ஆய்ச்சி-
மார்களைத் தீமை செய்யாதே.
மருவும் தமனகமும் சீர்
மாலை மணம் கமழ்கின்ற;
புருவம் கருங்குழல் நெற்றி
பொலிந்த முகிற்-கன்று போலே
உருவம் அழகிய நம்பீ!
உகந்து இவை சூட்ட நீ வாராய். 4

புள்ளினை வாய் பிளந்திட்டாய்!
பொரு கரியின் கொம்பு ஒசித்தாய்!
கள்ள அரக்கியை மூக்கொடு
காவலனைத் தலை கொண்டாய்!
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க
அஞ்சாது அடியேன் அடித்தேன்;
தெள்ளிய நீரில் எழுந்த
செங்கழுநீர் சூட்ட வாராய். 5

எருதுகளோடு பொருதி,
ஏதும் உலோபாய் காண், நம்பீ!
கருதிய தீமைகள் செய்து
கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்;
தெருவின்கண் தீமைகள் செய்து
சிக்கென மல்லர்களோடு
பொருது வருகின்ற பொன்னே!
புன்னைப் பூச் சூட்ட நீ வாராய். 6

குடங்கள் எடுத்து ஏற விட்டுக்
கூத்தாட வல்ல எம் கோவே!
மடம் கொள் மதிமுகத்தாரை
மால்செய வல்ல என் மைந்தா!
இடந்திட்டு இரணியன் நெஞ்சை
இரு பிளவு ஆக முன் கீண்டாய்!
குடந்தைக் கிடந்த எம் கோவே!
குருக்கத்திப் பூச் சூட்ட வாராய். 7

சீமாலிகன் அவனோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்!
சாமாறு அவனை நீ எண்ணிச்
சக்கரத்தால் தலை கொண்டாய்;
ஆமாறு அறியும் பிரானே!
அணி அரங்கத்தே கிடந்தாய்!
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்!
இருவாட்சிப் பூச் சூட்ட வாராய். 8

அண்டத்து அமரர்கள் சூழ
அத்தாணியுள் அங்கு இருந்தாய்!
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்!
தூமலராள் மணவாளா!
உண்டிட்டு உலகினை ஏழும்
ஓர் ஆலிலையிற் துயில் கொண்டாய்!
கண்டு நான் உன்னை உகக்கக்
கருமுகைப் பூச் சூட்ட வாராய். 9

செண்பக மல்லிகையோடு
செங்கழுநீர் இருவாட்சி
எண் பகர் பூவும் கொணர்ந்தேன்,
இன்று இவை சூட்ட வா என்று
மண் பகர் கொண்டானை ஆய்ச்சி
மகிழ்ந்து உரை செய்த இம் மாலை
பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன்
பட்டர்பிரான் சொன்ன பத்தே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 8

காப்பிடல்

இந்திரனோடு பிரமன்
ஈசன் இமையவர் எல்லாம்
மந்திர மா மலர் கொண்டு
மறைந்து உவராய் வந்து நின்றார் ;
சந்திரன் மாளிகை சேரும்
சதுரர்கள் வெள்ளறை நின்றாய்!
அந்தியம் போது இது ஆகும்,
அழகனே! காப்பிட வாராய்.

கன்றுகள் இல்லம் புகுந்து
கதறுகின்ற பசு எல்லாம் ;
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி,
நேசமேல் ஒன்றும் இலாதாய்!
மன்றில் நில்லேல், அந்திப் போது ;
மதிற் திருவெள்ளறை நின்றாய்!
நன்று கண்டாய் என்தன் சொல்லு ;
நான் உன்னைக் காப்பிட வாராய். 2

செப்பு ஓது மென்முலையார்கள்
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
அப்போது நான் உரப்பப் போய்
அடிசிலும் உண்டிலை, ஆள்வாய்!
முப் போதும் வானவர் ஏத்தும்
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்!
இப்போது நான் ஒன்றும் செய்யேன்,
எம்பிரான்! காப்பிட வாராய். 3

கண்ணில் மணல்கொடு தூவிக்
காலினால் பாய்ந்தனை என்று என்று
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு
—இவர் ஆர்?—முறைப்படுகின்றார் ;
கண்ணனே! வெள்ளறை நின்றாய்
கண்டாரொடே தீமை செய்வாய்!
வண்ணமே வேலையது ஒப்பாய்!
வள்ளலே! காப்பிட வாராய். 4

பல்லாயிரவர் இவ் ஊரில்
பிள்ளைகள் தீமைகள் செய்வார்,
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது;
எம்பிரான்! நீ இங்கே வாராய்;
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்!
ஞானச் சுடரே! உன்மேனி
சொல் ஆர வாழ்த்தி நின்று ஏத்திச்
சொப்படக் காப்பிட வாராய். 5

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கரு நிறச் செம் மயிர்ப் பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான்
என்பது ஓர் வார்த்தையும் உண்டு;
மஞ்சு தவழ் மணி மாட
மதிற் திருவெள்ளறை நின்றாய்!
அஞ்சுவன் நீ அங்கு நிற்க,
அழகனே! காப்பிட வாராய். 6

கள்ளச் சகடும் மருதும்
கலக்கு அழிய உதைசெய்த
பிள்ளையரசே! நீ பேயைப்
பிடித்து முலை உண்ட பின்னை
உள்ளவாறு ஒன்றும் அறியேன்;
ஒளியுடை வெள்ளறை நின்றாய்!
பள்ளிகொள் போது இது ஆகும்;
பரமனே! காப்பிட வாராய். 7

இன்பம் அதனை உயர்த்தாய்!
இமையவர்க்கு என்றும் அரியாய்!
கும்பக் களிறு அட்ட கோவே!
கொடுங் கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே!
செம்பொன் மதில் வெள்ளறையாய்!
செல்வத்தினால் வளர் பிள்ளாய்!
கம்பக் கபாலி காண் அங்கு;
கடிது ஓடிக் காப்பிட வாராய். 8

இருக்கொடு நீர் சங்கிற் கொண்டிட்டு
எழில் மறையோர் வந்து நின்றார் ;
தருக்கேல், நம்பி! சந்தி நின்று,
தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள் ;
திருக்காப்பு நான் உன்னைச் சாத்த,
தேசு உடை வெள்ளறை நின்றாய்!
உருக் காட்டும் அந்தி விளக்கு இன்று
ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய். 9

போது அமர் செல்வக்கொழுந்து புணர் திருவெள்ளறையானை
மாதர்க்கு உயர்ந்த அசோதை மகன்தன்னைக் காப்பிட்ட மாற்றம்
வேதப் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை
பாதப் பயன் கொள்ள வல்ல பத்தர் உள்ளார் வினை போமே. 10

பெரியாழ்வார் திருமொழி

2, 9

பாலக் கிரீடை

வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை
வெற்பிடை இட்டு அதன் ஓசை கேட்கும் ;
கண்ணபிரான் கற்ற கல்வி தன்னைக்
காக்ககில்லோம், உன்மகனைக் காவாய் ;
புண்ணிற் புளிப் பெய்தால் ஒக்கும் தீமை
புரை புரையால் இவை செய்ய வல்ல
அண்ணற் கண்ணான் ஓர் மகனைப் பெற்ற
அசோதை நங்காய்! உன்மகனைக் கூவாய். 1

வருக, வருக, வருக இங்கே,
வாமன நம்பீ! வருக இங்கே.
கரிய குழல் செய்ய வாய் முகத்து எம்
காகுத்த நம்பீ! வருக இங்கே.
அரியன் இவன் எனக்கு இன்று, நங்காய்!
அஞ்சனவண்ணா! அசலகத்தார்
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன் ;
பாவியேனுக்கு இங்கே போதராயே. 2

திரு உடைப் பிள்ளைதான் தீயவாறு
தேக்கம் ஒன்றும் இலன், தேசு உடையன்;
உருக வைத்த குடத்தோடு வெண்ணெய்
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்;
அருகு இருந்தார் தம்மை அநியாயம்
செய்வதுதான் வழக்கோ? அசோதாய்!
வருக என்று உன்மகன்தன்னைக் கூவாய்,
வாழ ஒட்டான் மதுசூதனனே. 3

கொண்டல்வண்ணா! இங்கே போதராயே.
கோயிற் பிள்ளாய்! இங்கே போதராயே.
தெண் திரை சூழ் திருப்பேர்க் கிடந்த
திருநாரணா! இங்கே போதராயே.
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி
ஓடி அகம் புக, ஆய்ச்சிதானும்
கண்டு எதிரே சென்று எடுத்துக்கொள்ளக்
கண்ணபிரான் கற்ற கல்வி தானே! 4

பாலைக் கறந்து அடுப்பு ஏற வைத்துப்
பல்வளையாள் என்மகள் இருப்ப,
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்;
சாளக்கிராமம் உடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்;
ஆலைக் கரும்பின் மொழி அனைய
அசோதை நங்காய்! உன்மகனைக் கூவாய். 5

போதர் கண்டாய்; இங்கே போதர் கண்டாய்;
போதரேன் என்னாதே போதர் கண்டாய்.
ஏதேனும் சொல்லி அசலகத்தார்
ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன்;
கோதுகலம் உடைக் குட்டனேயோ!
குன்று எடுத்தாய்! குடம் ஆடு கூத்தா!
வேதப் பொருளே! என் வேங்கடவா!
வித்தகனே! இங்கே போதராயே. 6

செந்நெல் அரிசி சிறுபருப்புச்
    செய்த அக்காரம் நறுநெய் பாலால்
பன்னிரண்டு திருவோணம் அட்டேன்;
    பண்டும் இப் பிள்ளை பரிசு அறிவன்;
இன்னம் உகப்பன் நான் என்று சொல்லி
    எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்;
உன்மகன் தன்னை, அசோதை நங்காய்!
    கூவிக் கொள்ளாய், இவையும் சிலவே! 7

கேசவனே! இங்கே போதராயே.
    கில்லேன் என்னாது இங்கே போதராயே.
நேசம் இலாதார் அகத்து இருந்து
    நீ விளையாடாதே, போதராயே.
தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும்
    தொண்டரும் நின்ற இடத்தில் நின்று
தாய்சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய்,
    தாமோதரா! இங்கே போதராயே. 8

கன்னல் இலட்டுவத்தோடு சீடை
    காரெள்ளின் உண்டை கலத்தில் இட்டு
என் அகம் என்று நான் வைத்துப் போந்தேன்;
    இவன் புக்கு அவற்றைப் பெறுத்திப் போந்தான்,
பின்னும் அகம் புக்கு உறியை நோக்கிப்
    பிறங்குஒளி வெண்ணெயும் சோதிக்கின்றான்;
உன்மகன் தன்னை, அசோதை நங்காய்!
    கூவிக் கொள்ளாய், இவையும் சிலவே! 9

சொல்லில் அரசிப் படுதி, நங்காய்!
    சூழல் உடையன் உன்பிள்ளை தானே;
இல்லம் புகுந்து என்மகளைக் கூவிக்
    கையில் வளையைக் கழற்றிக்கொண்டு,
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
    அங்கு ஒருத்திக்கு அவ் வளை கொடுத்து,
நல்லன நாவற் பழங்கள் கொண்டு,
    நான் அல்லேன் என்று சிரிக்கின்றானே! 10

வண்டு களித்து இரைக்கும் பொழில் சூழ் வருபுனற் காவிரித் தென்னரங்கன்
பண்டு அவன் செய்த கிரீடை எல்லாம் பட்டர்பிரான் விட்டுசித்தன் பாடல்
கொண்டு இவை பாடிக் குனிக்க வல்லார் கோவிந்தன்தன் அடியார்கள் ஆகி
எண் திசைக்கும் விளக்காகி நிற்பார் இணையடி என்தலை மேலனவே. 11

பெரியாழ்வார் திருமொழி

2, 10

ஆயர்மங்கையர் முறையீடு

ஆற்றில் இருந்து விளையாடுவோங்களைச்
சேற்றால் எறிந்து, வளை துகில் கைக்கொண்டு,
காற்றிற் கடியனாய் ஓடி அகம் புக்கு
மாற்றமும் தாரானால், இன்று முற்றும் :
வளைத் திறம் பேசானால், இன்று முற்றும். 1

குண்டலம் தாழ, குழல் தாழ, நாண் தாழ,
எண் திசையோரும் இறைஞ்சித் தொழுது ஏத்த,
வண்டு அமர் பூங்குழலார் துகிற் கைக்கொண்டு,
விண் தோய் மரத்தானால், இன்று முற்றும் :
வேண்டவும் தாரானால், இன்று முற்றும். 2

தடம் படு தாமரைப் பொய்கை கலக்கி,
விடம் படு நாகத்தை வால் பற்றி ஈர்த்து,
படம் படு பைந்தலை மேல் எழப் பாய்ந்திட்டு,
உடம்பை அசைத்தானால், இன்று முற்றும் :
உச்சியில் நின்றானால், இன்று முற்றும். 3

தேனுகன் ஆவி செகுத்துப் பனங்கனி
தான் எறிந்திட்ட தடம் பெருந்தோளினால்
வானவர் கோன் விட வந்த மழை தடுத்து,
ஆனிரை காத்தானால், இன்று முற்றும் :
அவை உய்யக் கொண்டானால், இன்று முற்றும். 4

ஆய்ச்சியர் சேரி அளை தயிர் பால் உண்டு,
பேர்த்து அவர் கண்டு பிடிக்கப் பிடியுண்டு,
வேய்த் தடந்தோளினார் வெண்ணெய் கோள் மாட்டாது
ஆப்புண்டு இருந்தானால், இன்று முற்றும் : [அங்கு
அடியுண்டு அழுதானால், இன்று முற்றும். 5

தள்ளித் தளர் நடை யிட்டு இளம் பிள்ளையாய்,
உள்ளத்தின் உள்ளே அவளை உற நோக்கிக்
கள்ளத்தினால் வந்த பேய்ச்சி முலை உயிர்
துள்ளச் சுவைத்தானால், இன்று முற்றும் :
துவக்கு அற உண்டானால், இன்று முற்றும். 6

மாவலி வேள்வியில் மாண் உருவாய்ச் சென்று
மூவடி தா என்று இரந்த இம் மண்ணினை
ஓரடி இட்டு, இரண்டாம் அடிதன்னிலே
தாவடி இட்டானால், இன்று முற்றும் :
தரணி அளந்தானால், இன்று முற்றும். 7

தாழை தண்-ஆம்பல் தடம் பெரும் பொய்கைவாய்
வாழும் முதலை வலைப்பட்டு வாதிப்பு உண்
வேழம் துயர் கெட, விண்ணோர் பெருமானாய்,
ஆழி பணி கொண்டானால், இன்று முற்றும் :
அதற்கு அருள் செய்தானால், இன்று முற்றும். 8

வானத்து எழுந்த மழை முகில் போல் எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி,
ஏனத்து உருவாய் இடந்த இம் மண்ணினைத்
தானத்தே வைத்தானால், இன்று முற்றும் :
தரணி இடந்தானால், இன்று முற்றும். 9

அங் கமலக் கண்ணன்தன்னை அசோதைக்கு
மங்கை நல்லார்கள் தாம் வந்து முறைப்பட்ட
அங்கு அவர் சொல்லைப் புதுவைக்கோன் பட்டன் சொல்
இங்கு இவை வல்லவர்க்கு ஏதம் ஒன்று இல்லையே. 10

பெரியாழ்வார் திருமொழி

3, 1

அம்மம் தர மறுத்தல்

தன்நேர் ஆயிரம் பிள்ளைகளோடு
தளர்நடை இட்டு வருவான்
பொன் ஏய் நெய்யொடு பால்அமுது உண்டு ஒரு
புள்ளுவன் பொய்யே தவழும் ;
மின்நேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கை
துஞ்ச வாய்வைத்த பிரானே!
அன்னே! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 1

பொன்போல் மஞ்சனம் ஆட்டி அமுது ஊட்டிப்
போனேன் ; வருமளவு இப்பால்
வன் பாரச் சகடம் இறச் சாடி
வடக்கில் அகம் புக்கு இருந்து
மின்போல் நுண்ணிடையாள் ஒரு கன்னியை
வேற்றுருவம் செய்து வைத்த
அன்பா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 2

கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கி,
குடத் தயிர் சாய்த்துப் பருகி,
பொய்ம் மாய மருது ஆன அசுரரைப்
பொன்றுவித்து இன்று நீ வந்தாய் ;
இம் மாயம் வல்ல பிள்ளை-நம்பீ! உன்னை
என்மகனே என்பர் நின்றார் ;
அம்மா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 3

மைஆர் கண் மட ஆய்ச்சியர் மக்களை
மையன்மை செய்து அவர் பின் போய்
கொய்ஆர் பூந்துகில் பற்றித் தனிநின்று
குற்றம் பல பல செய்தாய் ;
பொய்யா! உன்னைப் புறம் பல பேசுவ
புத்தகத்துக்கு உள கேட்டேன் ;
ஐயா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 4

முப்போதும் கடைந்து ஈண்டிய வெண்ணெயி-
னோடு தயிரும் விழுங்கி
கப்பால் ஆயர்கள் காவிற் கொணர்ந்த
கலத்தொடு சாய்த்துப் பருகி
மெய்ப்பால் உண்டு அழு பிள்ளைகள் போல
விம்மி விம்மி அழுகின்ற
அப்பா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 5

கரும்பார் நீள் வயற் காய்கதிர்ச் செந்நெலைக்
கற்றாநிரை மண்டித் தின்ன
விரும்பாக் கன்று ஒன்று கொண்டு விளங்கனி
வீழ எறிந்த பிரானே!
சுரும்பார் மென்குழற் கன்னி ஒருத்திக்குச்
சூழ்வலை வைத்துத் திரியும்
அரம்பா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 6

மருட்டார் மென்குழற் கொண்டு பொழில் புக்கு
வாய்வைத்து அவ் ஆயர்தம் பாடி
சுருட்டார் மென்குழற் கன்னியர் வந்து உன்னைச்
சுற்றும் தொழ நின்ற சோதி!
பொருள்-தாயம் இலேன், எம்பெருமான்! உன்னைப்
பெற்ற குற்றம் அல்லால்; மற்று இங்கு
அரட்டா! உன்னை அறிந்து கொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 7

வாளா ஆகிலும் காணகில்லார்; பிறர்
மக்களை மையன்மை செய்து
தோளால் இட்டு அவரோடு திளைத்து நீ
சொல்லப் படாதன செய்தாய்;
கேளார் ஆயர் குலத்தவர் இப் பழி;
கெட்டேன்! வாழ்வில்லை, நந்தன்
காளாய்! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 8

தாய்மார் மோர் விற்கப் போவர், தமப்பன்மார்
கற்றா நிரைப் பின்பு போவர்;
நீ ஆய்ப்பாடி இளங் கன்னிமார்களை
நேர்படவே கொண்டு போதி;
காய்வார்க்கு என்றும் உகப்பனவே செய்து
கண்டார் கழறத் திரியும்
ஆயா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 9

தொத்தார் பூங்குழற் கன்னி ஒருத்தியைச்
சோலைத் தடம் கொண்டு புக்கு
முத்தார் கொங்கை புணர்ந்து இரா நாழிகை
மூவேழு சென்றபின் வந்தாய் ;
ஒத்தார்க்கு ஒத்தன பேசுவர் உன்னை ;
உரப்பவே நான் ஒன்றும் மாட்டேன் ;
அத்தா! உன்னை அறிந்துகொண்டேன், உனக்கு
அஞ்சுவன் அம்மம் தரவே. 10

காரார் மேனி நிறத்து எம்பிரானைக்
கடிகமழ் பூங்குழல் ஆய்ச்சி
ஆரா இன்னமுது உண்ணத் தருவன், நான்
அம்மம் தாரேன் என்ற மாற்றம்
பாரார் தொல்புகழான் புதுவை மன்னன்
பட்டர்பிரான் சொன்ன பாடல்
ஏரார் இன்னிசை மாலைகள் வல்லார்
இருடிகேசன் அடியாரே. 11

பெரியாழ்வார் திருமொழி

3, 2

கண்ணனைக் கன்றின்பின் போக்கிய அன்னை இரங்குதல்

அஞ்சன வண்ணனை ஆயர் கோலக் கொழுந்தினை
மஞ்சனம் ஆட்டி மனைகள்தோறும் திரியாமே,
கஞ்சனைக் காய்ந்த கழல்அடி நோவக் கன்றின்பின்
என்செயப் பிள்ளையைப் போக்கினேன்? எல்லே பாவமே ! 1

பற்றுமஞ்சள் பூசிப் பாவைமாரொடு பாடியிற்
சிற்றில் சிதைத்து எங்கும் தீமை செய்து திரியாமே,
கற்றுத் தூளியுடை வேடர் கானிடைக் கன்றின் பின்
எற்றுக்கு என் பிள்ளையைப் போக்கினேன்? எல்லே பாவமே! 2

நன்மணி மேகலை நங்கைமாரொடு நாள்தொறும்
பொன்மணி மேனி புழுதியாடித் திரியாமே,
கல்மணி நின்று அதிர் கான்-அதரிடைக் கன்றின்பின்
என் மணிவண்ணனைப் போக்கினேன்; எல்லே பாவமே ! 3

வண்ணக் கருங்குழல் மாதர் வந்து அலர் தூற்றிடப்
பண்ணிப் பல செய்து இப் பாடி எங்கும் திரியாமே,
கண்ணுக்கு இனியானைக் கான்-அதரிடைக் கன்றின் பின்
எண்ணற்கு அரியானைப் போக்கினேன்; எல்லே பாவமே ! 4

அவ்வவ் இடம் புக்கு அவ் ஆயர் பெண்டிர்க்கு அணுக்கனாய்க்
கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் கூழைமை செய்யாமே,
எவ்வும் சிலை உடை வேடர் கானிடைக் கன்றின் பின்
தெய்வத் தலைவனைப் போக்கினேன் : எல்லே பாவமே! 5

மிடறு மெழுமெழுத்து ஓட வெண்ணெய் விழுங்கிப் போய்ப்
படிறு பல செய்து இப் பாடி எங்கும் திரியாமே,
கடிறு பல திரி கான்-அதரிடைக் கன்றின் பின்
இடற என்பிள்ளையைப் போக்கினேன்: எல்லே பாவமே ! 6

வள்ளி நுடங்கு-இடை மாதர் வந்து அலர் தூற்றிடத்
துள்ளி விளையாடித் தோழரோடு திரியாமே,
கள்ளி உணங்கு வெங் கான்-அதரிடைக் கன்றின் பின்
புள்ளின் தலைவனைப் போக்கினேன் : எல்லே பாவமே! 7

பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட அப் பாங்கினால்,
என் இளங் கொங்கை அமுதம் ஊட்டி எடுத்து யான்
பொன்னடி நோவப் புலரியே கானிற் கன்றின் பின்
என்இளஞ் சிங்கத்தைப் போக்கினேன் : எல்லே பாவமே! 8

குடையும் செருப்பும் கொடாதே தாமோதரனை நான்
உடையும் கடியன ஊன்று வெம் பரற்கள் உடைக்
கடிய வெங் கானிடைக் கால்-அடி நோவக் கன்றின் பின்
கொடியென் என்பிள்ளையைப் போக்கினேன்: எல்லே பாவமே!

என்றும் எனக்கு இனியானை என் மணிவண்ணனைக்
கன்றின் பின் போக்கினேன் என்று அசோதை கழறிய
பொன் திகழ் மாடப் புதுவையர்கோன் பட்டன் சொல்
இன் தமிழ் மாலைகள் வல்லவர்க்கு இடர் இல்லையே. 10

பெரியாழ்வார் திருமொழி

3, 3

கண்ணன் மீண்டுவரும் கோலம் கண்டு அன்னை மகிழ்தல்

சீலைக் குதம்பை ஒருகாது, ஒருகாது
செந்நிற மேற் தோன்றிப்பூ ;
கோலப் பணைக் கச்சும் கூறை - உடையும்
குளிர் முத்தின் கோடாலமும் :
காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன்
வேடத்தை வந்து காணீர் ;
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார், நங்கைமீர்!
நானே மற்று ஆரும் இல்லை. 1

கன்னி நன் மா மதில் சூழ்தரு பூம்பொழிற்
காவிரித் தென்னரங்கம்
மன்னிய சீர் மதுசூதனா! கேசவா!
பாவியேன் வாழ்வு உகந்து,
உன்னை இளங்கன்று மேய்க்கச் சிறுகாலே
ஊட்டி ஒருப்படுத்தேன் ;
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை ;
என்குட்டனே! முத்தம் தா. 2

காடுகள் ஊடு போய்க் கன்றுகள் மேய்த்து
மறியோடிக் கார்க்கோடற்பூச்
சூடி வருகின்ற தாமோதரா! கற்றுத்
தூளி காண் உன் உடம்பு ;
பேடை மயிற் சாயற் பின்னை மணாளா!
நீராட்டு அமைத்து வைத்தேன் ;
ஆடி அமுதுசெய், அப்பனும் உண்டிலன்,
உன்னோடு உடனே உண்பான். 3

கடி ஆர் பொழில் அணி வேங்கடவா! கரும்
போரேறே! நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக்
கொள்ளாதே போனாய், மாலே!
கடிய வெங் கானிடைக் கன்றின் பின் போன
சிறுக்குட்டச் செங் கமல -
அடியும் வெதும்பி, உன்கண்கள் சிவந்தாய்,
அசைந்திட்டாய் ; நீ எம்பிரான்! 4

பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை
வாய்வைத்த போரேறே! என்
சிற்றாயர் சிங்கமே! சீதை மணாளா!
சிறுக்குட்டச் செங்கண் மாலே!
சிற்றாடையும் சிறுப்பத்திரமும் இவை
கட்டிலின் மேல் வைத்துப் போய்,
கற்றாயரோடு நீ கன்றுகள் மேய்த்துக்
கலந்து உடன் வந்தாய் போலும். 5

அஞ்சுடர் ஆழி உன் கையகத்து ஏந்தும்
அழகா! நீ பொய்கை புக்கு
நஞ்சு உமிழ் நாகத்தினோடு பிணங்கவும்,
நான் உயிர் வாழ்ந்திருந்தேன் ;
என்செய்ய என்னை வயிறு மறுக்கினாய்?
ஏதும் ஓர் அச்சம் இல்லை ;
கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய்,
காயாம்பூ வண்ணம் கொண்டாய்! 6

பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய
பாற்கடல் வண்ணா! உன்மேல்
கன்றின் உருவாகி மேய்புலத்தே வந்த
கள்ள அசுரர் தம்மைச்
சென்று பிடித்துச் சிறுக்கைகளாலே
விளங்காய் எறிந்தாய் போலும் ;
என்றும் என்பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள்
அங்ஙனம் ஆவர்களே. 7

கேட்டு அறியாதன கேட்கின்றேன், கேசவா!
கோவலர் இந்திரற்குக்
காட்டிய சோறும் கறியும் தயிரும்
கலந்து உடன் உண்டாய் போலும் ;
ஊட்ட முதல் இலேன் உன்தன்னைக் கொண்டு
ஒருபோதும் எனக்கு அரிது ;
வாட்டம் இலாப் புகழ் வாசுதேவா! உன்னை
அஞ்சுவன் இன்று தொட்டும். 8

திண்ஆர் வெண்சங்கு உடையாய்! திருநாள் திரு-
வோணம் இன்று எழு நாள் ; முன்,
பண்நேர் மொழியாரைக் கூவி முளை அட்டிப்
பல்லாண்டு கூறுவித்தேன் ;
கண்ணாலம் செய்யக் கறியும் கலத்தது,
அரிசியும் ஆக்கி வைத்தேன் ;
கண்ணா! நீ நாளைத்தொட்டுக் கன்றின் பின் போகேல்,
கோலம் செய்து இங்கே இரு. 9

புற்றரவு அல்குல் அசோதை நல் ஆய்ச்சி தன்
புத்திரன் கோவிந்தனைக்
கற்றினம் மேய்த்து வரக் கண்டு உகந்து அவள்
கற்பித்த மாற்றம் எல்லாம்
செற்றம் இலாதவர் வாழ்தரு தென்புது-
வை விட்டுசித்தன் சொல்
கற்று இவை பாட வல்லார் கடல்வண்ணன்
கழலிணை காண்பர்களே. 10

பெரியாழ்வார் திருமொழி

3, 4

கண்ணன் மீண்டுவரும் கோலம் கண்டு கன்னியர் காமுறல்

தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி
குழல்களும் கீதமும் ஆகி எங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு,
மழைகொலோ வருகின்றது என்று சொல்லி
மங்கைமார் சாலக வாசல் பற்றி
நுழைவனர் நிற்பனர் ஆகி எங்கும்
உள்ளம் விட்டு ஊண் மறந்து ஒழிந்தனரே. 1

வல்லி நுண் இதழ் அன்ன ஆடை கொண்டு,
வசை அறத் திருவரை விரித்து உடுத்து,
பல்லி நுண் பற்றாக உடைவாள் சாத்தி,
பணைக்கச்சு உந்தி, பல தழை நடுவே
முல்லை நல் நறுமலர் வேங்கை மலர்
அணிந்து பல் ஆயர் குழாம் நடுவே
எல்லியம் போதாகப் பிள்ளை வரும்;
எதிர்நின்று அங்கு இனவளை இழவேன்மினே. 2

சுரிகையும் தெறி-வில்லும் செண்டு-கோலும்
மேலாடையும் தோழன்மார் கொண்டு ஓட
ஒரு கையால் ஒருவன்தன் தோளை ஊன்றி
ஆநிரையினம் மீளக் குறித்த சங்கம்
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள்,
அருகே நின்றாள் என்பெண் நோக்கிக் கண்டாள்;
அது கண்டு இவ் ஊர் ஒன்று புணர்க்கின்றதே. 3

குன்று எடுத்து ஆநிரை காத்த பிரான்
கோவலனாய்க் குழல் ஊதி ஊதிக்
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு
கலந்து உடன் வருவானைத் தெருவிற் கண்டு
என்றும் இவனை ஒப்பாரை, நங்காய்!
கண்டறியேன், ஏடி! வந்து காணாய்;
ஒன்றும்நில்லா வளை, கழன்று துகில்;
ஏந்து இள முலையும் என் வசம் அலவே. 4

சுற்றி நின்று ஆயர் தழைகள் இடச்
சுருள்பங்கி நேத்திரத்தால் அணிந்து,
பற்றி நின்று ஆயர் கடைத்தலையே
பாடவும் ஆடக் கண்டேன்; அன்றிப் பின்,
மற்று ஒருவர்க்கு என்னைப் பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை எம் மாயற்கு அல்லால்;
கொற்றவனுக்கு இவள் ஆம் என்று எண்ணிக்
கொடுமின்கள்; கொடீராகிற் கோழம்பமே. 5.

சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றிமேல்
திருத்திய கோறம்பும் திருக்குழலும்
அந்தரம் முழவத் தண் தழைக் காவின்கீழ்
வரும் ஆயரோடு உடன் வளைகோல் வீச,
அந்தம் ஒன்று இல்லாத ஆயப் பிள்ளை
அறிந்து அறிந்து இவ் வீதி போதுமாகில்
பந்து கொண்டான் என்று வளைத்து வைத்துப்
பவளவாய் முறுவலும் காண்போம், தோழீ! 6

சாலப் பல் நிரைப் பின்னே தழைக் காவின்கீழ்த்
தன் திருமேனிநின்று ஒளி திகழ,
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தால்
அணிந்து, பல் ஆயர் குழாம் நடுவே
கோலச் செந்தாமரைக் கண் மிளிரக்
குழல் ஊதி இசை பாடிக் குனித்து ஆயரோடு
ஆலித்து வருகின்ற ஆயப் பிள்ளை
அழகு கண்டு என்மகள் அயர்க்கின்றதே. 7

சிந்துரப்-பொடி கொண்டு சென்னி அப்பித்
திருநாமம் இட்டு அங்கு ஓர் இலையந்தன்னால்
அந்தரம் இன்றித் தன் நெறி பங்கியை
அழகிய நேத்திரத்தால் அணிந்து
இந்திரன் போல் வரும் ஆயப்பிள்ளை
எதிர்நின்று அங்கு இனவளை இழவேல் என்ன,
சந்தியில் நின்று கண்டீர் நங்கை தன்
துகிலொடு சரிவளை கழல்கின்றதே. 8

வலங் காதில் மேல்-தோன்றிப் பூ அணிந்து
மல்லிகை வனமாலை மௌவல் மாலை
சிலிங்காரத்தால் குழல் தாழ விட்டுத்
தீங்குழல் வாய்மடுத்து ஊதி ஊதி
அலங்காரத்தால் வரும் ஆயப் பிள்ளை
அழகு கண்டு என்மகள் ஆசைப்பட்டு
விலங்கி நில்லாது எதிர்நின்று கண்டீர்
வெள்வளை கழன்று மெய்ம் மெலிகின்றதே. 9

விண்ணின்மீது அமரர்கள் விரும்பித் தொழ
மிறைத்து ஆயர் பாடியில் வீதியூடே
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக்
கண்டு, இளஆய்க் கன்னிமார் காமுற்ற
வண்ணம், வண்டு அமர் பொழிற் புதுவையர்கோன்
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்
பண் இன்பம் வரப் பாடும் பத்தர் உள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவரே. 10

பெரியாழ்வார் திருமொழி

3, 5

கோவர்த்தனகிரியைக் குடைகொண்டமை

அட்டுக் குவி சோற்றுப் பருப்பதமும்
தயிர்-வாவியும் நெய்-அளறும் அடங்கப்
பொட்டத் துற்றி மாரிப் பகை புணர்த்த
பொரு மா கடல்வண்ணன் பொறுத்த மலை:
வட்டத் தடங்கண் மட மான் கன்றினை
வலைவாய்ப் பற்றிக் கொண்டு குறமகளிர்
கொட்டைத் தலைப் பால் கொடுத்து வளர்க்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 1

வழு ஒன்றும் இல்லாச் செய்கை வானவர்கோன்
வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட
மழை வந்து எழு நாள் பெய்து மாத் தடுப்ப
மதுசூதன் எடுத்து மறித்த மலை:
இழவு தரியாதது ஓர் ஈற்றுப் பிடி
இளஞ் சீயம் தொடர்ந்து முடுகுதலும்
குழவி இடைக் கால் இட்டு எதிர்ந்து பொரும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 2

அம் மைத் தடங்கண் மட ஆய்ச்சியரும்
ஆனயரும் ஆநிரையும் அலறி
எம்மைச் சரண் ஏன்றுகொள் என்று இரப்ப
இலங்கு ஆழிக் கை எந்தை எடுத்த மலை:
தம்மைச் சரண் என்ற தம் பாவையரைப்
புனமேய்கின்ற மானினம் காண்மின் என்று
கொம்மைப் புயக் குன்றர் சிலை குனிக்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 3

கடு வாய்ச் சின வெங்கண் களிற்றினுக்குக்
கவளம் எடுத்துக் கொடுப்பான் அவன் போல்
அடிவாய் உறக் கையிட்டு எழப் பறித்திட்டு
அமரர்பெருமான் கொண்டு நின்ற மலை:
கடல்வாய்ச் சென்று மேகம் கவிழ்ந்து இறங்கிக்
கதுவாய்ப் பட நீர்முகந்து ஏறி எங்கும்
குடவாய்ப் பட நின்று மழை பொழியும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 4

வானத்தில் உள்ளீர்! வலியீர் உள்ளீரேல்
அறையோ! வந்து வாங்குமின் என்பவன் போல்
ஏனத்து உரு ஆகிய ஈசன் எந்தை
இடவன் எழ வாங்கி எடுத்த மலை:
கானக் களி-யானை தன் கொம்பு இழந்து
கதுவாய் மதம் சோரத் தன் கை எடுத்துக்
கூனற் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 5

செப்பாடு உடைய திருமால் அவன் தன்
    செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும்
கப்பு ஆக மடுத்து மணி நெடுந்தோள்
    காம்பு ஆகக் கொடுத்துக் கவித்த மலை :
எப்பாடும் பரந்து இழி தெள் அருவி
    இலங்கு மணி முத்துவடம் பிறழக்
குப்பாயம் என நின்று காட்சிதரும்
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 6

படங்கள் பலவும் உடைப் பாம்பு-அரையன்
    படர் பூமியைத் தாங்கிக் கிடப்பவன் போல்
தடங்கை விரல் ஐந்தும் மலர வைத்துத்
    தாமோதரன் தாங்கு தடவரைதான் :
அடங்கச் சென்று இலங்கையை ஈடழித்த
    அனுமன் புகழ் பாடித் தம் குட்டன்களைக்
குடங்கைக் கொண்டு மந்திகள் கண்வளர்த்தும்
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 7

சல மா முகில் பல் கணப் போர்க்களத்துச்
    சர-மாரி பொழிந்து எங்கும் பூசலிட்டு
நலிவான் உறக் கேடகம் கோப்பவன் போல்
    நாராயணன் முன் முகம் காத்த மலை :
இலை வேய் குரம்பைத் தவ மா முனிவர்
    இருந்தார் நடுவே சென்று அணுர் சொறியக்
கொலை வாய்ச் சின வேங்கைகள் நின்று உறங்கும்
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 8

வன் பேய்முலை உண்டது ஓர் வாய் உடையன்
    வன் தூண் என நின்றது ஓர் வன் பரத்தை
தன் பேர் இட்டுக் கொண்டு தரணி தன்னிற்
    தாமோதரன் தாங்கு தடவரை தான் :
முன்பே வழி காட்ட முசுக் கணங்கள்
    முதுகிற் பெய்து தம் உடைக் குட்டன்களைக்
கொம்பு ஏற்றி இருந்து குதி பயிற்றும்
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 9

கொடி ஏறு செந் தாமரைக் கைவிரல்கள்
கோலமும் அழிந்தில, வாடிற்று இல,
வடிவு ஏறு திருவுகிர் நொந்தும் இல,
மணிவண்ணன் மலையும் ஓர் சம்பிரதம்:
முடி ஏறிய மா முகிற் பல் கணங்கள்
முன் நெற்றி நரைத்தன போல எங்கும்
குடி ஏறி இருந்து மழை பொழியும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே. 10

அரவிற் பள்ளிகொண்டு அரவம் துரந்திட்டு
அரவப்-பகை ஊர்தி அவனுடைய
குரவிற் கொடி முல்லைகள் நின்று உறங்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடைமேல்
திருவிற் பொலி மறைவாணர் புத்தூர்த்
திகழ் பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும்
பரவு மனம் நன்கு உடைப் பத்தர் உள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவரே. 11

பெரியாழ்வார் திருமொழி

3, 6

கண்ணன் குழல் ஊதல்

நாவலம் பெரிய தீவினில் வாழும்
நங்கைமீர்கள்! இது ஓர் அற்புதம் கேளீர்!
தூ வலம்புரி உடைய திருமால்
தூய வாயிற் குழல்-ஓசை வழியே
கோவலர் சிறுமியர் இளங் கொங்கை
குதுகலிப்ப உடல் உள்-அவிழ்ந்து எங்கும்
காவலும் கடந்து கயிறுமாலை
ஆகி வந்து கவிழ்ந்து நின்றனரே. 1

இட அணரை இடத் தோளொடு சாய்த்து
இருகை கூடப் புருவம் நெரிந்து ஏறக்
குடவயிறு பட வாய் கடைகூடக்
கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
மட மயில்களொடு மான்பிணை போலே
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ
உடை நெகிழ ஓர்கையால் துகில் பற்றி
ஒல்கி ஓடு அரிக்கண் ஓட நின்றனரே. 2

வான் இளவரசு வைகுந்தக் குட்டன்
வாசுதேவன் மதுரைமன்னன் நந்த-
கோன் இளவரசு கோவலர் குட்டன்
கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
வான் இளம்படியர் வந்து வந்து ஈண்டி
மனம் உருகி மலர்க்கண்கள் பனிப்பத்
தேன் அளவு செறி கூந்தல் அவிழச்
சென்னி வேர்ப்பச் செவி சேர்த்து நின்றனரே. 3

தேனுகன் பிலம்பன் காளியன் என்னும்
தீப்பப் பூடுகள் அடங்க உழக்கிக்
கானகம் படி உலாவி உலாவிக்
கருஞ்சிறுக்கன் குழல் ஊதின போது,
மேனகையொடு திலோத்தமை அரம்பை
உருப்பசியர் அவர் வெள்கி மயங்கி
வானகம் படியில் வாய் திறப்பு இன்றி
ஆடல் பாடல் இவை மாறினர் தாமே. 4

முன் நரசிங்கமது ஆகி அவுணன்
முக்கியத்தை முடிப்பான், மூவுலகில்
மன்னர் அஞ்சும் மதுசூதனன் வாயிற்
குழலின் ஓசை செவியைப் பற்றி வாங்க,
நன் நரம்பு உடைய தும்புருவோடு
நாரதனும் தம் தம் வீணை மறந்து
கின்னர மிதுனங்களும் தம் தம்
கின்னரம் தொடுகிலோம் என்றனரே. 5

செம் பெருந் தடங்-கண்ணன் திரள் தோளன்
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம்
நம் பரமன் இந்நாள் குழல் ஊதக்
கேட்டவர்கள் இடர் உற்றன கேளீர்!
அம்பரம் திரியும் காந்தப்பர் எல்லாம்
அமுத கீத வலையால் சுருக்குண்டு
நம் பரம் அன்று என்று நாணி மயங்கி
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே. 6

புவியுள் நான் கண்டது ஓர் அற்புதம் கேளீர்!
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத்து-அணையான் குழல் ஊத
அமரலோகத்து அளவும் சென்று இசைப்ப,
அவியுணு மறந்து வானவர் எல்லாம்
ஆயர்-பாடி நிறையப் புகுந்து ஈண்டிச்
செவி-உணவின் சுவை கொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாரே. 7

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்டகில்லாவே. 8

திரண்டு எழு தழை மழைமுகில் வண்ணன்
செங்கமல மலர் சூழ் வண்டினம் போலே
சுருண்டு இருண்ட குழல் தாழ்ந்த முகத்தான்
ஊதுகின்ற குழல்-ஓசை வழியே,
மருண்டு மான்-கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போல நின்றனவே. 9

கருங்கண் தோகை மயிற் பீலி அணிந்து
கட்டி நன்கு உடுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவனொருவன் குழல் ஊதின போது,
மரங்கள் நின்று மது தாரைகள் பாயும்;
மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்,
இரங்கும், கூம்பும்; திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே. 10

குழல் இருண்டு சுருண்டு ஏறிய குஞ்சிக்
கோவிந்தனுடைய கோமள வாயிற்
குழல் முழைஞ்சுகளின் ஊடு குமிழ்த்துக்
கொழித்து இழிந்த அமுதப் புனல்தன்னைக்
குழல் முழவம் விளம்பும் புதுவைக்கோன்
விட்டுசித்தன் விரித்த தமிழ் வல்லார்
குழலை வென்ற குளிர் வாயினராகிச்
சாதுகோட்டியுள் கொள்ளப் படுவாரே. 11

பெரியாழ்வார் திருமொழி

3, 7

நற்றாய் இரங்கல்

ஐய புழுதி உடம்பு அளைந்து இவள்
பேச்சும் அலந்தலையாய்ச்
செய்ய நூலின் சிற்றாடை செப்பன்
உடுக்கவும் வல்லள் அல்லள்;
கையினில் சிறு தூதை யோடு இவள்
முற்றில் பிரிந்தும் இலள்
பை அரவணைப் பள்ளியானொடு
கைவைத்து இவள்வருமே. 1

வாயிற் பல்லும் எழுந்தில; மயி-
ரும் முடி கூடிற்றில;
சாய்வு இலாத குறுந்தலைச் சில
பிள்ளைகளோடு இணங்கி
தீ இணக்கு இணங்கு ஆடி வந்து இவள்
தன் அன்ன செம்மை சொல்லி,
மாயன் மா மணிவண்ணன்மேல் இவள்
மால் உறுகின்றாளே. 2

பொங்கு வெண்மணல் கொண்டு சிற்றிலும்
முற்றத்து இழைக்கலுறில்
சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லும்
அல்லது இழைக்கலுறாள்;
கொங்கை இன்னம் குவிந்து எழுந்தில;
கோவிந்தனொடு இவளைச்
சங்கை யாகி என் உள்ளம் நாள்தொறும்
தட்டுளுப்பு ஆகின்றதே. 3

ஏழை பேதை ஓர் பாலகன் வந்து என்
பெண்மகளை எள்கி,
தோழிமார் பலர் கொண்டுபோய்ச் செய்த
சூழ்ச்சியை யார்க்கு உரைக்கேன் ?
ஆழியான் என்னும் ஆழ மோழையில்
பாய்ச்சி அகப்படுத்தி
மூழை உப்பு அறியாது என்னும்
மூதுரையும் இலளே. 4

நாடும் ஊரும் அறியவே போய்
நல்ல துழாய் அலங்கல்
சூடி நாரணன் போம் இடம் எல்லாம்
சோதித்து உழிதர்கின்றாள் ;
கேடு வேண்டுகின்றார் பலர் உளர்,
கேசவனோடு இவளைப்
பாடிகாவல் இடுமின் என்று என்று
பார் தடுமாறினதே. 5

பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து இவள்
பாடகமும் சிலம்பும்
இட்ட மாக வளர்த்து எடுத்தேனுக்கு
என்னோடு இருக்கலுறாள் ;
பொட்டப் போய்ப் புறப்பட்டு நின்று இவள்
பூவைப் பூவண்ணா! என்னும் ;
வட்ட வார் குழல் மங்கைமீர்! இவள்
மால் உறுகின்றாளே. 6

பேசவும் தரியாத பெண்மையின்
பேதையேன் பேதை இவள்
கூசமின்றி நின்றார்கள் தம் எதிர்
கோல் கழிந்தான் மூழையாய்,
கேசவா! என்றும் கேடிலீ! என்றும்
கிஞ்சுக வாய் மொழியாள்
வாச வார்குழல் மங்கைமீர்! இவள்
மால் உறுகின்றாளே. 7

காறை பூணும், கண்ணாடி காணும்; தன்
    கையில் வளை குலுக்கும்;
கூறை உடுக்கும், அயர்க்கும், தன்
    கொவ்வைச் செவ்வாய் திருத்தும்;
தேறித் தேறி நின்று ஆயிரம் பேர்த்
    தேவன் திறம் பிதற்றும்;
மாறில் மா மணிவண்ணன்மேல் இவள்
    மால் உறுகின்றாளே. 8

கைத்தலத்து உள்ள மாடு அழியக்
    கண்ணாலங்கள் செய்து இவளை—
வைத்து வைத்துக்கொண்டு என்ன வாணிபம்?
    நம்மை வடுப்படுத்தும்—
செய்த்தலை எழு நாற்றுப் போல் அவன்
    செய்வன செய்துகொள்ள
மைத் தடமுகில் வண்ணன் பக்கல்
    வளர விடுமின்களே. 9

பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து
    பேணி நம் இல்லத்துள்ளே
இருத்துவான் எண்ணி நாம் இருக்க,
    இவளும் ஒன்று எண்ணுகின்றாள்;
மருத்துவப் பதம் நீங்கினாள் என்னும்
    வார்த்தை படுவதன்முன்,
ஒருப்படுத்து இடுமின் இவளை
    உலகளந்தான் இடைக்கே. 10

ஞாலம் முற்றும் உண்டு ஆலிலைத் துயில்
    நாராயணனுக்கு இவள்
மாலதாகி மகிழ்ந்தனள் என்று
    தாய் உரை செய்ததனை
கோலம் ஆர் பொழில் சூழ் புதுவையர்கோன்
    விட்டுசித்தன் சொன்ன
மாலை பத்தும் வல்லவர்கட்கு
    இல்லை வரு துயரே. 11

பெரியாழ்வார் திருமொழி

3, 8

தலைவன்பின் சென்ற மகளைக்குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல்

நல்லது ஓர் தாமரைப் பொய்கை
நாண்மலர் மேல் பனி சோர,
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு,
அழகழிந்தால் ஒத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றாலோ!
என்மகளை எங்கும் காணேன்;
மல்லரை அட்டவன் பின்போய்
மதுரைப் புறம் புக்காள் கொல்லோ? 1

ஒன்றும் அறிவு ஒன்று இல்லாத
உருவறைக் கோபாலர் தங்கள்
கன்று கால் மாறுமா போலே,
கன்னி இருந்தாளைக் கொண்டு
நன்றும் கிறி செய்து போனான்;
நாராயணன் செய்த தீமை
என்றும் எமர்கள் குடிக்கு ஓர்
ஏச்சுக்கொல்? ஆயிடுங் கொல்லோ? 2

குமரி மணம் செய்து கொண்டு,
கோலம் செய்து இல்லத்து இருத்தி,
தமரும் பிறரும் அறியத்
தாமோதரற்கு என்று சாற்றி,
அமரர் பதியுடைத் தேவி
அரசாணியை வழிபட்டு,
துமிலம் எழப் பறை கொட்டித்
தோரணம் நாட்டிடுங் கொல்லோ? 3

ஒரு மகள் தன்னை உடையேன்,
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்;
செங்கண் மால் தான் கொண்டு போனான்.
பெரு மகளாய்க் குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமகளைக் கண்டு உகந்து
மணாட்டுப் புறம்செய்யுங் கொல்லோ? 4

தம் மாமன் நந்தகோபாலன்
தழீஇக் கொண்டு, என் மகள் தன்னைச்
செம்மாந்திரே என்று சொல்லி,
செழுங் கயற் கண்ணும் செவ்வாயும்
கொம்மை முலையும் இடையும்
கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு,
இம் மகளைப் பெற்ற தாயர்
இனித் தரியார் என்னுங் கொல்லோ ? 5

வேடர் மறக்குலம் போலே,
வேண்டிற்றுச் செய்து என்மகளைக்
கூடிய கூட்டமே யாகக்
கொண்டு குடி வாழுங் கொல்லோ ?
நாடும் நகரும் அறிய
நல்லது ஓர் கண்ணாலம் செய்து,
சாடு இறப் பாய்ந்த பெருமான்
தக்கவா கைப்பற்றுங் கொல்லோ ? 6

அண்டத்து அமரர் பெருமான்
ஆழியான் இன்று என்மகளைப்
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப்
பரிசு அற ஆண்டிடுங் கொல்லோ ?
கொண்டு குடி - வாழ்க்கை வாழ்ந்து
கோவலப் பட்டம் கவித்துப்
பண்டை மணாட்டிமார் முன்னே
பாதுகாவல் வைக்குங் கொல்லோ? 7

குடியிற் பிறந்தவர் செய்யும்
குணம் ஒன்றும் செய்திலன், அந்தோ!
நடை ஒன்றும் செய்திலன், நங்காய்!
நந்தகோபன் மகன் கண்ணன் :
இடை இருபாலும் வணங்க
இளைத்து இளைத்து என்மகள் ஏங்கிக்
கடைகயிறே பற்றி வாங்கிக்
கை தழும்பு ஏறிடுங் கொல்லோ ? 8

வெண்ணிறத் தோய் தயிர் தன்னை
　　வெள்வரைப்பின் முன் எழுந்து
கண் உறங்காதே இருந்து
　　கடையவும் தான்வல்லள் கொல்லோ?
ஒண்ணிறத் தாமரைச் செங்கண்
　　உலகளந்தான் என்மகளைப்
பண் அறையாப் பணிகொண்டு
　　பரிசு அற ஆண்டிடுங் கொல்லோ? 9

மாயவன் பின்வழி சென்று வழியிடை மாற்றங்கள் கேட்டு
ஆயர்கள் சேரியிலும் புக்கு அங்குத்தை மாற்றமும் எல்லாம்
தாயவள் சொல்லிய சொல்லைத் தண் புதுவைப் பட்டன் சொன்ன
தூய தமிழ் பத்தும் வல்லார் தூ மணிவண்ணனுக்கு ஆளரே. 10

பெரியாழ்வார் திருமொழி

3, 9

உந்தி பறத்தல்

என் நாதன் தேவிக்கு அன்று இன்பப்பூ ஈயாதாள்
தன் நாதன் காணவே தண்பூ மரத்தினை
வன் நாதப் புள்ளால் வலியப் பறித்திட்ட
என் நாதன் வன்மையைப் பாடிப் பற!
　　எம்பிரான் வன்மையைப் பாடிப் பற! 1

என் வில் வலி கண்டு போ என்று எதிர்வந்தான்
தன் வில்லினோடும் தவத்தை எதிர்வாங்கி
முன் வில் வலித்து முதுபெண் உயிருண்டான்
தன் வில்லின் வன்மையைப் பாடிப் பற!
　　தாசரதி தன்மையைப் பாடிப் பற! 2

உருப்பிணி நங்கையைத் தேர் ஏற்றிக் கொண்டு
விருப்புற்று அங்கு ஏக விரைந்து எதிர் வந்து
செருக்கு உற்றான் வீரம் சிதையத் தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப் பற!
　　தேவகி சிங்கத்தைப் பாடிப் பற! 3

மாற்றுத்தாய் சென்று வனம்போகே என்றிட
ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரான்! என்று அழ
கூற்றுத் தாய் சொல்லக் கொடிய வனம் போன
சீற்றம் இலாதானைப் பாடிப் பற!
　　சீதை மணாளனைப் பாடிப் பற! 4

பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து
நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நற் பொய்கை புக்கு
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டு அருள்செய்த
அஞ்சன வண்ணனைப் பாடிப் பற!
அசோதைதன் சிங்கத்தைப் பாடிப் பற! 5

முடி ஒன்றி மூவுலகங்களும் ஆண்டு உன்
அடியேற்கு அருள் என்று அவன்பின் தொடர்ந்த
படியில் குணத்துப் பரத நம்பிக்கு அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப் பற!
அயோத்தியர் கோமானைப் பாடிப் பற! 6

காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடம்செய்து
மீள அவனுக்கு அருள்செய்த வித்தகன்
தோள்-வலி வீரமே பாடிப் பற!
தூ மணிவண்ணனைப் பாடிப் பற! 7

தார்க்கு இளந்தம்பிக்கு அரசு ஈந்து தண்டகம்
நூற்றவள் சொற்கொண்டு போகி நுடங்கு-இடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப் பற!
அயோத்திக்கு அரசனைப் பாடிப் பற! 8

மாயச் சகடம் உதைத்து மருது இறுத்து
ஆயர்களோடு போய் ஆநிரை காத்து அணி
வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப் பற!
ஆநிரை மேய்த்தானைப் பாடிப் பற! 9

காரார் கடலை அடைத்திட்டு இலங்கை புக்கு
ஓராதான் பொன்முடி ஒன்பதோடு ஒன்றையும்
நேரா அவன்தம்பிக்கே நீள் அரசு ஈந்த
ஆராவமுதனைப் பாடிப் பற!
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற! 10

நந்தன் மதலையைக் காகுத்தனை நவின்று
உந்தி பறந்த ஒளியிழையார்கள் சொல்
செந்தமிழ்த் தென்புதுவை விட்டுசித்தன் சொல்
ஐந்தினோடு ஐந்தும் வல்லார்க்கு அல்லல் இல்லையே. 11

பெரியாழ்வார் திருமொழி

3, 10

அநுமன் சீதைக்குக் கூறிய அடையாளம்

நெறிந்த கருங்குழல் மடவாய்! நின் அடியேன் விண்ணப்பம் :
செறிந்த மணி முடிச் சனகன் சிலை இறுத்து நினைக் கொணர்ந்தது
அறிந்து அரசு களைகட்ட அருந்தவத்தோன் இடை விலங்கச்
செறிந்த சிலைகொடு தவத்தைச் சிதைத்ததும் ஓர்அடையாளம். 1

அல்லியம்பூ மலர்க்கோதாய்! அடிபணிந்தேன் விண்ணப்பம் :
சொல்லுகேன் கேட்டருளாய், துணைமலர்க் கண் மடமானே!
எல்லியம் போது இனிதிருத்தல் இருந்தது ஓர் இட வகையில்
மல்லிகை மா மாலைகொண்டு அங்கு ஆர்த்ததும் ஓர் அடையாளம். 2

கலக்கிய மா மனத்தனளாய்க் கைகேசி வரம் வேண்ட
மலக்கிய மா மனத்தனனாய் மன்னவனும் மறாது ஒழியக்
குலக்குமரா! காடு உறையப் போ என்று விடை கொடுப்ப
இலக்குமணன் தன்னொடும் அங்கு ஏகியது ஓர் அடையாளம். 3

வார் அணிந்த முலை மடவாய்! வைதேவீ! விண்ணப்பம் :
தேர் அணிந்த அயோத்தியர்கோன் பெருந்தேவீ! கேட்டருளாய்,
கூர் அணிந்த வேல் வலவன் குகனோடும் கங்கைதன்னிற்
சீர் அணிந்த தோழமை கொண்டதும் ஓர் அடையாளம். 4

மான் அமரும் மென்நோக்கி! வைதேவீ! விண்ணப்பம் :
கான் அமரும் கல்-அதர் போய்க் காடு உறைந்த காலத்துத்
தேன் அமரும் பொழிற் சாரல் சித்திரகூடத்து இருப்பப்
பால்மொழியாய்! பரதநம்பி பணிந்ததும் ஓர் அடையாளம். 5

சித்திரகூடத்து இருப்பச் சிறுகாக்கை முலை தீண்ட
அத்திரமே கொண்டு எறிய அனைத்து உலகும் திரிந்து ஓடி
வித்தகனே! இராமாவோ! நின் அபயம் என்று அழைப்ப
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும் ஓர் அடையாளம். 6

மின் ஒத்த நுண்-இடையாய்! மெய்-அடியேன் விண்ணப்பம் :
பொன் ஒத்த மான் ஒன்று புகுந்து இனிது விளையாட
நின் அன்பின் வழிநின்று சிலை பிடித்து எம்பிரான் ஏகப்
பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததும் ஓர் அடையாளம். 7

மைத் தகு மா மலர்க்குழலாய்! வைதேவீ! விண்ணப்பம் :
ஒத்த புகழ் வானரக்கோன் உடன் இருந்து நினைத் தேட
அத்தகு சீர் அயோத்தியர்கோன் அடையாளம் இவை மொழிந்தான்
இத் தகையால் அடையாளம் ; ஈது அவன் கைம் மோதிரமே. 8

திக்கு நிறை புகழாளன் தீ வேள்விச் சென்ற நாள்
மிக்க பெரும் சபை நடுவே வில் இறுத்தான் மோதிரம் கண்டு
ஒக்குமால் அடையாளம், அனுமான்! என்று உச்சிமேல்
வைத்துக்கொண்டு உகந்தனளால் மலர்க்குழலாள் சீதையுமே. 9

வார் ஆரும் முலை மடவாள் வைதேவி தனைக் கண்டு
சீர் ஆரும் திறல் அனுமன் தெரிந்து உரைத்த அடையாளம்
பார் ஆரும் புகழ்ப் புதுவைப் பட்டர்பிரான் பாடல் வல்லார்
ஏர் ஆரும் வைகுந்தத்து இமையவரோடு இருப்பாரே. 10

பெரியாழ்வார் திருமொழி

4, 1

திருமாலைக் கண்ட சுவடு உரைத்தல்

கதிர் ஆயிரம் இரவி கலந்து எறித்தால் ஒத்த நீள்முடியன்
எதிர் இல் பெருமை இராமனை இருக்கும் இடம் நாடுதிரேல்,
அதிரும் கழற் பொரு தோள் இரணியன் ஆகம் பிளந்து அரியாய்
உதிரம் அளைந்த கையோடு இருந்தானை உள்ளவா கண்டார் உளர். 1

நாந்தகம் சங்கு தண்டு நாண் ஒலிச் சார்ங்கம் திருச்சக்கரம்
ஏந்து பெருமை இராமனை இருக்கும் இடம் நாடுதிரேல்,
காந்தள் முகிழ் விரற் சீதைக்கு ஆகிக் கடுஞ்சிலை சென்று இறுக்க
வேந்தர் தலைவன் சனகராசன்தன் வேள்வியிற் கண்டார் உளர் 2

கொலையானைக் கொம்பு பறித்துக் கூடலர் சேனை பொருது அழியச்
சிலையால் மராமரம் எய்த தேவனைச் சிக்கென நாடுதிரேல்,
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று தடவரை கொண்டு அடைப்ப
அலை ஆர் கடற்கரை வீற்றிருந்தானை அங்குத்தைக் கண்டார் உளர். 3

தோயம் பரந்த நடுவு சூழலிற் தொல்லை வடிவு கொண்ட
மாயக் குழவி யதனை நாடுறில், வம்மின், சுவடு உரைக்கேன் :
ஆயர் மடமகள் பின்னைக்கு ஆகி அடல் விடை ஏழினையும்
வீயப் பொருது வியர்த்து நின்றானை மெய்ம்மையே கண்டார்உளர். 4

நீர் ஏறு செஞ்சடை நீலகண்டனும் நான்முகனும் முறையால்
சீர் ஏறு வாசகஞ் செய்ய நின்ற திருமாலை நாடுதிரேல்,
வார் ஏறு கொங்கை உருப்பிணியை வலியப் பிடித்துக்கொண்டு
தேர் ஏற்றிச் சேனை நடுவு போர்செய்யச் சிக்கெனக் கண்டார் உளர்.

பொல்லா வடிவு உடைப் பேய்ச்சி துஞ்சப் புணர்முலை வாய்மடுக்க
வல்லானை மா மணிவண்ணனை மருவும் இடம் நாடுதிரேல்,
பல்லாயிரம் பெருந் தேவிமாரொடு பௌவம் எறி துவரை
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே இருந்தானைக் கண்டார் உளர். 6

வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச்சக்கரம் ஏந்து கையன்
உள்ள இடம் வினவில், உமக்கு, இறை வம்மின், சுவடு உரைக்கேன்:
வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் தேர்மிசை முன்புநின்று
கள்ளப் படைத்துணை ஆகிப் பாரதம் கைசெய்யக் கண்டார் உளர். 7

நாழிகை கூறு இட்டுக் காத்து நின்ற அரசர்கள்தம் முகப்பே
நாழிகை போகப் படை பொருதவன் தேவகி தன் சிறுவன்
ஆழிகொண்டு அன்று இரவி மறைப்பச் சயத்திரதன் தலையைப்
பாழில் உருளப் படை பொருதவன் பக்கமே கண்டார் உளர். 8

மண்ணும் மலையும் மறிகடல்களும் மற்றும் யாவும் எல்லாம்
திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவனைச் சிக்கென நாடுதிரேல்,
எண்ணற்கு அரியது ஓர் ஏனம் ஆகி இருநிலம் புக்கு இடந்து
வண்ணக் கருங்குழல் மாதரோடு மணந்தானைக் கண்டார் உளர். 9

கரிய முகில் புரை மேனி மாயனைக் கண்ட சுவடு உரைத்துப்
புரவி முகம்செய்து செந்நெல் ஓங்கி விளை கழனிப் புதுவைத்
திருவிற் பொலி மறைவாணன் பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும்
பரவும் மனம் உடைப் பத்தர் உள்ளார் பரமன்அடி சேர்வர்களே. 10

பெரியாழ்வார் திருமொழி

4, 2

திருமாலிருஞ்சோலை

அலம்பா வெருட்டாக் கொன்று திரியும் அரக்கரைக்
குலம் பாழ் படுத்துக் குலவிளக்காய் நின்ற கோன் மலை:
சிலம்பு ஆர்க்க வந்து தெய்வ-மகளிர்கள் ஆடும் சீர்ச்
சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலையே. 1

வல்லாளன் தோளும் வாள் அரக்கன் முடியும் தங்கை
பொல்லாத மூக்கும் போக்குவித்தான் பொருந்தும் மலை :
எல்லா இடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டு ஒலி
செல்லா நிற்கும் சீர்த் தென் திருமாலிருஞ் சோலையே. 2

தக்கார் மிக்கார்களைச் சஞ்சலம் செய்யும் சலவரைத்
தெக்கு ஆம் நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை :
எக் காலமும் சென்று சேவித்திருக்கும் அடியரை
அக் கான் நெறியை மாற்றும் தண் மாலிருஞ் சோலையே. 3

ஆனாயர் கூடி அமைத்த விழவை அமரர்தம்
கோனார்க்கு ஒழியக் கோவர்த்தனத்துச் செய்தான் மலை :
வான் நாட்டினின்று மாமலர்க் கற்பகத் தொத்து இழி
தேன் ஆறு பாயும் தென் திருமாலிருஞ் சோலையே. 4

ஒரு வாரணம் பணி கொண்டவன் பொய்கையில், கஞ்சன்தன்
ஒரு வாரணம் உயிர் உண்டவன் சென்று உறையும் மலை :
கரு வாரணம் தன் பிடி துறந்து ஓடக் கடல்வண்ணன்
திருவாணை கூறத் திரியும் தண் மாலிருஞ் சோலையே. 5

ஏவிற்றுச் செய்வான் ஏன்று எதிர்ந்து வந்த மல்லரைச்
சாவத் தகர்த்த சாந்து அணி தோள் சதுரன் மலை :
ஆவத்-தனம் என்று அமரர்களும் நன் முனிவரும்
சேவித்திருக்கும் தென் திருமாலிருஞ் சோலையே. 6

மன்னர் மறுக மைத்துனன்மார்க்கு ஒரு தேரின்மேல்
முன் அங்கு நின்று மோழை எழுவித்தவன் மலை :
கொல் நவில் கூர்வேற் கோன் நெடுமாறன் தென்கூடற் கோன்
தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலையே. 7

குறுகாத மன்னரைக் கூடு கலக்கி வெங் கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை :
அறுகால் வரி வண்டுகள் ஆயிர நாமம் சொல்லிச்
சிறுகாலைப் பாடும் தென் திருமாலிருஞ் சோலையே. 8

சிந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப் பலி கொடுத்து ஆவத்-தனம் செய் அப்பன் மலை :
இந்திர-கோபங்கள் எம்பெருமான் கனி - வாய் ஒப்பான்
சிந்தும் புறவில் தென் திருமாலிருஞ் சோலையே. 9

எட்டுத் திசையும் எண்-இறந்த பெருந் தேவிமார்
விட்டு விளங்க வீற்றிருந்த விமலன் மலை:
பட்டிப் பிடிகள் பகடு உரிஞ்சிச் சென்று மாலைவாய்த்
தெட்டித் திளைக்கும் தென் திருமாலிருஞ் சோலையே. 10

மருதப் பொழில் அணி மாலிருஞ் சோலை மலைதன்னைக்
கருதி உறைகின்ற கார்க்கடல் வண்ணன் அம்மான்தன்னை
விரதம் கொண்டு ஏத்தும் வில்லிபுத்தூர் விட்டுசித்தன் சொல்
கருதி உரைப்பவர் கண்ணன் கழலிணை காண்பரே. 11

பெரியாழ்வார் திருமொழி

4, 3

திருமாலிருஞ்சோலை—2

உருப்பிணி நங்கைதன்னை மீட்பான் தொடர்ந்து ஓடிச் சென்ற
உருப்பனை ஓட்டிக் கொண்டிட்டு உறைத்திட்ட உறைப்பன் மலை:
பொருப்பிடைக் கொன்றை நின்று முறி ஆழியும் காசும் கொண்டு
விருப்பொடு பொன் வழங்கும் வியன் மாலிருஞ் சோலையதே. 1

கஞ்சனும் காளியனும் களிறும் மருதும் எருதும்
வஞ்சனையில் மடிய வளர்ந்த மணிவண்ணன் மலை:
நஞ்சு உமிழ் நாகம் எழுந்து அணவி நளிர் மா மதியைச்
செஞ்சுடர் நா வளைக்கும் திருமாலிருஞ் சோலையதே. 2

மன்னு நரகன்தன்னைச் சூழ் போகி வளைத்து எறிந்து
கன்னி மகளிர்தம்மைக் கவர்ந்த கடல்வண்ணன் மலை:
புன்னை செருந்தியொடு புன வேங்கையும் கோங்கும் நின்று
பொன்-அரி மாலைகள் சூழ் பொழில் மாலிருஞ் சோலையதே. 3

மாவலி தன்னுடைய மகன் வாணன் மகள் இருந்த
காவலைக் கட்டழித்த தனிக் காளை கருதும் மலை:
கோவலர் கோவிந்தனைக் குற மாதர்கள் பண் குறிஞ்சிப்
பா ஒலி பாடி நடம் பயில் மாலிருஞ் சோலையதே. 4

பல பல நாழம் சொல்லிப் பழித்த சிசுபாலன்தன்னை
அலைவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை:
குல மலை கோல மலை குளிர் மா மலை கொற்ற மலை
நில மலை நீண்ட மலை திருமாலிருஞ் சோலையதே. 5

பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கம் எல்லாம்
ஆண்டு அங்கு நூற்றுவர்தம் பெண்டிர் மேல் வைத்த அப்பன் மலை:
பாண் தகு வண்டினங்கள் பண்கள் பாடி மதுப் பருகத்
தோண்டல் உடைய மலை: தொல்லை மாலிருஞ் சோலையதே. 6

கனங்குழையாள் பொருட்டாக் கணை பாரித்து அரக்கர் தங்கள்
இனம் கழு ஏற்றுவித்த எழிற் தோள் எம் இராமன் மலை:
கனம் கொழி தெள் அருவி வந்து சூழ்ந்து அகல் ஞாலம் எல்லாம்
இனம் குழு ஆடும் மலை: எழில் மாலிருஞ் சோலையதே. 7

எரி சிதறும் சரத்தால் இலங்கையினைத் தன்னுடைய
வரி சிலை வாயிற் பெய்து வாய்க் கோட்டம் தவிர்த்து உகந்த
அரையன் அமரும் மலை: அமரரொடு கோனும் சென்று
திரிசுடர் சூழும் மலை: திரு மாலிருஞ் சோலையதே. 8

கோட்டுமண் கொண்டு இடந்து குடங்கையில் மண் கொண்டு அளந்து
மீட்டும் அது உண்டு உமிழ்ந்து விளையாடும் விமலன் மலை:
ஈட்டிய பல் பொருள்கள் எம்பிரானுக்கு அடியுறை என்று
ஓட்டரும் தண் சிலம்பாறு உடை மாலிருஞ் சோலையதே. 9

ஆயிரம் தோள் பரப்பி, முடி ஆயிரம் மின் இலக,
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனன் ஆளும் மலை:
ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பல ஆயிரமும்
ஆயிரம் பூம் பொழிலும் உடை மாலிருஞ் சோலையதே. 10

மாலிருஞ் சோலை என்னும் மலையை உடைய மலையை
நாலிரு மூர்த்திதன்னை நால் வேதக்-கடல் அமுதை
மேல் இருங் கற்பகத்தை வேதாந்த விழுப் பொருளின்
மேல் இருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனனே. 11

பெரியாழ்வார் திருமொழி

4, 4

திருக்கோட்டியூர்

நா அகாரியம் சொல் இலாதவர்
நாள்தொறும் விருந்து ஓம்புவார்
தேவ காரியம் செய்து வேதம்
பயின்று வாழ் திருக்கோட்டியூர்
மூவர்காரியமும் திருத்தும்
முதல்வனைச் சிந்தியாத அப்
பாவகாரிகளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத்தான் கொலோ! 1

குற்றம் இன்றிக் குணம் பெருக்கிக்
குருக்களுக்கு அனுகூலராய்ச்
செற்றம் ஒன்றும் இலாத வண்கையி-
னார்கள் வாழ் திருக்கோட்டியூர்த்
துற்றி ஏழ் உலகு உண்ட தூ மணி
வண்ணன் தன்னைத் தொழாதவர்
பெற்ற தாயர் வயிற்றினைப் பெரு
நோய்செய்வான் பிறந்தார்களே. 2

வண்ண நல் மணியும் மரகதமும்
அழுத்தி நிழல் எழும்
திண்ணை சூழ் திருக்கோட்டியூர்த் திரு-
மாலவன் திருநாமங்கள்
எண்ணக் கண்ட விரல்களால் இறைப்
போதும் எண்ணகிலாது போய்
உண்ணக் கண்ட தம் ஊத்தை வாய்க்குக்
கவளம் உந்துகின்றார்களே. 3

உரக மெல் அணையான் கையில் உறை
சங்கம் போல் மட அன்னங்கள்
நிரைகணம் பரந்து ஏறும் செங்
கமல வயற் திருக்கோட்டியூர்
நரகநாசனை நாவிற் கொண்டு அழை-
யாத மானிட சாதியர்
பருகு நீரும் உடுக்கும் கூறையும்
பாவம் செய்தன தாம் கொலோ! 4

ஆமையின் முதுகத்திடைக் குதி
கொண்டு தூ மலர் சாடிப் போய்த்
தீமை செய்து இளவாளைகள் விளை-
யாடு நீர்த் திருக்கோட்டியூர்
நேமி சேர் தடங்கையினானை
நினைப்பு இலா வலி நெஞ்சு உடைப்
பூமி-பாரங்கள் உண்ணும் சோற்றினை
வாங்கிப் புல்லைத் திணிமினே. 5

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து
    புலன்கள் ஐந்து பொறிகளால்
ஏதம் ஒன்றும் இலாத வண்கையி-
    னார்கள் வாழ் திருக்கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்று
    ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால் இவ்
    உலகம் பாக்கியம் செய்ததே. 6

குருந்தம் ஒன்று ஒசித்தானொடும் சென்று
    கூடி ஆடி விழாச் செய்து
திருந்து நான்மறையோர் இராப்பகல்
    ஏத்தி வாழ் திருக்கோட்டியூர்க்
கருந் தடமுகில் வண்ணனைக் கடைக்-
    கொண்டு கைதொழும் பத்தர்கள்
இருந்த ஊரில் இருக்கும் மானிடர்
    எத்தவங்கள் செய்தார் கொலோ! 7

நளிர்ந்த சீலன் நயாசலன் அபி-
    மான துங்கனை நாள்தொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட
    செங்கண் மால் திருக்கோட்டியூர்க்
குளிர்ந்து உறைகின்ற கோவிந்தன் குணம்
    பாடுவார் உள்ள நாட்டினுள்
விளைந்த தானியமும் இராக்கதர்
    மீது கொள்ளகிலார்களே. 8

கொம்பின் ஆர் பொழில்வாய்க் குயிலினம்
    கோவிந்தன் குணம் பாடு சீர்ச்
செம்பொன் ஆர் மதில் சூழ் செழுங் கழ-
    னி உடைத் திருக்கோட்டியூர்
நம்பனை நரசிங்கனை நவின்று
    ஏத்துவார்களைக் கண்டக்கால்
எம்பிரான் தன சின்னங்கள் இவர்
    இவர் என்று ஆசைகள் தீர்வனே. 9

காசின் வாய்க் கரம் விற்கிலும் கர-
வாது மாற்று இலி சோறு இட்டுத்
தேச வார்த்தை படைக்கும் வண்கையி-
னர்கள் வாழ் திருக்கோட்டியூர்க்
கேசவா! புருடோத்தமா! கிளர்
சோதியாய்! குறளா! என்று
பேசுவார் அடியார்கள் எம்தம்மை
விற்கவும் பெறுவார்களே. 10

சீத நீர் புடை சூழ் செழுங் கழனி உடைத் திருக்கோட்டியூர்
ஆதியான் அடியாரையும் அடிமையின்றித் திரிவாரையும்
கோதில் பட்டர்பிரான் குளிர் புதுவைமன் விட்டுசித்தன் சொல்
ஏதம் இன்றி உரைப்பவர் இருடீகேசனுக்கு ஆளரே. 11

பெரியாழ்வார் திருமொழி

4, 5

பத்தராய் இறப்பார் பெறும் பேறு

ஆசைவாய்ச் சென்ற சிந்தையர் ஆகி
அன்னை அத்தன் என் புத்திரர் பூமி
வாச வார் குழலாள் என்று மயங்கி
மாளும் எல்லைக்கண், வாய் திறவாதே,
கேசவா! புருடோத்தமா! என்றும்
கேழல் ஆகிய கேடிலீ! என்றும்
பேசுவார் அவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் நம் பரம் அன்றே. 1

சீயினால் செறிந்து ஏறிய புண்மேல்
செற்றல் ஏறிக் குழம்பு இருந்து எங்கும்
ஈயினால் அரிப்பு உண்டு மயங்கி
எல்லைவாய்ச் சென்று சேர்வதன் முன்னம்,
வாயினால் நமோ நாரணா என்று
மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப்
போயினால் பின்னை இத் திசைக்கு என்றும்
பிணை கொடுக்கிலும் போக ஒட்டாரே. 2

சோர்வினால் பொருள் வைத்தது உண்டாகில்
சொல்லு சொல் என்று சுற்றும் இருந்து
ஆர் வினவிலும் வாய் திறவாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்,
மார்வம் என்பது ஓர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பது ஓர் பூ இட வல்லார்க்கு,
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே. 3

மேல் எழுந்தது ஓர் வாயுக் கிளர்ந்து
மேல் மிடற்றினை உள் எழ வாங்கிக்
காலும் கையும் விதிர் விதிர்த்து ஏறிக்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்,
மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள் எழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதிர் ஆகில்,
விண்ணகத்தினில் மேவலும் ஆமே. 4

மடி வழி வந்து நீர் புலன்சோர
வாயில் அட்டிய கஞ்சியும் மீண்டே
கடைவழி வாரக் கண்டம் அடைப்பக்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்,
தொடை வழி உம்மை நாய்கள் கவரா
சூலத்தால் உம்மைப் பாய்வதும் செய்யார்
இடைவழியில் நீர் கூறையும் இழவீர்
இருடீகேசன் என்று ஏத்த வல்லீரே. 5

அங்கம் விட்டு அவை ஐந்தும் அகற்றி
ஆவி மூக்கினிற் சோதித்த பின்னைச்
சங்கம் விட்டு அவர் கையை மறித்துப்
பையவே தலை சாய்ப்பதன் முன்னம்,
வங்கம் விட்டு உலவும் கடற் பள்ளி
மாயனை மதுசூதனை மார்பில்
தங்க விட்டுவைத்து ஆவது ஓர் கருமம்
சாதிப்பார்க்கு என்றும் சாதிக்கலாமே. 6

தென்னவன் தமர் செப்பம் இலாதார்
சே அதக்குவார் போலப் புகுந்து
பின்னும் வன் கயிற்றால் பிணித்து எற்றிப்
பின் முன் ஆக இழுப்பதன் முன்னம்,
இன்னவன் இனையான் என்று சொல்லி
எண்ணி உள்ளத்து இருள் அற நோக்கி
மன்னவன் மதுசூதனன் என்பார்,
வானகத்து மன்றாடிகள் தாமே. 7

கூடிக் கூடி உற்றார்கள் இருந்து
குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து
பாடிப் பாடி ஓர் பாடையில் இட்டு
நரிப் படைக்கு ஒரு பாகுடம் போலே
கோடி மூடி எடுப்பதன் முன்னம்,
கௌத்துவம் உடைக் கோவிந்தனோடு
கூடி ஆடிய உள்ளத்தர் ஆனால்,
குறிப்பிடம் கடந்து உய்யலும் ஆமே. 8

வாய் ஒரு பக்கம் வாங்கி வலிப்ப
வார்ந்த நீர்க் குழிக் கண்கள் மிழற்றத்
தாய் ஒரு பக்கம் தந்தை ஒரு பக்கம்
தாரமும் ஒரு பக்கம் அலற்ற
தீ ஒரு பக்கம் சேர்வதன் முன்னம்,
செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்றம்
ஆய் ஒரு பக்கம் நிற்க வல்லார்க்கு,
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே. 9

செத்துப் போவதோர் போது நினைந்து
செய்யும் செய்கைகள் தேவபிரான்மேல்
பத்தராய் இறந்தார் பெறும் பேற்றைப்
பாழித் தோள் விட்டுசித்தன் புத்தூர்க்கோன்
சித்தம் நன்கு ஒருங்கித் திருமாலைச்
செய்த மாலை இவை பத்தும் வல்லார்
சித்தம் நன்கு ஒருங்கித் திருமால் மேல்
சென்ற சிந்தை பெறுவர்கள் தாமே. 10

பெரியாழ்வார் திருமொழி

4, 6

திருமாலின் நாமம் இடுதல்

காசும் கறை உடைக் கூறைக்கும் அங்கு ஓர் கற்றைக்கும்
ஆசையினால் அங்கு அவத்தப் பேர் இடும் ஆதர்காள்!
கேசவன் பேர் இட்டு நீங்கள் தேனித்து இருமினோ,
நாயகன் நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 1

அங்கு ஒரு கூறை அரைக்கு உடுப்பதன் ஆசையால்
மங்கிய மானிட சாதியின் பேர் இடும் ஆதர்காள்!
செங்கண் நெடுமால்! சிரீதரா! என்று அழைத்தக்கால்,
நங்கைகாள்! நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 2

உச்சியில் எண்ணெயும் சுட்டியும் வளையும் உகந்து
எச்சம் பொலிந்தீர்காள்! என் செய்வான் பிறர் பேர் இட்டீர்?
பிச்சை புக்கு ஆகிலும் எம்பிரான் திருநாமமே
நச்சுமின், நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 3

மானிட சாதியில் தோன்றிற்று ஓர் மானிட சாதியை
மானிட சாதியின் பேர் இட்டால் மறுமைக்கு இல்லை;
வான் உடை மாதவா! கோவிந்தா! என்று அழைத்தக்கால்
நான் உடை நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 4

மலம் உடை ஊத்தையில் தோன்றிற்று ஓர் மல ஊத்தையை
மலம் உடை ஊத்தையின் பேர் இட்டால் மறுமைக்கு இல்லை;
குலம் உடைக் கோவிந்தா! கோவிந்தா! என்று அழைத்தக்கால்
நலம் உடை நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 5

நாடும் நகரும் அறிய மானிடப் பேர் இட்டுக்
கூடி அழுங்கிக் குழியில் வீழ்ந்து வழுக்காதே,
சாடு இறப் பாய்ந்த தலைவா! தாமோதரா! என்று
நாடுமின்; நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 6

மண்ணிற் பிறந்து மண் ஆகும் மானிடப் பேர் இட்டு அங்கு
எண்ணம் ஒன்று இன்றி இருக்கும் ஏழை மனிசர்காள்!
கண்ணுக்கு இனிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின்; நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 7

நம்பி பிம்பி என்று நாட்டு மானிடப் பேர் இட்டால்
நம்பும் பிம்பும் எல்லாம் நாலு நாளில் அழுங்கிப் போம் ;
செம்பெருந் தாமரைக் கண்ணன் பேர் இட்டு அழைத்தக்கால்,
நம்பிகாள்! நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 8

ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வது போல் உங்கள்
மூத்திரப் பிள்ளையை என் முகில் வண்ணன் பேர் இட்டு
கோத்துக் குழைத்துக் குணலம் ஆடித் திரிமினோ!
நாத் தகு நாரணன் தம் அன்னை நரகம் புகாள். 9

சீர் அணி மால் திருநாமமே இடத் தேற்றிய
வீர் அணி தொல்புகழ் விட்டுசித்தன் விரித்த சொல்
ஓர் அணி ஒண் தமிழ் ஒன்பதோடு ஒன்றும் வல்லவர்
பேர் அணி வைகுந்தத்து என்றும் பேணி இருப்பரே. 10

பெரியாழ்வார் திருமொழி

4, 7

கண்டம் என்னும் திருப்பதி

தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
தடிந்த எம் தாசரதி போய்
எங்கும் தன் புகழா இருந்து அரசாண்ட
எம் புருடோத்தமன் இருக்கை :
கங்கை கங்கை என்ற வாசகத்தாலே
கடு வினை களைந்திடுகிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்டம் என்னும் கடிநகரே. 1

சலம் பொதி உடம்பின் தழல் உமிழ் பேழ்வாய்ச்
சந்திரன் வெங்கதிர் அஞ்ச
மலர்ந்து எழுந்து அணவும் மணிவண்ண உருவின்
மால் புருடோத்தமன் வாழ்வு :
நலம் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்
நாரணன் பாதத் துழாயும்
கலந்து இழி புனலால் புகர் படு கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. 2

அதிர் முகம் உடைய வலம்புரி குமிழ்த்தி
அழல் உமிழ் ஆழிகொண்டு எறிந்து அங்கு
எதிர் முக அசுரர் தலைகளை இடறும்
எம் புருடோத்தமன் இருக்கை :
சதுமுகன் கையிற் சதுப்புயன் தாளிற்
சங்கரன் சடையினிற் தங்கிக்
கதிர் முகம் மணிகொண்டு இழி புனற் கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. 3

இமையவர் இறுமாந்து இருந்து அரசாள
ஏற்று வந்து எதிர் பொரு சேனை
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும்
நம் புருடோத்தமன் நகர்தான் :
இமவந்தம் தொடங்கி இருங்கடல் அளவும்
இரு கரை உலகு இரைத்து ஆடக்
கமை உடைப் பெருமைக் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே. 4

உழுவது ஓர் படையும் உலக்கையும் வில்லும்
ஒண் சுடர் ஆழியும் சங்கும்
மழுவொடு வாளும் படைக்கலம் உடைய
மால் புருடோத்தமன் வாழ்வு :
எழுமையும் கூடி ஈண்டிய பாவம்
இறைப் பொழுது அளவினில் எல்லாம்
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே. 5

தலைப்பெய்து குமுறிச் சலம் பொதி மேகம்
சலசல பொழிந்திடக் கண்டு
மலைப் பெரும் குடையால் மறைத்தவன் மதுரை
மால் புருடோத்தமன் வாழ்வு :
அலைப்பு உடைத் திரைவாய் அருந்தவ முனிவர்
அவபிரதம் குடைந்து ஆடக்
கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே. 6

விற் பிடித்து இறுத்து வேழத்தை முறுக்கி
மேல் இருந்தவன் தலை சாடி
மற் பொருது எழப் பாய்ந்து அரையனை உதைத்த
மால் புருடோத்தமன் வாழ்வு:
அற்புதம் உடைய ஐராவத மதமும்
அவர் இளம்படியர் ஒண் சாந்தும்
கற்பக மலரும் கலந்து இழி கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. 7

திரை பொரு கடல் சூழ் திண்மதிற் துவரை
வேந்து தன் மைத்துனன்மார்க்காய்
அரசினை அவிய அரசினை அருளும்
அரி புருடோத்தமன் அமர்வு:
நிரை நிரையாக நெடியன யூபம்
நிரந்தரம் ஒழுக்குவிட்டு இரண்டு
கரை புரை வேள்விப் புகை கமழ் கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. 8

வட திசை மதுரை சாளக்கிராமம்
வைகுந்தம் துவரை அயோத்தி
இடம் உடை வதரி இடவகை உடைய
எம் புருடோத்தமன் இருக்கை:
தடவரை அதிரத் தரணி விண்டு இடியத்
தலைப்பற்றிக் கரை மரம் சாடிக்
கடலினைக் கலங்கக் கடுத்து இழி கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. 9

மூன்று எழுத்து அதனை மூன்று எழுத்து அதனால்
மூன்று எழுத்து ஆக்கி மூன்று எழுத்தை
ஏன்று கொண்டு இருப்பார்க்கு இரக்கம் நன்கு உடைய
எம் புருடோத்தமன் இருக்கை:
மூன்று அடி நிமிர்த்து மூன்றினிற் தோன்றி
மூன்றினில் மூன்று உரு ஆனான்
கான் தடம்பொழில் சூழ் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே. 10

பொங்கு ஒலி கங்கைக் கரை மலி கண்டத்து
உறை புருடோத்தமன் அடிமேல்
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க் கோன்
விட்டுசித்தன் விருப்பு உற்றுத்
தங்கிய அன்பால் செய் தமிழ்-மாலை
தங்கிய நா உடையார்க்குக்
கங்கையிற் திருமால் கழலிணைக் கீழே
குளித்திருந்த கணக்கு ஆமே. 11

பெரியாழ்வார் திருமொழி

4, 8

திருவரங்கம்

மா தவத்தோன் புத்திரன் போய்
மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்த தக்கணையா
உருவுருவே கொடுத்தான் ஊர் :
தோதவத்தித் தூய் மறையோர்
துறைபடியத் துளும்பி எங்கும்
போதில் வைத்த தேன் சொரியும்
புனல் அரங்கம் என்பதுவே. 1

பிறப்பு அகத்தே மாண்டு ஒழிந்த
பிள்ளைகளை நால்வரையும்
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து
ஒருப்படுத்த உறைப்பன் ஊர் :
மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார்
வருவிருந்தை அளித்திருப்பார்
சிறப்பு உடைய மறையவர் வாழ்
திருவரங்கம் என்பதுவே. 2

மருமகன்தன் சந்ததியை
உயிர்மீட்டு மைத்துனன்மார்
உருமகத்தே வீழாமே
குருமுகமாய்க் காத்தான் ஊர் :
திருமுகமாய்ச் செங்கமலம்
திருநிறமாய்க் கருங்குவளை
பொரு முகமாய் நின்று அலரும்
புனல் அரங்கம் என்பதுவே. 3

கூன் தொழுத்தை சிதகு உரைப்பக்
கொடியவள் வாய்க் கடியசொற்கேட்டு
ஈன்று எடுத்த தாயரையும்
இராச்சியமும் ஆங்கு ஒழிய,
கான் தொடுத்த நெறி போகிக்
கண்டகரைக் களைந்தான் ஊர் :
தேன் தொடுத்த மலர்ச் சோலைத்
திருவரங்கம் என்பதுவே. 4

பெருவரங்கள் அவைபற்றிப்
பிழக்கு உடைய இராவணனை
உரு அரங்கப் பொருது அழித்து இவ்
உலகினைக் கண்பெறுத்தான் ஊர் :
குரவு அரும்பக் கோங்கு அலரக்
குயில் கூவும் குளிர் பொழில் சூழ்
திருவரங்கம் என்பதுவே
என் திருமால் சேர்விடமே. 5

கீழ் உலகில் அசுரர்களைக்
கிழங்கிருந்து கிளராமே
ஆழி விடுத்து அவருடைய
கரு அழித்த அழிப்பன் ஊர் :
தாழை-மடல் ஊடு உரிஞ்சித்
தவள வண்ணப் பொடி அணிந்து
யாழின் இசை வண்டினங்கள்
ஆளம் வைக்கும் அரங்கமே. 6

கொழுப்பு உடைய செழுங்குருதி
கொழித்து இழிந்து குமிழ்த்து எறியப்
பிழக்கு உடைய அசுரர்களைப்
பிணம் படுத்த பெருமான் ஊர் :
தழுப்பு அரிய சந்தனங்கள்
தடவரைவாய் ஈர்த்துக்கொண்டு
தெழிப்பு உடைய காவிரி வந்து
அடிதொழும் சீர் அரங்கமே. 7

வல்-எயிற்றுக் கேழலுமாய்
வாள்-எயிற்றுச் சீயமுமாய்
எல்லை இல்லாத் தரணியையும்
அவுணனையும் இடந்தான் ஊர் :
எல்லியம் போது இருஞ்சிறை வண்டு
எம்பெருமான் குணம் பாடி
மல்லிகை வெண்சங்கு ஊதும்
மதில் அரங்கம் என்பதுவே. 8

குன்று ஆடு கொழு முகில் போல்
குவளைகள் போல் குரைகடல் போல்
நின்று ஆடு கணமயில் போல்
நிறம் உடைய நெடுமால் ஊர் :
குன்று ஊடு பொழில் நுழைந்து
கொடி இடையார் முலை அணவி
மன்று ஊடு தென்றல் உலாம்
மதில் அரங்கம் என்பதுவே. 9

பரு வரங்கள் அவைபற்றிப் படை ஆலித்து எழுந்தானைச்
செரு அரங்கப் பொருது அழித்த திருவாளன் திருப்பதிமேல்
திருவரங்கத் தமிழ்-மாலை விட்டுசித்தன் விரித்தன கொண்டு
இருவர் அங்கம் எரித்தானை ஏத்த வல்லார் அடியோமே. 10

பெரியாழ்வார் திருமொழி

4, 9

திருவரங்கம் (2)

மரவடியைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய்
வானோர் வாழச்
செரு உடைய திசைக்கருமம் திருத்திவந்து உலகாண்ட
திருமால் கோயில் :
திருவடிதன் திருஉருவும் திருமங்கை மலர்க்கண்ணும்
காட்டி நின்று
உரு உடைய மலர்நீலம் காற்று ஆட்ட ஒலிசலிக்கும்
ஒளி அரங்கமே. 1

தன் அடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகிலும்
சிதகு உரைக்குமேல்
என் அடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்
என்பர் போலும் ;
மன் உடைய விபீடணற்கா மதில் இலங்கைத் திசைநோக்கி
மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற்கு அன்றியும் மற்று ஒருவர்க்கு
ஆள் ஆவரே? 2

கருள் உடைய பொழில் மருதும் கதக் களிறும் பிலம்பனையும்
கடிய மாவும்
உருள் உடைய சகடரையும் மல்லரையும் உடைய விட்டு
ஓசை கேட்டான்
இருள் அகற்றும் எறி கதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து
ஏணி வாங்கி
அருள் கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான் அமரும் ஊர்
அணி அரங்கமே. 3

பதினாறும் ஆயிரவர் தேவிமார் பணிசெய்யத்
துவரை என்னும்
மதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர்
மன்னு கோயில் :
புது நாள்மலர்க் கமலம் எம்பெருமான் பொன் வயிற்றிற்
பூவே போல்வான்
பொது-நாயகம் பாவித்து இறுமாந்து பொன் சாய்க்கும்
புனல் அரங்கமே. 4

ஆமையாய்க் கங்கையாய் ஆழ் கடலாய் அவனியாய்
அரு வரைகளாய்
நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த்
தானும் ஆனான்
சேமம் உடை நாரதனார் சென்று சென்று துதித்து இறைஞ்சக்
கிடந்தான் கோயில் :
பூ மருவிப் புள்இனங்கள் புள்அரையன் புகழ் குழறும்
புனல் அரங்கமே. 5

மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே
மன்னர் ஆக்கி
உத்தரைதன் சிறுவனையும் உயக்கொண்ட உயிராளன்
உறையும் கோயில் :
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்
பரந்த நாடும்
சித்தர்களும் தொழுது இறைஞ்சத் திசை-விளக்காய் நிற்கின்ற
திருவரங்கமே. 6

குறள் பிரமசாரியாய் மாவலியைக் குறும்பு அதக்கி
அரசுவாங்கி
இறைப்பொழுதில் பாதாளம் கலவிருக்கை கொடுத்து உகந்த
எம்மான் கோயில் :
எறிப்பு உடைய மணிவரைமேல் இளஞாயிறு எழுந்தாற்போல்
அரவு-அணையின்
சிறப்பு உடைய பணங்கள்மிசைச் செழுமணிகள் விட்டு
எறிக்கும் திருவரங்கமே. 7

உரம் பற்றி இரணியனை உகிர்-நுதியால் ஒள்ளிய மார்வு
உறைக்க ஊன்றிச்
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க வாய் அலறத்
தெழித்தான் கோயில் :
உரம் பெற்ற மலர்க்கமலம் உலகு அளந்த சேவடி போல்
உயர்ந்து காட்ட
வரம்பு உற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத் தலைவணக்கும்
தண் அரங்கமே. 8

தேவு உடைய மீனமாய் ஆமையாய் ஏனமரி
குறளும் ஆகி
மூ-உருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய்
முடிப்பான் கோயில் :
சேவலொடு பெடை அன்னம் செங்கமல மலர் ஏறி
ஊசல் ஆடிப்
பூ-அணைமேல் துதைந்து எழு செம்பொடி ஆடி விளையாடும்
புனல் அரங்கமே. 9

செரு ஆளும் புள்ளாளன் மண்ணாளன் செருச்செயும்
நாந்தம் என்னும்
ஒரு வாளன் மறையாளன் ஓடாத படையாளன்
விழுக்கை யாளன்
இரவு ஆளன் பகலாளன் எனையாளன் ஏழு உலகப்
பெரும் பேராளன்
திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற
திருவரங்கமே. 10

கைந்நாகத்து இடர் கடிந்த கனல் ஆழிப் படை உடையான்
கருதும் கோயில்
தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத்
திருப்பதியின் மேல்
மெய்ந்நாவன் மெய்அடியான் விட்டுசித்தன் விரித்த தமிழ்
உரைக்க வல்லார்
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக்கீழ் இணை பிரியாது
இருப்பர் தாமே. 11

பெரியாழ்வார் திருமொழி

4, 10

எமபயம் நீக்கென அரங்கத்தரவணையானை வேண்டுதல்

துப்புடையாரை அடைவது எல்லாம்
சோர்விடத்துத் துணை ஆவர் என்றே;
ஒப்பிலேன் ஆகிலும் நின் அடைந்தேன்
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்;
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்,
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 1

சாம் இடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய்,
சங்கொடு சக்கரம் ஏந்தினானே!
நா மடித்து என்னை அனேக தண்டம்
செய்வதா நிற்பர் நமன்-தமர்கள்;
போம் இடத்து உன்திறத்து எத்தனையும்
புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை:
ஆம் இடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன்,
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 2

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்
எற்றி நமன்-தமர் பற்றும்போது
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை;
நேமியும் சங்கமும் ஏந்தினனே!
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம்
சொல்லினேன், என்னைக் குறிக்கொண்டு என்றும்
அல்லற் படாவண்ணம் காக்க வேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 3

ஒற்றை விடையனும் நான்முகனும்
உன்னை அறியாப் பெருமையோனே!
முற்ற உலகு எல்லாம் நீயே ஆகி
மூன்று எழுத்து ஆய முதல்வனே! ஓ!
அற்றது வாழ்நாள் இவற்கு என்று எண்ணி
அஞ்ச நமன்-தமர் பற்றல் உற்ற
அற்றைக்கு, நீ என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 4

பை அரவின் அணைப் பாற்கடலுள்
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி!
உய்ய உலகு படைக்க வேண்டி
உந்தியிற் தோற்றினாய் நான்முகனை;
வைய மனிசரைப் பொய் என்று எண்ணிக்
காலனையும் உடனே படைத்தாய்;
ஐய! இனி என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 5

தண்ணனவு இல்லை, நமன்-தமர்கள்
சாலக் கொடுமைகள் செய்யாநிற்பர்;
மண்ணொடு நீரும் எரியும் காலும்
மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்!
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம்
எண்ணினேன், என்னைக் குறிக்கொண்டு என்றும்
அண்ணலே! நீ என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 6

செஞ்சொல் மறைப்பொருள் ஆகி நின்ற
தேவர்கள் நாயகனே! எம்மானே!
எஞ்சலில் என்னுடை இன் அமுதே!
ஏழ் உலகும் உடையாய்! என் அப்பா!
வஞ்ச உருவின் நமன்-தமர்கள்
வலிந்து நலிந்து என்னைப் பற்றும்போது
அஞ்சலை என்று என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 7

நான் ஏதும் உன் மாயம் ஒன்று அறியேன்;
நமன்-தமர் பற்றி நலிந்திட்டு இந்த
ஊனே புகே என்று மோதும்போது அங்கு
உன்னை நான் ஒன்றும் நினைக்கமாட்டேன்;
வான் ஏய வானவர் தங்கள் ஈசா!
மதுரைப் பிறந்த மா மாயனே! என்
ஆனாய்! நீ என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 8

குன்று எடுத்து ஆநிரை காத்த ஆயா!
கோநிரை மேய்த்தவனே! எம்மானே!
அன்று முதல் இன்று அறுதியாக,
ஆதி அஞ் சோதி! மறந்து அறியேன்;
நன்றும் கொடிய நமன்-தமர்கள்
நலிந்து வலிந்து என்னைப் பற்றும்போது
அன்று அங்கு நீ என்னைக் காக்கவேண்டும்;
அரங்கத்து அரவணைப் பள்ளியானே! 9

மாயவனை மதுசூதனனை
மாதவனை மறையோர்கள் ஏத்தும்
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை
அரங்கத்து அரவணைப் பள்ளியானை
வேயர் புகழ் வில்லிபுத்தூர் மன்
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்
தூய மனத்தினர் ஆகி வல்லார்
தூ மணிவண்ணனுக்கு ஆளர் தாமே. 10

பெரியாழ்வார் திருமொழி

5, 1

தன் தகவின்மையை அறிவித்தல்

வாக்குத் தூய்மை இலாமையினாலே,
மாதவா! உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்;
நாக்கு நின்னை அல்லால் அறியாது;
நான் அது அஞ்சுவன், என்வசம் அன்று;
மூர்க்குப் பேசுகின்றான் இவன் என்று
முனிவாயேலும் என் நாவினுக்கு ஆற்றேன்;
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர் :
காரணா! கருளக் கொடியானே! 1

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்,
சங்கு சக்கரம் ஏந்து கையானே!
பிழைப்பர் ஆகிலும் தம் அடியார் சொல்
பொறுப்பது பெரியோர் கடன் அன்றே;
விழிக்கும் கண்ணிலேன் நின் கண் மற்றல்லால்,
வேறு ஒருவரோடு என் மனம் பற்றாது,
உழைக்கு ஓர் புள்ளி மிகை அன்று கண்டாய்;
ஊழி ஏழ் உலகு உண்டு உமிழ்ந்தானே! 2

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்,
நாரணா! என்னும் இத்தனை அல்லால்;
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப்
புகழ்வான் அன்று கண்டாய், திருமாலே!
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்,
ஓவாதே நமோ நாரணா! என்பன்;
வன்மை ஆவது உன் கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மை கண்டாயே. 3

நெடுமையால் உலகேழும் அளந்தாய்!
நின்மலா! நெடியாய்! அடியேனைக்
குடிமை கொள்வதற்கு ஐயுற வேண்டா,
கூறை சோறு இவை வேண்டுவதில்லை;
அடிமை என்னும் அக் கோயின்மையாலே
அங்கங்கே அவை போதரும் கண்டாய்;
கொடுமைக் கஞ்சனைக் கொன்று நின் தாதை
கோத்த வன் தளை கோள் விடுத்தானே! 4

தோட்டம் இல்லவள் ஆத் தொழு ஓடை
துடவையும் கிணறும் இவை எல்லாம்
வாட்டம் இன்றி உன் பொன்னடிக் கீழே
வளைப்பு-அகம் வகுத்துக்கொண்டு இருந்தேன்;
நாட்டு மானிடத்தோடு எனக்கு அரிது,
நச்சுவார் பலர்; கேழல் ஒன்று ஆகிக்
கோட்டு மண் கொண்ட கொள்கையினானே!
குஞ்சரம் விழக் கொம்பு ஒசித்தானே! 5

கண்ணா! நான்முகனைப் படைத்தானே!
காரணா! கரியாய்! அடியேன் நான்
உண்ணா நாள் பசி ஆவது ஒன்று இல்லை;
ஓவாதே நமோ நாரணா என்று
எண்ணா நாளும் இருக்கு எசுச் சாம
வேத நாள்மலர் கொண்டு உன பாதம்
நண்ணா நாள் அவை தத்துறுமாகில்,
அன்று எனக்கு அவை பட்டினி நாளே. 6

வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை
மெத்தையாக விரித்து அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காணலாங்கொல் என்று ஆசையினாலே,
உள்ளம் சோர உகந்து எதிர் விம்மி
உரோம கூபங்களாய்க் கண்ண நீர்கள்
துள்ளம் சோரத் துயில் அணை கொள்ளேன்;
சொல்லாய் யான் உன்னைத் தத்துறுமாறே. 7

வண்ண மால் வரையே குடையாக
மாரி காத்தவனே! மதுசூதா!
கண்ணனே! கரி கோள் விடுத்தானே!
காரணா! களிறு அட்ட பிரானே!
எண்ணுவார் இடரைக் களைவானே!
ஏத்தரும் பெருங் கீர்த்தியினானே!
நண்ணி நான் உன்னை நாள்தொறும் ஏத்தும்
நன்மையே அருள்செய், எம்பிரானே! 8

நம்பனே! நவின்று ஏத்த வல்லார்கள்
நாதனே! நரசிங்கமது ஆனாய்!
உம்பர்கோன் உலகு ஏழும் அளந்தாய்!
ஊழி ஆயினாய்! ஆழி முன் ஏந்திக்
கம்ப மா கரி கோள் விடுத்தானே!
காரணா! கடலைக் கடைந்தானே!
எம்பிரான்! என்னை ஆள் உடைத் தேனே!
ஏழையேன் இடரைக் களையாயே. 9

காமர் தாதை கருதலர் சிங்கம்
காண இனிய கருங்குழற் குட்டன்
வாமனன் என் மரதக வண்ணன்
மாதவன் மதுசூதனன் தன்னைச்
சேம நன்கு அமரும் புதுவையர் கோன்
விட்டுசித்தன் வியன் தமிழ் பத்தும்
நாமம் என்று நவின்று உரைப்பார்கள்
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே. 10

பெரியாழ்வார் திருமொழி

5, 2

பண்டன்று பட்டினம் காப்பே

நெய்க் குடத்தைப் பற்றி ஏறும்
எறும்புகள் போல் நிரந்து எங்கும்
கைக் கொண்டு நிற்கின்ற நோய்காள்!
காலம் பெற உய்யப் போமின் ;
மெய்க் கொண்டு வந்து புகுந்து
வேதப் பிரானார் கிடந்தார் ;
பைக் கொண்ட பாம்பு-அணையோடும்
பண்டு அன்று பட்டினம் காப்பே. 1

சித்திரகுத்தன் எழுத்தால்
தென்புலக் கோன் பொறி ஒற்றி
வைத்த இலச்சினை மாற்றித்
தூதுவர் ஓடி ஒளித்தார் ;
முத்துத் திரைக் கடற் சேர்ப்பன்
மூதறிவாளர் முதல்வன்
பத்தர்க்கு அமுதன் அடியேன் ;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 2

வயிற்றிற் றொழுவைப் பிரித்து
வன்புலச் சேவை அதக்கிக்
கயிற்றும் அக்கு ஆணி கழித்துக்
காலிடைப் பாசம் கழற்றி,
எயிற்றிடை மண்கொண்ட எந்தை
இராப்பகல் ஓதுவித்து என்னைப்
பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான் ;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 3

மங்கிய வல்வினை நோய்காள்!
உமக்கும் ஓர் வல்வினை கண்டீர் ;
இங்குப் புகேன்மின், புகேன்மின் ;
எளிது அன்று கண்டீர், புகேன்மின் ;
சிங்கப் பிரான் அவன் எம்மான்
சேரும் திருக்கோயில் கண்டீர் ;
பங்கப்படாது உய்யப் போமின் ;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 4

மாணிக் குறள் உரு ஆய
மாயனை என் மனத்துள்ளே
பேணிக் கொணர்ந்து புகுத
வைத்துக் கொண்டேன், பிறிது இன்றி ;
மாணிக்கப் பண்டாரம் கண்டீர் ;
வலி வன் குறும்பர்கள் உள்ளீர் !
பாணிக்க வேண்டா, நடமின் ;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 5

உற்ற உறுபிணி நோய்காள்!
உமக்கு ஒன்று சொல்லுகேன் கேண்மின் :
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்
பேணும் திருக்கோயில் கண்டீர் ;
அற்றம் உரைக்கின்றேன் இன்னம்,
ஆழ்வினைகாள்! உமக்கு இங்கு ஓர்
பற்றில்லை, கண்டீர் நடமின் ;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 6

கொங்கைச் சிறு வரை என்னும்
பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி
அங்கு ஓர் முழையினில் புக்கிட்டு
அழுந்திக் கிடந்து உழல்வேனை
வங்கக் கடல் வண்ணன் அம்மான்
வல்வினை ஆயின மாற்றிப்
பங்கப் படாவண்ணம் செய்தான்;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 7

ஏதங்கள் ஆயின எல்லாம்
இறங்கல் இடுவித்து என்னுள்ளே,
பீதக வாடைப் பிரானார்
பிரம குருவாகி வந்து,
போதில் கமல வன் நெஞ்சம்
புகுந்து என் சென்னித் திடரிற்
பாத இலச்சினை வைத்தார்;
பண்டு அன்று பட்டினம் காப்பே. 8

உறகல் உறகல் உறகல்
ஒண்சுடர் ஆழியே! சங்கே!
அற எறி நாந்தக வாளே!
அழகிய சார்ங்கமே! தண்டே!
இறவு படாமல் இருந்த
எண்மர் உலோகபாலீர்காள்!
பறவை அரையா! உறகல்
பள்ளியறை குறிக்கொண்மின். 9

அரவத்து அமளியினோடும்
அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரை பல மோதப்
பள்ளி கொள்கின்ற பிரானைப்
பரவுகின்றான் விட்டுசித்தன்
பட்டினம் காவற் பொருட்டே. 10

பெரியாழ்வார் திருமொழி

5, 3

திருமாலிருஞ்சோலைப் பெருமானைப் போகவிடேன் எனல்

துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த
வலையை அறப் பறித்துப்
புக்கினிற் புக்கு உன்னைக் கண்டு கொண்டேன், இனிப்
போக விடுவதுண்டே?
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத
இழந்தவள் தன்வயிற்றிற்
சிக்கென வந்து பிறந்து நின்றாய்! திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 1

வளைத்து வைத்தேன், இனிப் போகலொட்டேன், உன் தன்
இந்திர-ஞாலங்களால்
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய்; நீ
ஒருவர்க்கும் மெய்யன் அல்லை;
அளித்து எங்கும் நாடும் நகரமும் தம்முடைத்
தீவினை தீர்க்கல் உற்றுத்
தெளித்து வலஞ்செய்யும் தீர்த்தம் உடைத் திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 2

உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடை
யேன், இனிப் போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்
சாயை அழிவு கண்டாய்;
புனத்தினைக் கிள்ளிப் புது அவி காட்டி உன்
பொன்னடி வாழ்க என்று
இனத்துக் குறவர் புதியது உண்ணும் எழில்
மாலிருஞ் சோலை எந்தாய்!

காதம் பலவும் திரிந்து உழன்றேற்கு அங்கு ஓர்
நிழல் இல்லை நீர் இல்லை, உன்
பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடம்
நான் எங்கும் காண்கின்றிலேன்;
தூது சென்றாய்! குரு பாண்டவர்க்காய் அங்கு ஓர்
பொய்ச்சுற்றம் பேசிச் சென்று
பேதம் செய்து எங்கும் பிணம்படுத்தாய்! திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 4

காலும் எழா, கண்ண நீரும் நில்லா, உடல்
சோர்ந்து, நடுங்கிக் குரல்
மேலும் எழா, மயிர்க் கூச்சும் அறா, என
தோள்களும் வீழ்வு ஒழியா ;
மால் உகளாநிற்கும் என் மனனே! உன்னை
வாழத் தலைப்பெய்திட்டேன் ;
சேல் உகளாநிற்கும் நீள் சுனை சூழ் திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 5

எருத்துக் கொடி உடையானும் பிரமனும்
இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப் பிறவி என்னும் நோய்க்கு
மருந்து அறிவாரும் இல்லை ;
மருத்துவனாய் நின்ற மா மணிவண்ணா!
மறு பிறவி தவிரத்
திருத்தி உன் கோயிற் கடைப் புகப் பெய், திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 6

அக்கரை என்னும் அனத்தக் கடலுள்
அழுந்தி உன் பேர் அருளால்
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை அஞ்-
சேல் என்று கை கவியாய் :
சக்கரமும் தடக்கைகளும் கண்களும்
பீதக ஆடையொடும்
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்! திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 7

எத்தனை காலமும் எத்தனை ஊழியும்
இன்றொடு நாளை என்றே
இத்தனை காலமும் போய்க் கிறிப்பட்டேன்,
இனி உன்னைப் போகலொட்டேன் ;
மைத்துனன்மார்களை வாழ்வித்து மாற்றலர்
நூற்றுவரைக் கெடுத்தாய்!
சித்தம் நின்பாலது அறிதி அன்றே, திரு
மாலிருஞ் சோலை எந்தாய்! 8

அன்று வயிற்றிற் கிடந்திருந்தே அடி-
மை செய்யல் உற்றிருப்பன்,
இன்று வந்து இங்கு உன்னைக் கண்டுகொண்டேன் ; இனிப்
போக விடுவதுண்டே ?
சென்று அங்கு வாணனை ஆயிரம் தோளும்
திருச் சக்கரம் அதனால்
தென்றித் திசை திசை வீழச் செற்றாய்! திரு-
மாலிருஞ்சோலை எந்தாய்! 9

சென்று உலகம் குடைந்தாடும் சுனைத் திரு-
மாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் அடிமேல் அடிமைத் திறம்
நேர்பட விண்ணப்பஞ் செய்
பொன் திகழ் மாடம் பொலிந்து தோன்றும் புது-
வைக்கோன் விட்டுசித்தன்
ஒன்றினோடு ஒன்பதும் பாட வல்லார் உல-
கம் அளந்தான் தமரே. 10

பெரியாழ்வார் திருமொழி

5, 4

அடிமைப்பட்டுத் தாம் பெற்ற நன்மைகளை நினைத்துக் களித்தல்

சென்னி ஓங்கு தண் திருவேங்-
கடம் உடையாய்! உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ!
தாமோதரா! சதிரா!
என்னையும் என் உடைமையையும் உன்
சக்கரப் பொறி ஒற்றிக்கொண்டு
நின் அருளே புரிந்திருந்தேன் ;
இனி என் திருக்குறிப்பே ? 1

பறவை ஏறு பரமபுருடா!
நீ என்னைக் கைக்கொண்டபின்
பிறவி என்னும் கடலும் வற்றிப்
பெரும்பதம் ஆகின்றதால் ;
இறவு செய்யும் பாவக் காடு
தீக்கொளீஇ வேகின்றதால் ;
அறிவை என்னும் அமுத-ஆறு
தலைப்பற்றி வாய்க்கொண்டதே. 2

எம்மனா! என் குலதெய்வமே!
என்னுடை நாயகனே!
நின்னுளேனாய்ப் பெற்ற நன்மை இவ்
உலகினில் ஆர் பெறுவார்?
நம்மன் போலே வீழ்த்து அமுக்கும்
நாட்டில் உள்ள பாவம் எல்லாம்
சும்மெனாதே கைவிட்டு ஓடித்
தூறுகள் பாய்ந்தனவே. 3

கடல் கடைந்து அமுதம் கொண்டு
கலசத்தை நிறைத்தாற்போல்
உடல் உருகி வாய் திறந்து
மடுத்து உன்னை நிறைத்துக்கொண்டேன் ;
கொடுமை செய்யும் கூற்றமும் என்
கோல்-ஆடி குறுகப் பெறா ;
தட வரைத் தோள் சக்கரபாணீ!
சார்ங்க விற் சேவகனே! 4

பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறம் எழ உரைத்தாற் போல்,
உன்னைக் கொண்டு என் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக்கொண்டேன் ;
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன் ;
என்னையும் உன்னில் இட்டேன் ;
என் அப்பா! என் இருடீகேசா!
என் உயிர்க் காவலனே! 5

உன்னுடைய விக்கிரமம்
  ஒன்று ஒழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்
  சுவர்வழி எழுதிக்கொண்டேன் ;
மன் அடங்க மழு வலங்கைக்
  கொண்ட இராம நம்பீ!
என்னிடை வந்து எம்பெருமான்!
  இனி எங்குப் போகின்றதே? 6

பருப்பதத்துக் கயல் பொறித்த
  பாண்டியர் குலபதி போல்
திருப் பொலிந்த சேவடி என்
  சென்னியின் மேல் பொறித்தாய் ;
மருப்பு ஒசித்தாய்! மல் அடர்த்தாய்!
  என்று என்று உன் வாசகமே
உருப் பொலிந்த நாவினேனை
  உனக்கு உரித்து ஆக்கினையே. 7

அனந்தன்பாலும் கருடன்பாலும்
  ஐது நொய்தாக வைத்து, என்
மனத்தனுள்ளே வந்து வைகி
  வாழச் செய்தாய் ; எம்பிரான்!
நினைந்து என்னுள்ளே நின்று நெக்குக்
  கண்கள் அசும்பு ஒழுக
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்
  நேமி நெடியவனே! 8

பனிக் கடலில் பள்ளி-கோளைப்
  பழகவிட்டு ஓடிவந்து, என்
மனக் கடலில் வாழ வல்ல
  மாய மணாள நம்பீ!
தனிக் கடலே! தனிச் சுடரே!
  தனி உலகே! என்று என்று
உனக்கு இடமாய் இருக்க என்னை
  உனக்கு உரித்து ஆக்கினையே. 9

தட வரைவாய் மிளிர்ந்து மின்னும்
    தவள நெடுங்கொடி போல்
சுடர்-ஒளியாய் நெஞ்சின் உள்ளே
    தோன்றும் என் சோதி நம்பீ!
வட தடமும் வைகுந்தமும்
    மதிற் துவராபதியும்
இட வகைகள் இகழ்ந்திட்டு என்பால்
    இடவகை கொண்டனையே. 10

வேயர் தங்கள் குலத்து உதித்த
    விட்டுசித்தன் மனத்தே
கோயில்கொண்ட கோவலனைக்
    கொழுங்குளிர் முகில்வண்ணனை
ஆயர்-ஏற்றை அமரர் கோவை
    அந்தணர்தம் அமுதத்தினைச்
சாயை போலப் பாட வல்லார்
    தாமும் அணுக்கர்களே. 11

பெரியாழ்வார் திருமொழி முற்றும்.

ஸ்ரீ:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர் வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார் மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்;
பாரோர் புகழப் படிந்து—ஏலோர் எம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்
பையிற் துயின்ற பரமன் அடி பாடி,
நெய் உண்ணோம், பால் உண்ணோம், நாட்காலே நீராடி,
மையிட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம்,
செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்று ஓதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்து—ஏலோர் எம்பாவாய். 2

ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்,
தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்:
நீங்காத செல்வம் நிறைந்து—ஏலோர் எம்பாவாய். 3

ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கை கரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்து ஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து,
பாழியந் தோள் உடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் : நாங்களும்
மார்கழி நீர் ஆட மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி-விளக்கைத்
தாயைக் குடல்-விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு ஆகும்; செப்பு—ஏலோர் எம்பாவாய். 5

புள்ளும் சிலம்பின காண், புள்-அரையன் கோயிலில்
வெள்ளை விளி சங்கின் பேர்-அரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சு உண்டு
கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஒச்சி
வெள்ளத்து அரவிற் துயில் அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேர்-அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து—ஏலோர் எம்பாவாய். 6

கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சு-அரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர்-அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திற—ஏலோர் எம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண்; மிக்கு உள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலம் உடைய
பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு
மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்,
ஆவா என்று ஆராய்ந்து அருள்—ஏலோர் எம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத்
தூமம் கமழத் துயில்-அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்,
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மா மாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று
நாமம் பலவும் நவின்று—ஏலோர் எம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால்; பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திற—ஏலோர் எம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றரவு-அல்குற் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்
சிற்றாதே பேசாதே, செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருள்?—ஏலோர் எம்பாவாய். 11

கனைத்து இளங் கற்று-எருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறு ஆக்கும் நற் செல்வன் தங்காய்!
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றி,
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய் ;
இனித் தான் எழுந்திராய், ஈது என்ன பேர் உறக்கம்!
அனைத்து இல்லத்தாரும் அறிந்து—ஏலோர் எம்பாவாய். 12

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக்-களம் புக்கார் ;
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று ;
புள்ளும் சிலம்பின காண் ; போது-அரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்து—ஏலோர் எம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து, ஆம்பல் வாய் கூம்பின காண் ;
செங்கற்பொடிக் கூறை வெண்பற் தவத்தவர்
தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போதந்தார் ;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடு—ஏலோர் எம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!
சில் என்று அழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன் ;
வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாய் அறிதும் ;
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக!
ஒல்லை நீ போதாய், உனக்கு என்ன வேறு உடையை ?
எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்து எண்ணிக்கொள்:
வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க
வல்லானை மாயனைப் பாடு—ஏலோர் எம்பாவாய். 15

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்,
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான் ;
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான் :
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே, அம்மா! நீ
நேய நிலைக் கதவம் நீக்கு—ஏலோர் எம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய் ;
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய் ;
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய் ;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உகந்து—ஏலோர் எம்பாவாய். 17

உந்து மத களிற்றன் ஓடாத தோள்-வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய் ;
வந்து எங்கும் கோழி அழைத்தன காண், மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்-இனங்கள் கூவின காண்,
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தாமரைக் கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய். 18

குத்து விளக்கு எரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச-சயனத்தின் மேல் ஏறிக்
கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய் ;
மைத் தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்,
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால் ;
தத்துவம், அன்று தகவு—ஏலோர் எம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்;
செப்பம் உடையாய்! திறல் உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்;
செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீர் ஆட்டு—ஏலோர் எம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீது அளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில் எழாய்;
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்
ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து—ஏலோர் எம்பாவாய். 21

அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்,
எங்கள்மேல் சாபம் இழிந்து—ஏலோர் எம்பாவாய். 22

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி, கோப்பு உடைய
சீரிய சிங்காசனத்து இருந்து, யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருள்—ஏலோர் எம்பாவாய். 23

அன்று இவ் உலகம் அளந்தாய்! அடி போற்றி!
சென்று அங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல் போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி!
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி!
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி!
என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கு—ஏலோர் எம்பாவாய். 24

ஒருத்தி மகனய்ப் பிறந்து, ஓர் இரவில்
ஒருத்தி மகனய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பு என்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறை தருதி யாகில்,
திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து—ஏலோர் எம்பாவாய். 25

மாலே! மணிவண்ணு! மார்கழி நீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்:
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும் பறையே, பல்லாண்டு இசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே;
ஆலின் இலையாய்! அருள்—ஏலோர் எம்பாவாய். 26

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன் தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம்:
நாடு புகழும் பரிசினல் நன்ருகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப் பூவே,
பாடகமே, என்று அனைய பல் கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம், அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து—ஏலோர் எம்பாவாய். 27

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்,
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம் ;
குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது ;
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறை—ஏலோர் எம்பாவாய். 28

சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் :
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது ;
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா !
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் ; உனக்கே நாம் ஆட்செய்வோம் ;
மற்றை நம் காமங்கள் மாற்று—ஏலோர் எம்பாவாய். 29

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள்-திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்குப் பறைகொண்ட-ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப் பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்
செங்கண்-திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய். 30

திருப்பாவை முற்றும்.

ஸ்ரீ:

நாச்சியார் திருமொழி

1

தைத்திங்களில் காமனை வழிபடல்

தை ஒரு திங்களும் தரை விளக்கித்
 தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து
 அழகினுக்கு அலங்கரித்து, அனங்கதேவா!
உய்யவும் ஆம்கொலோ? என்று சொல்லி
 உன்னையும் உம்பியையும் தொழுதேன்;
வெய்யது ஓர் தழல் உமிழ் சக்கரக் கை
 வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே. 1

வெள்ளை நுண் மணல்கொண்டு தெரு அணிந்து
 வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து
 முயன்று உன்னை நோற்கின்றேன், காமதேவா!
கள் அவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு
 கடல்வண்ணன் என்பது ஓர் பேர் எழுதி
புள்ளினை வாய் பிளந்தான் என்பது ஓர்
 இலக்கினிற் புக என்னை எய்கிற்றியே. 2

மத்த நன் நறுமலர் முருக்க மலர்
 கொண்டு முப்போதும் உன் அடி வணங்கித்
தத்துவம் இலி என்று நெஞ்சு எரிந்து
 வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே,
கொத்து அலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு
 கோவிந்தன் என்பது ஓர் பேர் எழுதி
வித்தகன் வேங்கட வாணன் என்னும்
 விளக்கினிற் புக என்னை விதிக்கிற்றியே. 3

சுவரில், புராண! நின் பேர் எழுதிச்
 சுறவ நற் கொடிக்களும் துரங்கங்களும்
கவரிப் பிணைக்களும் கருப்பு வில்லும்
 காட்டித் தந்தேன், கண்டாய், காமதேவா!
அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
 ஆதரித்து எழுந்த என் தட முலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
 தொழுது வைத்தேன், ஒல்லை விதிக்கிற்றியே. 4

வானிடை வாழும் அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவது ஓர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப,
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தட முலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய், மன்மதனே ! 5

உருவு உடையார் இளையார்கள் நல்லார்
ஓத்து வல்லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனி நாள்
திருந்தவே நோற்கின்றேன், காமதேவா !
கருவுடை முகில் வண்ணன் காயாவண்ணன்
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத்
திரு உடை முகத்தினிற் திருக் கண்களால்
திருந்தவே நோக்கு எனக்கு அருளு, கண்டாய். 6

காய் உடை நெல்லொடு கரும்பு அமைத்து,
கட்டி அரிசி அவல் அமைத்து,
வாய் உடை மறையவர் மந்திரத்தால்
மன்மதனே! உன்னை வணங்குகின்றேன் ;
தேயம் முன் அளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்
சாய் உடை வயிறும் என் தட முலையும்
தரணியில்-தலைப்புகழ் தரக்கிற்றியே. 7

மாசு உடை உடம்பொடு, தலை உலறி,
வாய்ப்புறம் வெளுத்து, ஒருபோதும் உண்டு,
தேசு உடைத் திறல் உடைக் காமதேவா!
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள், கண்டாய் ;
பேசுவது ஒன்று உண்டு இங்கு : எம்பெருமான் !
பெண்மையைத் தலை உடைத்து ஆக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் இப் பேறு எனக்கு அருளு, கண்டாய். 8

தொழுது முப்போதும் உன் அடி வணங்கித்
தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்;
பழுது இன்றிப் பாற்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப் பெறாவிடில், நான்
அழுது அழுது அலமந்து அம்மா வழங்க,
ஆற்றவும் அது உனக்கு உறைக்கும், கண்டாய்;
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து
ஊட்டம் இன்றித் துரந்தால் ஒக்குமே. 9

கருப்பு வில் மலர்க் கணைக் காமவேளைக்
கழலிணை பணிந்து, அங்கு ஓர் கரி அலற
மருப்பினை ஒசித்துப் புள் வாய்பிளந்த
மணிவண்ணற்கு என்னை வகுத்திடு என்று,
பொருப்பு அன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை
விருப்பு உடை இன்தமிழ் மாலை வல்லார்
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே. 10

நாச்சியார் திருமொழி

2

சிற்றில் சிதையேல் எனல்

நாமம் ஆயிரம் ஏத்த நின்ற
நாராயணா! நரனே! உன்னை
மாமி தன் மகன் ஆகப் பெற்றால்
எமக்கு வாதை தவிருமே;
காமன் போதரு காலம் என்று பங்-
குனி நாள் கடை பாரித்தோம்;
தீமை செய்யும் சிரீதரா! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 1.

இன்று முற்றும் முதுகு நோவ
இருந்து இழைத்த இச் சிற்றிலை
நன்றும் கண் உற நோக்கி நாம் கொளும்
ஆர்வந்தன்னைத் தணிகிடாய்;
அன்று பாலகன் ஆகி ஆலிலை
மேல் துயின்ற எம் ஆதியாய்!
என்றும் உன்தனக்கு எங்கள்மேல் இரக்-
கம் எழாத்து எம் பாவமே. 2

குண்டு நீர் உறை கோளரீ! மத-
யானை கோள் விடுத்தாய்! உன்னைக்
கண்டு மால் உறுவோங்களைக் கடைக்
கண்களால் இட்டு வாதியேல் ;
வண்டல் நுண் மணல் தெள்ளி யாம் வளைக்
கைகளால் சிரமப் பட்டோம் ;
தெண் திரைக்கடற் பள்ளியாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 3

பெய்யு மா முகில்போல் வண்ணா! உன்தன்
பேச்சும் செய்கையும் எங்களை
மையல் ஏற்றி மயக்க உன் முகம்
மாய மந்திரம் தான் கொலோ?
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு உன்னை
நோவ நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 4

வெள்ளை நுண் மணல் கொண்டு சிற்றில்
விசித்திரப் பட வீதி வாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
அழித்தி யாகிலும், உன்தன் மேல்
உள்ளம் ஓடி உருகலல்லால்
உரோடம் ஒன்றும் இலோம், கண்டாய் ;
கள்ள மாதவா! கேசவா! உன்
முகத்தன கண்கள் அல்லவே! 5

முற்று இலாத பிள்ளைகளோம் முலை
போந்திலாதோமை நாள்தொறும்
சிற்றில் மேல் இட்டுக் கொண்டு நீ சிறிது
உண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம் ; கடலை அடைத்து அரக்-
கர் குலங்களை முற்றவும்
செற்று இலங்கையைப் பூசல் ஆக்கிய
சேவகா! எம்மை வாதியேல். 6

பேதம் நன்கு அறிவார்களோடு இவை
பேசினால் பெரிது இன் சுவை ;
யாதும் ஒன்று அறியாத பிள்ளைக-
ளோமை நீ நலிந்து என் பயன்?
ஓத மா கடல்வண்ணா! உன் மண-
வாட்டிமாரொடு சூளறும் ;
சேது-பந்தம் திருத்தினாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 7

வட்ட வாய்ச் சிறுதூதையோடு
சிறுசுளகும் மணலும் கொண்டு
இட்டமா விளையாடுவோங்களைச்
சிற்றில் ஈடழித்து என் பயன்?
தொட்டு உதைத்து நலியேல் கண்டாய் ;
சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்!
கட்டியும் கைத்தால் இன்னாமை
அறிதியே கடல்வண்ணனே! 8

முற்றத்து ஊடு புகுந்து நின் முகம்
காட்டிப் புன்முறுவல் செய்து
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்-
கக் கடவையோ? கோவிந்தா!
முற்ற மண்ணிடம் தாவி விண் உற
நீண்டு அளந்து கொண்டாய்! எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கு இட்டக்கால் இந்தப்
பக்கம் நின்றவர் என் சொல்லார்? 9

சீதை வாயமுதம் உண்டாய்! எங்கள்
சிற்றில் நீ சிதையேல் என்று
வீதிவாய் விளையாடும் ஆயர்
சிறுமியர் மழலைச் சொல்லை
வேத வாய்த் தொழிலார்கள் வாழ் வில்லி-
புத்தூர் மன் விட்டுசித்தன்தன்
கோதை வாய்த் தமிழ் வல்லவர் குறைவு
இன்றி வைகுந்தம் சேர்வரே. 10

நாச்சியார் திருமொழி

3

துகிலைப் பணித்தருள் எனல்

கோழி அழைப்பதன் முன்னம்
குடைந்து நீராடுவான் போந்தோம்;
ஆழியஞ் செல்வன் எழுந்தான்;
அரவு-அணைமேல் பள்ளி கொண்டாய்!
ஏழைமை ஆற்றவும் பட்டோம்,
இனி என்றும் பொய்கைக்கு வாரோம்;
தோழியும் நானும் தொழுதோம்;
துகிலைப் பணித்தருளாயே. 1

இது என் புகுந்தது இங்கு? அந்தோ!
இப் பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்?
மதுவின் துழாய் முடி மாலே!
மாயனே! எங்கள் அமுதே!
விதி இன்மையால் அது மாட்டோம்;
வித்தகப் பிள்ளாய்! விரையேல்;
குதிகொண்டு அரவில் நடித்தாய்!
குருந்திடைக் கூறை பணியாய். 2

எல்லே! ஈது என்ன இளமை?
எம் அனைமார் காணில் ஒட்டார்;
பொல்லாங்கு ஈது என்று கருதாய்,
பூங்குருந்து ஏறி இருத்தி;
வில்லால் இலங்கை அழித்தாய்!
வேண்டியது எல்லாம் தருவோம்;
பல்லாரும் காணுமே போவோம்;
பட்டைப் பணித்தருளாயே. 3

பரக்க விழித்து எங்கும் நோக்கிப்
பலர் குடைந்து ஆடும் சுனையில்,
அரக்க நில்லா கண்ண நீர்கள்
அலமருகின்றவா பாராய்;
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்!
இலங்கை அழித்த பிரானே!
குரக்கு-அரசு ஆவது அறிந்தோம்;
குருந்திடைக் கூறை பணியாய். 4

காலைக் கதுவிடுகின்ற
கயலொடு வாளை விரவி;
வேலைப் பிடித்து என்னைமார்கள்
ஓட்டில் என்ன விளையாட்டோ?
கோலச் சிற்றாடை பலவும்
கொண்டு நீ ஏறியிராதே,
கோலம் கரிய பிரானே!
குருந்திடைக் கூறை பணியாய். 5

தடத்து அவிழ் தாமரைப் பொய்கைத்
தாள்கள் எம் காலைக் கதுவ,
விடத் தேள் எறிந்தாலே போல
வேதனை ஆற்றவும் பட்டோம்;
குடத்தை எடுத்து ஏறவிட்டுக்
கூத்தாட வல்ல எம் கோவே!
படிற்றை எல்லாம் தவிர்ந்து, எங்கள்
பட்டைப் பணித்தருளாயே. 6

நீரிலே நின்று அயர்க்கின்றோம்;
நீதி-அல்லாதன செய்தாய்;
ஊரகம் சாலவும் சேய்த்தால்;
ஊழி எல்லாம் உணர்வானே!
ஆர்வம் உனக்கே உடையோம்;
அம்மனைமார் காணில் ஒட்டார்;
போர விடாய் எங்கள் பட்டைப்
பூங்குருந்து ஏறியிராதே. 7

மாமிமார் மக்களே அல்லோம்;
மற்றும் இங்கு எல்லாரும் போந்தார்;
தூமலர்க் கண்கள் வளரத்
தொல்லை இராத் துயில்வானே!
சேமமேல் அன்று இது சால,
சிக்கென நாம் இது சொன்னோம்;
கோமள ஆயர் கொழுந்தே!
குருந்திடைக் கூறை பணியாய். 8

கஞ்சன் வலைவைத்த அன்று
காரிருள் எல்லிற் பிழைத்து,
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்
நின்ற இக் கன்னியரோமை ;
அஞ்ச உரப்பாள் அசோதை,
ஆணாட விட்டிட்டு இருக்கும் ;
வஞ்சகப் பேய்ச்சிபால் உண்ட
மசிமையிலீ! கூறை தாராய். 9

கன்னியரோடு எங்கள் நம்பி
கரிய பிரான் விளையாட்டைப்
பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த
புதுவையர்கோன் பட்டன் கோதை
இன்னிசையால் சொன்ன மாலை
ஈரைந்தும் வல்லவர் தாம் போய்
மன்னிய மாதவனோடு
வைகுந்தம் புக்கு இருப்பாரே. 10

நாச்சியார் திருமொழி

4

கூடல் இழைத்தல்

தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்
வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார்
பள்ளி கொள்ளும் இடத்து அடி கொட்டிடக்
கொள்ளுமாகில், நீ கூடிடு கூடலே. 1

காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
வாட்டம் இன்றி மகிழ்ந்து உறை வாமனன்
ஓட்டரா வந்து என் கைப் பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில், நீ கூடிடு கூடலே. 2

பூ மகன் புகழ் வானவர் போற்றுதற்கு
ஆமகன் அணி வாணுதல் தேவகி
மா மகன் மிகு சீர் வசுதேவர்தம்
கோமகன் வரில், கூடிடு கூடலே. 3

ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிட,
பூத்த நீள் கடம்பு ஏறிப் புகப் பாய்ந்து
வாய்த்த காளியன்மேல் நடம் ஆடிய
கூத்தனார் வரில், கூடிடு கூடலே. 4

மாட மாளிகை சூழ் மதுரைப் பதி
நாடி, நம் தெருவின் நடுவே வந்திட்டு,
ஓடை மா மத யானை உதைத்தவன்
கூடுமாகில், நீ கூடிடு கூடலே. 5

அற்றவன் மருதம் முறிய நடை
கற்றவன் கஞ்சனை வஞ்சனையிற்
செற்றவன் திகழும் மதுரைப் பதிக்
கொற்றவன் வரில், கூடிடு கூடலே. 6

அன்று இன்னாதன செய் சிசுபாலனும்
நின்ற நீள் மருதும் எருதும் புள்ளும்
வென்றி வேல் விறல்-கஞ்சனும் வீழ முன்
கொன்றவன் வரில், கூடிடு கூடலே. 7

ஆவல் அன்பு உடையார் தம் மனத்து அன்றி
மேவலன் விரை சூழ் துவராபதிக்
காவலன் கன்று மேய்த்து விளையாடும்
கோவலன் வரில், கூடிடு கூடலே. 8

கொண்ட கோலக் குறள் உருவாய்ச் சென்று
பண்டு மாவலிதன் பெரு வேள்வியில்
அண்டமும் நிலனும் அடி ஒன்றினால்
கொண்டவன் வரில், கூடிடு கூடலே. 9

பழகு நான்மறையின் பொருளாய் மதம்
ஒழுகு வாரணம் உய்ய அளித்த எம்
அழகனார் அணி ஆய்ச்சியர் சிந்தையுள்
குழகனார் வரில், கூடிடு கூடலே. 10

ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை
நீடு நின்ற நிறை புகழ் ஆய்ச்சியர்
கூடலைக் குழற் கோதை முன் கூறிய
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே. 11

நாச்சியார் திருமொழி

5

குயிற் பத்து

மன்னு பெரும்புகழ் மாதவன் மா மணி-
வண்ணன் மணி-முடி மைந்தன்
தன்னை உகந்தது காரணமாக என்
சங்கு இழக்கும் வழக்கு உண்டே?
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே!
பன்னி எப்போதும் இருந்து விரைந்து என்
பவள-வாயன் வரக் கூவாய். 1

வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக் காட்டான்,
உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும்
உயிர்ப்பெய்து கூத்தாட்டுக் காணும்;
கள்அவிழ் செண்பகப்பூ மலர் கோதிக்
களித்து இசை பாடும் குயிலே!
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது என்
வேங்கடவன் வரக் கூவாய். 2

மாதலி தேர் முன்பு கோல்கொள்ள மாயன்
இராவணன் மேல் சர-மாரி
தாய் தலை அற்று அற்று வீழத் தொடுத்த
தலைவன் வர எங்கும் காணேன்;
போது அலர் காவிற் புதுமணம் நாறப்
பொறி வண்டின் காமரம் கேட்டு உன்
காதலியோடு உடன் வாழ் குயிலே! என்
கருமாணிக்கம் வரக் கூவாய். 3

என்பு உருகி இன வேல் நெடுங் கண்கள்
இமை பொருந்தா பல நாளும்,
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பது ஓர்
தோணி பெறாது உழல்கின்றேன்;
அன்பு உடையாரைப் பிரிவு உறு நோயது
நீயும் அறிதி குயிலே!
பொன் புரை மேனிக் கருளக் கொடி உடைப்
புண்ணியனை வரக் கூவாய். 4

மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூர் உறைவான் தன்
பொன்னடி காண்பது ஓர் ஆசையினால் என்
பொரு கயற் கண்ணிணை துஞ்சா ;
இன் அடிசிலொடு பால்-அமுது ஊட்டி
எடுத்த என் கோலக் கிளியை
உன்னொடு தோழமைக் கொள்ளுவன், குயிலே!
உலகு அளந்தான் வரக் கூவாய். 5

எத் திசையும் அமரர் பணிந்து எத்தும்
இருடீகேசன் வலி செய்ய,
முத்து அன்ன வெண் முறுவல் செய்ய வாயும்
முலையும் அழகு அழிந்தேன் நான் ;
கொத்து அலர் காவில் மணித்தடம் கண்படை
கொள்ளும் இளங் குயிலே! என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில்
தலை அல்லால் கைம்மாறு இலேனே. 6

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்
புணர்வது ஓர் ஆசையினால், என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து
ஆவியை ஆகுலம் செய்யும் ;
அம் குயிலே! உனக்கு என்ன மறைந்து உறைவு?
ஆழியும் சங்கும் ஒண் தண்டும்
தங்கிய கையவனை வரக் கூவில், நீ
சாலத் தருமம் பெறுதி. 7

சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச்
சதுரன் பொருத்தம் உடையன் ;
நாங்கள் எம் இல்லிருந்து ஒட்டிய கச்சங்கம்
நானும் அவனும் அறிதும் ;
தேம் கனி மாம் பொழில் செந்தளிர் கோதும்
சிறு குயிலே! திருமாலை
ஆங்கு விரைந்து ஒல்லைக் கூகிற்றியாகில்
அவனை நான் செய்வன காணே. 8

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பது ஓர்
பாசத்து அகப்பட்டிருந்தேன் ;
பொங்கு ஒளி வண்டு இரைக்கும் பொழில் வாழ் குயி-
லே குறிக்கொண்டு இது நீ கேள் ;
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல்
பொன்வளை கொண்டு தருதல்
இங்கு உள்ள காவினில் வாழக் கருதில்
இரண்டத்து ஒன்றேல் திண்ணம் வேண்டும். 9

அன்று உலகம் அளந்தானை உகந்து
அடிமைக்கண் அவன் வலி செய்ய,
தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை
நலியும் முறைமை அறியேன் ;
என்றும் இக் காவில் இருந்திருந்து என்னைத்
ததைத்தாதே நீயும் குயிலே!
இன்று நாராயணனை வரக் கூவாயேல்,
இங்குத்தை நின்றும் துரப்பன். 10

விண் உற நீண்டு அடி தாவிய மைந்தனை
வேற்கண் மடந்தை விரும்பிக்
கண்ணுற என் கடல்-வண்ணனைக் கூவு
கருங்குயிலே! என்ற மாற்றம்
பண் உறு நான்மறையோர் புதுவைமன்னன்
பட்டர்பிரான் கோதை சொன்ன
நண் உறு வாசக மாலை வல்லார் நமோ
நாராயணாய என்பாரே. 11

நாச்சியார் திருமொழி

6

திருமணக் கனவை உரைத்தல்

வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான். 1

நாளை வதுவை-மணம் என்று நாள் இட்டு,
பாளைக் கமுகு பரிசு உடைப் பந்தற் கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனக் கண்டேன், தோழீ! நான். 2

இந்திரன் உள்ளிட்ட தேவர்-குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை மகட் பேசி, மந்திரித்து,
மந்திரக் கோடி உடுத்தி, மண-மாலை
அந்தரி சூட்டக் கனக் கண்டேன், தோழீ! நான். 3

நால்-திசைத் தீர்த்தம் கொணர்ந்து, நனி நல்கி,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்து ஏத்தி,
பூப் புனை கண்ணிப் புனிதனோடு என் தன்னைக்
காப்பு-நாண் கட்டக் கனக் கண்டேன், தோழீ! நான். 4

கதிர்-ஒளித் தீபம் கலசம் உடன் ஏந்திச்
சதிர் இள மங்கையர் தாம் வந்து எதிர்கொள்ள,
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டு, எங்கும்
அதிரப் புகுதக் கனக் கண்டேன், தோழீ! நான். 5

மத்தளம் கொட்ட, வரி-சங்கம் நின்று ஊத,
முத்து உடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனக் கண்டேன், தோழீ! நான். 6

வாய் நல்லார் நல்ல மறை ஓதி, மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து,
காய் சின மா களிறு அன்னான் என் கைப்பற்றி,
தீ வலஞ் செய்யக் கனக் கண்டேன், தோழீ! நான். 7

இம்மைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்று ஆவான்,
நம்மை உடையவன், நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனக் கண்டேன், தோழீ! நான். 8

வரிசிலை வாள் முகத்து என்னைமார் தாம் வந்திட்டு,
எரிமுகம் பாரித்து, என்னை முன்னே நிறுத்தி,
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கை வைத்துப்
பொரிமுகந்து அட்டக் கனக் கண்டேன், தோழீ! நான். 9

குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் மட்டித்து,
மங்கல வீதி வலஞ் செய்து, மா மண நீர்
அங்கு அவனோடும் உடன் சென்று, அங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான். 10

ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை
வேயர் புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதை சொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன் மக்களைப் பெற்று மகிழ்வரே. 11

நாச்சியார் திருமொழி

7

வலம்புரிக்குக் கிடைத்த பேறு

கருப்பூரம் நாறுமோ? கமலப் பூ நாறுமோ?
திருப் பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?
மருப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல், ஆழி-வெண்சங்கே! 1

கடலிற் பிறந்து, கருதாது பஞ்சசனன்
உடலில் வளர்ந்துபோய், ஊழியான் கைத்தலத்
திடரிற் குடியேறி, தீய அசுரர்
நடலைப் பட முழங்கும் தோற்றத்தாய், நற் சங்கே! 2

தட வரையின் மீதே சரற்கால சந்திரன்
இடை உவாவில் வந்து எழுந்தாலே போல், நீயும்
வட மதுரையார்-மன்னன் வாசுதேவன் கையில்
குடியேறி வீற்றிருந்தாய், கோலப் பெருஞ் சங்கே! 3

சந்திர-மண்டலம் போல் தாமோதரன் கையில்
அந்தரம் ஒன்று இன்றி ஏறி, அவன் செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே !
இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கு ஏலானே. 4

உன்னோடு உடனே ஒரு கடலில் வாழ்வாரை
இன்னார் இனையார் என்று எண்ணுவார் இல்லை காண் ;
மன் ஆகி நின்ற மதுசூதன் வாயமுதம்
பன்னாளும் உண்கின்றாய், பாஞ்சசன்னியமே! 5

போய்த் தீர்த்தம் ஆடாதே நின்ற புணர் மருதம்
சாய்த்து ஈர்த்தான் கைத்தலத்தே ஏறிக் குடிகொண்டு,
சேய்த் தீர்த்தமாய் நின்ற செங்கண் மால்தன்னுடைய
வாய்த் தீர்த்தம் பாய்ந்து ஆட வல்லாய், வலம்புரியே! 6

செங்கமல நாள்-மலர்மேல் தேன் நுகரும் அன்னம் போல்
செங்கண் கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத் தலம் ஏறி அன்ன-வசஞ் செய்யும்
சங்கு-அரையா! உன் செல்வம் சால அழகியதே! 7

உண்பது சொல்லில் உலகு அளந்தான் வாயமுதம்;
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே;
பெண் படையார் உன் மேல் பெரும் பூசல் சாற்றுகின்றார்:
பண் பல செய்கின்றாய், பாஞ்சசன்னியமே. 8

பதினாறும் ஆயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மது வாயிற் கொண்டாற்போல் மாதவன் தன் வாயமுதம்
பொதுவாக உண்பதனைப் புக்கு நீ உண்டக்கால்,
சிதையாரோ உன்னோடு? செல்வப் பெருஞ்சங்கே! 9

பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனோடும்
வாய்ந்த பெருஞ் சுற்றம் ஆக்கிய வண்புதுவை
ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான் கோதை தமிழ் ஈரைந்தும்
ஆய்ந்து ஏத்த வல்லார் அவரும் அணுக்கரே. 10

நாச்சியார் திருமொழி

8

மேகவிடு தூது

விண் நீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!
தெண் நீர் பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே?
கண்ணீர்கள் முலைக்குவட்டிற் றுளி சோரச் சோர்வேனைப்
பெண் நீர்மை ஈடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே? 1

மா முத்தநிதி சொரியும் மா முகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட தாளாளன் வார்த்தை என்னே?
காமத்தீ உள்புகுந்து கதுவப்பட்டு, இடைக் கங்குல்
ஏமத்து ஓர் தென்றலுக்கு இங்கு இலக்காய் நான் இருப்பேனே? 2

ஒளி வண்ணம் வளை சிந்தை உறக்கத்தோடு இவை எல்லாம்
எளிமையால் இட்டு என்னை ஈடழியப் போயினவால் ;
குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி
அளியத்த மேகங்காள்! ஆவி காத்து இருப்பேனே? 3

மின் ஆகத்து எழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன் ஆகத் திருமங்கை தங்கிய சீர் மார்வற்கு
என் ஆகத்து இளங்கொங்கை விரும்பித் தாம் நாள்தோறும்
பொன் ஆகம் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே. 4

வான் கொண்டு கிளர்ந்து எழுந்த மா முகில்காள்! வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் திரண்டு ஏறிப் பொழிவீர்காள்!
ஊன் கொண்ட வள்-உகிரால் இரணியனை உடல் இடந்தான்
தான் கொண்ட சரி-வளைகள் தருமாகிற் சாற்றுமினே. 5

சலங் கொண்டு கிளர்ந்து எழுந்த தண் முகில்காள்! மாவலியை
நிலங் கொண்டான் வேங்கடத்தே நிரந்து ஏறிப் பொழிவீர்காள்!
உலங்கு உண்ட விளங்கனி போல் உள் மெலியப் புகுந்து என்னை
நலங் கொண்ட நாரணற்கு என் நடலை-நோய் செப்புமினே. 6

சங்க மா கடல் கடைந்தான் தண் முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண் மால் சேவடிக் கீழ் அடி-வீழ்ச்சி விண்ணப்பம் :
கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பு அழியப் புகுந்து ஒருநாள்
தங்குமேல், என் ஆவி தங்கும் என்று உரையீரே. 7

கார் காலத்து எழுகின்ற கார்முகில்காள்! வேங்கடத்துப்
போர் காலத்து எழுந்தருளிப் பொருதவனார் பேர் சொல்லி,
நீர் காலத்து எருக்கின் அம் பழ இலை போல், வீழ்வேனை
வார் காலத்து ஒருநாள் தம் வாசகம் தந்தருளாரே. 8

மத யானை போல் எழுந்த மா முகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பு-அணையான் வார்த்தை என்னே!
கதி என்றும் தான் ஆவான் கருதாது ஓர் பெண்-கொடியை
வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே? 9

நாகத்தின் அணையானை நன்னுதலாள் நயந்து உரை செய்
மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை தமிழ்
ஆகத்து வைத்து உரைப்பார் அவர் அடியார் ஆகுவரே. 10

நாச்சியார் திருமொழி

9

திருமாலிருஞ்சோலைப் பிரானை வழிபடல்

சிந்துரச் செம்பொடிப் போல் திருமாலிருஞ்சோலை எங்கும்
இந்திர கோபங்களே எழுந்தும் பரந்திட்டனவால் ;
மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட
சுந்தரத்தோளுடையான் சுழலையினின்று உய்துங் கொலோ? 1

போர்க்களிறு பொரும் மாலிருஞ்சோலை அம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவள நகை காட்டுகின்ற ;
கார்க்கொள் பிடாக்கள் நின்று கழறிச் சிரிக்கத் தரியேன் ;
ஆர்க்கு இடுகோ? தோழீ! அவன் தார் செய்த பூசலையே. 2

கருவிளை ஒண்மலர்காள் ! காயா மலர்காள்! திருமால்
உரு-ஒளி காட்டுகின்றீர், எனக்கு உய் வழக்கு ஒன்று உரையீர் ;
திரு விளையாடு திண் தோள் திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளை இற் புகுந்து வந்திபற்றும் வழக்கு உளதே? 3

பைம்பொழில் வாழ் குயில்காள்! மயில்காள்! ஒண் கருவிளைகாள்!
வம்பக் களங்கனிகாள்! வண்ணப் பூவை நறுமலர்காள்!
ஐம் பெரும் பாதகர்காள்! அணி மாலிருஞ்சோலை நின்ற
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செய்வதே? 4

துங்க மலர்ப் பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப் போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள்! தொகு பூஞ்சுனைகாள்! சுனையிற்
தங்கு செந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண் சாற்றுமினே. 5

நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன் ;
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன் ;
ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங் கொலோ? 6

இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில், நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன் ;
தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே. 7

காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மைகொலோ?
சோலைமலைப் பெருமான் துவாராபதி எம்பெருமான்
ஆலின் இலைப் பெருமான் அவன் வார்த்தை உரைக்கின்றதே. 8

கோங்கு அலரும் பொழில் மாலிருஞ்சோலையிற் கொன்றைகள்மேல்
தூங்கு பொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்;
பூங்கொள் திருமுகத்து மடுத்து ஊதிய சங்கு ஒலியும்
சார்ங்க வில் நாண்-ஒலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ? 9

சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது
வந்திழியும் சிலம்பாறு உடை மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனைச் சுரும்பு ஆர் குழற் கோதை தொகுத்து உரைத்த
செந்தமிழ் பத்தும் வல்லார் திருமாலடி சேர்வர்களே. 10

நாச்சியார் திருமொழி

10

காதல்-நோய் செய்த பரிசு

கார்க்கோடற் பூக்காள்! கார்க்கடல் வண்ணன் என்மேல் உம்மைப்
போர்க் கோலம் செய்து போர விடுத்தவன் எங்கு உற்றான்?
ஆர்க்கோ இனி நாம் பூசல் இடுவது? அணி துழாய்த்
தார்க்கு ஓடும் நெஞ்சந் தன்னைப் படைக்க வல்லேன், அந்தோ! 1

மேல்-தோன்றிப் பூக்காள்! மேல்-உலகங்களின் மீது போய்
மேல் தோன்றும் சோதி வேத முதல்வர் வலங்கையில்
மேல் தோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போலச் சுடாது, எம்மை
மாற்றாளைப் பட்டவர் கூட்டத்து வைத்துக்கொள்கிற்றிரே? 2

கோவை மணாட்டி! நீ உன் கொழுங்கனி கொண்டு எம்மை
ஆவி தொலைவியேல்; வாயழகர் தம்மை அஞ்சுதும்;
பாவியேன் தோன்றிப் பாம்பு-அணையார்க்கும் தம் பாம்புபோல்
நாவும் இரண்டு உள ஆய்த்து நாணிலியேனுக்கே. 3

முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல்; ஆழி நங்காய்! உன் அடைக்கலம்;
கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய் அன்றே? 4

பாடும் குயில்காள்! ஈது என்ன பாடல்? நல் வேங்கட-
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின் ;
ஆடும் கருளக் கொடி உடையார் வந்து அருள்செய்து
கூடுவராயிடில் கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே. 5

கண மா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணி மா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு அடி வீழ்கின்றேன் ;
பணம் ஆடு அரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மை வைத்த பரிசு இது காண்மினே. 6

நடம் ஆடித் தோகை விரிக்கின்ற மா மயில்காள்! உம்மை
நடம்-ஆட்டம் காணப் பாவியேன் நான் ஓர் முதல் இலேன் ;
குடம் ஆடு கூத்தன் கோவிந்தன் கோ-மிறை செய்து எம்மை
உடை மாடு கொண்டான் உங்களுக்கு இனி ஒன்று போதுமே? 7

மழையே! மழையே! மண் புறம் பூசி உள்ளாய் நின்று
மெழுகு ஊற்றினாற் போல் ஊற்று நல் வேங்கடத்து உள் நின்ற
அழகப்பிரானார் தம்மை என் நெஞ்சத்து அகப்படத்
தழுவ நின்று என்னைத் ததைத்துக்கொண்டு ஊற்றவும் வல்லையே ? 8

கடலே! கடலே! உன்னைக் கடைந்து கலக்கு-உறுத்து
உடலுள் புகுந்துநின்று ஊறல் அறுத்தவற்கு என்னையும்
உடலுள் புகுந்துநின்று ஊறல் அறுக்கின்ற மாயற்கு என்
நடலைகள் எல்லாம் நாகணைக்கே சென்று உரைத்தியே? 9

நல்ல என் தோழி! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் ; சிறு மானிடவர் நாம் செய்வதென்?
வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே. 10

நாச்சியார் திருமொழி

11

திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்

தாம் உகக்கும் தம் கையிற் சங்கமே போலாவோ
யாம் உகக்கும் எம் கையில் சங்கமும்? ஏந்திழையீர்!
தீ முகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்
ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே! 1

எழில் உடைய அம்மனைமீர்! என் அரங்கத்து இன்னமுதர்,
குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில்
எழு கமலப் பூ அழகர் : எம்மானார் என்னுடைய
கழல் வளையைத் தாமும் கழல் வளையே ஆக்கினரே. 2

பொங்கு ஓதம் சூழ்ந்த புவனியும் விண்-உலகும்
அங்கு ஆதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்
செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார்
எம் கோல்-வளையால் இடர் தீர்வர் ஆகாதே? 3

மச்சு அணி மாட மதில் அரங்கர் வாமனனார்
பச்சைப் பசுந் தேவர் தாம் பண்டு நீர் ஏற்ற
பிச்சைக் குறையாகி, என்னுடைய பெய்வளை மேல்
இச்சை உடையரேல், இத் தெருவே போதாரே? 4

பொல்லாக் குறள் உருவாய்ப் பொற் கையில் நீர் ஏற்று
எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிர் அரங்க நாகணையான்
இல்லாதோம் கைப்பொருளும் எய்துவான் ஒத்து உளனே. 5

கைப் பொருள்கள் முன்னமே கைக்கொண்டார், காவிரி நீர்
செய்ப் புரள ஓடும் திருவரங்கச் செல்வனார் :
எப் பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்[ரே.
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டா

உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்துப்
பெண் ஆக்கை யாப்புண்டு தாம் உற்ற பேது எல்லாம்
திண்ணார் மதில் சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே. 7

பாசி தூர்த்துக் கிடந்த பார்-மகட்குப் பண்டு ஒரு நாள்
மாசு உடம்பில் நீர் வாரா மானம் இலாப் பன்றி ஆம்
தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே. 8

கண்ணாலம் கோடித்துக் கன்னி தன்னைக் கைப்பிடிப்பான்
திண் ஆர்ந்து இருந்த சிசுபாலன் தேசு அழிந்து
அண்ணாந்து இருக்கவே, ஆங்கு அவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணும் ஊர் பேரும் அரங்கமே. 9

செம்மை உடைய திருவரங்கர் தாம் பணித்த
மெய்ம்மைப் பெரு வார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர் :
தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும் சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர் இனியே? 10

நாச்சியார் திருமொழி

12

கண்ணன் இருக்கும் இடத்துக் கொண்டுசெல்க எனல்

மற்று இருந்தீர்கட்கு அறியலாகா
மாதவன் என்பது ஓர் அன்புதன்னை
உற்று இருந்தேனுக்கு உரைப்பது எல்லாம்
ஊமையரோடு செவிடர் வார்த்தை ;
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப்
பேர்த்து ஒரு தாய் இல் வளர்ந்த நம்பி
மற் பொருந்தாமற் களம் அடைந்த
மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின். 1

நாணி இனி ஓர் கருமம் இல்லை,
நால்-அயலாரும் அறிந்தொழிந்தார் ;
பாணியாது என்னை மருந்து செய்து
பண்டு பண்டு ஆக்க உறுதிராகில்,
மாணி உருவாய் உலகு அளந்த
மாயனைக் காணிற் தலைமறியும் ;
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்,
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின். 2

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்
தனிவழி போயினாள் என்னும் சொல்லு
வந்த பின்னைப் பழி காப்பு அரிது ;
மாயவன் வந்து உருக் காட்டுகின்றான் ;
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள்-இருட்கண் என்னை உய்த்திடுமின். 3

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்
அவன்முகத்து அன்றி விழியேன் என்று
செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச்
சிறு மானிடவரைக் காணில் நாணும்;
கொங்கைத்தலம் இவை நோக்கிக் காணீர்,
கோவிந்தனுக்கு அல்லால் வாயில் போகா;
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்,
யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின். 4

ஆர்க்கும் என் நோய் இது அறியலாகாது;
அம்மனைமீர்! துழதிப் படாதே,
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன்
கைகண்ட யோகம் தடவத் தீரும்;
நீர்க் கரை நின்ற கடம்பை ஏறிக்
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து
போர்க்களமாக நிருத்தம் செய்த
பொய்கைக் கரைக்கு என்னை உய்த்திடுமின். 5

கார்த் தண் முகிலும் கருவிளையும்
காயா மலரும் கமலப் பூவும்
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு
இருடீகேசன் பக்கல் போகே என்று;
வேர்த்துப் பசித்து வயிறு அசைந்து
வேண்டு அடிசில் உண்ணும் போது ஈது என்று
பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும்
பத்தவிலோசனத்து உய்த்திடுமின். 6

வண்ணம்-திரிவும் மனம்-குழைவும்
மானம் இலாமையும் வாய்வெளுப்பும்
உண்ணலுறாமையும் உள்மெலிவும்
ஓத நீர் வண்ணன் என்பான் ஒருவன்
தண்ணந் துழாய் என்னும் மாலை கொண்டு
சூட்டத் தணியும்; பிலம்பன்தன்னைப்
பண் அழியப் பலதேவன் வென்ற
பாண்டிவடத்து என்னை உய்த்திடுமின். 7

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்,
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்,
பற்றி உரலிடை யாப்பும் உண்டான்,
பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக் கொலோ?
கற்றன பேசி வசவு உணாதே,
காலிகள் உய்ய மழை தடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின். 8

கூட்டில் இருந்து கிளி எப்போதும்
கோவிந்தா! கோவிந்தா! என்று அழைக்கும்;
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
உலகு-அளந்தான் என்று உயரக் கூவும்;
நாட்டில் தலைப்பழி எய்தி உங்கள்
நன்மை இழந்து தலையிடாதே,
சூட்டு உயர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும்
துவராபதிக்கு என்னை உய்த்திடுமின். 9

மன்னு மதுரை தொடக்கமாக
வண் துவராபதிதன் அளவும்
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித்
தாழ்குழலாள் துணிந்த துணிவை,
பொன் இயல் மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை
ஏத்தவல்லார்க்கு இடம் வைகுந்தமே. 10

நாச்சியார் திருமொழி

13

கண்ணன் உகந்த பொருள்கொண்டு காதல்நோய் தணிமின் எனல்

கண்ணன் என்னும் கருந்தெய்வம்
காட்சிப் பழகிக் கிடப்பேனைப்
புண்ணிற் புளிப் பெய்தாற் போலப்
புறம் நின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அரையிற் பீதக
வண்ண ஆடை கொண்டு என்னை
வாட்டம் தணிய வீசீரே. 1

பால்-ஆலிலையில் துயில்.கொண்ட
　　பரமன் வலைப்பட்டு இருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற் போல்
　　வேண்டிற்று எல்லாம் பேசாதே,
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
　　குடந்தைக் கிடந்த குடம்-ஆடி
நீலார் தண்ணந் துழாய் கொண்டு என்
　　நெறி மென் குழல்மேல் சூட்டீரே. 2

கஞ்சைக் காய்ந்த கருவில்லி
　　கடைக்கண் என்னும் சிறைக்கோலால்
நெஞ்சு ஊடுருவ வேவுண்டு
　　நிலையும் தளர்ந்து நைவேனை
அஞ்சேல் என்னான்; அவன் ஒருவன்
　　அவன் மார்வு அணிந்த வனமாலை
வஞ்சியாதே தருமாகில்
　　மார்விற் கொணர்ந்து புரட்டீரே. 3

ஆரே உலகத்து ஆற்றுவார்?
　　ஆயர்-பாடி கவர்ந்து உண்ணும்
காரேறு உழக்க உழக்குண்டு
　　தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை
ஆராவமுதம் அனையான் தன்
　　அமுத வாயில் ஊறிய
நீர்தான் கொணர்ந்து புலராமே
　　பருக்கி இளைப்பை நீக்கீரே. 4

அழிலும் தொழிலும் உருக் காட்டான்;
　　அஞ்சேல் என்னான்; அவன் ஒருவன்
தழுவி முழுசிப் புகுந்து என்னைச்
　　சுற்றிச் சுழன்று போகானால்:
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே
　　நெடுமால் ஊதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர் கொண்டு
　　குளிர முகத்துத் தடவீரே. 5

நடை ஒன்று இல்லா உலகத்து
நந்தகோபன் மகன் என்னும்
கொடிய கடிய திருமாலால்
குளப்புக்கூறு கொளப்பட்டு
புடையும் பெயரகில்லேன் நான்;
போழ்க்கன் மிதித்த அடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்
போகா உயிர் என் உடம்பையே. 6

வெற்றிக் கருளக் கொடியான்தன்
மீமீது ஆடா உலகத்து
வெற்ற வெறிதே பெற்ற தாய்
வேம்பே ஆக வளர்த்தாளே;
குற்றம் அற்ற முலைதன்னைக்
குமரன் கோலப் பணைத்தோளோடு
அற்ற குற்றம் அவை தீர
அணைய அமுக்கிக் கட்டீரே. 7

உள்ளே உருகி நைவேனை
உளளோ இலளோ என்னாதை
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த்தனனைக் கண்டக்கால்,
கொள்ளும் பயன் ஒன்று இல்லாத
கொங்கைதன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில்
எறிந்து என் அழலைத் தீர்வேனே. 8

கொம்மை முலைகள் இடர் தீரக்
கோவிந்தற்கு ஓர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே
இனிப் போய்ச் செய்யும் தவம்தான் என்?
செம்மை உடைய திருமார்வில்
சேர்த்தானேனும், ஒரு ஞான்று
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி
விடைதான் தருமேல் மிக நன்றே. 9

அல்லல் விளைத்த பெருமானை ஆயர்பாடிக்கு அணி-விளக்கை
வில்லி புதுவைநகர் நம்பி விட்டுசித்தன் வியன் கோதை
வில்லைத் தொலைத்த புருவத்தாள் வேட்கை உற்று மிக விரும்பும்
சொல்லைத் துதிக்க வல்லார்கள் துன்பக் கடலுள் துவளாரே. 10

நாச்சியார் திருமொழி

14

விருந்தாவனத்துக் கண்ணனைக் கண்டமை

பட்டி மேய்ந்து ஓர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க்-கன்றாய்
இட்டீறு இட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே?
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீர் ஊட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 1

அனுங்க என்னைப் பிரிவு செய்து ஆயர்பாடி கவர்ந்து உண்ணும்
குணுங்கு நாறிக் குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே?
கணங்களோடு மின் மேகம் கலந்தாற் போல, வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 2

மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே?
மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை-சிறுவன் சிறகு என்னும்
மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 3

கார்த் தண் கமலக் கண் என்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே?
போர்த்த முத்தின் குப்பாயப் புகர் மால் யானைக் கன்றே போல்
வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 4

மாதவன் என் மணியினை வலையிற் பிழைத்த பன்றி போல்
ஏதும் ஒன்றும் கொளத் தாரா ஈசன் தன்னைக் கண்டீரே?
பீதக-ஆடை உடை தாழ, பெருங் கார்மேகக் கன்றே போல்,
வீதி ஆர வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 5

தருமம் அறியாக் குறும்பனைத் தன் கைச் சார்ங்கம் அதுவே போல்
புருவ வட்டம் அழகிய பொருத்தம் இலியைக் கண்டீரே?
உருவு கரிதாய் முகம் செய்தாய் உதயப் பருப்பதத்தின்மேல்
விரியும் கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே. 6

பொருத்தம் உடைய நம்பியைப் புறம்போல் உள்ளும் கரியானைக்
கருத்தைப் பிழைத்து நின்ற அக் கரு மா முகிலைக் கண்டீரே?
அருத்தித் தாரா-கணங்களால் ஆரப் பெருகு வானம் போல்,
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 7

வெளிய சங்கு ஒன்று உடையானைப் பீதக-ஆடை உடையானை
அளி நன்கு உடைய திருமாலை ஆழியானைக் கண்டீரே? [மேல்
களி வண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள்
மிளிர நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 8

நாட்டைப் படை என்று அயன் முதலாத் தந்த நளிர் மா மலர் உந்தி
வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்தன்னைக் கண்டீரே?
காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளும் உடன் மடிய
வேட்டையாடி வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 9

பருந்தாள்-களிற்றுக்கு அருள்செய்த பரமன்தன்னைப் பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை விட்டுசித்தன் கோதை சொல்
மருந்தாம் என்று தம் மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வார்கள்
பெருந்தாள் உடைய பிரான் அடிக்கீழ்ப் பிரியாது என்றும் இருப்பாரே. 10

நாச்சியார் திருமொழி முற்றும்.

ஸ்ரீ:

குலசேகரர் அருளிச்செய்த

பெருமாள் திருமொழி

1

அரங்கப்பெருமானை என்று கண்டு மகிழ்வேன் எனல்

இருள் இரியச் சுடர்-மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவு-அரசப் பெருஞ் சோதி அனந்தன் என்னும்
அணி விளங்கும் உயர் வெள்ளை-அணையை மேவித்
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடி வருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு என்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே! 1

வாய் ஓர் ஈரைஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்
மேன்மேலும் மிக எங்கும் பரந்ததன் கீழ்
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலை,
கடி-அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
மாயோனை மணத்தூணே பற்றி நின்று என்
வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே! 2

எம் மான்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்து ஏத்தி ஈரிரண்டு முகமும் கொண்டு
எம்மாடும் எழிற்கண்கள் எட்டினோடும்
தொழுது ஏத்தி இனிது இறைஞ்ச நின்ற செம்பொன்-
அம்மான்தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற
அணி-அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
அம்மான்தன் அடியிணைக் கீழ் அலர்கள் இட்டு அங்கு
அடியவரோடு என்றுகொலோ அணுகும் நாளே! 3

மாவினை வாய் பிளந்து உகந்த மாலை, வேலை
வண்ணனை, என் கண்ணனை, வன் குன்றம் ஏந்தி
ஆவினை அன்று உயக் கொண்ட ஆயர்-ஏற்றை,
அமரர்கள் தம் தலைவனை, அந் தமிழின் இன்பப்
பாவினை, அவ் வடமொழியை, பற்று-அற்றார்கள்
பயில் அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
கோவினை, நா உற வழுத்தி என் தன் கைகள்
கொய்ம்மலர் தூய் என்றுகொலோ கூப்பும் நாளே! 4

இணையில்லா இன்னிசை யாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த,
துணையில்லாத் தொல் மறை நூல்-தோத்திரத்தால்
தொல் மலர்க்கண் அயன் வணங்கி ஓவாது ஏத்த,
மணி மாட மாளிகைகள் மல்கு செல்வ
மதில்-அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
மணிவண்ணன் அம்மானைக் கண்டுகொண்டு என்
மலர்ச் சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே! 5

அளி மலர்மேல் அயன் அரன் இந்திரனோடு ஏனை
அமரர்கள்தம் குழுவும் அரம்பையரும் மற்றும்
தெளி மதி சேர் முனிவர்கள்தம் குழுவும் உந்தித்
திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும்
களி மலர் சேர் பொழில்-அரங்கத்து உரகம் ஏறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்
ஒளி மதி சேர் திருமுகமும் கண்டுகொண்டு என்
உள்ளம் மிக என்றுகொலோ உருகும் நாளே! 6

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்சம் மாற்றி
வன் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்
துறந்து இரு முப்பொழுது ஏத்தி எல்லை இல்லாத்
தொல் நெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறம் திகழும் மனத்தவர்தம் கதியை, பொன்னி
அணி அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
நிறம் திகழும் மாயோனை, கண்டு என் கண்கள்
நீர் மல்க என்றுகொலோ நிற்கும் நாளே! 7

கோல் ஆர்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற ஒள் வாள்
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக்
கடும்பறவை இவை அனைத்தும் புறஞ் சூழ் காப்ப,
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
மாலோனைக் கண்டு இன்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே! 8

தூராத மனக்காதல்-தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக் களிப்போடு அழுத கண்ணீர்
மழை சோர நினைந்து உருகி ஏத்தி நாளும்
சீர் ஆர்ந்த முழவு-ஓசை பரவை காட்டும்
திருவரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே! 9

வன் பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய,
மண் உய்ய, மண்-உலகில் மனிசர் உய்ய,
துன்பம் மிகு துயர் அகல அயர்வு ஒன்று இல்லாச்
சுகம் வளர அகம் மகிழும் தொண்டர் வாழ,
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
அணி-அரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்ப மிகு பெருங் குழுவு கண்டு யானும்
இசைந்து உடனே என்றுகொலோ இருக்கும் நாளே! 10

திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவுபாட்டுத்
திருவரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
கடல் விளங்கு கருமேனி அம்மான்தன்னைக்
கண்ணாரக் கண்டு உகக்கும் காதல்தன்னால்
குடை விளங்கு விறல்-தானைக் கொற்ற ஒள் வாள்
கூடலர்கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த
நடை விளங்கு தமிழ்-மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ் நாரணன்-அடிக்கீழ் நண்ணுவாரே. 11

பெருமாள் திருமொழி

2

அரங்கநாதனது அடியார்க்கு அடியேன்

தேட்டு அருந் திறல்-தேனினைத் தென்-
அரங்கனைத் திருமாது வாழ்
வாட்டம் இல் வனமாலை மார்வனை
வாழ்த்தி மால் கொள் சிந்தையராய்
ஆட்டம் மேவி அலந்து அழைத்து அயர்வு-
எய்தும் மெய்யடியார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேல், அது
காணும் கண் பயன் ஆவதே. 1

தோடு உலா மலர்-மங்கை தோளிணை
தோய்ந்ததும் சுடர்-வாளியால்
நீடு மா மரம் செற்றதும் நிரை
மேய்த்ததும் இவையே நினைந்து
ஆடிப் பாடி அரங்க! ஓ! என்று
அழைக்கும் தொண்டர் அடிப்-பொடி
ஆட நாம் பெறில், கங்கை நீர் குடைந்து
ஆடும் வேட்கை என் ஆவதே? 2

ஏறு அடர்த்ததும் ஏனமாய் நிலம்
கீண்டதும் முன் இராமனாய்
மாறு அடர்த்ததும் மண் அளந்ததும்
சொல்லிப் பாடி வண் பொன்னிப் பேர்-
ஆறு போல் வரும் கண்ண நீர் கொண்டு
அரங்கன் கோயில்-திருமுற்றம்
சேறு செய் தொண்டர் சேவடிச் செழுஞ்
சேறு என் சென்னிக்கு அணிவனே. 3

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும் உடன்று ஆய்ச்சி கண்டு
ஆர்த்த தோள் உடை எம்பிரான் என்
அரங்கனுக்கு அடியார்களாய்
நாத் தழும்பு எழ நாரணா! என்று
அழைத்து மெய் தழும்பத் தொழுது
ஏத்தி இன்பு உறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே. 4

பொய் சிலைக் குரல் ஏற்று-எருத்தம்
இறுத்துப் போர்-அரவு ஈர்த்த கோன்
செய் சிலைச் சுடர் சூழ் ஒளித் திண்ண
மா மதில்-தென் அரங்கனும்
மெய் சிலைக் கருமேகம் ஒன்று தம்
நெஞ்சில் நின்று திகழப் போய்
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து
என் மனம் மெய் சிலிர்க்குமே. 5

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம்
ஆன வானவர் தம்பிரான்
பாத மா மலர் சூடும் பத்தி-
இலாத பாவிகள் உய்ந்திடத்
தீதில் நன்னெறி காட்டி எங்கும்
திரிந்து அரங்கன் எம்மானுக்கே
காதல் செய் தொண்டர்க்கு எப் பிறப்பிலும்
காதல் செய்யும் என் நெஞ்சமே. 6

கார்-இனம் புரை மேனி நற் கதிர்-
முத்த வெண்ணகைச் செய்ய வாய்
ஆர-மார்வன் அரங்கன் என்னும்
அரும் பெருஞ்சுடர் ஒன்றினைச்
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து
கசிந்து இழிந்த கண்ணீர்களால்
வார நிற்பவர் தாளிணைக்கு ஒரு
வாரம் ஆகும் என் நெஞ்சமே. 7

மாலை உற்ற கடற் கிடந்தவன்
வண்டு கிண்டு நறுந்துழாய்
மாலை உற்ற வரைப் பெருந் திரு-
மார்வனை மலர்க் கண்ணனை
மாலை உற்று எழுந்து ஆடிப் பாடித்
திரிந்து அரங்கன் எம்மானுக்கே
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு
மாலை உற்றது என் நெஞ்சமே. 8

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப எங்கி இளைத்து நின்று
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டு எழுந்து
ஆடிப் பாடி இறைஞ்சி என்
அத்தன் அச்சன் அரங்கனுக்கு அடி-
யார்கள் ஆகி அவனுக்கே
பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள் ;
மற்றையார் முற்றும் பித்தரே. 9

அல்லி மா மலர்-மங்கை நாதன்
அரங்கன் மெய்யடியார்கள்தம்
எல்லை இல் அடிமைத் திறத்தினில்
என்றும் மேவு மனத்தனும்
கொல்லி-காவலன் கூடல்-நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்
சொல்லின் இன்தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்கள் ஆவரே. 10

பெருமாள் திருமொழி

3

அழகிய மணவாளன்பால் பித்தன் எனல்

மெய் இல் வாழ்க்கையை மெய் எனக் கொள்ளும் இவ்
வையம்தன்னொடும் கூடுவது இல்லை யான் ;
ஐயனே! அரங்கா! என்று அழைக்கின்றேன் ;
மையல் கொண்டொழிந்தேன் என்தன் மாலுக்கே. 1

நூலின் நேர்-இடையார் திறத்தே நிற்கும்
ஞாலம்தன்னொடும் கூடுவது இல்லை யான் ;
ஆலியா, அழையா, அரங்கா! என்று
மால் எழுந்தொழிந்தேன் என்தன் மாலுக்கே. 2

மாரனார் வரி வெஞ் சிலைக்கு ஆட்செய்யும்
பாரினாரொடும் கூடுவது இல்லை யான் ;
ஆர-மார்வன் அரங்கன் அனந்தன் நல்
நாரணன் நரகாந்தகன் பித்தனே. 3

உண்டியே உடையே உகந்து ஓடும் இம்
மண்டலத்தொடும் கூடுவது இல்லை யான்;
அண்டவாணன் அரங்கன் வன் பேய்-முலை
உண்ட வாயன்தன் உன்மத்தன் காண்மினே. 4

நீதில் நன்னெறி நிற்க, அல்லாது செய்
நீதியாரொடும் கூடுவது இல்லை யான்;
ஆதி ஆயன் அரங்கன் அந் தாமரைப்
பேதை மா மணவாளன்தன் பித்தனே. 5

எம் பரத்தர் அல்லாரொடும் கூடலன்;
உம்பர் வாழ்வை ஒன்றாகக் கருதலன்;
தம்பிரான் அமரர்க்கு அரங்க நகர்
எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே. 6

எத் திறத்திலும் யாரொடும் கூடும் அச்
சித்தந்தன்னைத் தவிர்த்தனன் செங்கண் மால்;
அத்தனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்;
பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே. 7

பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர்
பேயனே எவர்க்கும்; இது பேசி என்!
ஆயனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்;
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே. 8

அங்கை-ஆழி அரங்கன் அடியிணை
தங்கு சிந்தைத் தனிப் பெரும் பித்தனாய்க்
கொங்கர்கோன் குலசேகரன் சொன்ன சொல்
இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்று இல்லையே. 9

பெருமாள் திருமொழி

4

திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதியது எனல்

ஊன் ஏறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்,
ஆனேறு ஏழ் வென்றான் அடிமைத் திறம் அல்லால்;
கூன் ஏறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே. 1

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற் சூழ
வான் ஆளும் செல்வமும் மண்-அரசும் யான் வேண்டேன் ;
தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே. 2

பின் இட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகல் அரிய வைகுந்த நீள் வாசல்,
மின் வட்டச் சுடர்-ஆழி வேங்கடக்கோன் தான் உமிழும்
பொன்-வட்டில் பிடித்து உடனே புகப் பெறுவேன் ஆவேனே. 3

ஒண் பவள வேலை உலவு தண் பாற்கடலுள்
கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு,
பண் பகரும் வண்டினங்கள் பண் பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திரு உடையேன் ஆவேனே. 4

கம்ப மத யானைக் கழுத்தகத்தின்மேல் இருந்து
இன்பு அமரும் செல்வமும் இவ் அரசும் யான் வேண்டேன் ;
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவம் உடையேன் ஆவேனே. 5

மின் அனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலொடும் ஆடல் அவை ஆதரியேன் ;
தென்ன என வண்டினங்கள் பண் பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடு ஆம் அருந்தவத்தேன் ஆவேனே. 6

வான் ஆளும் மா மதி போல் வெண் குடைக்கீழ் மன்னவர்தம்
கோன் ஆகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வு அறியேன் ;
தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்து உடையேன் ஆவேனே. 7

பிறை ஏறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய பெரு வேள்விக் குறை முடிப்பான் மறை ஆனான் ;
வெறியார் தண் சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலை உடையேன் ஆவேனே. 8

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே. 9

உம்பர் உலகு ஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன் ;
செம் பவள-வாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே. 10

மன்னிய தண் சாரல் வட வேங்கடத்தான்தன்
பொன் இயலும் சேவடிகள் காண்பான் புரிந்து இறைஞ்சிக்
கொல் நவிலும் கூர்வேற் குலசேகரன் சொன்ன
பன்னிய நூற் தமிழ்-வல்லார் பாங்காய பத்தர்களே. 11

பெருமாள் திருமொழி

5

வித்துவக்கோட்டு அம்மானையே வேண்டி நிற்றல்

தரு துயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண் இல்லை ;
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ் வித்துவக்கோட்டு அம்மானே!
அரி சினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்று அவள்தன்
அருள் நினைந்தே அழும் குழவி ; அதுவே போன்று இருந்தேனே. 1

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்,
விண் தோய் மதில் புடை சூழ் வித்துவக்கோட்டு அம்மா! நீ
கொண்டாளாயாகிலும் உன் குரைகழலே கூறுவனே. 2

மீன் நோக்கும் நீள் வயல் சூழ் வித்துவக்கோட்டு அம்மா! என்-
பால் நோக்காயாகிலும் உன் பற்று அல்லால் பற்று இலேன் ;
தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்-வேந்தன்
கோல் நோக்கி வாழும் குடி போன்று இருந்தேனே. 3

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல், மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டு அம்மா! நீ,
ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே. 4

வெங்கண்-திண்களிறு அடர்த்தாய்! வித்துவக்கோட்டு அம்மானே!
எங்குப் போய் உய்கேன்? உன் இணையடியே அடையல் அல்லால் ;
எங்கும் போய்க் கரை காணாது எறிகடல்வாய் மீண்டு ஏறும்
வங்கத்தின் கூம்பு ஏறும் மாப் பறவை போன்றேனே. 5

செந்தழலே வந்து அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம் சேர் வெங்கதிரோற்கு அல்லால் அலராவால்;
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டு அம்மா! உன்
அந்தமில் சீர்க்கு அல்லால் அகம் குழைய மாட்டேனே. 6

எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்து எழுந்த மா முகிலே பார்த்திருக்கும்; மற்று அவை போல்
மெய்த் துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டு அம்மா! என்
சித்தம் மிக உன்பாலே வைப்பன் அடியேனே. 7

தொக்கு இலங்கி யாறெல்லாம் பரந்து ஓடித் தொடுகடலே
புக்கு அன்றிப் புறம்நிற்க மாட்டாத; மற்று அவை போல்,
மிக்கு இலங்கு முகில்-நிறத்தாய்! வித்துவக்கோட்டு அம்மா! உன்
புக்கு இலங்கு சீர் அல்லால் புக்கிலன் காண், புண்ணியனே! 8

நின்னையே தான் வேண்டி, நீள் செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும் செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர் திகிரி வித்துவக்கோட்டு அம்மானே!
நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியேனே. 9

வித்துவக்கோட்டு அம்மா! நீ வேண்டாயே ஆயிடினும்
மற்று ஆரும் பற்று இலேன் என்று அவனைத் தாள் நயந்து
கொற்ற வேல்-தானைக் குலசேகரன் சொன்ன
நற்றமிழ் பத்தும் வல்லார் நண்ணார் நரகமே. 10

பெருமாள் திருமொழி

6

கன்னியர் ஊடிக் கண்ணனை எள்குதல்

ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர்
எனைப் பலர் உள்ள இவ் ஊரில் உன்தன்
மார்வு தழுவுதற்கு ஆசையின்மை
அறிந்தறிந்தே உன்தன் பொய்யைக் கேட்டு,
கூர் மழை போல் பனிக் கூதல் எய்திக்
கூசி நடுங்கி யமுனை யாற்றில்
வார் மணற் குன்றிற் புலர நின்றேன்
வாசுதேவா! உன் வரவு பார்த்தே. 1

கெண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி
    கீழை அகத்துத் தயிர் கடையக்
கண்டு, ஒல்லை நானும் கடைவன் என்று
    கள்ள-விழியை விழித்துப் புக்கு,
வண்டு அமர் பூங்குழல் தாழ்ந்து உலாவ,
    வாள்முகம் வேர்ப்ப, செவ்வாய் துடிப்ப,
தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்
    தாமோதரா! மெய் அறிவன் நானே. 2

கருமலர்க் கூந்தல் ஒருத்திதன்னைக்
    கடைக்கணித்து, ஆங்கே ஒருத்திதன்பால்
மருவி மனம் வைத்து, மற்றொருத்திக்கு
    உரைத்து, ஒரு பேதைக்குப் பொய் குறித்து,
புரிகுழல் மங்கை ஒருத்திதன்னைப்
    புணர்தி : அவளுக்கும் மெய்யன் அல்லை.
மருது இறுத்தாய்! உன் வளர்த்தியூடே
    வளர்கின்றதால் உன்தன் மாயை தானே. 3

தாய்-முலைப் பாலில் அமுதிருக்கத்
    தவழ்ந்து தளர்நடையிட்டுச் சென்று
பேய்-முலை வாய்வைத்து நஞ்சை உண்டு
    பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய் ;
ஆய்மிகு காதலோடு யான் இருப்ப,
    யான் விட வந்த என் தூதியோடே
நீ மிகு போகத்தை நன்கு உகந்தாய் ;
    அதுவும் உன் கோரம்புக்கு ஏற்கும் அன்றே. 4

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு
    வீங்கு இருள்வாய் என்தன் வீதியூடே
பொன்னொத்த ஆடை குக்கூடலிட்டுப்
    போகின்ற போது, நான் கண்டு நின்றேன் ;
கண்ணுற்றவளை நீ கண்ணாலிட்டுக்
    கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன் ;
என்னுக்கு அவளை விட்டு இங்கு வந்தாய் ?
    இன்னம் அங்கே நட, நம்பி! நீயே. 5

மற் பொரு தோள் உடை வாசுதேவா!
வல்வினையேன் துயில் கொண்டவாறே
இற்றை இரவிடை ஏமத்து என்னை
இன்னணைமேல் இட்டு அகன்று நீ போய்,
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும்
அரிவையரோடும் அணைந்து வந்தாய்;
எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய் ?
எம்பெருமான்! நீ எழுந்தருளே. 6

பையரவின் அணைப் பள்ளியினாய்!
பண்டையோம் அல்லோம் நாம்; நீ உகக்கும்
மையரி ஒண் கண்ணினாரும் அல்லோம்;
வைகி எம் சேரி வரவு ஒழி நீ.
செய்ய உடையும் திருமுகமும்
செங்கனிவாயும் குழலும் கண்டு
பொய் ஒரு நாள் பட்டதே அமையும்;
புள்ளுவம் பேசாதே போகு, நம்பீ! 7

என்னை வருக எனக் குறித்திட்டு,
இனமலர் முல்லையின் பந்தர்-நீழல்
மன்னி அவளைப் புணரப் புக்கு,
மற்று என்னைக் கண்டு உழறா நெகிழ்ந்தாய்;
பொன்னிற ஆடையைக் கையிற் தாங்கிப்
பொய்-அச்சம் காட்டி நீ போதியேலும்,
இன்னம் என் கையகத்து ஈங்கு ஒரு நாள்
வருதியேல், என் சினம் தீர்வன் நானே. 8

மங்கல நல் வனமாலை மார்வில்
இலங்க, மயில்-தழைப் பீலி சூடி,
பொங்கு இள ஆடை அரையிற் சாத்தி,
பூங்கொத்துக் காதிற் புணரப் பெய்து,
கொங்கு நறுங் குழலார்களோடு
குழைந்து குழல் இனிது ஊதி வந்தாய்;
எங்களுக்கே ஒருநாள் வந்து ஊத
உன் குழலின் இசை போதராதே? 9

அல்லி மலர்த் திருமங்கை கேள்வன்
தன்னை நயந்து இள ஆய்ச்சிமார்கள்
எல்லிப் பொழுதினில் ஏமத்து ஊடி
எள்கி உரைத்த உரையதனைக்
கொல்லி நகர்க்கு இறை கூடற்கோமான்
குலசேகரன் இன்னிசையில் மேவிச்
சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும்
சொல்ல வல்லார்க்கு இல்லை துன்பந் தானே. 10

பெருமாள் திருமொழி

7

தேவகியின் புலம்பல்

ஆலை நீள் கரும்பு அன்னவன் தாலோ!
அம்புயத் தடங் கண்ணினன் தாலோ!
வேலை நீர் நிறத்து அன்னவன் தாலோ!
வேழப் போதகம் அன்னவன் தாலோ!
ஏல வார் குழல் என்மகன் தாலோ!
என்று என்று உன்னை என் வாயிடை நிறையத்
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத்
தாயரிற் கடை ஆயின தாயே. 1

வடிக் கொள் அஞ்சனம் எழுது செம் மலர்க்கண்
மருவி மேல் இனிது ஒன்றினை நோக்கி,
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள்
பொலியும் நீர்-முகிற் குழவியே போல,
அடக்கியாரச் செஞ் சிறு விரல் அனைத்தும்
அங்கையோடு அணைந்து, ஆனையிற் கிடந்த
கிடக்கை கண்டிடப் பெற்றிலன், அந்தோ!
கேசவா! கெடுவேன், கெடுவேனே! 2

முந்தை நன்முறை அன்பு உடை மகளிர்
முறை முறை தம் தம் குறங்கிடை இருத்தி,
எந்தையே! என்தன் குலப் பெருஞ் சுடரே!
எழு முகிற் கணத்து எழில் கவர் ஏறே!
உந்தை யாவன் என்று உரைப்ப, நின் செங்கேழ்
விரலினும் கடைக்கண்ணினும் காட்ட,
நந்தன் பெற்றனன் ; நல்வினை யில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே. 3

களி நிலா எழில் மதிபுரை முகமும்,
கண்ணனே! திண்கை மார்வும், திண்தோளும்,
தளிர் மலர்க் கருங் குழற் பிறையதுவும்,
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த
இளமை-இன்பத்தை இன்று என்தன் கண்ணால்
பருகுவேற்கு இவள் தாயென நினைந்த
அளவில் பிள்ளைமை-இன்பத்தை இழந்த
பாவியேன் எனது ஆவி நில்லாதே. 4

மருவும் நின் திருநெற்றியிற் சுட்டி
அசைதர, மணிவாயிடை முத்தம்
தருதலும், உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டுகொண்டு உள்ளம் உள் குளிர,
விரலைச் செஞ் சிறுவாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்று உரைக்கும் அவ் உரையும்
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே. 5

தண் அந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்து எழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணிற் செம்பொடி ஆடி வந்து என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன்; அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன்; ஓ! கொடு வினையேன்!
என்னை என் செய்யப் பெற்றது எம் மோயே! 6

குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்!
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி,
ஒழுகு பேர் எழில் இளஞ்சிறு தளிர்போல்
ஒரு கையால் ஒரு முலை-முகம் நெருடா,
மழலை மென்னகை இடையிடை அருளா,
வாயிலே முலை இருக்க, என் முகத்தே
எழில் கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந்
தன்னையும் இழந்தேன், இழந்தேனே! 7

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும்
முகிழ் இளஞ் சிறுத் தாமரைக் கையும்,
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கு
நிலையும், வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்,
அழுகையும், அஞ்சி நோக்கும் அந் நோக்கும்,
அணிகொள் செஞ் சிறுவாய் நெளிப்பதுவும்,
தொழுகையும் : இவை கண்ட அசோதை
தொல்லை-இன்பத்து இறுதி கண்டாளே. 8

குன்றினால் குடை கவித்ததும், கோலக்
குரவை கோத்ததுவும், குடமாட்டும்,
கன்றினால் விளவு எறிந்ததும், காலால்
காளியன் தலை மிதித்ததும், முதலா
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம்
அனைத்திலும் அங்கு என் உள்ளம் உள்குளிர,
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன்; அடியேன்,
காணுமாறு இனி உண்டெனில், அருளே. 9

வஞ்சம் மேவிய நெஞ்சு உடைப் பேய்ச்சி
வரண்டு நார் நரம்பு எழக் கரிந்து உக்க
நஞ்சம் ஆர்தரு சுழிமுலை, அந்தோ!
சுவைத்து நீ அருள்செய்து வளர்ந்தாய்!
கஞ்சன் நாள் கவர் கருமுகில் எந்தாய்!
கடைப்பட்டேன் வறிதே முலை சுமந்து,
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன் ;
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே! 10

மல்லை மா நகர்க்கு இறையவன்தன்னை
வான் செலுத்தி வந்து ஈங்கு அணை மாயத்து
எல்லையில் பிள்ளை செய்வன காணாத்
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்
கொல்லி காவலன் மால் அடி முடிமேல்
கோலமாம் குலசேகரன் சொன்ன
நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள்
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே. 11

பெருமாள் திருமொழி

8

தாலாட்டு

மன்னு புகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென் இலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன் சேர்
கன்னி நன் மா மதில் புடைசூழ் கணபுரத்து என் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ! 1

புண்டரிக மலரதன்மேல் புவனி எல்லாம் படைத்தவனே!
திண் திறலாள் தாடகைதன் உரம் உருவச் சிலை வளைத்தாய்!
கண்டவர்தம் மனம் வழங்கும் கணபுரத்து என் கருமணியே!
எண் திசையும் ஆளுடையாய்! இராகவனே! தாலேலோ! 2

கொங்கு மலி கருங்குழலாள் கௌசலைதன் குல மதலாய்!
தங்கு பெரும் புகழ்ச்சனகன் திரு மருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்த மலி கணபுரத்து என் கருமணியே!
எங்கள் குலத்து இன்னமுதே! இராகவனே! தாலேலோ! 3

தாமரை மேல் அயனவனைப் படைத்தவனே! தயரதன்தன்
மா மதலாய்! மைதிலிதன் மணவாளா! வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும் கணபுரத்து என் கருமணியே!
ஏமருவும் சிலை வலவா! இராகவனே! தாலேலோ! 4

பார் ஆளும் படர் செல்வம் பரத நம்பிக்கே அருளி,
ஆரா அன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே!
சீர் ஆளும் வரை மார்பா! திருக் கண்ணபுரத்து அரசே!
தார் ஆரும் நீண் முடி என் தாசரதீ! தாலேலோ! 5

சுற்றம் எல்லாம் பின் தொடரத் தொல் கானம் அடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்தி நகர்க்கு அதிபதியே!
கற்றவர்கள்தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே!
சிற்றவைதன் சொற் கொண்ட சீராமா! தாலேலோ! 6

ஆலின் இலைப் பாலகனாய் அன்று உலகம் உண்டவனே!
வாலியைக் கொன்று அரசு இளைய வானரத்துக்கு அளித்தவனே!
காலின் மணி கரை அலைக்கும் கணபுரத்து என் கருமணியே!
ஆலி நகர்க்கு அதிபதியே! அயோத்திமனே! தாலேலோ! 7

மலையதனால் அணை கட்டி மதில்-இலங்கை அழித்தவனே!
அலை கடலைக் கடைந்து அமரர்க்கு அமுது அருளிச் செய்தவனே!
கலை வலவர்தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே!
சிலை வலவா! சேவகனே! சீராமா! தாலேலோ! 8

தளை அவிழும் நறுங் குஞ்சித் தயரதன்தன் குல மதலாய்!
வளைய ஒரு சிலையதனால் மதில்-இலங்கை அழித்தவனே!
களை கழுநீர் மருங்கு அலரும் கணபுரத்து என் கருமணியே!
இளையவர்கட்கு அருள் உடையாய்! இராகவனே! தாலேலோ! 9

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும் வந்து அடி வணங்க, அரங்கநகர்த் துயின்றவனே!
காவிரி நல் நதி பாயும் கணபுரத்து என் கருமணியே!
ஏ வரி வெஞ்சிலை வலவா! இராகவனே! தாலேலோ! 10

கன்னி நன் மா மதில் புடைசூழ் கணபுரத்து என் காகுத்தன்
தன் அடிமேல் தாலேலோ என்று உரைத்த தமிழ்மாலை
கொல் நவிலும் வேல் வலவன் குடைக் குலசேகரன் சொன்ன
பன்னிய நூல் பத்தும் வல்லார் பாங்காய பத்தர்களே. 11

பெருமாள் திருமொழி

9

தசரதன் புலம்பல்

வன் தாளின் இணை வணங்கி வளநகரம் தொழுது ஏத்த
மன்னன் ஆவான்
நின்றாயை, அரியணை மேல் இருந்தாயை, நெடுங் கானம்
படரப் போகு
என்றாள் : எம் இராமாவோ! உனைப் பயந்த கைகேசி
தன் சொற் கேட்டு
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன், நன்மகனே!
உன்னை நானே. 1

வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு இருநிலத்தை வேண்டாதே,
விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து மாவொழிந்து
வனமே மேவி,
நெய்வாய வேல் நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும்
பின்பு போக,
எவ்வாறு நடந்தனை ? எம் இராமாவோ! எம்பெருமான்!
என் செய்கேனே! 2

கொல் அணை வேல் வரி நெடுங் கண் கௌசலைதன் குல மதலாய்!
குனி வில் ஏந்தும்
மல் அணைந்த வரைத் தோளா! வல் வினையேன் மனம் உருக்கும்
வகையே கற்றாய்!
மெல் அணைமேல் முன் துயின்றாய், இன்று இனிப்போய் வியன் கான
மரத்தின் நீழற்
கல் அணைமேல் கண் துயிலக் கற்றனையோ? காகுத்தா!
கரிய கோவே! 3

வா, போகு, வா, இன்னம் வந்து ஒருகாற் கண்டுபோ,
மலராள் கூந்தல்
வேய்போலும் எழில்-தோளி தன்பொருட்டா விடையோன்தன்
வில்லைச் செற்றாய்!
மா போகு நெடுங் கானம் வல்வினையேன் மனம் உருக்கும்
மகனே! இன்று
நீ போக, என் நெஞ்சம் இரு பிளவாய்ப் போகாதே
நிற்குமாறே! 4

பொருந்தார் கை வேல்-நுதிபோல் பரல் பாய, மெல்லடிகள்
குருதி சோர,
விரும்பாத கான் விரும்பி, வெயில் உறைப்ப, வெம் பசிநோய்
கூர, இன்று,
பெரும்பாவியேன் மகனே! போகின்றாய், கேகயர்கோன்
மகளாய்ப் பெற்ற
அரும்பாவி சொற் கேட்ட அருவினையேன் என் செய்கேன்!
அந்தோ! யானே. 5

அம்மா! என்று உகந்து அழைக்கும் ஆர்வச்சொல் கேளாதே,
அணி சேர் மார்வம்
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே, முழுசாதே,
மோவாது உச்சி,
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும் கமலம் போல்
முகமும் காணாது,
எம்மானை என் மகனை இழந்திட்ட இழிதகையேன்
இருக்கின்றேனே! 6

பூ மருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து, பூந்
துகில் சேர் அல்குற்
காமர் எழில் விழல் உடுத்து, கலன் அணியாது, அங்கங்கள்
அழகு மாறி,
ஏ மரு தோள் என் புதல்வன் யான் இன்று செலத்தக்க
வனம் தான் சேர்தல்
தூ மறையீர்! இது தகவோ? சுமந்திரனே! வசிட்டனே!
சொல்லீர் நீரே. 7

பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் தம்பியையும்
பூவை போலும்
மின் பற்றா நுண்மருங்குல் மெல்லியல் என் மருகியையும்
வனத்திற் போக்கி,
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு, என்னையும் நீள்
வானில் போக்க,
என் பெற்றாய்? கைகேசி! இரு நிலத்தில் இனிதாக
இருக்கின்றாயே! 8

முன் ஒரு நாள் மழுவாளி சிலைவாங்கி அவன்தவத்தை
முற்றும் செற்றாய்;
உன்னையும் உன் அருமையையும் உன் மோயின் வருத்தமும் ஒன்-
றாகக் கொள்ளாது
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக் கொண்டு வனம்
புக்க எந்தாய்!
நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் எழ் பிறப்பும்.
நெடுந்தோள் வேந்தே! 9

தேன் நகு மா மலர்க் கூந்தற் கௌசலையும் சுமித்திரையும்
சிந்தை நோவ,
கூன் உருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட கொடியவள்தன்
சொற்கொண்டு, இன்று
கானகமே மிக விரும்பி நீ துறந்த வளநகரைத்
துறந்து, நானும்
வானகமே மிக விரும்பிப் போகின்றேன் ; மனு-குலத்தார்
தங்கள் கோவே! 10

ஏர் ஆர்ந்த கரு நெடுமால் இராமனாய் வனம் புக்க
அதனுக்கு ஆற்றாத்
தார் ஆர்ந்த தடவரைத் தோள் தயரதன் தான் புலம்பிய அப்
புலம்பல்தன்னை
கூர் ஆர்ந்த வேல் வலவன் கோழியர்கோன் குடைக் குல
சேகரன் சொற் செய்த
சீர் ஆர்ந்த தமிழ்மாலை இவை வல்லார் தீ நெறிக்கண்
செல்லார் தாமே. 11

பெருமாள் திருமொழி

10

தில்லைச் சித்திரகூடம் : இராம சரிதம்

அங்கண் நெடு மதில் புடை சூழ் அயோத்தி என்னும்
அணி நகரத்து உலகு அனைத்தும் விளக்கும் சோதி
வெங் கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி
விண் முழுதும் உயக் கொண்ட வீரன்தன்னைச்
செங்கண் நெடுங் கரு முகிலை இராமன்தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான்தன்னை
என்று கொலோ! கண் குளிரக் காணும் நாளே. 1

வந்து எதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வரு குருதி பொழிதர வன்கணை ஒன்று ஏவி
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து
வல்லரக்கர் உயிர் உண்ட மைந்தன், காண்மின் :
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த
அணிமணி-ஆசனத்து இருந்த அம்மான் தானே. 2

செவ்வரி நற் கருநெடுங்கண் சீதைக்கு ஆகிச்
சினவிடையோன் சிலையிறுத்து, மழுவாள் ஏந்தி,
வெவ்வரி நற் சிலைவாங்கி, வென்றி கொண்டு,
வேல்வேந்தர் பகை தடிந்த வீரன்தன்னைத்
தெவ்வர் அஞ்சு நெடும்புரிசை உயர்ந்த பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எவ்வரி வெஞ் சிலைத் தடக்கை இராமன் தன்னை
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே. 3

தொத்து அலர் பூஞ் சுரிகுழல்-கைகேசி சொல்லால்
தொல் நகரம் துறந்து துறைக் கங்கைதன்னைப்
பத்தி உடைக் குகன் கடத்த, வனம் போய்ப் புக்கு,
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து,
சித்திரகூடத்து இருந்தான் தன்னை இன்று
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க்கு இமையவர் நேர் ஒவ்வார்தாமே. 4

வலி வணக்கு வரை நெடுந்தோள் விராதைக் கொன்று
வண் தமிழ் மா முனி கொடுத்த வரி-வில் வாங்கி,
கலை வணக்கு நோக்கு அரக்கி மூக்கை நீக்கி,
கரனோடு தூடணன்தன் உயிரை வாங்கி,
சிலை வணக்கி மான் மறிய எய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
தலை வணக்கிக் கைகூப்பி ஏத்தவல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே. 5

தனம் மருவு வைதேகி பிரியல் உற்று,
    தளர்வு எய்திச் சடாயுவை வைகுந்தத்து ஏற்றி,
வனம் மருவு கவியரசன் காதல் கொண்டு,
    வாலியைக் கொன்று, இலங்கைநகர் அரக்கர்கோமான்
சினம் அடங்க மாருதியாற் சுடுவித்தானைத்
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
இனிது அமர்ந்த அம்மானை இராமன் தன்னை
    ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே. 6

குரை கடலை அடல் அம்பால் மறுக எய்து,
    குலை கட்டி, மறுகரையை அதனால் ஏறி,
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்
    இன்னுயிர் கொண்டு, அவன் தம்பிக்கு அரசும் ஈந்து,
திருமகளோடு இனிது அமர்ந்த செல்வன் தன்னைத்
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
அரசு-அமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால்,
    அரசு ஆக எண்ணேன் மற்று அரசு தானே. 7

அம் பொன் நெடு மணிமாட அயோத்தி எய்தி,
    அரசு எய்தி, அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான்
தன் பெருந்தொல் கதை கேட்டு, மிதிலைச் செல்வி
    உலகு உய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள்
செம் பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான் :
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எம்பெருமான் தன்சரிதை செவியால், கண்ணால்,
    பருகுவோம் ; இன்னமுதம் மதியோம் ஒன்றே. 8

செறி தவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று,
    செழு மறையோன் உயிர் மீட்டு, தவத்தோன் ஈந்த
நிறை மணிப் பூண் அணியும் கொண்டு, இலவணன் தன்னைத்
    தம்பியால் வான் ஏற்றி, முனிவன் வேண்டத்
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத்
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
உறைவானை மறவாத உள்ளந் தன்னை
    உடையோம் ; மற்று உறுதுயரம் அடையோம் அன்றே. 9

அன்று சராசரங்களை வைகுந்தத்து ஏற்றி,
அடல் அரவப் பகையேறி, அசுரர்தம்மை
வென்று, இலங்கு மணி நெடுந்தோள் நான்கும் தோன்ற
விண் முழுதும் எதிர்வரத் தன் தாமம் மேவி,
சென்று இனிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
என்றும் நின்றான் அவன் இவனென்று ஏத்தி நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும், தொண்டீர்! நீரே. 10

தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
திறல் விளங்கு மாருதியோடு அமர்ந்தான் தன்னை
எல்லை இல் சீர்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றிற்று
அது முதலாத் தன் உலகம் புக்கது ஈறு,
கொல் இயலும் படைத் தானைக் கொற்ற ஒள்வாள்
கோழியர்கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த
நல் இயல் இன் தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே. 11

பெருமாள் திருமொழி முற்றும்.

ஸ்ரீ:

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

திருச்சந்த விருத்தம்

பூ நிலாய ஐந்துமாய், புனற்கண் நின்ற நான்குமாய்,
தீ நிலாய மூன்றுமாய், சிறந்த கால் இரண்டுமாய்,
மீ நிலாயது ஒன்றும் ஆகி, வேறு வேறு தன்மையாய்,
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே? 1

ஆறும் ஆறும் ஆறுமாய், ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்,
ஏறு சீர் இரண்டும் மூன்றும் ஏழும் ஆறும் எட்டுமாய்,
வேறு வேறு ஞானம் ஆகி, மெய்யினோடு பொய்யுமாய்,
ஊறொடு ஓசையாய ஐந்தும் ஆய ஆய மாயனே! 2

ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி, அல்லவற்று உளாயுமாய்,
ஐந்து மூன்றும் ஒன்றும் ஆகி, நின்ற ஆதிதேவனே!
ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி, அந்தரத்து அணைந்து நின்று,
ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை யாவர் காண வல்லரே? 3

மூன்று முப்பது ஆறினோடு ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்,
மூன்று மூர்த்தி ஆகி, மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்,
தோன்று சோதி மூன்றுமாய், துளக்கம் இல் விளக்கமாய்,
ஏன்று என் ஆவியுள்புகுந்தது என் கொலோ? எம் ஈசனே! 4

நின்று இயங்கும் ஒன்று அலா உருக்கள் தோறும் ஆவியாய்
ஒன்றி, உள்கலந்து நின்ற நின்ன தன்மை இன்னது என்று
என்றும் யார்க்கும் எண் இறந்த ஆதியாய்! நின் உந்திவாய்
அன்று நான்முகற் பயந்த ஆதிதேவன் அல்லையே? 5

நாகம் ஏந்து மேரு வெற்பை நாகம் ஏந்து மண்ணினை
நாகம் ஏந்தும் ஆக! மாகம் மாகம் ஏந்து வார்புனல்
மாகம் ஏந்து மங்குல் தீ ஓர் வாயு ஐந்து அமைந்து, காத்து,
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை நின்கணே இயன்றதே. 6

ஒன்று இரண்டு மூர்த்தியாய், உறக்கமோடு உணர்ச்சியாய்,
ஒன்று இரண்டு காலம் ஆகி, வேலை ஞாலம் ஆயினாய்!
ஒன்று இரண்டு தீயும் ஆகி ஆயன் ஆய மாயனே!
ஒன்று இரண்டு கண்ணினானும் உன்னை ஏத்த வல்லனே? 7

ஆதி ஆன வானவர்க்கும் அண்டம் ஆய அப்புறத்து
ஆதி ஆன வானவர்க்கும் ஆதி ஆன ஆதி நீ;
ஆதி ஆன வான வாணர் அந்த-காலம் நீ உரைத்தி;
ஆதி ஆன காலம் நின்னை யாவர் காண வல்லரே! 8

தாது உலாவு கொன்றை மாலை துன்னு செஞ்சடைச் சிவன்
நீதியால் வணங்கு பாத! நின்மலா! நிலாய சீர்
வேத வாணர் கீத வேள்வி நீதியான கேள்வியார்
நீதியால் வணங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே. 9

தன்னுளே திரைத்து எழும் தரங்க வெண் தடங்கடல்
தன்னுளே திரைத்து எழுந்து அடங்குகின்ற தன்மை போல்,
நின்னுளே பிறந்து இறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே. 10

சொல்லினால் தொடர்ச்சி நீ, சொலப்படும் பொருளும் நீ,
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ;
சொல்லினால் படைக்க நீ படைக்க வந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்க நின் குணங்கள் சொல்ல வல்லரே? 11

உலகுதன்னை நீ படைத்தி, உள் ஒடுக்கி வைத்தி, மீண்டு
உலகுதன்னுளே பிறத்தி, ஓரிடத்தை அல்லையால்;
உலகு நின்னொடு ஒன்றி நிற்க வேறு நிற்றி; ஆதலால்
உலகில் நின்னை உள்ள சூழல் யாவர் உள்ள வல்லரே? 12

இன்னை என்று சொல்லல் ஆவது இல்லை யாதும், இட்டிடைப்
பின்னை கேள்வன் என்பர் உன் பிணக்கு உணர்ந்த பெற்றியோர்;
பின்னை ஆய கோலமோடு பேரும் ஊரும் ஆதியும்
நின்னை யார் நினைக்க வல்லர் நீர்மையால் நினைக்கிலே? 13

தூய்மை யோகம் ஆயினாய்! துழாய்-அலங்கல் மாலையாய்!
ஆமை ஆகி ஆழ்கடற் துயின்ற ஆதிதேவ! நின்
நாமதேயம் இன்னது என்ன வல்லம் அல்ல; ஆகிலும்
சாம வேத கீதனாய சக்ரபாணி அல்லையே? 14

அங்கம் ஆறும் வேதம் நான்கும் ஆகி நின்று அவற்றுளே
தங்குகின்ற தன்மையாய்! தடங்கடற் பணத்தலை
செங்கண் நாகணைக் கிடந்த செல்வம் மல்கு சீரினாய்!
சங்க வண்ணம் அன்ன மேனி சார்ங்கபாணி அல்லையே? 15

தலைக் கணம் துகள் குழம்பு-சாதி சோதி தோற்றமாய்
நிலைக் கணங்கள் காண வந்து நிற்றியேலும், நீடு இரும்
கலைக் கணங்கள் சொற் பொருள் கருத்தினால் நினைக்கொணா
மலைக் கணங்கள் போல் உணர்த்தும் மாட்சி நின்தன் மாட்சியே. 16

ஏக மூர்த்தி, மூன்று மூர்த்தி, நாலு மூர்த்தி, நன்மை சேர்
போக மூர்த்தி, புண்ணியத்தின் மூர்த்தி, எண் இல் மூர்த்தியாய்,
நாக மூர்த்தி சயனமாய், நலங் கடற் கிடந்து, மேல்
ஆக மூர்த்தி ஆய வண்ணம் என் கொல் ? ஆதிதேவனே! 17

விடத்த வாய் ஓர் ஆயிரம், இராயிரம் கண், வெந்தழல்
விடுத்து, வீழ்வு இலாத போகம் மிக்க சோதி தொக்க சீர்
தொடுத்து, மேல் விதானமாய பௌவ-நீர் அராவணைப்
படுத்த பாயல் பள்ளிகொள்வது என்கொல்! வேலைவண்ணனே! 18

புள்ளது ஆகி வேதம் நான்கும் ஓதினாய், அது அன்றியும்
புள்ளின்வாய் பிளந்து புட் கொடிப் பிடித்த பின்னரும்
புள்ளை ஊர்தி ; ஆதலால், அது என்கொல், மின் கொள் நேமியாய்!
புள்ளின் மெய்ப் பகைக் கடல் கிடத்தல் காதலித்ததே ? 19

கூசம் ஒன்றும் இன்றி மாசுணம் படுத்து, வேலை-நீர்
பேச நின்ற தேவர் வந்து பாட முன் கிடந்ததும்,
பாசம் நின்ற நீரில் வாழும் ஆமையான கேசவா!
ஏச அன்று நீ கிடந்தவாறு கூறு தேறவே. 20

அரங்கனே! தரங்க நீர் கலங்க அன்று, குன்று சூழ்
மரங்கள் தேய, மாநிலம் குலுங்க, மாசுணம் சுலாய்
நெருங்க, நீ கடைந்தபோது, நின்ற சூரர் என் செய்தார் ?
குரங்கை ஆள் உகந்த எந்தை! கூறு தேற வேறு இதே. 21

பண்டும் இன்றும் மேலுமாய் ஓர் பாலனாகி ஞாலம் ஏழ்
உண்டு மண்டி ஆலிலைத் துயின்ற ஆதிதேவனே!
வண்டு கிண்டு தண் துழாய்-அலங்கலாய்! கலந்த சீர்ப்
புண்டரீகப் பாவை சேரும் மார்ப! பூமிநாதனே! 22

வால் நிறத்து ஓர் சீயமாய் வளைந்த வாள்-எயிற்றவன்
ஊன் நிறத்து உகிர்த்தலம் அழுத்தினாய்! உலாய சீர்
நால்-நிறத்த வேதநாவர் நல்ல யோகினால் வணங்கு
பால்-நிறக் கடற்கிடந்த பற்பநாபன் அல்லையே ? 23

கங்கை நீர் பயந்த பாத-பங்கயத்து எம் அண்ணலே!
அங்கை ஆழி சங்கு தண்டு வில்லும் வாளும் ஏந்தினாய்!
சிங்கமாய தேவதேவ! தேன் உலாவு மென் மலர்-
மங்கை மன்னி வாழும் மார்ப! ஆழி மேனி மாயனே! 24

வரத்தினிற் சிரத்தை மிக்க வாள்-எயிற்று மற்றவன்
உரத்தினிற் கரத்தை வைத்து உகிர்த்தலத்தை ஊன்றினாய்;
இரத்தி நீ—இது என்ன பொய்?—இரந்த மண் வயிற்றுளே
கரத்தி, உன் கருத்தை யாவர் காண வல்லர்? கண்ணனே! 25

ஆணினோடு பெண்ணும் ஆகி, அல்லவோடு நல்லவாய்,
ஊணொடு ஓசை ஊறும் ஆகி, ஒன்று அலாத மாயையாய்,
பூணி பேணும் ஆயன் ஆகி, பொய்யினோடு மெய்யுமாய்,
காணி பேணும் மாணியாய்க் கரந்து சென்ற கள்வனே! 26

விண் கடந்த சோதியாய்! விளங்கு ஞான மூர்த்தியாய்!
பண் கடந்த தேசம் மேவு பாவநாச நாதனே!
எண் கடந்த யோகினோடு இரந்து சென்று மாணியாய்,
மண் கடந்த வண்ணம் நின்னை யார் மதிக்க வல்லரே? 27

படைத்த பார் இடந்து, அளந்து, அது உண்டு உமிழ்ந்து, பௌவ நீர்
படைத்து அடைத்து, அதிற் கிடந்து, முன் கடைந்த பெற்றியோய்!
மிடைத்த மாலி மாலிமான் விலங்கு காலன்-ஊர் புகப்
படைக்கலம் விடுத்த பல் படைத் தடக்கை மாயனே! 28

பரத்திலும் பரத்தை ஆதி; பௌவ நீர் அணைக் கிடந்து,
உரத்திலும் ஒருத்திதன்னை வைத்து உகந்து, அது அன்றியும்
நரத்திலும் பிறத்தி; நாத! ஞானமூர்த்தி ஆயினாய்!
ஒருத்தரும் நினாது தன்மை இன்னது என்ன வல்லரே? 29

வானகமும் மண்ணகமும் வெற்பும் ஏழ் கடல்களும்
போனகம் செய்து, ஆலிலைத் துயின்ற புண்டரீகனே!
தேன் அகஞ்செய் தண் நறும் மலர்த் துழாய் நன் மாலையாய்!
கூன் அகம் புகத் தெறித்த கொற்ற வில்லி அல்லையே? 30

காலநேமி காலனே! கணக்கு இலாத கீர்த்தியாய்!
ஞாலம் ஏழும் உண்டு பண்டு ஓர் பாலன் ஆய பண்பனே!
வேலை வேவ வில் வளைத்த வெல் சினத்த வீர! நின்
பாலர் ஆய பத்தர் சித்தம் முத்தி செய்யும் மூர்த்தியே! 31

குரக்கினப் படை கொடு, குரை கடலின் மீது போய்,
அரக்கர் அங்கு அரங்க, வெஞ்சரம் துரந்த ஆதி நீ ;
இரக்க மண் கொடுத்தவற்கு இரக்கம் ஒன்றும் இன்றியே,
பரக்க வைத்து அளந்து கொண்ட பற்பபாதன் அல்லையே ? 32

மின் நிறத்து எயிற்று அரக்கன் வீழ வெஞ்சரம் துரந்து,
பின்னவற்கு அருள் புரிந்து அரசு-அளித்த பெற்றியோய்!
நன்னிறத்து ஓர் இன்சொல் ஏழை பின்னை கேள்வ! மன்னு சீர்ப்
பொன் நிறத்த வண்ணன் ஆய புண்டரீகன் அல்லையே ? 33

ஆதி ஆதி ஆதி நீ ; ஓர் அண்டம் ஆதி ; ஆதலால்,
சோதியாத சோதி நீ ; அது உண்மையில் விளங்கினாய் ;
வேதம் ஆகி வேள்வி ஆகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதி ஆகி, ஆயன் ஆய மாயம் என்ன மாயமே ? 34

அம்பு உலாவு மீனும் ஆகி, ஆமை ஆகி, ஆழியார்
தம்பிரானும் ஆகி மிக்கது, அன்பு மிக்கு; அது அன்றியும்
கொம்பு அராவு நுண்மருங்குல் ஆயர்-மாதர் பிள்ளையாய்,
எம்பிரானும் ஆய வண்ணம் என்கொலோ ? எம் ஈசனே! 35

ஆடகத்த பூண்-முலை யசோதை ஆய்ச்சி பிள்ளையாய்,
சாடு உதைத்து, ஓர் புள்ளது ஆவி கள்ள தாய பேய்மகள்
வீட வைத்த வெய்ய கொங்கை ஐய பால் அமுதுசெய்து,
ஆடகக் கை மாதர் வாய்-அமுதம் உண்டது என்கொலோ ? 36

காய்த்த நீள் விளங்கனி உதிர்த்து, எதிர்ந்த பூங் குருந்தம்
சாய்த்து, மா பிளந்த கைத் தலத்த கண்ணன் என்பரால் :
ஆய்ச்சி பாலை உண்டு, மண்ணை உண்டு, வெண்ணெய் உண்டு, பின்
பேய்ச்சி பாலை உண்டு, பண்டு ஓர் ஏனம் ஆய வாமனா! 37

கடம் கலந்த வன்கரி மருப்பு ஒசித்து, ஓர் பொய்கைவாய்
விடம் கலந்த பாம்பின் மேல் நடம் பயின்ற நாதனே!
குடம் கலந்த கூத்தன் ஆய கொண்டல்வண்ண! தண்துழாய்
வடம் கலந்த மாலை மார்ப! காலநேமி காலனே! 38

வெற்பு எடுத்து வேலை-நீர் கலக்கினாய் ; அது அன்றியும்,
வெற்பு எடுத்து வேலை-நீர் வரம்பு கட்டி, வேலை சூழ்
வெற்பு எடுத்த இஞ்சி சூழ் இலங்கை கட்டழித்த நீ
வெற்பு எடுத்து மாரி காத்த மேகவண்ணன் அல்லையே ? 39

ஆனை காத்து, ஓர் ஆனை கொன்று, அது அன்றி, ஆயர்-பிள்ளையாய்
ஆனை மேய்த்தி ; ஆனெய் உண்டி ; அன்று குன்றம் ஒன்றினால்
ஆனை காத்து, மை-அரிக் கண் மாதரார் திறத்து முன்
ஆனை அன்று சென்று அடர்த்த மாயம் என்ன மாயமே! 40

ஆயன் ஆகி ஆயர்-மங்கை வேய தோள் விரும்பினாய் ;
ஆய, நின்னை யாவர் வல்லர் அம்பரத்தொடு இம்பராய் ?
மாய! மாய மாயை கொல் ? அது அன்றி நீ வகுத்தலும்
மாய மாயம் ஆக்கினாய் ; உன் மாயம் முற்றும் மாயமே! 41

வேறு இசைந்த செக்கர் மேனி நீறு அணிந்த புன்சடைக்
கீறு திங்கள் வைத்தவன் கை வைத்த வன்கபால் மிசை
ஊறு செங் குருதியால் நிறைத்த காரணந்தனை,
ஏறு சென்று அடர்த்த ஈச! பேசு, கூசம் இன்றியே. 42

வெஞ்சினத்த வேழ வெண் மருப்பு ஒசித்து, உருத்த மா
கஞ்சனைக் கடிந்து, மண் அளந்துகொண்ட காலனே!
வஞ்சனத்து வந்த பேய்ச்சி ஆவி பாலுள் வாங்கினாய்!
அஞ்சனத்த வண்ணன் ஆய ஆதிதேவன் அல்லையே ? 43

பாலின் நீர்மை, செம்பொன் நீர்மை, பாசியின் பசும் புறம்
போலும் நீர்மை, பொற்பு உடைத் தடத்து வண்டு விண்டு உலாம்
நீல நீர்மை : என்று இவை நிறைந்த காலம் நான்குமாய்,
மாலின் நீர்மை வையகம் மறைத்தது என்ன நீர்மையே ? 44

மண்ணுளாய் கொல் ? விண்ணுளாய் கொல் ? மண்ணுளே மயங்கி
எண்ணும் எண் அகப்படாய் கொல்? என்ன மாயை! நின் தமர் [நின்று
கண்ணுளாய் கொல் ? சேயை கொல் ? அனந்தன்மேல் கிடந்த எம்
புண்ணியா! புனந்துழாய்-அலங்கல் அம் புனிதனே! 45

தோடு பெற்ற தண் துழாய்-அலங்கல் ஆடு சென்னியாய்!
கோடு பற்றி ஆழி ஏந்தி அஞ்சிறைப் புள் ஊர்தியால் ;
நாடு பெற்ற நன்மை நண்ணம் இல்லையேனும், நாயினேன்
வீடு பெற்று, இறப்பொடும் பிறப்பு அறுக்குமா சொலே. 46

காரொடு ஒத்த மேனி நங்கள் கண்ண! விண்ணின் நாதனே!
நீர் இடந்து, அராவணைக் கிடத்தி என்பர் ; அன்றியும்
ஓர் இடத்தை அல்லை, எல்லை இல்லை என்பர் ; ஆதலால்,
சேர்வு-இடத்தை நாயினேன் தெரிந்து, இறைஞ்சுமா சொலே. 47

குன்றில் நின்று, வான் இருந்து, நீள் கடற் கிடந்து, மண்
ஒன்று சென்று, அது ஒன்றை உண்டு, அது ஒன்று இடந்து, பன்றி
நன்று சென்ற நாளவற்றுள் நல் உயிர் படைத்து, அவர்க்கு [யாய்
அன்று தேவு அமைத்து, அளித்த ஆதிதேவன் அல்லையே ? 48

கொண்டை கொண்ட கோதை மீது தேன் உலாவு கூனி கூன்
உண்டை கொண்டு அரங்க ஓட்டி உள் மகிழ்ந்த நாதன் ஊர் :
நண்டை உண்டு நாரை பேர, வாளை பாய, நீலமே
அண்டை கொண்டு கெண்டை மேயும் அந் தண் நீர் அரங்கமே. 49

வெண் திரைக் கருங் கடல் சிவந்து வேவ, முன் ஓர் நாள்
திண் திறற் சிலைக்கை வாளி விட்ட வீரர் சேரும் ஊர் :
எண் திசைக் கணங்களும் இறைஞ்சி ஆடு தீர்த்த நீர்,
வண்டு இரைத்த சோலை வேலி, மன்னு சீர் அரங்கமே. 50

சரங்களைத் துரந்து வில் வளைத்து, இலங்கை மன்னவன்
சிரங்கள் பத்து அறுத்து உதிர்த்த செல்வர் மன்னு பொன்-இடம் :
பரந்து பொன் நிரந்து நுந்தி வந்து அலைக்கும் வார் புனல்
அரங்கம் என்பர் நான்முகத்து அயன் பணிந்த கோயிலே. 51

பொற்றை உற்ற முற்றல் யானை போர் எதிர்ந்து வந்ததைப்
பற்றி உற்று மற்று அதன் மருப்பு ஒசித்த பாகன் ஊர் :
சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர்,
அற்ற பற்றர், சுற்றி வாழும் அந்தண் நீர் அரங்கமே. 52

மோடியோடு இலச்சையாய சாபம் எய்தி, முக்கணன்
கூடு சேனை மக்களோடு கொண்டு மண்டி வெஞ்சமத்து
ஓட, வாணன் ஆயிரம் கரங் கழித்த ஆதி மால்
பீடு கோயில், கூடு நீர் அரங்கம் என்ற பேரதே. 53

இலைத் தலைச் சரம் துரந்து இலங்கை கட்டழித்தவன் :
மலைத் தலைப் பிறந்து இழிந்து வந்து நுந்து சந்தனம்
குலைத்து அலைத்து இறுத்து எறிந்த குங்குமக் குழம்பினோடு
அலைந்து ஒழுகு காவிரி அரங்கம் மேய அண்ணலே. 54

மன்னு மா மலர்க் கிழத்தி வைய மங்கை மைந்தனாய்,
பின்னும் ஆயர் பின்னை தோள் மணம் புணர்ந்து, அது அன்றியும்,
உன்ன பாதம் என்ன சிந்தை மன்ன வைத்து நல்கினாய் ;
பொன்னி சூழ் அரங்கம் மேய புண்டரீகன் அல்லையே ? 55

இலங்கை மன்னன் ஐந்தொடு ஐந்து பைந்தலை நிலத்து உக,
கலங்க அன்று சென்று கொன்று, வென்றி கொண்ட வீரனே!
விலங்கு நூலர் வேத நாவர் நீதியான கேள்வியார்
வலங் கொளக் குடந்தையுள் கிடந்த மாலும் அல்லையே? 56

சங்கு தங்கு முன் கை நங்கை கொங்கை தங்கல் உற்றவன்,
அங்கம் மங்க, அன்று சென்று அடர்த்து எறிந்த ஆழியான்;
கொங்கு தங்கு வார் குழல் மடந்தைமார் குடைந்த நீர்
பொங்கு தண் குடந்தையுள் கிடந்த புண்டரீகனே. 57

மரம் கெட நடந்து அடர்த்து, மத்த யானை மத்தகத்து
உரம் கெடப் புடைத்து, ஓர் கொம்பு ஒசித்து உகந்த உத்தமா!
துரங்கம் வாய் பிளந்து மண் அளந்த பாத! வேதியர்
வரம் கொளக் குடந்தையுள் கிடந்த மாலும் அல்லையே? 58

சாலி வேலி தண் வயல் தடங்கிடங்கு பூம்பொழில்
கோல மாடம் நீடு தண் குடந்தை மேய கோவலா!
காலநேமி வக்கரன் கரன் முரன் சிரம் அவை
காலனோடு கூட விற்குனித்த வில்-கை வீரனே! 59

செழுங் கொழும் பெரும்பனி பொழிந்திட உயர்ந்த வேய்
விழுந்து உலர்ந்து எழுந்து விண் புடைக்கும் வேங்கடத்துள் நின்று,
எழுந்திருந்து தேன் பொருந்து பூம்பொழில் தழைக் கொழும்
செழுந் தடங் குடந்தையுள் கிடந்த மாலும் அல்லையே? 60

நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ? இலங்கு மால் வரைச் சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு; வாழி, கேசனே! 61

கரண்டம் ஆடு பொய்கையுள் கரும் பனைப் பெரும் பழம்
புரண்டு வீழ வாளை பாய் குறுங்குடி நெடுந்தகாய்!
திரண்ட தோள்-இரணியன் சினங் கொள் ஆகம் ஒன்றையும்
இரண்டு கூறு செய்து உகந்த சிங்கம் என்பது உன்னையே! 62

நன்று இருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்று இருந்து, தீவினைகள் தீர்த்த தேவதேவனே!
குன்று இருந்த மாடம் நீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்று இருந்து, வெஃகணைக் கிடந்தது என்ன நீர்மையே? 63

நின்றது எந்தை ஊரகத்து, இருந்தது எந்தை பாடகத்து,
அன்று வெஃகணைக் கிடந்தது, என் இலாத முன்னெலாம்;
அன்று நான் பிறந்திலேன்; பிறந்த பின் மறந்திலேன்;
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே. 64

நிற்பதும் ஓர் வெற்பகத்து; இருப்பும் விண்; கிடப்பதும்
நற்பெருந் திரைக் கடலுள், நான் இலாத முன்னெலாம்;
அற்புதன் அனந்த-சயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே. 65

இன்று சாதல், நின்று சாதல், அன்றி யாரும் வையகத்து
ஒன்றி நின்று வாழ்தல் இன்மை கண்டும், நீசர் என்கொலோ
அன்று பார் அளந்த பாத-போதை உன்னி வானின்மேல்
சென்று சென்று தேவராய் இருக்கிலாத வண்ணமே? 66

சண்ட மண்டலத்தின் ஊடு சென்று, வீடு பெற்று, மேல்
கண்டு வீடு இலாத காதல்-இன்பம் நாளும் எய்துவீர்!
புண்டரீக-பாத புண்ய-கீர்த்தி நும் செவி மடுத்து
உண்டு, நும் உறுவினைத் துயருள் நீங்கி உய்ம்மினோ. 67

முத்திறத்து வாணியத்து இரண்டில் ஒன்றும் நீசர்கள்
மத்தராய் மயங்குகின்றது, இட்டு அதில் இறந்து போந்து;
எத்திறத்தும் உய்வது ஓர் உபாயம் இல்லை, உய்குறில்:
தொத்து இறுத்த தண் துழாய் நன் மாலை வாழ்த்தி வாழ்மினோ. 68

காணிலும் உருப் பொலார் செவிக்கு இனாத கீர்த்தியார்
பேணிலும் வரந்தர மிடுக்கு இலாத தேவரை
ஆணம் என்று அடைந்து வாழும் ஆதர்காள்! எம் ஆதிபாற்
பேணி நும் பிறப்பு எனும் பிணக்கு அறுக்ககிற்றிரே. 69

குந்தமோடு சூலம் வேல்கள் தோமரங்கள் தண்டு வாள்
பந்தமான தேவர்கள் பரந்து வானகம் உற,
வந்த வாணன் ஈரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த நாள்
அந்த அந்த ஆகுலம் அமரரே அறிவரே. 70

வண்டு உலாவு கோதை மாதர் காரணத்தினால் வெகுண்டு,
இண்ட வாணன் ஈரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த நாள்,
முண்டன் நீறன் மக்கள் வெப்பு மோடி அங்கி ஓடிடக்
கண்டு நாணி, வாணனுக்கு இரங்கினான் எம் மாயனே. 71

போதில் மங்கை பூதலக் கிழத்தி தேவி ; அன்றியும்
போது தங்கு நான்முகன் மகன் ; அவன் மகன் சொலில்,
மாது தங்கு கூறன் ஏறது ஊர்தி : என்று வேத நூல்
ஓதுகின்றது உண்மை, அல்லது இல்லை மற்று உரைக்கிலே. 72

மரம் பொதச் சரம் துரந்து, வாலி வீழ முன் ஓர் நாள்
உரம் பொதச் சரம் துரந்த உம்பர்-ஆளி எம்பிரான்
வரம் குறிப்பில் வைத்தவர்க்கு அலாது, வானம் ஆளினும்
நிரம்பு நீடு போகம் எத்திறத்தும் யார்க்கும் இல்லையே. 73

அறிந்து அறிந்து வாமனன் அடியிணை வணங்கினால்,
செறிந்து எழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும் ;
மறிந்து எழுந்த தெண் திரையுள் மன்னு மாலை வாழ்த்தினால்,
பறிந்து எழுந்து தீவினைகள் பற்று அறுதல் பான்மையே. 74

ஒன்றி நின்று, நற்றவம் செய்து ஊழி ஊழிதோறு எலாம்,
நின்று நின்று அவன் குணங்கள் உள்ளி, உள்ளம் தூயராய்ச்
சென்று சென்று, தேவதேவர் உம்பர் உம்பர் உம்பராய்
அன்றி, எங்கள் செங்கண் மாலை யாவர் காண வல்லரே? 75

புன் புல வழி அடைத்து அரக்கு-இலச்சினை செய்து,
நன் புல வழி திறந்து, ஞான நற் சுடர்கொளீஇ,
என்பு இல் எள்கி, நெஞ்சு உருகி, உள் கனிந்து எழுந்தது ஓர்
அன்பில் அன்றி, ஆழியானை யாவர் காண வல்லரே ? 76

எட்டும் எட்டும் எட்டுமாய், ஓர் ஏழும் ஏழும் ஏழுமாய்,
எட்டும் மூன்றும் ஒன்றும் ஆகி நின்ற ஆதிதேவனை
எட்டின் ஆய பேதமோடு இறைஞ்சி நின்று, அவன் பெயர்
எட்டு எழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானம் ஆளவே. 77

சோர்வு இலாத காதலால் தொடக்கு அறா மனத்தராய்,
நீர் அராவணைக் கிடந்த நின்மலன் நலங் கழல்
ஆர்வமோடு இறைஞ்சி நின்று, அவன் பேர் எட்டு எழுத்துமே
வாரம் ஆக ஓதுவார்கள் வல்லர் வானம் ஆளவே. 78

பத்தினோடு பத்துமாய், ஓர் ஏழினோடு ஓர் ஒன்பதாய்,
பத்து-நால் திசைக்கண் நின்ற நாடு பெற்ற நன்மையாய்,
பத்தின் ஆய தோற்றமோடு ஓர் ஆற்றல் மிக்க ஆதிபால்
பத்தராம் அவர்க்கு அலாது, முத்தி முற்றல் ஆகுமே? 79

வாசி ஆகி, நேசம் இன்றி வந்து எதிர்ந்த தேனுகன்
நாசம் ஆகி நாள் உலப்ப, நன்மை சேர் பனங்கனிக்கு
வீசி மேல் நிமிர்ந்த தோளின் இல்லை ஆக்கினாய் ; கழற்கு
ஆசை ஆம் அவர்க்கு அலால் அமரர் ஆகல் ஆகுமே? 80

கடைந்த பாற்கடற் கிடந்து, காலநேமியைக் கடிந்து,
உடைந்த வாலி தன் தனக்கு உதவ வந்து, இராமனாய்
மிடைந்த ஏழ் மரங்களும் அடங்க எய்து, வேங்கடம்
அடைந்த மால பாதமே அடைந்து நாளும் உய்ம்மினோ. 81

எத்திறத்தும் ஒத்து நின்று உயர்ந்து உயர்ந்த பெற்றியோய்!
முத்திறத்து மூரி நீர் அராவணைத் துயின்ற நின்
பத்து உறுத்த சிந்தையோடு நின்று பாசம் விட்டவர்க்கு
எத்திறத்தும் இன்பம் இங்கும் அங்கும் எங்கும் ஆகுமே. 82

மட்டு உலாவு தண் துழாய்-அலங்கலாய்! பொலன் கழல்
விட்டு வீழ்வு இலாத போகம் விண்ணில் நண்ணி ஏறினும்,
எட்டினோடு இரண்டு எனும் கயிற்றினால் மனந்தனைக்
கட்டி, வீடு இலாது வைத்த காதல் இன்பம் ஆகுமே. 83

பின் பிறக்க வைத்தனன் கொல்? அன்றி நின்று தன் கழற்கு
அன்பு உறைக்க வைத்த நாள் அறிந்தனன் கொல், ஆழியான் ?
தன் திறத்து ஓர் அன்பிலா அறிவு இலாத நாயினேன்
என் திறத்தில் என்கொல் எம்பிரான் குறிப்பில் வைத்ததே ? 84

நச்சு-அரா அணைக்கிடந்த நாத! பாத-போதினில்
வைத்த சிந்தை வாங்குவித்து நீங்குவிக்க நீ இனம்
மெய்த்தன் வல்லை ; ஆதலால், அறிந்தனன் ; நின் மாயமே
உய்த்து, நின் மயக்கினில் மயக்கல் என்னை, மாயனே! 85

சாடு சாடு பாதனே! சலம் கலந்த பொய்கைவாய்
ஆடு அராவின் வன்பிடர் நடம் பயின்ற நாதனே!
கோடு நீடு கைய! செய்ய பாதம் நாளும் உள்ளினால்
வீடனாக மெய் செயாத வண்ணம் என்கொல்? கண்ணனே! 86

நெற்றி பெற்ற கண்ணன் விண்ணின் நாதனோடு போதின்மேல்
நற்றவத்து நாதனோடு மற்றும் உள்ள வானவர்
கற்ற பெற்றியால் வணங்கு பாத! நாத! வேத! நின்
பற்று அலால் ஓர் பற்று மற்றது உற்றிலேன், உரைக்கிலே. 87

வெள்ளை வேலை வெற்பு நாட்டி வெள் எயிற்று அராவு அளாய்
அள்ளலாக் கடைந்த அன்று அருவரைக்கு ஓர் ஆமையாய்,
உள்ள நோய்கள் தீர் மருந்து வானவர்க்கு அளித்த எம்
வள்ளலாரை அன்றி, மற்று ஓர் தெய்வம் நான் மதிப்பனே? 88

பார் மிகுத்த பாரம் முன் ஒழிச்சுவான் அருச்சுனன்
தேர் மிகுத்து மாயம் ஆக்கி நின்று கொன்று, வென்றிசேர்
மாரதர்க்கு வான் கொடுத்து, வையம் ஐவர் பாலதாம்
சீர் மிகுத்த நின் அலால் ஓர் தெய்வம் நான் மதிப்பனே? 89

குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன் ;
நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன் ;
புலன்கள் ஐந்தும் வென்றிலேன், பொறியிலேன், புனித! நின்
இலங்கு பாதம் அன்றி மற்று ஓர் பற்று இலேன் எம் ஈசனே! 90

பண் உலாவு மென் மொழிப் படைத் தடங்கணாள் பொருட்டு
எண் இலா அரக்கரை நெருப்பினால் நெருக்கினாய் ;
கண் அலால் ஓர் கண் இலேன் ; கலந்த சுற்றம் மற்று இலேன் ;
எண் இலாத மாய! நின்னை என்னுள் நீக்கல் என்றுமே. 91

விடைக் குலங்கள் ஏழ் அடர்த்து வென்றி வேற்-கண் மாதரார்
கடிக் கலந்த தோள் புணர்ந்த காலி ஆய! வேலை-நீர்
படைத்து அடைத்து அதில் கிடந்து முன் கடைந்த நின்தனக்கு
அடைக்கலம் புகுந்த என்னை அஞ்சல் என்ன வேண்டுமே. 92

சுரும்பு அரங்கு தண் துழாய் துதைந்து அலர்ந்த பாதமே
விரும்பி நின்று இறைஞ்சுவேற்கு இரங்கு, அரங்கவாணனே !
கரும்பு இருந்த கட்டியே! கடல் கிடந்த கண்ணனே!
இரும்பு அரங்க வெஞ்சரம் துரந்த வில் இராமனே! 93

ஊனில் மேய ஆவி நீ ; உறக்கமோடு உணர்ச்சி நீ ;
ஆனில் மேய ஐந்தும் நீ ; அவற்றுள் நின்ற தூய்மை நீ ;
வானினோடு மண்ணும் நீ ; வளங் கடற் பயனும் நீ ;
யானும் நீ ; அது அன்றி எம்பிரானும் நீ ; இராமனே! 94

அடக்கு அரும் புலன்கள் ஐந்து அடக்கி ஆசையாம் அவை
தொடக்கு அறுத்து வந்து நின் தொழிற்கண் நின்ற என்னை நீ
விடக் கருதி மெய்செயாது மிக்கு ஓர் ஆசை ஆக்கிலும்,
கடற் கிடந்த நின் அலால் ஓர் கண்ணிலேன், எம் அண்ணலே! 95

வரம்பு இலாத மாய மாய! வையம் ஏழும் மெய்ம்மையே
வரம்பு இல் ஊழி ஏத்திலும் வரம்பு இலாத கீர்த்தியாய்!
வரம்பு இலாத பல் பிறப்பு அறுத்து வந்து நின்கழல்
பொருந்துமா திருந்த நீ வரம்செய், புண்டரீகனே! 96

வெய்ய ஆழி சங்கு தண்டு வில்லும் வாளும் ஏந்து சீர்க்
கையா! செய்ய போதில் மாது சேரும் மார்ப! நாதனே!
ஐயில் ஆய ஆக்கை-நோய் அறுத்து வந்து நின் அடைந்து
உய்வது ஓர் உபாயம் நீ எனக்கு நல்க வேண்டுமே. 97

மறம் துறந்து வஞ்சம் மாற்றி ஐம்புலன்கள் ஆசையும்
துறந்து, நின்கண் ஆசையே தொடர்ந்துநின்ற நாயினேன் ;
பிறந்து இறந்து பேர்இடர்ச் சுழிக்கணின்று நீங்குமா
மறந்திடாது மற்று எனக்கு மாய! நல்க வேண்டுமே. 98

காட்டி நான் செய் வல்வினைப் பயன்தனால் மனந்தனை
நாட்டி வைத்து, நல்ல-அல்ல செய்ய எண்ணினார் எனக்
கேட்டது அன்றி, என்னது ஆவி, பின்னை கேள்வ! நின்னொடும்
பூட்டி வைத்த என்னை நின்னுள் நீக்கல் பூவை வண்ணனே! 99

பிறப்பினோடு பேர்இடர்ச் சுழிக்கண் நின்றும் நீங்கும் அஃது
இறப்ப வைத்த ஞான நீசரைக் கரைக்கொடு ஏற்றுமா
பெறற்கு அரிய நின்ன பாத-பத்தி ஆன பாசனம்
பெறற்கு அரிய மாயனே! எனக்கு நல்க வேண்டுமே. 100

இரந்து உரைப்பது உண்டு, வாழி! ஏம நீர் நிறத்து அமா!
வரம் தரும் திருக்குறிப்பில் வைத்தது ஆகில், மன்னு சீர்
பரந்த சிந்தை ஒன்றிநின்று நின்ன பாத-பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே. 101

விள்வு இலாத காதலால் விளங்கு பாத-போதில் வைத்து
உள்ளுவேனது ஊன நோய் ஒழிக்குமா தெழிக்கு நீர்ப்
பள்ளி மாய! பன்றி ஆய வென்றி வீர! குன்றினால்
துள்ளுநீர் வரம்பு செய்த தோன்றல்! ஒன்று சொல்லிடே. 102

திருக் கலந்து சேரும் மார்ப! தேவதேவ தேவனே!
இருக் கலந்த வேத நீதி ஆகி நின்ற நின்மலா!
கருக் கலந்த காளமேக மேனி ஆய! நின் பெயர்
உருக் கலந்து ஒழிவிலாது உரைக்குமாறு உரைசெயே. 103

கடுங் கவந்தன் வக்கரன் கரன் முரன் சிரம் அவை
இடந்து கூறு செய்த பல் படைத் தடக்கை மாயனே!
கிடந்து இருந்து நின்று இயங்கு போதும், நின்ன பொற்கழல்
தொடர்ந்து மீள்வு இலாதது ஓர் தொடர்ச்சி நல்க வேண்டுமே. 104

மண்ணை உண்டு உமிழ்ந்து, பின் இரந்து கொண்டு அளந்து, மண்
கண்ணுள் அல்லது இல்லை என்று வென்ற காலம் ஆயினாய்!
பண்ணை வென்ற இன்சொல் மங்கை கொங்கை தங்கு பங்கயக்
கண்ண! நின்ன வண்ணம் அல்லது இல்லை எண்ணும் வண்ணமே. 105

கறுத்து எதிர்ந்த காலநேமி காலனோடு கூட, அன்று
அறுத்த ஆழி சங்கு தண்டு வில்லும் வாளும் ஏந்தினாய்!
தொறுக் கலந்த ஊனம் அஃது ஒழிக்க, அன்று, குன்றம் முன்
பொறுத்த நின் புகழ்க்கு அலால், ஓர் நேசம் இல்லை, நெஞ்சமே! 106

காய் சினத்த காசி மன்னன், வக்கரன், பவுண்டிரன்,
மாசினத்த மாலி, மான் சுமாலி, கேசி, தேனுகன் :
நாசம் உற்று வீழ, நாள் கவர்ந்த நின் கழற்கு அலால்,
நேச பாசம் எத் திறத்தும் வைத்திடேன் எம் ஈசனே! 107

கேடு இல் சீர் வரத்தனைக் கெடும் வரத்து அயன் அரன்
நாடினோடு நாட்டம்-ஆயிரத்தன் நாடு நண்ணினும்,
வீடது ஆன போகம் எய்தி வீற்றிருந்த போதிலும்,
கூடும் ஆசை அல்லது ஒன்று கொள்வனோ குறிப்பிலே? 108

சுருக்குவாரை இன்றியே சுருங்கினாய், சுருங்கியும்
பெருக்குவாரை இன்றியே பெருக்க மெய்து பெற்றியோய்!
செருக்குவார்கள் தீக்குணங்கள் தீர்த்த தேவதேவன் என்று
இருக்கு வாய் முனிக் கணங்கள் ஏத்த, யானும் ஏத்தினேன். 109

தூயனாயும் அன்றியும், சுரும்பு உலாவு தண் துழாய்
மாய! நின்னை நாயினேன் வணங்கி வாழ்த்தும் ஈதெலாம்
நீயும் நின் குறிப்பினிற் பொறுத்து நல்கு, வேலை-நீர்ப்
பாயலோடு பத்தர் சித்தம் மேய வேலை வண்ணனே! 110

வைது நின்னை வல்லவா பழித்தவர்க்கும், மாறில் போர்
செய்து நின்ன செற்றத் தீயில் வெந்தவர்க்கும், வந்து உன்னை
எய்தல் ஆகும் என்பர் ; ஆதலால், எம் மாய! நாயினேன்
செய்த குற்றம் நற்றமாகவே கொள், ஞால-நாதனே! 111

வாள்கள் ஆகி நாள்கள் செல்ல நோய்மை குன்றி மூப்பு எய்தி
மாளும் நாள் அது : ஆதலால், வணங்கி வாழ்த்து, என் நெஞ்சமே!
ஆளது ஆகும் நன்மை என்று நன்குணர்ந்து, அது அன்றியும்
மீள்வு இலாத போகம் நல்க வேண்டும் மால பாதமே. 112

சலம் கலந்த செஞ்சடைக் கறுத்த கண்டன் வெண்தலைப்
புலன் கலங்க உண்ட பாதகத்தன் வன் துயர் கெட,
அலங்கல் மார்வில் வாச நீர் கொடுத்தவன் அடுத்த சீர்
நலங்கொள் மாலை நண்ணும் வண்ணம் எண்ணு; வாழி, நெஞ்சமே! 113

ஈனமாய எட்டும் நீக்கி, ஏதம் இன்றி மீதுபோய்
வானம் ஆள வல்லையேல், வணங்கி வாழ்த்து, என் நெஞ்சமே!
ஞானம் ஆகி, ஞாயிறு ஆகி, ஞால முற்றும், ஓர் எயிற்று
ஏனமாய் இடந்த மூர்த்தி எந்தை பாதம் எண்ணியே. 114

அத்தன் ஆகி, அன்னை ஆகி, ஆளும் எம் பிரானுமாய்,
ஒத்து ஒவ்வாத பல் பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்,
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார் ;
எத்தினால் இடர்க்கடற் கிடத்தி ஏழை நெஞ்சமே ? 115

மாறு செய்த வாள்-அரக்கன் நாள் உலப்ப, அன்று இலங்கை
நீறு செய்து, சென்று கொன்று, வென்றி கொண்ட வீரனார்
வேறு செய்து தம்முள் என்னை வைத்திடாமையால், நமன்
கூறுசெய்து கொண்டு இறந்த குற்றம் எண்ண வல்லனே? 116

அச்சம் நோயொடு அல்லல் பல் பிறப்பு அவாய மூப்பு இவை :
வைத்த சிந்தை, வைத்த ஆக்கை மாற்றி, வானில் ஏற்றுவான் :
அச்சுதன் அனந்த கீர்த்தி ; ஆதி அந்தம் இல்லவன் ;
நச்சு நாகணைக் கிடந்த நாதன் ; வேத கீதனே. 117

சொல்லினும் தொழிற்கணும் தொடக்கு அறாத அன்பினும்
அல்லும் நன் பகலினோடும் ஆன மாலை காலையும்
அல்லி நாள்-மலர்க் கிழத்தி நாத! பாத-போதினைப்
புல்லி உள்ளம் விள்வு இலாது பூண்டு மீண்டது இல்லையே. 118

பொன்னி சூழ் அரங்கம் மேய பூவை-வண்ண! மாய! கேள் :
என்னது ஆவி என்னும் வல்வினையினுட் கொழுந்து எழுந்து
உன்ன பாதம் என்ன நின்ற ஒண்சுடர்க் கொழுமலர்
மன்ன வந்து பூண்டு வாட்டம் இன்றி எங்கும் நின்றதே. 119

இயக்கு அறாத பல் பிறப்பில் என்னை மாற்றி, இன்று வந்து
உயக்கொள் மேகவண்ணன் நண்ணி என்னிலாய தன்னுளே
மயக்கினான் தன் மன்னு சோதி; ஆதலால், என் ஆவி தான்
இயக்கு எலாம் அறுத்து அறாத இன்ப வீடு பெற்றதே. 120

திருச்சந்த விருத்தம் முற்றும்.

ஸ்ரீ:

தொண்டரடிப் பொடிகள் அருளிச்செய்த

திருமாலை

காவலிற் புலனை வைத்து, கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட்டு உழிதர்கின்றோம் நமன்-தமர் தலைகள் மீதே;
மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப்பு உடைமை கண்டாய், அரங்க மா நகருளானே! 1

பச்சை மா மலை போல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர் தம் கொழுந்தே! என்னும்
இச் சுவை தவிர, யான் போய் இந்திர-லோகம் ஆளும்
அச் சுவை பெறினும் வேண்டேன், அரங்க மா நகருளானே! 2

வேத நூற் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும்,
பாதியும் உறங்கிப் போகும்; நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகன் அது ஆகும்; பிணி பசி மூப்புத் துன்பம்;
ஆதலால், பிறவி வேண்டேன்; அரங்க மா நகருளானே! 3

மொய்த்த வல்வினையுள் நின்று, மூன்று எழுத்து உடைய பேரால்
கத்திரபந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்;
இத்தனை அடியர் ஆனார்க்கு இரங்கும் நம் அரங்கன் ஆய
பித்தனைப் பெற்றும், அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே. 4

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான் பெரியது ஓர் இடும்பை பூண்டு,
உண்டு இராக் கிடக்கும் அப்போது உடலுக்கே கரைந்து நைந்து,
தண் துழாய்-மாலை மார்பன் தமர்களாய்ப் பாடி ஆடி
தொண்டு பூண்டுஅமுதம் உண்ணாத்தொழும்பர்சோறுஉகக்குமாறே!

மறம் சுவர் மதில் எடுத்து, மறுமைக்கே வெறுமை பூண்டு,
புறம் சுவர் ஓட்டை மாடம் புரளும் போது அறிய மாட்டீர்;
அறம் சுவர் ஆகி நின்ற அரங்கனார்க்கு ஆட் செய்யாதே,
புறஞ் சுவர்க் கோலஞ் செய்து புள் கௌவக் கிடக்கின்றீரே. 6

புலை-அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம்
கலை அறக் கற்ற மாந்தர் காண்பரோ? கேட்பரோ தாம்?
தலை அறுப்பு உண்டும் சாவேன், சத்தியம், காண்மின் ஐயா!
சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவன் ஆவான். 7

வெறுப்பொடு சமணர் முண்டர் விதி இல் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பு அரியனகள் பேசில், போவதே நோயது ஆகி;
குறிப்பு எனக்கு அடையும் ஆகில், கூடுமேல், தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய், அரங்க மா நகருளானே! 8

மற்றும் ஓர் தெய்வம் உண்டே? மதி இலா மானிடங்காள்!
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணர மாட்டீர்;
அற்றம் மேல் ஒன்று அறியீர்; அவன் அல்லால் தெய்வம் இல்லை;
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே. 9

நாட்டினான் தெய்வம் எங்கும்; நல்லது ஓர் அருள்தன்னாலே
காட்டினான் திருவரங்கம், உய்பவர்க்கு உய்யும் வண்ணம்;
கேட்டிரே நம்பிமீர்காள்! கெருடவா கனனும் நிற்கச்
சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்து இருக்கின்றீரே! 10

ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து, உலகங்கள் உய்யச்
செருவிலே அரக்கர்கோனைச் செற்ற நம் சேவகனார்
மருவிய பெரிய கோயில் மதில்-திருவரங்கம் என்னா,
கருவிலே திரு இலாதீர்! காலத்தைக் கழிக்கின்றீரே. 11

நமனும் முற்கலனும் பேச, நரகில் நின்றார்கள் கேட்க,
நரகமே சுவர்க்கம் ஆகும் நாமங்கள் உடையன் நம்பி;
அவனது ஊர் அரங்கம் என்னாது, அயர்த்து வீழ்ந்து அளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார்: என்று அதனுக்கே கவல்கின்றேனே. 12

எறியும் நீர் வெறிகொள் வேலை மாநிலத்து உயிர்கள் எல்லாம்,
வெறிகொள் பூந்துளவ மாலை விண்ணவர்கோனை ஏத்த
அறிவு இலா மனிசர் எல்லாம், அரங்கம் என்று அழைப்பராகில்
பொறியில் வாழ் நரகம் எல்லாம் புல் எழுந்து ஒழியும் அன்றே. 13

வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும் சோலை,
கொண்டல் மீது அணவும் சோலை, குயிலினம் கூவும் சோலை,
அண்டர்கோன் அமரும் சோலை, அணி திருவரங்கம் என்னா
மிண்டர்பாய்ந்து உண்ணும்சோற்றை விலக்கி நாய்க்கு இடுமின் நீரே.

மெய்யர்க்கே மெய்யன் ஆகும், விதி இலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்; புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர்வினார்கட்கு ஒருவன் என்று உணர்ந்த பின்னை
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்; அழகன் ஊர் அரங்கம் அன்றே. 15

சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம்,
மாதரார் கயற்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்துவேனைப்
போதரே என்று சொல்லிப் புந்தியுள் புகுந்து, தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகன் ஊர் அரங்கம் அன்றே. 16

விரும்பி நின்று ஏத்த மாட்டேன், விதி இலேன், மதி ஒன்று இல்லை;
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறை-இறை உருகும் வண்ணம்
சுரும்பு அமர் சோலை சூழ்ந்த அரங்க மா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டு, என் கண்ணிணை களிக்குமாறே! 17

இனி திரைத் திவலை மோத எறியும் தண் பரவை மீதே
தனி கிடந்து அரசு செய்யும் தாமரைக்கண்ணன் எம்மான் :
கனி இருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனி-அரும்பு உதிருமாலோ! என் செய்கேன், பாவியேனே ? 18

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்-நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ! என் செய்கேன் உலகத்தீரே ? 19

பாயும் நீர் அரங்கந் தன்னுள் பாம்பு-அணைப் பள்ளிகொண்ட
மாயனார் திரு நன் மார்வும் மரகத-உருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும் துவர்-இதழ்ப் பவள-வாயும்
ஆய சீர் முடியும் தேசும் அடியரோர்க்கு அகலல் ஆமே ? 20

பணிவினால் மனமது ஒன்றிப் பவள-வாய் அரங்கனார்க்குத்
துணிவினால் வாழ மாட்டாத் தொல்லை நெஞ்சே! நீ சொல்லாய் :
அணியின் ஆர் செம்பொன் ஆய அருவரை அனைய கோயில்
மணி அனார் கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கல் ஆமே ? 21

பேசிற்றே பேசல் அல்லால், பெருமை ஒன்று உணரல் ஆகாது ;
ஆசற்றார் தங்கட்கு அல்லால், அறியல் ஆவானும் அல்லன் ;
மாசற்றார் மனத்துளானை வணங்கி நாம் இருப்பது அல்லால்,
பேசத்தான் ஆவது உண்டோ? பேதை நெஞ்சே! நீ சொல்லாய். 22

கங்கையிற் புனிதம் ஆய காவிரி நடுவுபாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்தது ஓர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்? ஏழையேன், ஏழையேனே! 23

வெள்ள-நீர் பரந்து பாயும் விரி பொழில் அரங்கந் தன்னுள்
கள்வனார் கிடந்தவாறும் கமல நன் முகமும் கண்டும்
உள்ளமே! வலியை போலும்! ஒருவன் என்று உணர மாட்டாய்;
கள்ளமே காதல் செய்து உன் கள்ளத்தே கழிக்கின்றாயே! 24

குளித்து மூன்று அனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை
ஒளித்திட்டேன், என்கண் இல்லை; நின்கணும் பத்தன் அல்லேன்;
களிப்பது என் கொண்டு? நம்பீ! கடல்வண்ணா! கதறுகின்றேன்;
அளித்து எனக்கு அருள்செய், கண்டாய், அரங்க மா நகருளானே! 25

போதெல்லாம் போது கொண்டு உன் பொன்னடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்டு உன் திருக்குணம் செப்ப மாட்டேன்;
காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன்; அது தன்னாலே
ஏதிலேன் அரங்கர்க்கு; எல்லே! என் செய்வான் தோன்றினேனே?

குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத் தாம் புரண்டிட்டு ஓடித்
தரங்க நீர் அடைக்கல் உற்ற சலம் இலா அணிலும் போலேன்;
மரங்கள் போல் வலிய நெஞ்ச வஞ்சனேன், நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட் செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே.

உம்பரால் அறியல் ஆகா ஒளியுளார், ஆனைக்கு ஆகிச்
செம் புலால் உண்டு வாழும் முதலைமேல் சீறி வந்தார்;
நம் பரம் ஆயது உண்டே? நாய்களோம் சிறுமை ஓரா
எம்பிராற்கு ஆட் செய்யாதே என் செய்வான் தோன்றினேனே? 28

ஊர் இலேன், காணி இல்லை, உறவு மற்று ஒருவர் இல்லை;
பாரில் நின் பாத மூலம் பற்றிலேன்; பரம மூர்த்தி!
காரொளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்;
ஆர் உளர் களைகண்? அம்மா! அரங்க மா நகருளானே! 29

மனத்தில் ஓர் தூய்மை இல்லை, வாயில் ஓர் இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன்; வாளா
புனத்துழாய் மாலையானே! பொன்னி சூழ் திருவரங்கா!
எனக்கு இனிக் கதி என் சொல்லாய்? என்னை ஆளுடைய கோவே!

தவத்துளார் தம்மில் அல்லேன்; தனம் படைத்தாரில் அல்லேன்;
உவர்த்த நீர் போல என்தன் உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்;
துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கு அறத் துரிசன் ஆனேன்;
அவத்தமே பிறவி தந்தாய், அரங்க மா நகருளானே! 31

ஆர்த்து வண்டு அலம்பும் சோலை அணி திரு அரங்கந் தன்னுள்
கார்த் திரள் அனைய மேனிக் கண்ணனே! உன்னைக் காணும்
மார்க்கம் ஒன்று அறியமாட்டா மனிசரில் துரிசனைய
மூர்க்கனேன் வந்து நின்றேன் : மூர்க்கனேன், மூர்க்கனேனே. 32

மெய் எல்லாம் போக விட்டு, விரிகுழலாரிற் பட்டுப்
பொய் எல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் வந்து நின்
ஐயனே! அரங்கனே! உன் அருள் என்னும் ஆசை தன்னால் [றேன்;
பொய்யனேன் வந்து நின்றேன்: பொய்யனேன்,பொய்யனேனே.33

உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வு ஒன்று இல்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவு அறச் சிரித்திட்டேனே.34

தாவி அன்று உலகம் எல்லாம் தலைவிளாக்கொண்ட எந்தாய்!
சேவியேன் உன்னை அல்லால் சிக்கெனச் செங்கண் மாலே!
ஆவியே! அமுதே! என்தன் ஆருயிர் அனைய எந்தாய்!
பாவியேன் உன்னை அல்லால் : பாவியேன், பாவியேனே. 35

மழைக்கு அன்று வரை முன் ஏந்தும் மைந்தனே! மதுர ஆறே!
உழைக் கன்றே போல நோக்கம் உடையவர் வலையுள் பட்டு
உழைக்கின்றேற்கு, என்னை நோக்காது ஒழிவதே! உன்னை யன்றே
அழைக்கின்றேன், ஆதிமூர்த்தி! அரங்க மா நகருளானே! 36

தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ் திருவரங்கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே தந்தையும் தாயும் ஆவார் ?
எளியது ஓர் அருளும் அன்றே என் திறத்து? எம்பிரானார்
அளியன் நம் பையல் என்னார், அம்மவோ! கொடியவாறே! 37

மேம் பொருள் போக விட்டு, மெய்ம்மையை மிக உணர்ந்து,
ஆம் பரிசு அறிந்துகொண்டு, ஐம்புலன் அகத்து அடக்கிக்
காம்பு அறத் தலை சிரைத்து, உன் கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும் ; சூழ் புனல் அரங்கத்தானே! 38

அடிமையிற் குடிமை இல்லா அயல் சதுப்பேதிமாரிற்
குடிமையிற் கடைமை பட்ட குக்கரில் பிறப்பரேலும்,
முடியினில் துளபம் வைத்தாய்! மொய் கழற்கு அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும் ; அரங்க மா நகருளானே! 39

திருமறுமார்வ! நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து
மருவிய மனத்தர் ஆகில், மா நிலத்து உயிர்கள் எல்லாம்
வெருவு உறக் கொன்று சுட்டிட்டு ஈட்டிய வினையரேனும்
அருவினைப் பயன துய்யார்; அரங்க மா நகருளானே! 40

வானுளார் அறியல் ஆகா வானவா என்பர் ஆகில்,
தேனுலாம் துளப மாலைச் சென்னியாய் என்பர் ஆகில்,
ஊனம் ஆயினகள் செய்யும் ஊனகாரகர்களேனும்
போனகம் செய்த சேடம் தருவரேல், புனிதம் அன்றே. 41

பழுது இலா ஒழுகல்-ஆற்றுப் பல சதுப்பேதிமார்கள்!
இழிகுலத்தவர்களேனும் எம் அடியார்கள் ஆகில்,
தொழுமின் நீர், கொடுமின், கொண்மின், என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய் போல்; மதில்-திருவரங்கத்தானே! 42

அமர ஓர் அங்கம் ஆறும் வேதம் ஓர் நான்கும் ஓதித்
தமர்களிற் தலைவராய சாதி-அந்தணர்களேனும்
நுமர்களைப் பழிப்பர் ஆகில், நொடிப்பது ஓர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்; அரங்க மா நகருளானே! 43

பெண் உலாம் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான்
எண் இலா ஊழி ஊழி தவம் செய்தார் வெள்கி நிற்ப,
விண் உளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த
கண்ணறா! உன்னை என்னோ? களைகணாக் கருதுமாறே! 44

வள எழும் தவள மாட மதுரை மா நகரம் தன்னுள்
கவள மால் யானை கொன்ற கண்ணனை அரங்க-மாலைத்
துளவத் தொண்டு ஆய தொல் சீர்த் தொண்டரடிப் பொடி சொல்
இளைய புன் கவிதையேனும் எம்பிராற்கு இனியவாறே! 45

திருமாலை முற்றும்.

ஸ்ரீ:

தொண்டரடிப் பொடிகள் அருளிச்செய்த

திருப்பள்ளி எழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்;
கனை இருள் அகன்றது காலை அம் பொழுதாய்;
மது விரிந்து ஒழுகின மா மலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி,
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங் களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலை-கடல் போன்றுளது எங்கும்;
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழு மலர் அணவிக்
கூர்ந்தது குண-திசை மாருதம், இதுவோ!
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்த தம் இருஞ் சிறகு உதறி;
விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ்வாய்
வெள் எயிறு உற, அதன் விடத்தினுக்கு அனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 2

சுடர்-ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம்;
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படர் ஒளி பசுத்தனன் பனி மதி, இவனோ!
பாயிருள் அகன்றது, பைம் பொழிற் கமுகின்
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற,
வைகறை கூர்ந்தது மாருதம், இதுவோ!
அடல்-ஒளி திகழ் தரு திகிரி அம் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 3

மேட்டு இள மேதிகள் தளை விடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன; வயலுள்
இரிந்தன சுரும்பினம்; இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மா முனி வேள்வியைக் காத்து அவபிரதம்
ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே!
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 4

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய் ;
　　போயிற்றுக் கங்குல் ; புகுந்தது புலரி ;
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம் ;
　　களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கல் அம் தொடையல் கொண்டு அடியிணை பணிவான்
　　அமரர்கள் புகுந்தனர் ; ஆதலில், அம்மா!
இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்
　　எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே. 5

இரவியர் மணி நெடுந் தேரொடும், இவரோ!
　　இறையவர் பதினொரு விடையரும், இவரோ!
மருவிய மயிலினன் அறுமுகன், இவனோ!
　　மருதரும் வசுக்களும் வந்து வந்து ஈண்டி
புரவியொடு ஆடலும் பாடலும் தேரும்
　　குமர-தண்டம் புகுந்து ஈண்டிய வெள்ளம்
அருவரை அனைய நின் கோயில் முன், இவரோ!
　　அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 6

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள், இவையோ!
　　அருந்தவ முனிவரும் மருதரும், இவரோ!
இந்திரன் ஆனையும் தானும் வந்து, இவனோ!
　　எம்பெருமான்! உன கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க, விச்சாதரர் நூக்க,
　　இயக்கரும் மயங்கினர் ; திருவடி தொழுவான்
அந்தரம் பார் இடம் இல்லை, மற்று இதுவோ!
　　அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க,
　　மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு
　　ஏற்பன ஆயின கொண்டு, நன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் ; இவரோ!
　　தோன்றினன் இரவியும் துலங்கு ஒளி பரப்பி ;
அம்பர தலத்தினின்று அகல்கின்றது இருள் போய் ;
　　அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 8

ஏதம் இல் தண்ணுமை எக்கம் மத்தளி
    யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி,
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
    கெந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் ;
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
    சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான் ;
ஆதலில், அவர்க்கு நாள்-ஓலக்கம் அருள,
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. 9

கடி-மலர்க் கமலங்கள் மலர்ந்தன, இவையோ!
    கதிரவன் கனைகடல் முளைத்தனன், இவனோ!
துடியிடையார் சுரி குழல் பிழிந்து உதறித்
    துகில் உடுத்து ஏறினர், சூழ் புனல் அரங்கா!
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
    தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு
    ஆட்படுத்தாய்! பள்ளி எழுந்தருளாயே. 10

திருப்பள்ளி எழுச்சி முற்றும்.

ஸ்ரீ :

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதி வானவன்
நீள் மதில் அரங்கத்து அம்மான் திருக்
கமல பாதம், வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே! 1

உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்து அண்டம் உற
நிவந்த நீள் முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடி-
யார் பொழில் அரங்கத்து அம்மான் அரைச்
சிவந்த ஆடையின் மேல், சென்றது ஆம் என சிந்தனையே! 2

மந்தி பாய் வட வேங்கட மா மலை வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்
அந்தி போல் நிறத்து ஆடையும் அதன்-
மேல் அயனைப் படைத்தது ஓர் எழில்
உந்தி மேலது அன்றோ! அடியேன் உள்ளத்து இன்னுயிரே! 3

சதுர மா மதில் சூழ் இலங்கைக்கு இறைவன் தலை பத்து
உதிர ஓட்டி ஓர் வெங்கணை உய்த்தவன் ஓதவண்ணன்
மதுர மா வண்டு பாட மா மயில்
ஆடு அரங்கத்து அம்மான் திரு வயிற்று
உதர பந்தம், என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே! 4

பாரம் ஆய பழவினை பற்று அறுத்து என்னைத் தன்
வாரம் ஆக்கி வைத்தான் ; வைத்தது அன்றி என் உள் புகுந்தான் ;
கோர மாதவம் செய்தனன் கொல் ?
அறியேன் அரங்கத்து அம்மான் திரு
ஆர மார்வு அது, அன்றோ! அடியேனை ஆட்கொண்டதே! 5

துண்ட வெண் பிறையன் துயர் தீர்த்தவன் அஞ்சிறைய-
வண்டு வாழ் பொழில் சூழ் அரங்க நகர் மேய அப்பன்
அண்டரண்ட பகிரண்டத்து ஒரு
மா நிலம் எழு மால் வரை முற்றும்
உண்ட கண்டம், கண்டீர்! அடியேனை உயக் கொண்டதே! 6

கையின் ஆர் சுரி சங்கு அன லாழியர் நீள் வரைபோல்
மெய்யனார் துளப விரையார் கமழ் நீள் முடி எம்
ஐயனார் அணி அரங்கனார் அர-
வின் அணைமிசை மேய மாயனார்
செய்ய வாய், ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! 7

பரியன் ஆகி வந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்து அமலன் முகத்துக்
கரிய ஆகிப் புடை பரந்து
மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்
பெரிய ஆய கண்கள், என்னைப் பேதைமை செய்தனவே! 8

ஆல மா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்
கோல மா மணி-ஆரமும் முத்துத்
தாமமும் முடிவு இல்லது ஓர் எழில்
நீல மேனி, ஐயோ! நிறைகொண்டது என் நெஞ்சினையே! 9

கொண்டல்வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி-அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே. 10

அமலனாதிபிரான் முற்றும்.

ஸ்ரீ :

மதுரகவிகள் அருளிச்செய்த

கண்ணி நுண் சிறுத்தாம்பு

கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டு உண்ணப்
பண்ணிய பெரு மாயன் என் அப்பனில்,
நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே. 1

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்,
மேவினேன் அவன் பொன்னடி, மெய்ம்மையே ;
தேவு மற்று அறியேன் ; குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே. 2

திரிதந்து ஆகிலும் தேவபிரான் உடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான் ;
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்-
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே. 3

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மை ஆகக் கருதுவர் ; ஆதலில்,
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே. 4

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்,
நம்பினேன் மடவாரையும், முன் எலாம் ;
செம்பொன் மாடத் திருக் குருகூர் நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன், இன்றே. 5

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன் புகழ் ஏத்த அருளினான் ;
குன்ற மாடத் திருக் குருகூர் நம்பி
என்றும் என்னை இகழ்வு இலன், காண்மினே. 6

கண்டு கொண்டு என்னைக் காரிமாறப் பிரான்
பண்டை வல் வினை பாற்றி அருளினான் ;
எண் திசையும் அறிய இயம்புகேன்
ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே. 7

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ் அரு மறையின் பொருள் ;
அருள்கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடினான் ;
அருள் கண்டீர் இவ் உலகினில் மிக்கதே. 3

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான் ;
தக்க சீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆட்-
புக்க காதல் அடிமைப் பயன் அன்றே. 9

பயன் அன்று ஆகிலும் பாங்கு அலர் ஆகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்
குயில் நின்று ஆர் பொழில் சூழ் குருகூர் நம்பி ;
முயல்கின்றேன் அவன் மொய் கழற்கு அன்பையே. 10

அன்பன் தன்னை அடைந்தவர்கட்கு எல்லாம்
அன்பன் தென் குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே. 11

கண்ணிநுண் சிறுத்தாம்பு முற்றும்.

திவ்யப் பிரபந்தம் முதலாயிரம் முற்றும்.

ஸ்ரீ:

பாட ரூப பேதங்கள் முதலியன

நூறாயிரமும்
பல்கோடி
செவ்வடி
1 உன்னோடும்
ஆயிரமும்
சென்னியமும்
சன்னியமும்
2 மணமின்
கொள்மின்
குழுவிற்
காலமும்
காலம்
3 வரம்பொழில்
வந்த தொல்லைக்
4 இண்டைக்
5 முத்தப்பன்
மூத்தவப்பன்
எழுபடிகால்
போது
பந்தணை
6 சுற்றிய
7 நெய்யுடை
நெய்யடை
நெய்யிடு
நெய்யிட
நெய்யெடை
நெதமும்
சேவுகமும்
மெய்யிடு
மெய்யிடை
வள்ளுயிர்
8 களைந்த நீ
நன் பீதக
கலத்துண்டு
கலைத்ததுண்டு
விடுத்தது செய்
கருமம்

9 அடியேங்கள்
திருமதுரையுள்
ஐந்தலையப்
10 நாராயணாய
11 விட்ணு சித்தன்
விஷ்ணு சித்தன்
விட்டுணு சித்தன்
நாராயணா
பரமாற்(ற)மனைச்
பரமாத்துமனைச்
பரமாற்பனைச்
பரமார்ப்பனைச்
பரமாற்மனைச்
12 வாழ்திருக்கோட்டி
யூர்
பிறந்தனில்
கலந்திடர்
13 எங்குற்றான்
பல் படை
ஆய்த்து
14 பிறந்தனில்
பிறந்தமை
தான் புகுவார்
ஆணொப்பான்
15 இழந்தனர்
16 கொடுமெழு
விண்டின் முல்லை
17 அய்ய
18 ஆய
பாவை
மாயரே
19 கிடந்த
தாயரே
20 ஒடுக்கில்
புல்லில்
22 அமுதுண்ணத்
போய்த்தந்த

போதந்த
23 நன்மணிபொன்னும்
தத்துப்
தலைப்பெய்தாப்
24 நன்று இலங்கும்
25 ஓரோ தடா
ஓர் தடா
தடா உண் என்று
இயத்து
எழுந்தாள்
ஓச்சிப்
தவிழ்ந்தான்
26 மார்வுமுன்
கீண்ட
27 தம்முடைய
வயத்தில்
பத்தின் நாள்
முகிண் முலையீர்
முகிழ் முலையீர்
28 மதக்களிறு
ஈர்க்குன்றவனை
பருங்கை
ஓடு பரமன்
முத்தமும்
29 நண்ணும்
ஒளிவளையீர்
30 பதரப்
31 மருதும்
33 கைத்தலங்களை
கனகுழையீர்
கருங்குழலீர்
34 வளர்கின்ற
கோவல
கோவலர்
முழுங்கிய
35 தருக்கிற்
36 என் நம்பிக்கு

மொய்குழையீர்
மொய்முலையீர்
40 முன்கைம்மேல்
இழைத்தும்
41 அம்பொன்னின்
கையிற்கொண்டு
42 சுரும்பார்குழலி
விருப்பான்
ஒன்றுவர்தாமே
43 சிறுதொட்டில்
பிறமன்
44 கண்மணியோடு
அகன்மணியோடு
மாதளம் பூ
தெழ்கினோடு
தெழிகினோடு
தெழுகினோடு
தெள்கினோடு
தொழ்கினோடு
45 எந்தம்பிரானார்
தாளருக்கு
தந்தவனாய்
46 அங்கச்
சறிவளையும்
சருவளையும்
அமரார்
47 வெம்படையும்
வன்படையும்
உடன்கொண்டு
கைக்கொண்டு
வயிச்சிராவணன்
தூய்மணி
48 கடலில்
மாதொக்க
வறுணன்
சுந்திரத்
தோளனே
49 நறுந்துழாய்க்
50 பொச்சரிகை
கனவளையும்
கனவளை
ஒண்டார்
என்றுன்
51 கொண்டவளாய்

வந்துநின்றாள்
52 எஞ்சாமல்
வல்லவருக்கு
53 முகத்திற்சுட்டி
மாமதி
உன்முகம்
54 வருதியேல்
மாமதி
55 சூழ்ந்த
செய்தலும்
செய்யினும்
விளிக்கின்றான்
அம்புலி
56 ஒக்கல்மேல்
அறுதியோ
அல்லேல்
57 தெளிவுறு
கூவுகின்றான்
பிழைஇலவாகாவே
மாமதி
58 சங்கொடு
மாமதி
59 பண்டொருநாள்
செறுக்கன்
வெகுளிமேல்
மாமதி
60 என்றிளஞ்
சிங்கத்தை
கண்டால்
மாவெலி
பிழைகொளில்
நீயும்நின்
நிறைமதி
61 தடங்கையாலே
கண்டால்
மாமதி
62 இத்தனையும்
63 பய்யஇயோகுதுயில்
செவ்வி
செல்வி
64 உடலும்
மீளும்
மேன்மை
கார்பொழியக்

வரைக்குடையால்
65 நாபியுள் (நாவியுள்)
உலகம்
விரிவிய
வேலைதனில்
66 தான்மகிழ
நஞ்சமுது
நெஞ்சமுது
நெஞ்சமது
என்களிறே
என்கண்ணே
செலவு அதிரச்
67 இணைமருது
வெந்தெறலோய்
முற்றின்
முன்னை
68 காயா
போல் ஒருவா
எம் சிறுவா
அரிந்து
69 திறமாய்
தன்மிகு
தனிமிகு
தனமிகு
தனமிக
70 தம்ல்மருவி
செய்தவரும்
வெள்வரையாய்
71 செண்பகமும்
நாரிவரக்
வள்ளிமுளைப்
முரிந்துவிழ
ஏல
ஏழுலகம்
72 மாதளையின்
நன்மாதளையும்
தாளிநன்மாதளையும்
மாதுளையும்
தாதுநன்
வன்படையும்
உத்திலக
73 ஏழுலகம்
இன்பம்வந்து
இன்பம்மீது

74 இடைமணி
75 தன்னடை
76 தொட்டின்மேல்
நன்மணி
77 தூய்நிலா
விளையாடி
அம்புலி
வா என்ற
நின்புகழாய்
நீ நிலாய்
கோன்நிலாவக்
78 அறியாதே
வெண்ணை உண்
வெண்ணையும்
பற்பநாப
79 தாருய்த்து
சோரித்து
போருற்று
பாரித்து
மன்னவர்
தேருத்த
கைகளால்ச்
80 இரைந்திட்ட
கரைந்திட்ட
81 அணைக்கட்டி
சுடுகணையாலே
82 அவன்கிட்ட
வளர்ந்திட்ட
83 மிடைந்திட்ட
84 வேட்கையினற்
வேட்கையால்
போகுமே
85 சங்கிலிகள்
சிலார்மிலார்
தூங்கு பன்மணி
படர் மும்மதப்
உடைமணிப்
உடமணி
பறைகலங்க
தாளினைக்கொண்ட
86 மீதொளிர்
ஆமத்தாலி
அநந்தசயன்
87 ஒர்வண்
பின்னித்
பின்னில்
அரைசிலையும்
பீதச்
மின்னல்
88 கண்கள்
சிரிவந்து
தளிர்நடை
89 முன்னில்
மின்னில்
முன்னம்
தொடர்ந்தோர்
பேர்ந்து
தம்பி
பின்கூடிச்
தளிர்நடை
90 முன்னடி
உன்னடி
பொறுத்து
அமைந்தே
இலச்சனை
பெய்துதருவார்
கருங்கார்
கருகால்
காமரு
91 விழநின்ற
மணிக்குரலே
92 பாய்ந்தனைய
பகிர்ந்தனைய
அக்குவடமணி
அறிய
93 அளந்தோர்
தண்புழுதி
திருவிக்கிரமன்
தவிசின்மேல்
94 மண்டலம்போல்
திரைநீர்முகத்து
திரைஎழும்
கீர்த்திப்பலன்
சிறுத்தண்ணம்
சிறுகண்ணன்
சிறுச்சன்னம்
சிறுச்சுண்ணம்
96 சுட்டிப்
சலம் சலம்
மின்னிய
என்னுடைக்குட்டா
ஓட்டராய்
வாரா
97 அம்கைகளால்
தழுவா
99 நல்கின்று
ஒடுங்கவள்
வாரா
100 வணங்கி
எழிலுற்று
நோக்க
தழல
துச்சோதரனை
துச்சோதரனை
யன்று
துச்சோதனனை
துச்சோதனை
101 விசையற்காய்
102 தக்கதீதென்
றென்று
தன்னைத்
எடுத்தானே
103 அறிந்தினில்
முன்னய
முன்னருள்
கொண்டருள்வாய்
கொண்டாள்வாய்
மன்ன
104 கடல்
உண்டத்துக்கு
நிறங்கொள்ள
105 நீங்க என்று
ஆர்மறை
106 முன்னிருக்கும்
நாச்சி
உரைத்தனள்
உரைத்தசொல்
நிச்சிலும்
107 வட்டில்
வளர்கின்று
நுனியில்
நுனியில்

முளைக்கின்று
புறம்புலுகுவான்
108 கிங்கிணி
கழுத்துக்கு
சதுரா
எம்பிரான்
109 ஆழியான்-என்னைப்
ஏறென்னைப்
ஆயர்கோன்என்னை
110 தனஞ்சயனுக்கு
தனஞ்செயனுக்கு
தனஞ்செயற்கு
111 பெய்து
செய்து
செய்த
பண்பலகொண்
டான்
112 கத்திரிவர்
கத்திருவர்
முற்றுங்கொண்
டான்
அளந்தான்-
என்னைப்
113 பொத்தல்
ஆதிமேல்
யார
ஆயர்கள்
ஏறு-என்
114 ஏற்று
ஏத்தன்
115 காவைக்
காதலற்கு
ஈய என்று
ஈய அன்று
உற்றவன்
உத்தமன்
எம்பிரான்
116 மகிழ்ந்த
117 மெய்ச்சூது
மெய்ச்சூதி
எடுத்தான்
பெறாதேதன்று
பெற ஈதன்று
கைசெய்து

118 மன்னர்
பட்டொழிய
படப்பாரதம்
திண்டேர்முன்
நின்ற
செங்கண்மால்
அலைவலை
119 காளியன்தன்
தூய
பணத்துச்
சிலம்பாற்கப்
வேயில்
நின்று
120 மருட்டித்
மருட்டத்
அருட்டன்
121 சேப்பூண்டு
சாடி
சிதறத்
மனைகடை
122 சொப்பிடத்
தோன்றத்
தொறப்பாடி
123 கலோ
124 குவளைத்
குவலையம்
பரதருக்கு
வெங்கானடை
125 துயாம்
வந்துபூச்சி
126 வல்லார்
வல்லான்
சரம்பெய்த
வில்லிபுத்தூர்
விஷ்ணு
சித்தன்
விரித்தன
127 உறங்கினைபோய்
உறங்க
சுரந்து பாய
128 பின்னர்
இத்தனையும்
பெற்றால்
ஏதும்செய்கேன்

129 தன்தன்
வாசுதேவ
130 அளவு என்றாலோ
131 வலைப்படுத்தில்
தாய வாய்ச்சொல்
132 நுழைந்து வண்டு
இனிதமர்ந்தார்
என்னநோம்பு
நோற்றார்கொலோ
133 பெண்டீர்
போக்கழிந்தார்
134 திகழ்மார்வு
திகழமார்பன்
தேர்க்கவந்து
அலுகுல்
வாயில் மடுத்து
முலையைக்கை
முறைமுறையால்
135 அம்மவிம்மா
அமரர்கட்கு
136 பாடிஆடி
என்றிருந்தே
போயிடாதே
137 சென்று சிந்தை
138 எல்லோரும்
139 எரியாமை
இவையாய்
இவையா
140 வைத்தே
மெய்யவே
இடுவேன்
வேண்டிற்றெல்
லாம்
நீ வேண்டுவது
தருவேன்
மையல்கள்
மாசவ
141 கோபாலர்
கேளாய்
சுனைநன்று
சோத்தெம்பிரான்
142 இருந்தாலும்
பிணைந்துவந்தால்
வந்தார்

பெரிய
143 வாயில்
கொண்டு-என்
மதுசூதனனே
என்றறிந்தேன்
144 பறிந்தெறிந்து
திருவிக்கிரமா
திருவாய்ப்பாடிப்
வந்தபிரானே
குற்றமிதன்றே
குற்றமேன்றே
145 வேண்டாங்காண்
வேண்டாய்காண்
உன்னை நான்
திரியை இட்டுச்
146 தொடுவுண்டாய்
வெண்ணெய்யே
அன்று
கறைஉரலோடு
உன்னை
உன்காதுகள்
இடுகிடா
147 ஆகித்
தவிந்திட்டேன்
குற்றமிதன்றே
என்றே
148 யங்கள்
எம்பெருமான்
பாராய்
149 சொல்லிஉன்
கடிப்பை இடவே
தரிக்கில்
இழுக்குற்றேன்
கில்லே
இவையாணுய்
இவைகாணு
இவையாணு
ஆணுய்
முன்வஞ்சப்பேய்
மகளைச்
முன்வஞ்சமதனுல்
150 பாரார்ந்த
ஆரார்ந்த
பன்னிரெண்டும்

151 அளைந்து
திண்ணன
இத்தனை
நாரண
152 பிடித்திட்டாய்
153 கடாரத்துப்
154 செங்கழுநீரும்
நாறுசாந்தும்
கொண்டுவந்தேன்
155 சிற்றுண்டை
செப்பட
சோத்தெம்பிரான்
156 இளம்புள்ளை
கழிகண்டு
கழைகண்டு
தருவேன்
போல
மஞ்சனநீர்ஆட
157 எம்பிரான்
158 திருவோணம்
159 உவப்பன்
எத்தனையும்
இல்லாதாய்
இலாதார்
நற்பின்னை
காணச்
160 நிறத்தன்
நிறத்து-எம்
நிறத்து-என்
இலாரே
161 முன்னய
வித்தனை
மாயவன்
162 காயமலர்
தாய்மணி
163 கலத்துத்
விரையன்
அழலமர்
அழகமர்
பெருமான்
கண்ணினை
164 பள்ளத்து
கொள்ள
165 எற்றைக்கும்

ஆழியான் குழல்
166 நினைந்திட்ட ஆழி
அறத்தானை
அறுத்தான்
கோவிந்தன்குழல்
தண்குழல்
நற்குழல்
167 உண்டற்க
ஒத்திருந்த
168 குறந்த
புழுகு
தாமோதரன்குழல்
169 முடியனைப்
பின்னை
170 வா என்று
தானே
171 விளையாடி
விளையாட
வில்லேந்தித்
பிறகட்டி
172 சக்க நல்ல
173 கறத்திட்டு
பொறத்திட்டி
எதிர் நின்ற
சிறுகன்று
தேவர்பிரானுக்கு
174 ஒன்றை
துன்னு-துண்ணு
சுயோதனன்
175 தூதனுய்த்
துரியோதனன்
பொருத
176 கடலில்
அருள் செய்தான்
177 வடிவினில்
கொண்ட அந்தக்
மற்றக்கன்
மணிநிற வண்
ணர்க்கு
178 பொருட்டால்
179 இலங்குபூண்
180 இக்கோல்
வையகத்தே
182 உண்டாக்க

மணவாள
கமிழ்கின்று
183 தம்மிடன்
தாயில்
நிச்சிலும்
பச்சத்
மரகதத்தோடு
184 கமழ்கின்று
உகந்து அவை
185 புள்ளின்
பொருகரியன்
செங்கழநீர்
186 செய்தி
காலொடு
சிக்கன
சூட்டவாராய்
187 வல்லவன்
என்கோவே
மால்செய்து
மால்செய்ய
எம்மைந்தா
கிடந்தவன்
189 தாய்மலராள்
மணவாள
உள்ளம் உகக்க
கருமுகப்பூ
190 என்று-இவை
191 மறைந்தவராய்
மறைந்தவரா வந்து
சதிரர்கள்
சதிரற்
192 நேசமேய்
சொல்
193 இல்லம்
உரைப்பப்போய்
எத்த
இப்போதும்
194 இவரால்
தீமைகள்
195 போகா
சொப்பிடக்
196 நீ இங்கு
197 கலக்கிழிய
ஒளிதிகழ்
198 உயிர்த்தாய்
199 நின்றான்
தருக்குடன்
தாயர்சொல்லுக்
கேளாய்
201 கூவாய்
புரைபுரையாய்
202 முகத்தன்
முகத்துக்காருத்த
நம்பி
என்காருத்த
203 உறிச்சி
204 வந்துசென்று
205 இறைப்போது
சாலக்கிராமம்
சாலைக்கிராமம்
சாளைக்கிராமம்
206 இங்கனே
கோதுகுல
முடைக்
கோதில்குல
முடைக்
207 நறுவெண்ணெபால்
திருவோணம்
இன்று
இட்டேன்
பரிசி அறிவன்
208 கேட்கிலன்
என்றதே
இல்லாது
தூசணம்
தூஷணம்
நின்றும்
கொள்ளுவது
தன்மை
209 அவன்புக்கு
பொறுத்திப்
பெறுத்துப்
210 அரிசப்படுதி
அரிதிப்படுதி
இரிசைப்படுதி
உடையநின் பிள்ளை
உடையநம் பிள்ளை
உம்பிள்ளை
கழித்திக்கொண்டு
இணைக்கை
வளையைக்
நானல்லன் என்று
211 மேலவே
213 தொழுது எற்றி
வளை துகில்
216 பிடிக்கஅடிஉண்டு
218 ஓரடிவைத்து
இடந்தானல்
219 வலைப்படு
வாதிப்புண்ட
வேழந்துறைகெட
விண்ணோர்
பெருமான்
அவ்ஆழிப்பணி
கொண்டானல்
222 புள்ளுவம்
223 கன்னிகையை
225 பேசுவர்
புத்தகத்துக்குள்
226 ஆயர்காவில்
பிள்ளைகள்போல் நீ
229 மக்கள்மைந்தமை
230 தகப்பன்மார்
பின்போவர்
பேர்வனர்
231 மூவேழ்
மூவேழும்
பேசுவன்
செய்வன்
232 சீரார்
மாலைவல்லார்
233 ஆயர்குலக்
கொழுந்தை
காலடிநோவக்
கன்றும்பின்
என்செய்கேன்
என்செய்யப்
234 தாளியுடன்
காலடிநோவக்
235 நங்கைமாரொடும்
ததியாமே
236 பலசெய்துபாடி

கானெதிரிடைக்
அரியபிரானை
237 கொவ்வக்
கனிவாய்
கூழமை
எவ்வம்
எவ்வெம்
கண்ணின்பின்
238 மெழுத்தோட
மிழுமிழுத்து
239 அணங்கு
240 அமுதூட்டி
எடுத்த நான்
புலரியேகன்றின்
பின்
241 கொடியன்
கொடியனேன்
கொடியேனென்
242 புதுவைக்கோன்
இன்றமிழ்கள்
மாலைவல்லவர்க்கு
வல்லார்க்கு
243 ஒருகாதில்
செங்நிறப்பூத்
தோன்ற
மென்தோன்றிப்பூ
கஞ்சுகத்தி
னுடையவும்
கூறையும்
கோடாரமும்
ஞாலத்தில்
244 தென்னரங்
கன்
245 மறிஓட்டி
தூளிகாணுமண்
ணுடம்பு
உன்னோடும்
246 போயினையால்
கருங்குட்டர்
எம்பிரானே
247 செய்த
மணவாளா
நும்சிற்றாடையும்
கன்றுமேய்த்துக்

248 பொய்கை புக்கும்
என்செய்ய வண்
ணனே
வயறு
காயாம்பு
249 மீனமும் ஆகிற
மீனமும் ஆக
பார்க்கடல்வண்ணா
கண்ணின்
அசுரன்தன்னை
சிறுகைகளால்
என்றும்
பிள்ளைக்குத்
செய்வார் எங்ஙனம்
எங்ஙனும்
அங்கனும்
அங்ஙனும்
எங்கணும்
250 கேட்கின்றோம்
எனக்கருதி
251 எழுநாள்பண்ணேர்
முளையிட்டு
கூறிவைத்தேன்
கலத்த
தொட்டுங்கன்றின்
போகேல்க்
போதேல்
252 உவந்து
செற்றம் இல்லா
தவர்
வாழ்வுதரு
253 இயக்கம்
அடித்தனிதாழ்பீலி
சாலேக
சாளர
நுழைவர்
உணமருந்து
254 நுண்நுதள் அன்ன
நுன்இதழ் அன்ன
பல்லிநுன்
இவடேறல்மினே
இழவேல்மினோ
255 சுறிகையும்
சுரிகை

தெருவில்லும்
தெரிவில்லும்
செண்டும் கோலும்
ஆடையும்
செண்டுபோலும்
செண்டுக்கோலும்
பாடியிற்பிள்ளை
வடிவும்கொண்
டாள்
256 இவரை ஒப்பாரை
கழந்து
ஏத்து-இளமுலையும்
257 சுரிபங்கி
பேச ஒட்டேன்
என்மாயர்க்கு
கோரம்புமே
கோறம்புமே
கோபமே
258 சிந்திரம்
இலங்கு
திருந்திய
கோறம்பம்
கோரம்பம்
ஆயரோடுஎன்
வளைகோல் வீசா
வளைபோல்வீச
அறிந்துய்ந்து
259 பன்னீர்
பின்னை
நீல நறுங்குஞ்சி
நீல நறுங்குழல்
அணைந்து
ஆயர்பிள்ளை
அழகுகண்டேன்
மகள்
அயர்கின்றதே
260 சிந்துரம்
பொடிக்கொண்டு
அந்தமின்றித்
ஆயர்பிள்ளை
எதிரெதிர்
இழவேல் என்னை
செரிவளை
261 மேல்தோண்டிப்பூ

மவ்வல்மாலை
சிலங்காரத்தால்
விலங்கநில்லாது
விலங்கிநில்லாள்
வெல்வளை
மெய்மலிகின்றதே
மெய்மெலிகின்றதே
262 கன்னிமார்கள்
அலர் பொழில்
அறைபொழில்
பத்தருள்ளீர்
263 தயிர்வாபியும்
பொட்டற்று
பொட்டத்துற்ற
வலவாய்
புறமகளிர்
குரைமகளிர்
கொட்டத்தலைப்
கோவற்தனம்
கொற்றைக்
குடையே
264 ஒன்றில்லாச்
இல்லாதசெய்கை
வலிபட்டு
மாற்றடைப்ப
எடுத்தமலை
தெரியாதது
ஈற்றபிடி
இளஞ்சேயம்
அதிர்ந்துபொரும்
265 கொள்ளென்
றிருப்ப
மானிலம்
புயக்குன்றிர்
புயக்குன்றூர்
266 களிற்றுக்கு
கைவிட்டு
எழப்பறித்திட்ட
குடைவாய்ப்பட
267 வானத்துள்ளீர்
ஏனந்துருவாகி
கொம்பிழைந்து
கூனப்பிழை
அண்ணாந்திருக்கும்
268 கவிழ்த்தமலை
பரிந்து-எழு
மணிமுத்தும்
வடம்புரள
உறழ
புரழ
கோவத்தனம்
269 விரல் ஐந்தினையும்
புகழ்கள்
தன் குட்டங்களை
270 பல்கலைப்
போர்க்களத்தில்
சரம்ஆழி
காப்பவன்போல்
குறம்பைத்
அனார் சொறிய
சினை வேங்கைகள்
271 முன்பேய் வழி
காட்ட
வழிசாட்டி
முதுகட்பெய்து
குட்டங்களை
272 வாடுதலில
273 குரவைக்கொடி
குரவக்கொடி
பரமாயின
வாணன்புத்தூர்
பரமனடிசேர்வர்
களே
274 நங்கைமீர்
உடலில்
கவிந்து
275 சாற்றி
மங்கைமார்
நிகழ ஒரு கையால்
276 குழலூதுபோது
வானம்பாடியர்
வானிளம்பிடியர்
தேனவிழச்
277 தீயபூண்டுகள்
பிறலம்பன்
சிறுக்கண் குழல்
குழலூதஊத
உருப்பசியாவரும்
உருவசியரிவர்கள்
பாடலவை
278 நரசிங்கம்-ஆகி
மன்னர் அஞ்ச
மதுசூதன்
நாரதாராதிபர்தம்
279 நம்பரன்
இடர் உழந்து
உற்றன
நம்பரம் என்று
என்று
கைம்மறுத்து
280 புவியில்
குழல் ஊதல்
அவியுணமறிந்து
அவையுண
செவியுள்
நாவின்சுவி
நாவின்சுவை
எங்கும்
281 செங்கண் கூடச்
கொப்பிளிப்பக்
குறுவியர்ப்புருவம்
கூடலிப்பக்
கூடிலிப்பக்
குழல் ஊதின
போது
கூடுதிறந்து
கறவியின்
கால் பிறப்பட்டுச்
கவிந்து
இயங்கிச்
282 எழுந்தமழை
வண்டினம்போல்
முகத்தால்
மான்கள்
மானினங்கள்
மேய்கையும்
மேய்ந்தபுல்
மேய்ந்து
வாய்சோர
இரண்டு பாலும்
துலங்கப்

துளங்க
எழுதி
எழுந்து
283 மருங்கலை உருவில்
உருவில்
கொடுதினபோது
மலர்வீழும்
உறங்கும்
284 குழல்முழுஞ்சு
முழஞ்சுகளிேனாடு
குமிழ்த்திக்
இழிந்து
குழல்மிழவம்
முழவ
புதுவையர்கோன்
சாதிகோட்டியுள்
285 அலைந்தலையாய்
அலைந்தலைவாய்
சிற்றாடையும்
286 இவள்மயிரும்
தீ இனைக்கி
அணங்கு
இணங்கு
இணங்காட்டி
செம்மை சொல்லில்
மாயவன்
மாயன்
மணிவண்ணன்
287 சிற்றில்
முற்றித்
இழைக்கலுற்றாள்
தட்டுருப்பு
288 இள்கி
இழுகி
இழுசி
இலுகி
இழிகி
இணக்கித்
செய்கின்ற
ஆழிமோழையில்
மூழையுள் பிரியாது
289 சூட
உழிதருகின்றான்
இழிதருகின்றான்
உழிதருகின்றாள்
இழிதருகின்றாள்
பாடுகாவல்
பாடுகால் என்று
மாதினரே
290 பிறப்பிட்டு
291 தெரியாத
பெண்மயில்
இன்றி நின்றார்
கழிந்தால்
முழையாய்
மோழையாய்
மொழியாய்
292 கையால்
கோவைச்செவ்வாய்
ஆயிரம் பெயர்த்
293 மாடு ஒழியக்
என்ன ஆணுவம்
வடுப்படுக்கில்
வடுப்படுக்கும்
செய்வினை
294 நீக்கினாள்
நீங்கானாள்
உலகு அளந்தான்
அடிக்கே
295 துயின்ற
நாரணனுக்கு
மாலைதாகி
என்ற
என்னத்தாயுரை
பத்திவை
வல்லார்க்கு
வல்லவர்க்கு
296 புக்காள் கொலோ
பிறம்புக்காள்
297 இவர்கள்
எமர்குடிக்கு
எங்கள்குடிக்கு
அடிக்குடிக்கு
எச்சுக்கள்
298 இல்லைத்திருத்தி
வழிப்பட்டு
துமுலம்
நாட்டும்
299 உலகு
புகழான்
பெற்றவள்
பிறம் செய்யும்
300 தன் மாமன்
தழுவிக்கொண்டு
செழுங்கமலக்
301 மறைக்குலம்
வேண்டுத்துச்
கூடி கூட்டமே
கொண்டும்குடி
கொண்டு கூடி
நாடும் நகரம்
பாய்ந்த தலைவா
302 ஆழியன்
என் தன் மகளை
பண்டைப் பழிப்புக்
கள்
அன்றென்
வாழ்ந்திடுங்
கொலோ
கோவலன்
கவிழ்த்து
பாடுகாவல்
303 கடை தயிரைப்
பற்றி
ஏறும் கொலோ
304 தான் வந்தாள்
கொலோ
பண்ணறையாய்ப்
பரிசிற
வாழ்ந்திடும்
கொலோ
305 புக்குற்ற
அங்குற்ற
மாயங்கள்
தூய்மணி
ஆளே
306 ஈயாதான்
தன் பூ
வலியைப்
என் நாதன்
நன்மையைப்
எம்பிரான் வண்

மையைப்
என் நாதன் வண்
மையைப்
பாடிப்பிற
பாடிபெற
307 போர் வென்று
வலிந்து
தன் வில்லின் தன்
மையைப்
தன் வில்லுந் தன்
மையைப்
தாசரதி வண்
மையைப்
308 உருப்பணி
நங்கையைத்
எதிர்வந்தான்
எதிர்வந்த
சிரத்திட்டான்
வண்மையைப்
பாடிப்பரு
309 வனம் போகேல்
வனம் போநீ
வனம் போதே
என்றெழ
சொல்லுக்
சீற்றமில்லாதானை
பாடிப்பரு
310 நாகம்கடந்த
பாடிப்பரு
311 இம் மூவுலகு
அவன் தொடர்ந்த
பின்
பாடிப்பரு
312 நீண்முடி மீது
மீளும்
தூய்மணிவண்
ணனை
பாடிப்பறா
313 தார்க்
கிளர்ந்த
தார்க்களம்
தண்டகன்
தண்டகை
நூத்தவர்

நூற்றவன்
நுடங்கிடச்
சூர்ப்பனகியை
314 ஆயர்களூடு
வித்தகனாய் நின்று
அயோத்திக்
கரசனைப் பாடிப்
பற
315 அடைந்திட்டு
கோமானைப்
நேராமவன்
நேராயரிந்தவன்
ஆனிரைமேய்த்
தானைப்
316 உந்திபிரந்த
ஒளியிழையார்
சொல்
ஆயர்கள் சொல்
317 கருங்குழல் மடவார்
சிறிந்தமணி
சிலையறுத்து
களையட்ட
இடை இலங்கச்
இடை விளங்கச்
சிறிந்த சிலை
318 மடப்பின்னை
இனிதிருத்த
மல்லி மாலை
கொண்டு
மாலைகொண்டும்
கார்த்ததும்
ஆர்ந்ததும்
319 கைகேயி
மனத்தினளாய்
மனத்தினனாய்
மலக்கிய மனத்
தினனாய்
போஎன்ற
320 வைதேவி
வைதேகி
பெருந்தேவி
தோழமையாய்ச்
சிறந்ததும்
தோழமையைக்

321 வைதேகி
வைதேவி
கல்-அதிர்போய்
காடொறிந்து
பரதநம்பி
322 நின் அவயம்
நின் அபையம்
என்று அழைக்க
அதின் கண்ணை
அறத்ததும்
323 நின்னம்பின்
வழிசென்று
பின்னை அங்கு
பின்னே இலக்கு
மணன்
பிரிந்தும் ஓர்
324 மலர்க்குழலாள்
வைதேவி
வைதேகி
வானக்கோன்
நினைத்தோட
இத்தகையால்
இது அவன்
325 திக்குநெறி
தீவேழ்வியிற்
சென்று நாள்
தீவேழ்வியிற்
சென்ற நாள்
சென்று அந்நாள்
பெருஞ்சவை
உகந்தாளால்
326 வைதேகிதனைக்
அடையாளம்
327 பெருமை
நாடிதிரேல்
கடல் பெருந்தோள்
உதரம்
உதிரம் அளந்
தானை
அளந்தகையோடு
328 ஏந்தும்
பெருமனை
நாடிதிரேல்
சீதைக்காய்

சென்றிருத்த
சென்றிருக்க
சென்றிருப்ப
வேழ்வியில்
329 குலையானை
கும்புபறித்து
கூடலர்கோன்
சிக்கன
அங்குற்றுக்
330 சொல்ல
வைம்மின்
வெயர்த்து
மெய்ம்மையை
331 மறையால்
செயநின்று
குங்கை
உருக்குமணியை
தேரேறிச்
சிக்கன
332 வாய்மடுத்த
பவ்வம்
எறித்துவரை
அறிதுவரை
சிங்காசனத்
திருந்தே
333 வெஞ்சுடர்ச்சக்கரம்
ஏந்தும் கையன்
அவன் தன்
வெள்ளப்புரவிக்
வெல்கொடிஆட
334 காத்து நின்று
அரசர்கள் தன்
முகப்பே
இருளப்படை
335 எண்ணர்க்கு
336 புரவுமுகம்
மறைவாணர்
வாணன் புத்தூர்
திகழ்
337 அலம் பாவிருட்டாக்
கொன்றதிரியும்
அரக்கர்களை
கொலவிளக்காய்
நின்று

338 போக்கிவித்தான்
பரந்த பல்லாண்டு
ஒலி
சொல்லா நிற்கும்
திருமாலிருஞ்
சோலையதே
339 செய்தம் சலவரை
தெக்கநெறியே
340 அமைத்த விழுவை
கோவத்தனத்துச்
கற்பகத்துத்
தொழி
பாயும்திருமாலிருஞ்
சோலை
342 ஏவுற்றுச்
சதிரமன்மலை
ஆபத்தனம்
முனிவர்களும்
343 மன்னன் மறுக
மன்னர் மறக
மற்றுநன்மார்க்கு
மய்த்துனன்மார்க்கு
மத்துனன்மாக்கு
கொன்றவில்
கூர்வேல்க்கோன்
கூடல்க்கோன்
கூடல்கோத்
344 செறுகால்
போக்கிவிக்கும்
345 பலிகுடுத்து
ஆவனம் செய்
ஆவத்தனம் செய்த
அம்பொன்மலை
இந்திரகோபங்களே
கனிவாய் ஒப்பாய்
சிந்தும் புறவின்
சிந்தும் புறவித்
346 விட்டு விளங்கு
பட்டுப்பிடிகள்
பகடுஞ்சி
தெட்டுத் திளைக்
கும்
347 மலைதனைக்
எம்மான் தன்னை

வில்லிபுத்தூர்மன்
காண்பர்களே
காண்ம்பர்களே
காண்பாரே
348 உருக்குமணி
உருப்பணி
மங்கை தன்னை
மீட்பான் துடர்ந்து
ஓடிச் சென்று
உறைந்திட்ட
உரப்பன் மலை
கொன்று நின்று
பொன் விளங்கும்
349 களியானையும்
எருதும்
வஞ்சனையின்
வஞ்சனையால்
எழுந்தணவு நளிர்
நளிர் மதியை
350 நரகம் தன்னை
வளைந்தெறிந்து
மகளிருதன்னை
பொனவேங்கையும்
பொன்னிரிமாலை
கள்
351 கருதுமிடம்
கோவியர் கோவிந்
தனைக்
பண் குறுஞ்சி
352 பலபல நாழும்
பலபல நாளும்
பலபல நாமமும்
பழுத்த
அலவலைமை
அலவலமை
கொலமலை
சலைமலை
353 மறக்கம் எல்லாம்
மேல் வைத்து
பாண் தருவண்டி
னங்கள்
மதுப்பருகித்
தூண்டலுடைய
354 கனைபாரித்து

கணபாரித்து
இனங்களும்
இனங்கழுகு
ஏத்திவித்த
ஏற்றிவித்த
எம்பிரான்மலை
கனங்கொள்
இனங்கழுவாடும்
இனங்கழுவாழும்
இனங்குழுவாழும்
355 எரிசிதரும் சாத்
தால்
இலங்கையினத்
தாரடைய
அரைசன்
அரயன்
திரிசுடர்சூழ்
356 கொடுங்கையில்
விளையாடு விமலன்
மலை
அடியிறை என்று
அடிமையுரை என்று
அடியியுறை என்று
357 ஆர்களும்
சுனைகளும்
358 மேலிருந்த
கற்பகத்தை
விரித்தானே
விரித்தனவே
359 விரிந்தோம்புவார்
பயின்னவாழ்
எங்கனம்
எங்ஙனும்
360 அனுகூலமாய்
வன்கையினர்கள்
வற்றி எழுலகு
தூய்மணிவண்ணன்
361 மரதகமும்
அழுந்தி
எழுத்தி
அழித்தி
இறைப்பொழுது
இறைப்பொழுதும்
கண்டதும்

ஊற்றைவாய்க்குக்
ஊற்றவாய்க்குக்
மூத்தைவாக்கிக்
362 வாயில்கொண்டு
இழையாத
மானிடசாதியிர்
மானிடசாதியை
செய்தனர்
தான்கொலோ
காண்கொலோ
363 முதுகைத்திடைக்
தூய்மலர்
திணிம்னே
திணும்னே
364 ஏற்றுவார்கள்
இவுலகம்
செய்வதே
365 திருந்திநான்மறை
யோர்
கடைக்கண்டு
எத்தவஞ்செய்தார்
கொலோ
366 அபிமானதுங்கன்
தெளிர்ந்த
செல்வனை
குறுந்துறைகின்ற
கொள்ளகில்லார்
களே
கொள்ளார்களே
367 பொழில்வாழ்க்
செழுங்கனிஉடைத்
ஏற்றுவார்களைக்
இவர்என்றன்
ஆசைகள்
இவர் என்றென்று
368 மாற்றில்
மாற்றிலில்
குறளாஎன்றும்
எந்தமை
எந்தண்மை
விர்க்கும்
369 சீதைணீர்புடைசூழ்
செங்கழனிஉடைத்
செழுங்கழினி

செழுங்கழனீருடை
புதுவைமன்னன்
உரைப்பார்
உரைப்பவர்கள்
370 அன்னையத்தநின்
அன்னையற்றநின்
குழலார்கள்
எல்லைக்கள்
ஏலைக்கண்
கேடிலி
பேசுவார்எய்தும்
பேசுவாம் புகில்
நம்பரம் என்றே
371 சிறந்தேறிய
செந்தேறிய
எரிப்புஉண்டு
நாரணா என்றும்
நாராயணா என்று
போயினர்பின்னை
இத்திசை
நோக்கென
புனைக்கொடுக்
கிலும்
புணைகொடுக்கிலும்
புணக்கொடுக்கிலும்
போதவொட்டாரே
போகவிடாரே
372 வைத்து
உண்டாகில்
சொல்லும் என்று
சொல்லென்ன
துற்றும்
ஆர்வினலும்
இருந்தார்
பூவைஇட
அரவதண்டத்து
373 வாயிற்கிளர்ந்து
மேல்மிடத்தின்
ஆவதென்முன்னம்
ஒற்றஎழுத்தை
விண்ணகத்தினை
374 நீர்ப்புலன்
கடவழிவார
அடப்பக்

ஆவதென்முன்னம்
துடைவழி
கவரச்
இடைவழியும் நீர்
இழைவீர்
வல்லீரேல்
375 ஐந்தும்அகத்தி
சாய்ப்பதென்
முன்னம்
தங்கம்விட்டு
வைத்து
376 சேவைதக்குவார்
சேயதக்குவார்
புகுந்தும்
ஏற்றிப்
இழுப்பதம்முன்னம்
இருளறைநோக்கி
வானகத்து
மன்னுடிகள்
377 குற்றங்கள் நிற்க
நற்றங்கள் பறிந்து
பாற்குடம்போலே
பாற்குடம்போலக்
எடுப்பதும்முன்னம்
கவுத்துமுடைக்
கோவிந்தனோடும்
ஆடிஉள்ளத்த
ரானல்
கிடந்துஉய்யிலு
மாமே
378 வாய்ந்தநீர்
மிழத்த
அரற்ற
சேருவதன்
முன்னம்
வல்லார்கட்கு
வல்லாருக்கு
அரவதண்டத்து
உயலுமாமே
379 செகைகள்
பெறுவர்தாமே
சிறந்துளார்தாமே
380 கரையுடைக்
கூறைக்கை
கயற்றையும்
அவத்தைப்
பேரிடும்
தேறித்து
இருமினே
தேனித்து
இரிமினே
தேரித்து
இரிமினே
தம்மன்ன
தம்மனை
381 மானிடசாதி
பேரிடும்
தம்மன்ன
தம்மனை
382 எண்ணையும்
ஒகந்து
இச்சம்பொலிந்
தீர்கள்
பெறர்பேரிட்டீர்
பிச்சைபுக்காலும்
நாராயணன்
தம்மன்ன
தம்மனை
383 தொண்டித்தோர்
மறமைக்கில்லை
வானுடமாதவா
தம்மன்ன
தம்மனை
384 ஊற்றையில்
ஊற்றையை
மலவுடை
உத்தையின்
மறமைக்கில்லை
சம்மன்ன
சம்மனை
385 நாட்டுமானிடப்
குடியில்விழுந்து
விழுக்காதே
சாடறப்பாய்ந்த
தம்மன்ன
தம்மனை
நரகம்புகாழ்
386 எண்ணும்
ஒன்று எண்ணி
ஏழைமனிதர்காள்
வண்ணன்
திருநாமம்
வண்ணன்
திருநாமமே
எண்ணுமின்
தம்மன்ன
தம்மனை
387 பேரிட்டக்கால்
பின்பும் எல்லாம்
நாலுநாளையில்
அழுந்திப்போம்
அழிந்திப்போம்
கண்ணன் சிரீதரன்
பேரிட்டு
தம்மன்ன
தம்மனை
388 ஊற்றைக்குழியில்
அமிர்தம்பாய்வது
போல்
எங்கள்மூத்திரப்
எம்முகில்வண்ணன்
பேரிட்டழைத்தக்
கால்
ஆடித்திருவனே
நாற்றகு
நம்மனை
தம்மன்ன
தம்மனை
389 எடுத்தேற்றிய
வைகுந்தத்து
ஒன்றும்
390 தங்கைமூக்கும்
தமயனைத்தலையும்
என்தாசரதிபோய்
இருந்தரைசாண்ட
களைந்திடகிற்கும்
களைந்திடைகிற்கும்
கைதொழாநின்ற
கைதொழநின்று
391 பேய்வாய்
மணிவண்ண
உருவில்

வாழ்வும்
சடையன்
முடிக்கொன்னை
பாதத்திற்றுழாயும்
புகர்ப்படு
392 அதிர்குரலுடைய
குமிழ்த்து
குழித்தி
நேமிகொண்டு
என்புருடோத்
தமன்
சதுற்புயன்
செடையினில்
எழுபுனல்
393 இமயவர்
இருந்தரைசுஆள
சேத்தை-சேற்றை
நணுகா-விசறம்
அமவந்தன்
இருகடலளவும்
394 உழுவதோர்படை
உழுமதோர்
செங்கும்
மழுவொடுவாழும்
வாழ்வும்
கழிவிடும்
கண்டமென்னும்
கடநகரே
395 குமறி
சலமதுபொழிந்
திடக்
சலம்பொழிந்திடக்
மறுத்தவன்
புருடோத்தமன்
வாழும்
அலைப்புடைத்
திருவாய்
அலைப்புடைத்தரை
வாய்
அலைப்புடைத்
திரிவாய்
அருந்தவமுனிவால்
அவவிரதம்
கலைப்பைகள்

கலைப்பெய்கள்
396 முருக்கி
எறப்பாய்ந்து
அவனையும்
உதைத்த
அரையனை
துதைத்த
அவர் இளம்பிடியர்
அயிராவதமும்
கலந்திழிகொங்
கைக்
397 வேந்தன்
வேய்ந்துதன்
மைத்துனன்
மார்க்கா
அரசனை அவிய
அரசினம் அவிய
அமர்வும்
வாழ்வு
புகைகமிழ்
கண்டம் என்றும்
398 சாளிக்கிரமம்
இடைவகை
கரைமதம்
கடிநெறிகங்கைக்
399 இரக்கம் நங்கு
என்புருடோத்
தமன்
மூன்னனில்
கான்றடிபொழில்
400 ஒரு புருடோத்
தமன்
அன்ம்பால்ச்
களித்திருந்த
கன்றிலாதாமே
401 ஓதிவித்த
தக்கணையாய்
உருஉரு
தோதவந்தத்
தூமறையோர்
துளம்பி எங்கும்
402 மாண்டுஒழிய
பிள்ளைகள்
குணர்ந்து

கொடுத்து
குணர்ந்து கொண்
டுத்து
அகப்படுத்த
403 உருமுகத்தே
ஒருமகத்தே
அருமுகத்தே
பொனல்-அரங்கம்
என்பதுவே
404 கூன்றெடுத்த
சிதைகுறைப்பக்
சிலைக்குநிரைப்பக்
கொடியவர்வாய்க்
தாயுரையும்
இராச்சியும்
நெறிபோக்கிக்
405 அவைபதறிப்
பிழைக்குடைய
பொறுத்தான் ஊர்
கொரவரும்பக்
406 அப்பன் ஊர்
பொடிஅணிந்தே
வண்டினங்காள்
ஆனம்மைவக்கும்
407 கொழித்திருந்து
கொழித்தெழுந்து
பிழைக்குடைய
பிணம்படுத்தும்
பிணம்பெடுத்த
தழுப்புரிய
தழுப்பெரிய
தொழுப்புரிய
தெழுப்புடைய
காவேரிவந்து
408 எல்லாத் தரணி
யையும்
எல்லியும்போது
எல்லியம்போழ்து
409 குன்றுடு
நின்றுடு
கொடி இடைய
410 பொருதெழுத்த
இருத்தானை
ஏற்றவல்லார்

செருஅரங்கம்
411 வான்பிணையம்
வான்ம்பணையம்
சருவுடைய
திருத்துவந்து
திருமால்தன்
திருவடிதன்
திருவும்
திருநிறமும்
காத்தாட்டன
ஓசலிக்கும்
ஓகலிக்கும்
ஓசிலிக்கும்
ஒலிக்கும்
412 தொரற்றகத்து
சிதைக்குரைக்க
மேல்
சிக்குரைக்குமேல்
சிதக்குரைக்குமேல்
நன்றி செய்தார்
நன்று செய்தார்
என்ப போலும்
வீடணர்க்காய்
விபீஷணர்க்காய்
யன்னுடைய
ஆளாவாரே
413 பிலம்புனையும்
சகடரையுக
இருளகத்தி
மறுகதிரோன்
414 மன்னுங்கோயில்
பொதுநாண்மலர்
இறுமாய்ந்து
415 அருமறைகளாய்
ஆனுன் தன்
துதித்துஎறஞ்சக்
பூமருவில்ப்
புகழ்குளரும்
பொனல் அரங்கமே
416 சிறுவரையும்
பகர்வர்களும்
பரந்துநாடும்
தொழுது எறஞ்சத்
417 மாவெலியைக்
அரைசுவாங்கி
பரதலம்கண்
இருக்க எனக்
பாதளங்கல
விரிக்கை
அம்மான்கோயில்
இறைப்புடைய
மணவரைமேல்
இளநாயிறு
எழுந்தாப்போல்
418 உரம்பெற்று
ஒள்ளியமார்-
உரைக்க
கண்புதுங்க
தெளித்தான்
கோயில்
வரம்பெற்ற
கதிர்ச் சென்னல்
தலைவணங்கும்
419 மீனுமாய்
எனமாய் அரியாய்
குறளாய்
நிற்பான் கோயில்
சங்கமல
துதைந்து-எழும்
திருவரங்கமே
420 செருவாளன்
செருச்செய
நாந்தகம்
என்உருவாளன்
படையாள
வேழ்க்கையாளன்
என்னையாளன்
எழுவிகற்பப்
பெரும்புரவாளன்
பெரும்போராளன்
பெரும்புலவாளன்
421 கைநாகத்து
கையினுகத்து
திருவரங்கன்
திருப்பதிமேல்
மெய்யநாவன்
மெய்யடியன்
இஞான்றும்
இணைபுரியாது
422 துப்புடையார்
நின்றடைந்தேன்
ஆனைக்கி
அருள் செய்
தமையாய்
